சூளாமணி

1-237 பாடல்கள்

தெ.பொ.மீனாட்சிசுந்தரனார்

உரைநடை

1944

முன்னுரை

லாமொழித் தேவர் இயற்றிய சூளாமணி தமிழில் ஐஞ்சிறு காப்பியங்களில் ஒன்று. இந்நூலைத் தமது லயம்" என்ற கிழமைத் தாளில் திரு. சேஷாசல ரயுடன் வெளியிட விரும்பினுர். ஒரு சில பாடல்கள் ரரின் உரையோடும், பின்னும் சில பாடல்கள் திரு. ன ஐயர் உரையுடனும் வெளிவந்தன. அவ்வுரையை ாறு அப்பெரியார் என்னைக் கேட்டுக்கொண்டபோது த பகுதியை உரைநடையாக எழுத முற்பட்டேன். யே இப்போது வெளிவருகிறது. "நல்ல திருத்தமான டக்குமோ" எனப் பல ஆண்டுகள் எதிர்பார்த்தும் லை. ஆதலின், உரைநடைப் பகுதிக்கொத்த பாடல் டைத்த அளவில் வெளிவருகின்றன. இதன் அச்சுத் திருத்திய திரு. துரை அரங்கனுருக்கு என் நன்றி ு.

ழ் வளர்த்த சைனப் பெரியார்களின் நூல்களைத் ம் மறக்க இயலாது. உண்மைப்பொருள் காணுதல் னும் அன்பினுல், தமிழ்த் தொண்டர் இட்ட கட் ப மறுத்தற்கஞ்சி இந்நூலை எழுதலாயினேன். குற்றம் ல் உலகம் பொறுக்க. சூளாமணியின் பிற பகுதியும் ல் வெளிவரும். இவ்வாறு வெளிவரும் இந்நூலைக் என்னை வாழ்த்தத் திரு. சேஷாசலனுர் இல்லையே பெருங்குறை என் மனத்தை வாட்டுகின்றது.

சனக் கொள்கையின் உண்மையினை உள்ளவாறறிந்து ஒரு கலையாகப் பரப்பிவரும் திரு. வி. கலியாண சுந்தர மணிவிழாக் காணிக்கையாக இந்நூல் வெளிவருகிறது. தி. க. வாழ்க.

திழகம்
3-1944.

தெ. பொ. மீனுக்ஷிசுந்தரன்.



திரு. வி. க.

தோலாமொழித் தேவர் இயற்றிய

சூளாமணி

காப்பு

வென்றான் வினையின் றொகையா கிவிரிந்து தன்க
ணொன்றாய்ப் பரந்த வுணர்வின் னொழியாது முற்றுஞ்
சென்றான் றிகழுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்.

பாயிரம்

1. அங்கண் ணுலகிற் கணிவான் சுடராகி நின்றான்
வெங்கண் வினைபோழ்ந் திருவைச் சரண்சென்ற மே
பைங்கண் மதர்வைப் பகுவா யரியேறு போழ்ந்த (னாட்
செங்கண் ணெடியான் சரிதம் மிதுசெப்ப லுற்றேன். 1.

2. கொற்றங் கொணேமி நெடுமால் குணங்கூற விப்பா
லுற்றிங் கொர்காதல் கிளரத் தமிழ்நூற்க லுற்றேன்
மற்றிங் கொர்குற்றம் வருமா யினுநங்கள் போல்வா
ரற்றங் கள்காப்பா ரறிவிற் பெரியார்க ளன்றே. 2.

3. நாமாண் புரைக்குங் குறையென் னினுநாம வென்வேற்
றேமா னலங்கற் றிருமா னெடுஞ்சேந்த னென்னுந்
தூமாண் டமிழின் கிழவன் சுடரார மார்பிற்
கோமா னவையுட் டொகண்டார் கொளப்ப[illegible] தன்றே. 3.

4. செங்கண் ணெடியான் றிறம்பே சியசிந்தை செய்த
நங்கண் மறுவு மறுவன்று நல்லார்கண் முன்ன
ரங்கண் விசும்பி னிருள்போழ்ந் தகல்வா னெழுந்த
திங்கண் மறுவுஞ் சிலர்கை தொழச்செல்லுமன்றே4

5. விஞ்சைக் கிறைவன் விரைசூழ் முடிவேந்தன் மங்கை
பஞ்சிக் கனுங்குஞ் சிலம்பா ரடிப்பாவை பூவார்
வஞ்சிக் கொடிபோல் பவள்கா ரணமாக வந்த(றே.
செஞ்சொற் புராணத் துறையின் வழிச்சேறு மன்

1. நாட்டுச் சருக்கம்

6. மஞ்சுசூழ் மணிவரை யெடுத்த மாலமர்
இஞ்சிசூ ழணிநக ரிருக்கை நாடது
விஞ்சைநீ ளுலகுடன் விழாக்கொண் டன்னது
துஞ்சுநீ ணிதியது சுரமை யென்பவே. 1.

7. பங்கயங் காடுகொண் டலர்ந்த பாங்கெலாம்
செங்கய லினநிரை திளைக்குஞ் செல்வமும்
மங்கையர் முகத்தன மதர்த்த வாளரி
அங்கயற் பிறழ்ச்சியு மருத நீரவே. 2.

8. ஆங்கவ ரணிநடை யன்னத் தோட்டன
தீங்குரன் மழலையாற் சிலம்புந் தண்பணை
வீங்கிள முலையவர் மெல்லென் சீறடி
யோங்கிருஞ் சிலம்பினுற் சிலம்பு மூர்களே. 3.

9. நிழலகந் தவழ்ந்துதே னிரந்து தாதுசேர்
பொழிலகம் பூவையுங் கிளியும் பாடுமே
குழலகங் குடைந்துவண் டுறங்குங் கோதையர்
மழலையும் யாழுமே மலிந்த மாடமே. 4.

10. காவியுங் குவளையு நெகிழ்ந்து கள்ளுமி
ழாவியுண் டடர்த்ததே னகத்து மங்கையர்
நாவியுங் குழம்புமுண் ணகில நற்றவ
மேவிநின் றவரையு மெலிய விம்முமே. 5.

11. வானிலங் கருவிய வரையு முல்லைவாய்த்
தேனிலங் கருவிய திணையுந் தேறல்சேர்
பானலங் கழனியுங் கடலும் பாங்கணி
நானிலங் கலந்துபொன் னரலு நாடதே. 6.

12. முன்றி லெங்குமு ருகயர் பாணியுஞ்
சென்று வீழரு வித்திர ளோசையும்
வென்றி வேழமு ழக்கொடு கூடிவா
ஞென்றி நின்றதி ரும்மொரு பாலெலாம். 7.

13. ஏறு கொண்டெறி யும்பணைக் கோவலர்
கூறு கொண்டெழு கொன்றையந் தீங்குழல்
காறு கொண்டவர் கம்பலை யென்றிவை
மாறு கொண்டுசி லம்புமோர் மாடெலாம். 8.

14. அணங்க ஞரண வாடன் முழவமும்
கணங்கொள் வாரணக் கம்பலைச் செல்வமும்
மணங்கொள் வார்முர சும்வய லோதையு
மிணங்கி யெங்குமி ருக்குமோர் பாலெலாம். 9.

15. கலவ ரின்னிய முங்கட லச்சிறுர்
புலவு நீர்ப்பொரு பூணெறி பூசலும்
நிலவு வெண்மண னீளிருங் கானல்வா
யுலவு மோதமு மோங்குமோர் பாலெலாம். 10.

16. கைவி ரிந்தன காந்தளும் பூஞ்சுனை
மைவி ரிந்தன நீலமும் வான்செய்நாண்

மெய்வி ரிந்தன வேங்கையுஞ் சோர்ந்ததே
னெய்வி ரிந்தன நீளிருங் குன்றெலாம். 11.

17. கொன்றை யுங்குருந் துங்குலக் கோடலு
முன்றி லேறிய முல்லையம் பந்தரும்
நின்று தேனிரந் தூதவி ரிந்தரோ
மன்றெ லாமண நாறும ருங்கினே. 12.

18. நாற விண்டன நெய்தலு நாண்மதுச்
சேறு விண்டசெந் தாமரைக் கானமு
மேறி வண்டின மூன்றவி ழிந்ததே
னூறி வந்தொழு கும்மொரு பாலெலாம். 13.

19. கோடு டைந்தன தாழையுங் கோழிருண்
மோடு டைந்தன மூரிக்கு வளையும்
தோடு டைந்தன சூகமுங் கற்பகக்
காடு டைந்தன போன்றுள கானலே. 14.

20. நீல வாலவட் டத்தினி றங்கொளக்
கோலும் பீலிய கோடுயர் குன்றின்மே
லாலு மாமழை நீண்முகி லார்த்தொரு
மாலு மாமயி லாலுமொர் பாலெலாம். 15.

21. நக்க முல்லையு நாகிளங் கொன்றையு
முக்க தாதடர் கொண்டொலி வண்டரு
வெக்க ரீர்மணற் கிண்டியி னம்பெடைப்
பக்க நோக்கும்ப றவையொர் பாலெலாம். 16.

22. துள்ள ருக்கவுட் கொண்டுசு ரும்பொடு
கள்ள ருதசெந் தாமரைக் கானகத்
துள்ள ருதுதைந் தோகையி ரட்டுறப்
புள்ள ருதுபு லம்பின பொய்கையே. 17.

23. வெண்மு ளைப்பசுந் தாமரை மென்சுருண்
முண்மு ளைத்திர ளோடுமு னிந்துகொண்
டுண்மு ளைத்திள வன்னமு ழக்கலாற்
கண்மு ளைத்தத டத்தக ழியெலாம். 18.

24. காந்த ளங்குலை யாற்களி வண்டினங்
கூந்த லம்பிடி வீசக்கு ழாங்களோ
டேந்து சந்தனச் சாரலி ருங்கைம்மா
மாந்தி நின்றுறங் கும்வரை மாடெலாம். 19.

25. தார்செய் கொன்றைத ளித்த தண் டேறலுண்
டேர்செய் கின்றவி ளம்புலி ருங்குழைக்
கார்செய் காலைக றித்தொறு மெல்லவே
போர்செய் மாவினம் பூத்தண்பு றணியே. 20.

26. அள்ளி லைக்குவ ளைத்தட மேய்ந்தசை இக்
கள்ள லைத்தக வுட்கரு மேதியா
லுள்ள லைத்தொழு கக்குடைந் துண்டலாற்
புள்ள லைத்தபு னலபு லங்களே. 21.

27. கெண்டை யஞ்சினை மேய்ந்துகி ளர்ந்துபோய்
முண்ட கத்துறை சேர்ந்தமு தலைமா
வண்டல் வார்கரை மாமக ரக்குழாங்
கண்டு நின்றுக னலுங்க ழியெலாம். 22.

28. கண்ணி லாங்கழை யின்கதிர்க் கற்றையு
மண்ணி லாங்குரல் வார்தினை வாரியு
மெண்ணி லாங்கவி ளைவன வீட்டமு
முண்ணி லாங்குல வாமையு யர்ந்தவே. 23.

29. பேழ்த்த காயின பேரெட்பி றங்கிணர்
தாழ்த்த காயன தண்ணவ ரைக்கொடி

சூழ்த்த காய்த்துவ ரைவர கென்றிவை
மூழ்த்த போன்றுள முல்லைநி லங்களே. 24.

30. மோடு கொண்டெழு மூரிக்க ழைக்கரும்
பூடு கொண்டபொ தும்பரொ டுள்விராய்த்
தோடு கொண்டபைங் காய்துவள் செந்நெலின்
காடு கொண்டுள கண்ணக னுடெலாம். 25.

31. சங்கு நித்தில முந்தவ ழிப்பியுந்
தெங்கந் தீங்குலை யூறிய தேறலும்
வங்க வாரியும் வாரலை வாரியுந்
தங்கு வாரிய தண்கட னுடெலாம். 26.

வேறு

32. கொடிச்சியர் புனத்தயற் குறிஞ்சி நெய்பக
ரிடைச்சியர் கதுப்பயற் கமழு மேழையங்
கடைச்சியர் களையெறி குவளை கானல்வாய்த்
தொடுத்தலர் பிணையலார் குழலுட் டோன்றுமே.

33. கலவர்தஞ் சிறுபறை யிசையிற் கைவினைப்
புலவர்தேம் பிழிமகிழ் குரவை பொங்குமே
குலவுகாற் கோவலர் கொன்றைத் தீக்குழ
லுலவுநீ ளசுணமா வுறங்கு மென்பவே. 28.

34. மாக்கொடி யானையு மௌவற் பந்தருங்
கீர்க்கொடி முல்லையுங் கலந்து மல்லிகைப்
பூக்கொடிப் பொதும்பரும் கான ஞாழலுந்
தூக்கொடி கமழ்ந்துதாந் துறக்க மொக்குமே 29.

2. நகரச் சருக்கம்

35. சொன்னநீர் வளமைத் தாய
சுரமைநாட் டகணிசார்ந்து
மன்னன்வீற் றிருந்து வைக
நூலவர் வகுக்கப் பட்ட
பொன்னவிர் புரிசை வேலிப்
போதன மென்ப துண்டோர்
நன்னகர் நாக லோக
நகுவதொத் தினிய தொன்றே. 1.

36. சங்கமேய் தரங்க வேலித்
தடங்கடற் பொய்கை பூத்த
வங்கண்மா ஞால மென்னுந்
தாமரை யலரி னங்கேழ்ச்
செங்கண்மால் சுரமை யென்னுந்
தேம்பொகுட் டகத்து வைகு
நங்கையார் படிவங் கொண்ட
நலத்தது நகர மன்றே. 2.

37. செஞ்சுடர்க் கடவு டிண்டே
ரிவுளிகா றிவள வூன்று
மஞ்சுடை மதர்வை நெற்றி
வானுழு வாயின் மாடத்
தஞ்சுட ரிஞ்சி யாங்கோ
ரகழணிந் தவர்ந்த தோற்றம்
வெஞ்சுடர் விரியு முந்நீர்
வேதிகை மீதிட் டன்றே. 3.

38. இரும்பிடு தொடரின் மாவி
னெழுமுதற் பிணித்த யானைக்

கரும்பிடு கவள மூட்டுங்
கம்பலை கலந்த காவி
னரும்பிடை யலர்ந்த போதி
னல்லியுண் டரற்று கின்ற
சுரும்பொடு துதைந்து தோன்றுஞ்
சூழ்மதி லிருக்கை யெல்லாம். 4.

39. மானளா மதர்வை நோக்கின்
மையரி மழைக்க ணார்தந்
தேனளா முருவக் கண்ணிச்
செல்வர்தோ டிளைக்கு மாடங்
கானளாங் காம வல்லி
கற்பகங் கலந்த கண்ணுன்
வானளாய் மலர்ந்து தோன்று
மணிவரை யனைய தொன்றே. 5.

வேறு

40. அகில்லெழு கொழும்புகை மஞ்சி னுடவு
முகிலிசை யெனமுழா முரன்று விம்மவுந்
துகிலிகைக் கொடியனார் மின்னிற் றேன்றவு
மிகலின மலையொடு மாட மென்பவே. 6.

41. கண்ணெலாங் கவர்வன கனக கூடமும்
வெண்ணிலாச் சொரிவன வெள்ளி வேலியுந்
தண்ணிலாத் தவழ்மணித் தலமுஞ் சார்ந்தரோ
மண்ணினு வியன்றில மதலை மாடமே. 7.

42. மாடவாய் மணிமுழா விசைபு மங்கைய
ராடுவார் சிலம்பிணை யதிரு மோசையும்
பாடுவார் பாணியும் பயின்று பல்கல
மோடிமா ணகரது முரல்வ தொக்குமே. 8.

43. தாழிவாய்க் குவளையுந் தண்ணெ ணேதியர்
மாழைவா ணெடுங்கணு மயங்கி வந்துசென்
றுழிவார் மின்குர லாலித் தார்த்தரோ
வேழைவாய்ச் சுரும்பின மிளைக்கு மென்பவே. 9.

44. பளிங்குபோழ்ந் தியற்றிய பலகை வேதிகை
விளிம்புதோய் நெடுங்கடை வீதி வாயெலாந்
துளங்குபூ மாலையுஞ் சுரும்புந் தோன்றலான்
வளங்கொள்பூங் கற்பக வனமும் போலுமே. 10.

45. காவிவாய்க் கருங்கணார் காமர் பூஞ்சிலம்
பாவிவாய் மாளிகை யதிரக் கேட்டொறுந்
தூவிவான் பெடைதுணை துறந்த கொல்லென
வாவிவா யிளவன மயங்கு மென்பவே. 11.

46. விலத்தகைப் பூந்துணர் விரிந்த கோதையர்
நலத்தகைச் சிலம்படி நவில வூட்டிய
வலத்தகக் குழம்புதோய்ந் தரச வீதிகள்
புலத்திடைத் தாமரை பூத்த போலுமே. 12.

47. கண்ணிவாங் கடிமலர்க் குவளைக் கற்றையும்
வெண்ணிலாத் திரளென விளங்கு மாரமும்
வண்ணவான் மல்லிகை வளாய மாலையு
மண்ணன்மா நகர்க்கவைக் கரிய வல்லவே. 13.

48. தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியு
மாம்பழக் கனிகளு மதுத்தண் டட்டமுந்
தாம்பழுத் துளசில் தவள மாடமே. 14.

49. மைந்தரு மகளிரு மாலை காலையென்
றந்தரப் படுத்தவ ரறிவ தின்மையாற்

சுந்தரப் பொற்றுக ளுதைந்த பொன்னக
ரிந்திர வுலகம்வந் திழிந்த தொக்குமே. 15.

50. மற்றமா நகருடை மன்னன் றன்னுய
ரொற்றைவெண் குடைநிழ லுலகிற் கோருயிர்ப்
பெற்றியான் பயாபதி யென்னும் பேருடை
வெற்றிவேன் மணிமுடி வேந்தர் வேந்தனே. 16.

51. எண்ணின ரெண்ணகப் படாத செய்கையா
னண்ணிய ரகன்றவர் திறத்து மாணையர்
னண்ணுநர் பகைவரென் றிவர்க்கு நாளினுந்
தண்ணியன் வெய்யனந் தானை மன்னனே. 17.

52. நாமவே னரபதி யுலகங் காத்தநாட்
காமவேள் கவர்கணை கலந்த தல்லது
தாமவேல் வயவர்தந் தழலங் கொல்படை
நாமநீர் வரைப்பக நலிவ தில்லையே. 18.

53. ஆறிலொன் றறமென வருளி னல்லதொன்
றாறுசெய் துலகினி னுவப்ப தில்லையே
மாறிநின் றவரையும் வணக்கி னல்லது
சீறிநின் றெவரையுஞ் செகுப்ப தில்லையே. 19.

54. அடிநிழ லரசரை யளிக்கு மாய்கதிர்
முடிநிழல் முனிவரர் சரண மூழ்குமே
வடிநிழல் வனைகதி ரெஃகின் மன்னவன்
குடைநிழ லுலகெலாங் குளிர நின்றதே. 20.

55. மன்னிய பகைக்குழா மாறும் வையகந்
துன்னிய வரும்பகைத் தொகையு மின்மையாற்
றன்னையுந் தரையையுங் காக்கு மென்பதம்
மன்னவன் றிறத்தினி மருள வேண்டுமோ. 21.

56. மேலவர் மெய்ப்பொருள் விரிக்கும் வீறுசா
னூலினூற் பெரியவர் நுழைந்த சுற்றமா
வாலுநீ ரன்னமோ டரச வன்னமே
போலநின் றுலகினைப் பொதுமை நீக்கினான். 22.

57. கொதிநுனைப் பகழியான் குறிப்பி னல்லதொன்
றிதுநமக் கிசைக்கென வெண்ணு மெண்ணிலா
னெதுமலர் வெருவுறு நுவற்சி யானபின்
னதுவவன் பகுதிக ளமைதி வண்ணமே. 23.

58. மற்றவன் றேவியர் மகர வார்குழைக்
கொற்றவர் குலங்களை *விளக்கத் தோன்றினா
ரிற்றதிம் மருங்குலென் றிரங்க வீங்கிய
முற்றுறு முலையினார் கலையின் முற்றியார். 24.

59. பஞ்சனுங் கடியினார் பரந்த வல்குலார்
செஞ்சுணங் கிளமுலை மருங்கு சிந்தினார்
வஞ்சியங் குழைத்தலை மதர்வைக் கொம்புத
மஞ்சுட ரிணர்க்கொசிந் தனைய வைம்மையார்.()

60. காமத்தொத் தலர்ந்தவர் கதிர்த்த கற்பினார்
தாமத்தொத் தலர்ந்துதாழ்ந் திருண்ட கூந்தலார்
தூமத்துச் சுடரொர்ளி துளும்பு தோளினார்
வாமத்தின் மயங்கிமை மதர்த்த வாட்கணார். 26.

61. ஆயிர ரவரவர்க் கதிகத் தேவியர்
மாயிரு விசும்பினி னிழிந்த மாண்பினார்
சேயிருந்தாமரைத் தெய்வ மன்னரென்
றேயுரை யிலாதவ ரிருவ ராயினார். 27.

---

* (பாடபேதம்) விளங்கத்

வேறு

62. திங்கரும் பமிழ்த மூட்டித்
தேனளாய்ப் பிழிந்த போலு
மோங்கிருங் கடலந் தானை
வேந்தனங் குறுக்கு மின்சொல்
வீங்கிருங் குவவுக் கொங்கை
மிகாபதி மிக்க தேவி
தாங்கருங் கற்பிற் றங்கை
சசியென்பாள் சசியொ டொப்பாள். 28

63. பூங்குழை மகளிர்க் கெல்லாம்
பொன்மலர் மணிக்கொம் பன்ன
தேங்குழன் மங்கை மார்க
டிலதமாய்த் திகழ நின்றார்
மாங்கொழுந் தசோக மென்றாங்
கிரண்டுமே வயந்த காலத்
தாங்கெழுந் தவற்றை யெல்லா
மணிபெற வலரு மன்றே. 29

64. பெருமக னுருகும் பெண்மை
மாண்பினும் பேணி நாளும்
மருவினும் புதிய போலு
மழலையங் கிளவி யாலுந்
திருமகள் புலமை யாக்குஞ்
செல்வியென் றிவர்கள் போல
இருவரு மிறைவ னுள்ளத்
தொருவரா யினிய ரானார். 30

65. மன்னவ னாவி யாவார்
மகளிரம் மகளிர் தங்க

னின் னுயி ராகி நின்ற
 னிறைமக னிவர்க டங்கட்
கென்னைகொ லொருவர் தம்மே
 லொருவர்க்கிங் குள்ள மோட
முன்னவன் புணர்த்த வாறம்
 மொய்ம்மலர்க் கணையி னானே. 31.

66. சொற்பகர்ந் துலகங் காக்குந்
 தொழில்புறத் தொழிய வாங்கி
மற்பக ரகலத் தானை
 மனத்திடைப் பிணித்து வைத்தார்
பொற்பகங் கமழப் பூத்த
 தேங்துணர் பொறுக்க லாற்றாக்
கற்பகக் கொழுந்துங் காம
 வல்லியங் கொடியு மொப்பார். 32.

67. மங்கைய ரிருவ ராகி
 மன்னவ னொருவ னாகி
யங்கவ ரமர்ந்த தெல்லா
 மமர்ந்தருள் பெருகி நின்றான்
செங்கயன் மதர்த்த வாட்கட்
 டெய்வமா மகளிர் தோறுந்
தங்கிய வுருவந் தாங்குஞ்
 சக்கரன் றகைமை யானன். 33.

68. முற்றுநீர் வளாக மெல்லா
 முழுதுட னிழற்று மோரி
யொற்றைவெண் குடையி னீழ
 லுலகுக்கண் படுப்ப வோம்பிக்

2.

கொற்றவ னெடுங்க ணார்தங்
குவிமுலைத் தடத்து ளழ்கி
*மற்றவற் கரசச் செல்வ
மின்னண மமர்ந்த தன்றே. 34.

3. குமார காலச் சருக்கம்

69\. ஆங்கவர் திருவயிற் றமரர் கற்பமாண்
டீங்குட னிழிந்துவந் திருவர் தோன்றினார்
வாங்குநீர்த் திரைவளர் வளையு மக்கட
லோங்குநீர் நிழலுமொத் தொளிரு மூர்த்தியார்()

70\. பெண்ணிலாந் தகைப்பெருந் தேவி பேரமர்க்
கண்ணிலாங் களிவள ருவகை கைம்மிகத்
தண்ணிலா வுலகெலாந் தவழ்ந்து வான்கொள
வெண்ணிலாச் சுடரொளி விசயன் றோன்றினான்.

71\. ஏரணங் கிளம்பெருந் தேவி நாளுறச்
சீரணங் கவிரொளித் திவிட்டன் றோன்றினான்
நீரணங் கொளிவளை நிரந்து விம்மின
வாரணங் கலர்மழை யமரர் சிந்தினார். 3.

72\. திசையெலாந் தெளிந்தன தேவர் பொன்னக
ரிசையெலாம் பெருஞ்சிறப் பியன்ற வேற்பவர்
நசையெலா மவிந்தன நலியுந் தீவினைப்
பசையெலாம் பறந்தன பலர்க்கு மென்பவே. 4.

73\. செய்தமா ணகரியிற் சிறந்து சென்றுசென்
றெய்தினார் குமரராம் பிராய மெய்தலு
மைதுழா நெடுங்கணார் மனத்துட் காமனு
ரைதுலாங் கவர்கணை யரும்பு வைத்தவே. 5.

* (பா - ம்) மற்றவர்க்கரசசெல்வம்

74. காமரு வலம்புரி கமழு மேனியன்
தாமரை யகவிதழ் தடுத்த கண்ணினன்
றாமரு ளிருடுணர்ந் தனைய குஞ்சியன்
பூமரு பொலங்குழை புரளுங் காதினன். 6.

75. வாடலில் கண்ணியன் மலர்ந்த மார்பினன்
தாடவழ் தடக்கையன் தயங்கு சோதியன்
கோடுயர் குன்றெனக் குலவு தோளினன்
பீடுடை நடையினன் பெரிய நம்பியே. 7.

76. பூவையம் புதுமலர் புரையு மேனியன்
றாவிரி தாமரை தொலைத்த கண்ணினன்
தீவிரி யாம்பலிற் சிவந்த வாயினன்
மாவிரி திருமறு வணிந்த மார்பினன். 8.

77. செங்கயல் வலம்புரி திகிரி யென்றிவை
தங்கிய வங்கைய னடித்தண் போதினன்
மங்கல மழகளி றனைய செல்கைய
னிங்குமுன் மொழிந்தவற் கிளைய நம்பியே. 9.

78. திருவிளைத் துலகுகண் மலரத் தெவ்வர்தம்
புரிவளை நன்னகர்ச் செல்வம் புல்லென
வரிவளைத் தோளியர் மனத்துட் காமநோ
யெரிவளைத் திடுவதோ ரிளமை யெய்தினர். 10.

79. உவர்விளை கடற்கொடிப் பவள மோட்டிய
துவரிதழ் வாயவர் துளங்கு மேனிய
ரவர்கடம் மருள்கொலோ வனங்க னைய்மலர்
கவர்கணை கடைக்கணித் துருவு காட்டினர். 11.

80. கடலொளி மணிவணன் கனவில் வந்தெம
துடலகம் வெறுவிதா யுள்ளம் வவ்வினன்

விடலில னெம்முயிர் விடுக்குங் கொல்லென
மடவர லவர்குழா மயக்க முற்றதே. 12.

81. வார்வளை வண்ணனென் மனத்து ளான்பிற
ரேர்வளர் நெடுங்கணுக் கிலக்க மல்லனாற்
கார்வளர் கொம்பனா ரிவர்கள் காமநோ
யார்வளர்த் தவர்கொலென் பவரு மாயினார். 13.

82. கண்ணிலாங் கவினொளிக் காளை மார்திறத்
துண்ணிலா வெழுதரு காம வூழெரி
வெண்ணிலாச் சுடர்சுட விரிந்து நாண்விடாப்
பெண்ணிலாம் பிறிதுயிர் பெரிய தில்லையே. 14.

83. திருவளர் செல்வர்மேற் சென்ற சிந்தைநோ
யொருவரி னொருவர்மிக் குடைய ராதலா
லுருவளர் கொம்பனா ருள்ளங் காய்வதோ
ரெரிவளர்த் திடுவதோ ரிளமை யெய்தினார். 15.

84. மற்றோர்நா ளமரிகைக் கொடிகொண் மாமணிச்
சுற்றுவான் சுடரொளி தழுவிச் சூழ்மலர்
முற்றிவண் டினம்விடா முடிகொள் சென்னியக்
கொற்றவ னிளையவர் குழைய வைகினான். 16.

85. மஞ்சுடை மணிநகு மாலை மண்டபத்
தஞ்சுட ரகிற்புகை யளைந்து தேனளாய்ப்
பஞ்சுடை யமளிமேற் பள்ளி யேற்பவன்
செஞ்சுட ரிரிவதோர் திறத்த னாயினான். 17.

86. மன்னவன் றுயில்விடுத் தருள மைந்தர்பொற்
றுன்னிய வுடையினர் துதைந்த கச்சையர்
பின்னிய ஞாணினர் பிடித்த வில்லின
ரன்னவ ரடிமுதற் காவ னண்ணினார். 18.

87. தங்கிய தவமொழி தடாவி வில்விட
மங்கல வுழைக்கல மருங்கு சேர்ந்தன
வங்கவன் கண்கழூஉ வருளிச் செய்தனன்
பங்கய முகத்தர்பல் லாண்டு கூறினார். 19.

88. அந்தண ராசிடை கூறி யாய்மலர்ப்
பைந்துணர் நெடுமுடி பயில வேற்றினார்
செந்துணர் நறுமலர் தெளித்துத் தேவர்மாட்
டிந்திர னனையவ னிறைஞ்சி யேத்தினன். 20.

89. விரையமர் கோதையர் வேணுக் கோலின
ருரையமர் காவல்பூண் கடையி னூடுபோய்
முரசமர் முழங்கொலி மூரித் தானைய
ரரசவை மண்டப மடைவ தெண்ணினார். 21.

90. பொன்னவிர் திருவடிபோற்றி போற்றியென்
றன்னமென் னடையவர் பரவ வாய்துகிற்
கன்னியர் கவரிகா லெறியக் காவலன்
முன்னிய நெடுங்கடை முற்ற முன்னினன். 22.

91. மஞ்சிவர் வளநகர் காக்கும் வீரர்கழ
லஞ்சிவர் வேனர பதியை யாயிடை
வெஞ்சுடர் வாளினர் விசித்த கச்சையர்
கஞ்சுகி யவர்கண்மெய்க் காவ லோம்பினார். 23.

92. வாசநீர் தெளித்தலர் பரப்பி வானக
மேசுளி னிருக்கைய விலங்கு சென்னிய
மூசுதே னெடுங்கடை மூன்றும் போய்ப்புறத்
தோசைநீண் மண்டப முவந்த தெய்தினன். 24.

93. பளிங்கொளி கதுவப் போழ்ந்த
பலகைக்கண் குலவச் சேர்த்தி

விளங்கொளி விளிம்பிற் செம்பொன்
வேதிகை வெள்ளி வேயுட்
டுளங்கொளி பவளத் திண்காற்
சுடர்மணி தவழும் பூமி
வளங்கவின் றனைய தாய
மண்டப மலியப் புக்கான். 25.

94. குஞ்சரக் குழவி கவ்விக்
குளிர்மதிக் கோடு போலு
மஞ்சுட ரெயிற்ற வாளி
யணிமுக மலர வூன்றிச்
செஞ்சுட ரணிபொற் சிங்கா
சனமிசைச் சேர்ந்த செல்வன்
வெஞ்சுட ருதயத் துச்சி
விரிந்தவெய் யவனொ டொத்தான். 26.

95. பூமரு புரிந்த நுண்ணூற்
புரோகிதன் பொறிவண் டார்க்கு
மாமல ரணிந்த கண்ணி
மந்திரக் கிழவர் மன்னா
ரேமரு கடலந் தானை
யிறைமகன் குறிப்பு நோக்கித்
தாமரைச் செங்கட் சைகை
பணித்ததா னத்த ரானார். 27.

96. முன்னவ ரிருந்த பின்னை
மூரிநீ ருலகங் காக்கு
மன்னவன் கழலைத் தங்கண்
மணிமுடி நுதியிற் றீட்டிப்

பின்னவன் பணித்த தானம்
பெறுமுறை வகையிற் சேர்ந்தார்
மின்னிவர் கடகப் பைம்பூண்
வென்றிவேல் வேந்த ரெல்லாம். 28.

97. வழிமுறை பயின்று வந்த
மரபினார் மன்னர் கோமான்
விழுமல ரடிக்கண் மிக்க
வன்பினார் வென்றி நீரா
ரெழுவளர்த் தனைய தோளா
ரிளையவ ரின்ன நீரா
ருழையவ ராக வைத்தா
னோடைமால் களிற்றி னானே. 29.

98. காவல னென்னுஞ் செம்பொற்
கற்பகங் கவின்ற போழ்தி
னாவல ரென்னும் வண்டு
நகைமுகப் பெயரி னாய
பூவலர் பொலிவு நோக்கிப்
புலமயங் களிப்ப வாகிப்
பாவல ரிசையிற் றோன்றப்
பாடுபு பயின்ற வன்றே. 30.

99. பண்ணமை மகர நல்யாழ்ப்
பனுவனூற் புலவர் பாடி
மண்ணமர் வளாக மெல்லா
மலர்ந்தநின் புகழோ டொன்றி
விண்ணகம் விளங்கு திங்கள்
வெண்குடை நிழலின் வைகிக்

கண்ணம ருலகங் காக்கும்
கழலடி வாழ்க வென்ருர். 31.

100. மஞ்சுடை மலையின் வல்லி
தொடரவான் வணங்க நின்ற
வஞ்சுடர்க் கடவுட் காத்த
வருங்குல மலரத் தோன்றி
வெஞ்சுட ரெஃக மொன்றின்
வேந்துகண் ணகற்றி நின்ற
செஞ்சுடர் முடியி னாய்நின்
கோலிது செல்க வென்ருர். 32.

101. இன்னணம் பலரு மேத்த
வினிதினங் கிருந்த வேந்தன்
பொன்னணி வாயில் காக்கும்
பூங்கழ லவனை நோக்கி
யென்னவ ரேனு மாக
நாழிகை யேழு காறுங்
கன்னவி ரோளி னாய்நீ
வரவிடு காவ லென்ருன். 33.

102. ஆயிடை யலகில் மெய்ந்நூ
லளவுசென் றடங்கி நின்ருன்
சேயிடை நிகழ்வ தெல்லாஞ்
சிந்தையிற் றெளிந்த நீரான்
மேயிடை பெறுவ னாயின்
வேந்துகாண் குறுவன் கொல்லோ
நீயிடை யறிசொல் லென்ருேர்
நிமித்திக னெறியிற் சொன்ஞன். 34.

103. ஆங்கவ னரசர் கோமான்
குறிப்பறிந் தருளப் பட்டீ
ரீங்கினிப் புகுமி னென்று
னிறைவனை யவனுஞ் சேர்ந்தான்
வீங்கிருந் தானை யானும்
வெண்மலர் பிடித்த கையா
லோங்கிருந் தானங் காட்டி
யுவந்தினி திருக்க வென்றான். 35.

104. உற்றதன் னொழுக்கிற் கேற்ப
வுலகுப சார நீக்கிக்
கொற்றவன் குறிப்பு நோக்கி
யிருந்தபின் குணக்குன் றொப்பான்
முற்றிய வுலகின் மூன்று
காலமு முழுது நோக்கிக்
கற்றநூற் புலமை தன்னைக்
காட்டுதல் கருதிச் சொன்னான். 36.

105. கயந்தலைக் களிற்றி னோயோர்
கனுக்கண்ட துளது கங்கு
னயந்தது தெரியி னம்பி
நளிகடல் வண்ணன் றன்னை
விசும்பகத் திழிந்து வந்தோ
ரேழம்வெண் போது சேர்ந்த
தயங்கொளி மாலை சூட்டித்
தன்னிட மடைந்த தன்றே. 37.

106. மன்மலர்த் தகன்ற மார்ப
மற்றதன் பயனுங் கேண்மோ

நன்மலர் நகைகொள் கண்ணி
நம்பிதன் னாம மேத்தி
மின்மலர்ந் திலங்கு பைம்பூண்
விஞ்சைவேந் தொருவன வந்து
தன்மக ளொருத்தி தன்னைத்
தந்துதான் போகு மென்றான். 38.

107. கட்பகர் திவலை சிந்துங்
கடிகமழ் குவளைக் கண்ணித்
திட்பமாஞ் சிலையி னாய்நீ
தெளிகநா ளேழு சென்றா
லொட்பமா யுரைக்க வல்லா
னொருவனோ ரோலை கொண்டு
புட்பமா காண்ட மென்னும்
பொழிலகத் திழியு மென்றான். 39.

108. என்றவ னியம்பக் கேட்டே
யிருந்தவர் வியந்து நோக்கிச்
சென்றுயர் திலகக் கண்ணித்
திவிட்டனித் திறத்தனேயா
மொன்றிய வுலக மெல்லா
மொருகுடை நீழற் காக்கும்
பொன்றிக ழலங்கன் மார்ப
போற்றிபொய் யன்றி தென்றார். 40.

109. உரையமைந் திருப்ப விப்பா
லோதுநா ழிகையொன் றோட
முரசமொன் றதிர்த்த தோங்கி
யதிர்தலு முகத்தி னாலே.

யரசவை விடுத்த வேந்த
னகத்தநூ லவரை நோக்கி
வரையுயர் மாடக் கோயின்
மந்திர சாலை சேர்ந்தான். 41.

110. கங்குல்வாய்க் கனவவன் கருதிச் சொற்றது
மங்கலப் பெரும்பயன் வகுத்த வண்ணமுங்
கொங்கலர் தெரியலான் கூறிக் கொய்ம்மலர்த்
தொங்கலார் நெடுமுடி சூடரத் தூக்கினான். 42.

111. சூழுநீ ருலகெலாந் தொழுது தன்னடி
நீழலே நிரந்துகண் படுக்கு நீர்மையா
ளாழியங் கிழவனா யலரு மென்பது
பாழியந் தோளினாய் பண்டுங் கேட்டுமே. 43.

112. நற்றவ முடையனே நம்பி யென்றுபூண்
விற்றவழ் சுடரொளி விளங்கு மேனியக்
கொற்றவன் குறிப்பினை யறிந்து கூறிய
மற்றவர் தொடங்கினார் மந்தி ரத்துளார். 44.

வேறு

113. சங்க லேகையுஞ் சக்ர லேகையு
மங்கை யுள்ளன வையற் காதலால்
சங்க பாணியான் சக்க ராயுத
மங்கை யேந்துமென் றறையல் வேண்டுமே. 45.

114. விஞ்சைய ருலகுடை வேந்தன் றன்மகள்
வஞ்சியங் கொடியிடை மயிலஞ் சாயலா
ளெஞ்சலின் றியங்கிவந் திழியு மாய்விடி
லஞ்சிநின் றிவ்வுல காட்சி செல்லுமே. 46.

115\. நாமினி மற்றவன் மொழிந்த நாளினுற்
றேமரு சிலாதலந் திருத்தித் தெய்வமாந்
தூமரு மாலையாய் துரும காந்தனைக்
காமரு பொழிலிடைக் காவல் வைத்துமே. 47.

116\. என்றவர் மொழிந்தபி னிலங்கு பூணினு
னன்றது பெரிதுமென் றருளி நாடொறுஞ்
சென்றவன் காக்கென மொழிந்த தேங்குழ
லின்றுணை யவர்கடங் கோயி லெய்தினன். 48.

117\. எரிபடு விரிசுட ரிலங்கு பூணினன்
றிருவடி தொழுதுசெல் துரும காந்தனும்
வரிபடு மதுகர முரல வார்சினைச்
சொரிபடு மதுமலர்ச் சோலை நண்ணினன். 49.

4. இரத நூபுரச் சருக்கம்

118\. புரிசை நீண்மதிற் போதன மாநக
ரரசர் வார்த்தையவ் வாறது நிற்கவே
விரைசெய் வார்பொழில் விஞ்சையர் சேடிமே
லுரையை யாமுரைப் பானுற நின்றதே. 1.

119\. நிலவு வெண்சுடர் பாய்நில மொப்பநீண்
டுலவு நீள்கட றீண்டியு யர்ந்துபோ
யிலகு மின்மணி வானியன் மாடெலாம்
விலக நின்றது விஞ்சையர் குன்றமே. 2.

120\. தொக்க வானவர் சூழ்குழ லாரொடு
மொக்க வாங்குள ராய்வினை யாடலா
லுக்கு சோதிகள் சோலையி னூடெலாஞ்
செக்கர் வானக் முஞ்சிறி தொக்குமே. 3.

121. அவிழுங் காதல ராயர மங்கையர்
பவழ வாயமு தம்பரு கிக்களி
தவழு மென்முலை புல்லத்த தைந்ததார்
கமழ நின்றன கற்பகச் சோலையே. 4.

122. கிளருஞ் சூழொளிக் கின்னர தேவர்தம்
வளரும் பூண்முலை யாரொடு வைகலாற்
றுளருஞ் சந்தனச் சோலைக ளூடெலா
நளிருந் தெய்வந் றுங்குளிர் நாற்றமே. 5.

123. மங்குல் வாடைவந் தார்வன மீதுழாய்ப்
பொங்கு தாதொடு பூமதுக் கொப்பளித்
தங்க ராகம ளாயர மங்கையர்
கொங்கை வாரிகள் மேற்குதி கொள்ளுமே. 6.

124. தேன கத்துறை யுஞ்செழுஞ் சந்தனக்
கான கத்தழை யின்கமழ் சேக்கைமே
லூன கத்தவர் போகமு வந்தரோர்
வான கத்தவர் வைகிய வைகலே. 7.

125. மஞ்சு தோய்வரை மைந்தரொ டாடிய
வஞ்சி லோதிய ரரள கப்பொடி
பஞ்ச ராகம்ப தித்தப ளிக்கறை
துஞ்சு பாறைகள் மேற்றுதை வுற்றதே. 8.

126. மாத ரார்நடை கற்கிய வாணிழிந்
தூது வண்டுண வூழடி யூன்றிய
பாத ராகம்ப தித்தப ளிக்கறை
காத லார்தம கண்கவர் கின்றதே. 9.

127. ஆகு பொன்னறை மேலரு வித்திரள்
நாக கன்னிய ராடலின் ஞாங்கைம்மா

வேக மும்மத வெள்ளம ளாவிய
போக மல்லிகை நாறும்பு னல்களே. 10.

128. பூக்க ளாவன பொன்மரை பூம்பொழிற்
காக்க ளாவன கற்பகச் சோலைகள்
வீக்கு வார்கழல் விஞ்சையர் சேடிமே
லூக்கி யாமுரைக் கின்றதிங் கென்கொலோ. 11.

129. வரையின்* மேன்மதி கோடுற வைகிய
திருவ நீளொளித் தென்திசைச் சேடிமே
லிரத நூபுரச் சக்கர வாளமேன்
றுரைசெய் பொன்னக ரொன்றுள தென்பவே.

வேறு

130. அம்பொன்மாலை யார்களித்த
வத்தெழுந்த ரத்தவாய்க்
கொம்பனார்கொ டுத்தமுத்த
நீரவாய கோழரைப்
பைம்பொன்வாழை செம்பொனேப
ழுத்துவீழ்ந்த சோதியால்
வம்புபாய்ந்து வந்தொசிந்து
சாறுசார்வ மாணுமே. 13.

131. வேய்நிழன்னி லாவிலங்கு
வெள்ளிவிம்மு பாளைவாய்ப்
பாய்நிழற்ப சுங்கதிர்ப்ப
ரூஉமணிக்கு லைகுலாய்ச்
சேய்நிழற்செ ழும்பொனாற்றி
ரண்டசெம்ப ழுத்ததாய்ப்
போய்நிழற்பொ லிந்துவீழ்வ
போன்றபூக ராசியே. 14.

(பா - ம்.) * 'வரைமின் மேன்மதி'

132. காந்திநின்ற கற்பகநி
ழற்கலந்து கையறப்
பாய்ந்தெரிந்த போல்விரிந்து
பாரிசாத மேர்செய
வாய்ந்தெரிந்த செம்பொன்மாட
வாயிலாறு கண்கொளப்
போந்தெரிந்த போன்மரம்பு
றம்பொலிந்தி லங்குமே. 15.

133. மாசில்கண்ணி மைந்தரோடு
மங்கைமார்தி ளைத்தலிற்
பூசுசாந்த ழித்திழிந்த
புள்ளிவேர்பு லர்த்தலால்
வாசமுண்ட மாருதந்தென்
வண்டுபாட மாடவாய்
வீசவெள்ளி லோத்திரப்பொ
தும்பர்பாய்ந்து விம்முமே. 16.

134. ஆந்துணர்த்த மாலமும்ம
சோகபல்ல வங்களுந்
தாந்துணர்த்த சைந்தனத
ழைத்தலைத்த டாயின
மாந்துணர்ப்பொ தும்பர்வந்து
வைகமற்ற தான்றலாற்
றேந்துணர்ச்சு மந்தொசிந்த
சைந்ததேவ தாரமே. 17.

135. தெய்வயாறு காந்தளஞ்சி
லம்புதேங்கொள் பூம்பொழிற்
பௌவமுத்த வார்மணற்ப
றம்புமௌவன் மண்டப

மெவ்வமாடு மின்னபோலி
டங்களின்ப மாக்கலாற்
கவ்வையாவ தந்நகர்க்கு
மாரனார்செய் கவ்வையே. 18.

136. மற்றமாந கர்க்குவேந்தன்
மானயானை மன்னர்கோ
னற்றமின்றி நின்றசீர
ழற்பெயர்ப்பு ணர்ச்சியான்
முற்றுமுன்ச டிப்பெயர்சொன்
மூன்றுலஃகு மான்றெழப்
பெற்றுநின்ற பெற்றியான்
பீடியாவர் பேசுவார். 19.

137. இங்கண்ஞால மெல்லைசென்றி
லங்குவெண்கு டைநிழல்
வெங்கண்யானை வேந்திறைஞ்ச
வென்றியின்வி ளங்கினான்
கொங்குகொண்டு வண்டறைந்து
குங்குமக்கு ழம்பளா
யங்கராக மங்கணிந்த
லர்ந்தவார மார்பினான். 20.

138. விச்சையாய முற்றினான்
விஞ்சையார்க ளஞ்சநின்
றிச்சையாய வெய்தினா
னேந்துசெம்பொ னீண்முடிக்
கச்சையானை மானவேற்
கண்ணிலங்கு தாரினான்
வெச்செனச்சொ லொன்றுமேவி
டுத்துமெய்ம்மை மேயினான், 21.

வேறு

139. வெற்றி வெண்குடை விஞ்சையர் வேந்தவ
னொற்றை யந்தனிக் கோலுல கோம்புநாட்
குற்ற மாயதொன் றுண்டு குணங்களா
லற்ற கீழுயிர் மேலரு ளாமையே. 22.

140. செம்பொ னீண்முடி யான்செரு வின்றலை
வெம்பு வேலவன் விஞ்சையர் மண்டிலம்
நம்பி யாள்கின்ற நாளி னடுங்கின
கம்ப மாடக் கதலிகை போலுமே. 23.

141. மின்னு வார்ந்தமந் தாரவி ளங்கிணர்
துன்னு தொன்முடி யானொளி சென்றநாண்
மன்னு மாடவர் மேல்வளைந் திட்டன
பொன்ன னார்புரு வச்சிலை போலுமே. 24.

142. வெண்ணி லாச்சுட ருந்தனி வெண்குடை
எண்ணி லாப்புக ழானினி தாண்டநா
ளுண்ணி லாப்பல வாயுள வாயின
கண்ண னாரொடு காமக்க லங்களே. 25.

143. மாக்கள் வைய மகிழ்ந்துதன் றாணிழல்
நோக்கி வைக நுனித்தவ னண்டநாட்
டாக்க ணங்களை யார்தம தாயரால்
வீக்கப் பட்டன மென்முலை விம்முமே. 26.

144. வடிய வானவ னுளவும் வாய்களிற்
கடிய வாயின கள்ளவிழ் தேமல
ரடிய வாய்ப்புயப் பட்டடங் காவலர்க்
கொடிய வாயின கொங்கவிழ் சோலையே. 27.

145. மாய மாயநின் முன்வரை மார்பிடை
மேய பூமகள் போல விளங்கினா
டூய வாமுறு வற்றுவர் வாயவள்
வாயு வேகையென் பாள்வளர் கொம்பனாள். 28.

146. பைம்பொற் பட்ட மணிந்தகொல் யானையா
னம்பொற் பட்ட நறுங்குழ லார்க்கெலாஞ்
செம்பொற் பட்டஞ் செறிந்த திருநுதல்
அம்பொற் பட்டுடை யாளணி யாயினாள். 29.

147. கோவை வாய்க்குழ லங்குளிர் கொம்பனாள்
காவி வாணெடுங் கண்ணியக் காவலற்
காவி யாயணங் காயமிழ் தாயவன்
மேவு நீர்மைய ளாய்விருந் தாயினாள். 30.

148. முருக்கு வாயவண் முள்ளெயிற் றேர்நகை
யுருக்க வேந்த னொருங்குறை கின்றநாள்
பெருக்க மாகப் பிறந்தனன் பெய்கழ
லருக்க கீர்த்தியென் பானலர் தாரினான். 31.

149. நாம நல்லொளி வேனம்பி நங்கையா
யேம நல்லுல கின்னிழிந் தன்னகைத்
தாம மல்லிகை மாலைச் சயம்பவை
காம வல்லியுங் காமுறத் தோன்றினாள். 32.

150. கங்கை நீரன கான்றக திரிளந்
திங்க ளாற்றெழுப் பட்டது செக்கர்வான்
மங்கை மார்பிறப் பும்மட மாதரிந்
நங்கை யாற்றெழுப் பாடுந வின்றதே. 33.

151. வண்டு சூழ்மலர் போன்றள கக்கொடி
கொண்டு சூழ்ந்தது குண்டல வாண்முகம்

கெண்டை கண்கிள ரும்புரு வஞ்சிலை
யுண்டு கொல்லென வுண்டும ருங்குலே. 34.

152. காதின் மீதணி கற்பகத் தொத்திண
ரூது தேனிற கூன்றியி ருத்தொறும்
போது தேர்முகத் தும்புரு வக்கொடி
நோத லேகொல்நொ சிந்துள வாங்கனே. 35.

153. விண்ண ணங்கவி ழித்துவி ளங்கொளி
மண்ண ணங்குற வேவளர் வெய்திய
பெண்ண ணங்கிது தோன்றிய பின்கொலோ
கண்ண ணங்குறு காரிகை கண்டதே. 36.

154. கொங்கை போதரு வான்குமிழ்க் கின்றன
அங்க ராகம ணிந்தகை யன்றியும்
நங்கை நாகரி கம்பொறை நாண்மதுத்
தங்கு வார்கொடி யிற்றளர் வித்ததே. 37.

155. மங்கு ரேய்வரை மன்னவன் றெல்குடி
நங்கை போற்றியென் றேத்திந றுங்குழன்
மங்கை மார்பலர் காப்பவ ளர்ந்துதன்
கொங்கை யாற்சிறி தேகுழை வெய்தினள். 38.

156. வாம வாணெடு நோக்கிம டங்கனி
தூம வார்குழ லாடுவர் வாயிடை
நாம நல்லொளி முள்ளெயி றுள்ளெழு
காம னுளரும் பிற்கடி கொண்டவே. 39.

157. மஞ்சு தோய்வரை யாரஞ்சு மாண்பிறை
லஞ்சி லோதினி னைப்பின கத்தவாய்
விஞ்சை தாம்பணி செய்தல்வி ரும்பின
னெஞ்சி லாவகை யாலினர் கொண்டவே. 40.

158. நங்கை தோன்றிய பின்னகை வேலினாற்
கங்கண் ஞாலம மர்ந்தடி மைத்தொழி
றங்க நீண்முடி யாற்றலை நின்றனர்
வெங்கண் யானைவி ளங்கொளி வேந்தரே. 41.

வேறு

159. நங்கையாள் வளர்ந்து காம
நறுமுகை துணர வைத்து
மங்கையாம் பிராய மெய்தி
வளரிய நின்ற நாளுட்
பைங்கண்மால் யானை யாற்குப்
பருவம்வந் திறுத்த தென்றாள்
வங்கவாய்ப் பவழச் செவ்வாய்
வயந்தமா திலகை யென்பாள். 42.

160. தேங்குலா மலங்கன் மாலைச்
செறிகழன் மன்னர் மன்னன்
பூங்குலாய் விரிந்த சோலைப்
பொழிமதுத் திவலை தூவக்
கோங்கெலாங் கமழ மாட்டாக்
குணமிலார் செல்வ மேபோல்
பாங்கெலாஞ் செம்பொன் பூப்ப
விரிந்தது பருவமென்றாள். 43.

161. வேய்ந்திணை ரொசித்த சோலை
வேனிலான் வென்றி யோகைத்
தேந்துணர் கொடுப்ப மூழ்கித்
தேறல்வாய் நெகிழ மார்ந்தித்
தாந்துணர் துணையோ டாடிச்
சாறுகொள் டூறு மேரார்

மாந்துண ரொசிய வேறி
மதர்த்தன மணிவண் டெல்லாம். 44.

162. கடிமலர்க் கணையி னூன்றன்
கழலடி பரவிக் காமர்
படிமலர்த் தும்பி யென்னும்
பாண்படை தொடர்ந்து பாடக்
கொடிவளர் மகளிர் பூங்கட்
குடைந்து நீர் குடிமி னென்று
வடிமலர் வள்ளத் தேந்த
வாய்மடுத் திட்ட வன்றே. 45.

163. அஞ்சுடர் முருக்கி னங்கே
முணிமல ரணிந்து கொம்பர்த்
துஞ்சிடை பெருது தும்பி
துவன்றிமேற் றுகைக்குந் தோற்றஞ்
செஞ்சுட ரிலங்குஞ் செந்தீக்
கருஞ்சுடர்க் கந்துள் சிந்தி
*மஞ்சுடை மயங்கு கானம்
மங்கிய வகையிற் றன்றே. 46.

164. அந்தழை யசோகம் பூத்த
அழகுகண் டவாவி னேக்கி
வெந்தழற் பிறங்க லென்று
வெருவிய மறுவி றும்பி
கொந்தவிழ்ந் துமிழப் பட்ட
குளிர்மதுத் திவலை தூவச்
செந்தழற் பிறங்க லன்மை
தெளிந்துசென் றடைந்த வன்றே. 47

(பா - ம்.) * மண்டிய வகையிற்றன்றே.

165. மாஞ்சினை கறித்த துண்டந்
துவர்த்தலின் மருங்கு நீண்ட
பூஞ்சினை முருக்கஞ் சோலைப்
பூக்கள்வா யார மாந்தித்
தீஞ்சுவை மிழற்று கின்ற
சிறுகுயில் செல்வ ரேனுந்
தாஞ்சுவை திரிந்த பின்றைச்
சார்பவ ரில்லை யன்றே. 48.

166. கோவைவண் டூது கின்ற
குரவெனுங் குரைகொண் மாதர்
பாவைகொண் டாடு கின்ற
பருவத்தே பயின்ற காம
ஞவிகொண் டிவளைக் கைவிட்
டகனுமோ வென்று தத்தம்
பூவையுங் கிளியுங் கொண்டு
புலம்பின பொழில்க ளெல்லாம். 49.

167. வயந்தமாங் குணர்த்தக் கேட்டே
மன்னவன் மக்க ளோடு
முயர்ந்ததன் னுரிமை யோடு
முரிமைகாப் பவர்க ளோடுங்
கயந்தலைக் களிறுந் தேரும்
வையமுங் கவின வேறி
நயந்தன னகரி னீங்கி
மனோவன நண்ணி னானே. 50.

வேறு

168. கோமான்சென் றணைதலுமே
கொங்கணிந்த மலர்தூவித்

தேமாநின் றெதிர்கொள்ளச்
சிறுகுயில்போற் றிசைத்தனவே
வாமான்றேர் மன்னற்கு
மங்கலஞ்சொன் மகளிரைப்போற்
றாமாண்ட விளங்கொடிதந்
தளிர்க்கையாற் றொழுதனவே. 51.

169. கடிவாச மலர்விண்ட
கமழ்தாது கழலவற்கு
வடிவாசப் பொடியாக
வனவல்லி சொரிந்தனவே
புடைவாசங் கொளமாலம்
பூங்கவரி யெடுத்தெறியக்
குடைமாக மெனவேந்திக்
கோங்கம்போ றவிழ்ந்தனவே. 52.

170. கொடியாடு நெடுநகரக்
கோமான்றன் குணம்பரவி
யடிபாடு மவர்களென
வணிவண்டு முரன்றனவே
வடிவாய வேலவற்கு
மலர்ச்சின்னஞ் சொரிவனபோற
கொடிவாய கிளிகோதிக்
குளிர்நறும்போ துகுத்தனவே. 53.

171. குரவகத்துக் குடைந்தாடிக்
குளிர்நறவங் கொப்பளித்தார்த்
தரவவண்டின் னிசைபாட
வருவிநீ ரளைந்துராய்

விரைமலர்ந்த துணர்வீசி
விரைஞாற வருதென்றல்
புரவலன்றன் றிருமுடிமேற்
போதலர வசைத்ததே. 54.

172. இன்னவா றிளவேனி
லெதிர்கொள்ள வெழில்யானை
மன்னவாந் தனிச்செங்கோன்
மறவேல்வை யகவேந்தன்
றன்னவா மடவாரைத்
தானுவந்து பொழில்காட்டி
மின்னவா மிடைநோவ
விளையாட வருளினான். 55.

173. எரியணிந்த விளம்பிண்டி
யிணரார்ந்த விடமெல்லாம்
பொரியணிந்து புன்குதிர்ந்து
பூநாறுந் துறையெல்லாம்
வரியணிந்து வண்டூத
வளர்கின்ற விளவேனில்
புரியணிந்த குழலீர்நுஞ்
செல்வம்போற் பொலிந்ததே. 56.

174. காரணிந்த குழலீர்நுங்
கைத்தலங்க டகைநோக்கிச்
சீரணிந்த செழும்பிண்டி
தளிரீன்று திகழ்ந்தனவே
வாரணிந்த முலையிர்நும்
மருங்குறனின் வகை நோக்கி
யேரணிந்த குருக்கத்தி
யிளங்கொடித்தா மீன்றனவே. 57.

175. மாந்தளிரிங்கிவை நுமது
நிறங்கொண்டு வளர்ந்தனவே
யேந்திளந் தீங்குயி லிவை
நுஞ்சொற் கற்பா னிசைந்தனவே
தேந்தளங் குழலீர் நுஞ்
செவ்வாயி னெழி னோக்கித்
தாந்தளிர் மென் முருக்கினிய
தாதோடு ததைந்தனவே. 58.

176. காவியுஞ் செங்கழுநீருங்
கமலமுங் கண் விரிந்துநளி
வாவியு மண்டபமு மெழின்
மதனனையு மருட்டுமே
தூவியருங் கிளியன்ன
சொல்லீர் நீர் துணையில்லா
ராவியுய்ந் துள்ளாராத
லரிதேயிவ் விளவேனில். 59.

வேறு

177. இன்னண மினையவர்
மருள விண்டு சீர்
மன்னவன் வயந்தமாட்
டருளி மாமணிக்
கன்னவில் புரிசையுட்
கடவுட் காக்கிய
பொன்னவி றிருநகர்
புறுமொ டெய்தினன். 60

178. உலமுறை தோளின
னுவகை கூர்ந்தனன்

குலமுறை வழிபடுந்
தெய்வக் கோயிலை
வலமுறை வந்தனன்
வரனு மாமணிக்
கலமுறை கதிர் நக்கைக்
கபாடம் போழ்ந்ததே. 61.

179. பிணிநிலை பெயர்ப்பன
பிறவி தீர்ப்பன
மணி நிலை விசும்பொடு
வரங்களீவன
கணி நிலை யிலாத்
திறற் கடவுட்டானக
மணிநிலைச் சுடரொளி
மலர்ந்து தோன்றவே. 62.

180. மெய் மயிரெறிந் தொளி
துளும்பு மேனியன்
கைமுகிழ் முடித்தடங்
கதழச் சேர்த்தினன்
வெம்மை செய் வினைத்துகள்
விளிய வென்றவன்
செம்மலர்த் திருந்தடி
சிரினேத்தினன். 63.

வேறு

181. அணியாது மொளி திகழு
மாரணங்கு திருமூர்த்தி
கணியாது முழுதுணர்ந்த
கடவுளின் றறையுமே

கணியாது முழுதுணர்ந்த
கடவுளென் றறைந்தாலு
மணி ஞால முடையானை
யறிவாரோ வரியரே. 64.

182. பகை நாறு மயிற் படைகள்
பயிலாத திருமூர்த்தி
யிகன்மாற வென்றுயர்ந்த
விறைவ னென்றறையுமே
யிகன் மாற வென்றுயர்ந்த
விறைவ னென்றறைந்தாலு
மகன் ஞால முடையானை
யறிவாரோ வரியரே. 65.

183. திரு மறுவு வலனணிந்து
திகழ்கின்ற திருமூர்த்தி
யொரு மறுவு மிலையென்ப
தொழியாம லுணர்த்துமே
யொரு மறுவு மிலையென்ப
தொழியாம லுணர்த்துகினு
மருமறையை விரித்தானை
யறிவாரோ வரியரே. 66.

வேறு

184. இன்னண மிறைவனை
யேத்தி யேந்தறன்
சென்னியுட் சேர்த்திய
சேடப் பூவினன்
கன்னவி றிருமணிக்
கபாடந் தாழுநீஇ

முன்னிய திருநகர்
முற்ற முன்னினான். 67.

185. ஆரணங் கவிரொளி
யெரிய வாயிடைச்
சாரணர் விசும்பினின்
றிழிந்து தாதைத
னோரணி வளநகர்
வலங்கொண் டின்னணஞ்
சீரணி மணிக்குரல்
சிலம்ப வாழ்த்தினார். 68.

வேறு

186. விரைமணந்த தாமரைமேல்
விண்வணங்கச் சென்று
வுரைமணந்தி யாம்பரவ
வுண் மகிழ்வாயல்லை
யுண் மகிழ்வாயல்லை
யெனினு முலகெல்லாங்
கண்மகிழ நின்றாய் கட்
காத லொழியோமே. 69.

187. முருகணங்கு தாமரையின்
மொய்மலர்மேற் சென்று
யிருகணங்கி யேத்தியது
மகிழ்வா யல்லை
யது மகிழ்வாயல்லை
யெனினும் பெயராக
கதிமகிழ நின்றாய்கட்
காத லொழியோமே. 70.

188. மணமயங்கு தாமரைமேல்
வான் வணங்கச் சென்றாய்
குணமயங்கி யாம்பரவக்
கொண்டுவப்பா யல்லை
கொண்டு வப்பாயல்லை
யெனினுங் குளிர்ந்துலகங்
கண்டுவப்ப நின்றாய்கட்
காதலொழி யோமே. 71.

வேறு

189. தீதறு முனிவர்தஞ்
செல்வன் சேவடிக்
காதலி னொழுகிய
காம ரின்னிசை
யேதமின் றெவ்வள
விசைத்த தவ்வள
வோதிய வுயிர்க்கெலா
முறுகண் டீர்ந்தவே. 72.

190. இறைவனை யின்னண
மேத்தித் தந்தொழில்
குறைவிலா முடிந்தபின்
குணக் குன்றாயினார்
மறமலி மன்னனை
நோக்கி மற்றவற்
கறமழை பொழிவதோ
ரார்வ மெய்தினார். 73.

191. தென்றலுஞ் செழுமதுத்
திவலை மாரியு

மென்றுநின் றருத தோ
ரிளந்தண் பிண்டியு
நின்றொளி திகழ்வதோர்
நிலாக்கல் வட்டமுஞ்
சென்றவ ரமர்ந்துழித்
திகழ்ந்து தோன்றுமே. 74.

192. வென்றவன் றிருநகர்
விளங்கு வேதிகை
மூன்றில் சேர்ந்
திருந்தனர் முனிவராதனு
மின்றவழ் விளங்குவேல்
வென்றி வேந்தனுஞ்
சென்றவர் திருந்தடி
முடியிற் றீட்டினன். 75.

193. பாசிடைப் பரப்புடைப்
பழன நாடனை
யாசிடை கொடுத்தவ
ரிருக்க வென்றனுந்
தூசுடை மணிக்கலை
மகளிர் சூழ்தர
வேசிடை யிலாதவ
னிருக்கை யெய்தினன். 76.

194. தாளுயர் தாமரைத்
திருவுந் தண்கதிர்
நீளொளி வாரமு
நிழன்ற கண் குலாந்
தோளிணை செவ்வியோ
வென்னச் சூழொளி

வாளவன் மணி முடி
வணங்கி வாழ்த்தினுன். 77.

195. முனிவருட் பெரியவன்
முகத்து நோக்கியொன்
றினிதுள துணர்த்துவ
தடிக ளென்றலும்
பனிமலர்த் தாமரைப்
பழன நாடனைக்
கனியமற் றின்னணங்
கடவுள் கூறினுன். 78.

196. துன்னிய வினைப் பகை
துணிக்குந் தொன்மை சா
வின்னுரை யமிழ்
தெமக் கீமினென் பதா
மன்னநின் மனத்துள
தென்ன மாமணிக்
கன்னவில் கடகக்கை
கதழக் கூப்பினுன். 79.

வேறு

197. மெய்யறி விலாமை யென்னும்
வித்தினிற் பிறந்து வெய்ய
கையறு வினைகள் கைபோய்க்
கடுந்துயர் விளைத்தபோழ்தின்
மையுற வுழந்து வாடும்
வாழுயிர்ப் பிறவிமாலை
நெய்யுற நிழற்றும் வேலோ
யினைத்தெ நினைக்கலாமோ. 80.

198. சூழ்வினை துரப்பச் சென்று
சூழ்வினைப் பயத்தினாலே
வீழ்வினை பிறிதுமாக்கி
வெய்துற விளிந்து தோன்றி
யாழ்துயருழக்கு மங்தோ
வளியற்ற வறில் சாதித்
தாழ்வினை விலக்குஞ்
சார்வு தலைப்படா வளவுமென்றான். 81.

199. காதியங் கினைகள் சீறுங்
காமரு நெறிக்குங் கண்ணாய்ப்
போதியங் கிழவர்தங்க
டியானத்துப் புலங்கொண்டேத்தி
யாதியந் தகன்றுநின்ற
வடிகளே சரணங்கண்டாய்
மாதுயரிடும்பை தீர்க்குஞ்
சரணெனப் படுவ மன்னா. 82.

200. மெய்ப் பொரு டெரிதல்
மற்றப் பொருண்மிசை விரிந்தஞான
மப்பொருள் வழாத நூலி
னருந்தகை யொழுக்கந் தாங்கி
யிப்பொருளிவைகள் கண்டா
யிறைவனால் விரிக்கப்பட்ட
கைப்பொரு ளாகக்கொண்டு
கடைப்பிடி கனபொற்றாரோய். 83.

201. உற்றடு பிணியு மூப்பு
மூழுறு துயரு நீக்கிச்
சுற்றிநின் றுலகமேத்துஞ்
சுடரொளி யுருவந் தாங்கிப்

பெற்றதோர் வரம்பிலின்பம்
பிறழ்விலா நிலைமை கண்டாய்
மற்றவை நிறைந்த மாந்தர்
பெறப்படு நிலைமை மன்னே. 84.

202. அருந்துயரறுக்கு மாண்பி
னரமிர்தவை கண் மூன்றுந்
திருந்தநன் குரைப்பக்
கேட்டே தீவினை யிருள்கள் போழும்
விரிந்த நல்லறிவின் சோதி
விளங்கலிற் சனங்களெல்லாம்
பரிந்தகங் கழுமத் தேறிப்
பவம்பரிந் தவர்களொத்தார். 85.

203. மன்னிய முனிவன் வாயுண்
மணிகொழித் தினைய வாகிப்
பன்னிய பவங்க டீர்க்கும்
பயங்கெழு மொழிகடம்மாற்
கன்னவில் கடகத் தோளான்
காட்சியங் கதிர்ப்புச் சென்றான்
பின்னவ னரிமை தானும்
பெருவத மருவிற் றன்றே. 86.

வேறு

204. மன்னவன் மடமகள்
வணங்கி மற்றவ
ரின்னுரை யமுதமுண்
டெழுந்த சோதியள்
பன்னியெரிர் நோன்புமேற்
கொண்டு பாங்கினாற்

பின்னது முடிப்பதோர்
பெருமை யெண்ணினான். 87.

205. முனிவரர் திருந்தடி
வணங்கி மூசுதேன்
பனிமலர் விரவிய
படலை மார்பினான்
கனிவளர் பொழிலிடைக்
கடவுளா னக
ரினிதினின் வலமுறை
யெய்தி யேகினான். 88.

206. வாம மேகலையவர்
மனத்தில் வார்பொழிற்
காமவே ளிடங்கொள
வருளிக் கண்ணொளிர்
தாம வேலினையவர்
காப்பத் தாழ்கதிர்
நாமவே ளரபதி
நகர நண்ணினான். 89.

207. அகநக ரரைசரோ
டரைசன் சென்றபின்
சகதபி நந்தனெ
ரென்னுஞ் சாரணர்
மிகநனின் றிறைவனை
வணங்கி விண்ணிடைப்
பகநகு சுடரொளி
பட்டர வேகினார். 90.

208. அழற்கொடி யெறித்
தொழுஞ் சுடரு மாடக

நிழற் கொடியது வென
நிறைந்த காரிகைக்
குழற் கொடியனையவள்
கொண்ட நோன்பினு
லெழிற் கொடி சுடர்வதோ
ரியற்கை யெய்தினுள். 91.

209. முகைத்தவார் முல்லையை
முருக்கு மெல்லெயிற்
றகைத்தவார் குழலவ
டன்மையாயினும்
வகுத்தவா றுயர்ந்தன
நோன்பு மாசிலா
வகத்து மாண்புடை
யவர்க் கரியதில்லையே. 92.

210. இந்திர வுலகமும்
வணக்கு மீடுடைத்
தந்திர நோன்பொளி
தவழுந் தையலாண்
மந்திர நறு மெய்யால்
வளர்ந்து மாசிலா
வந்தர வழற்கொடி
யனைய ளாயினுள். 93.

211. தாங்கருஞ் சுடரொளி
சக்கிர வாளமென்
றோங்கிரும் பெயர்கொ
ணோன் புயர நோற்றபின்
தீங்கரும் பனைய சொற்
சிறுமி தெய்வதக்

காங்கொடு பெருஞ்
சிறப் பயர்தன் மேயினாள். 94.

212. தண்ணவிர் நிலாச்சுடர்
தவழு மவ்வரைக்
கண்ணவிர் சென்னிமேற்
கடவுட் டானமஃ
தண்ணலங் கோமக
ளருச்சித் தாயிடை
விண்ணவ ருலகமும்
வியப்ப வேத்தினாள். 95.

வேறு

213. ஆதியங் கடவுளை
யருமறை பயந்தனை
போதியங் கிழவனை
பூமிசை யொதுங்கினை
போதியங் கிழவனை
பூமிசை யொதுங்கிய
சேதியஞ் செல்வநின்
றிருவடி வணங்கினம். 96.

214. காமனைக் கடிந்தனை
காலனைக் காய்ந்தனை
தேமலர் மாரியை
திருமறு மார்பனை
தேமலர் மாரியை
திருமறு மார்பனை
மாமலர் வண்ணநின்
மலரடி வணங்கினம். 97.

215. ஆரருள் பயந்தனை
யாழ்துய ரவித்தனை
யோரரு ளாழியை
யுலகுடை யொருவனை
யோரரு ளாழியை
யுலகுடை யொருவனை
சீரருண் மொழிய நின்
றிருவடி தொழு தனம். 98.

வேறு

216. கருவடி நெடுநல்வேற்
கண்ணி பின்னணம்
வெருவுடை வினைப்பகை
விலக்கும் வீறுசான்
மருவுடை மொழிகளாற்
பரவி வாமன
திருவடிச் சேடமுந்
திகழச் சூடினாள். 99.

217. வானுயர் கடவுளை
வயங்கு சேவடித்
தேனுயர் திருமலர்ச்
சேடங் கொண்டபின்
மானுயர் நோக்கியர்
பரவ மங்கைதன்
கோனுயர் வளநகர்க்
கோயின் முன்னினாள். 100.

218. வெஞ்சுடர் வேலவர்க்
குணர்த்தி மெல்லவே
பஞ்சுடைச் சேவடி
பரவச் சென்றுதன்
னஞ்சுடர் மெல்விரல்
சிவப்ப வாளியற்

செஞ்சுடரங் கையிற்
சேட நீட்டினாள். 101.

219. அல்லியினரவ வண்
டரிய வாய்மலர்
வல்லியின் வணங்கிய
மகளை மன்னவன்
முல்லையஞ் சிகழிகை
முச்சிமோந்திவை
சொல்லிய தொடங்கினான்
சுடரும் வேலினான்; 102.

220. தேந்துணர் பலவுள
வேனுஞ் செங்குழை
மாந்துணர் வயந்தனை
மலரத் தோன்றுமே
பூந்துண ரோதி நீ
பிறந்து பொன் செய்தார்
வேந்துவந் திறைஞ்சயான்
விளங்கு கின்றதே. 103.

221. கங்கைநீர் பாய்ந்துழிக்
கடலுந் தீர்த்தமா
மங்கணீருல கெலா
மறியப்பட்டது
நங்கை நீ பிறந்ததற்
பின்னை நங்குடி
வங்கநீர் வரைப்பெலாம்
வணக்கப்பட்டதே. 104

222. போதுலாந் தாமரை
பூத்த பொய்கையைத்
தீதுலாங் கீழுயிர்
தீண்டச் செல்லல
மாதுலா மடந்தை
நீ பிறந்திம் மண்டில

மேதிலா ரிடைதிற
மிகந்து நின்றதே. 105

223. வானகத் திளம்பிறை
வளரவையக
மீனகத் திருள்கெட
வின்பமெய்துமே
நானகக் குழலி நீ
வளர நங்குடி
தானகத் திருள்கெடத்
தயங்குகின்றதே. 106

224. கண்பகர் மல்லிகை
கமழக் காதலாற்
சண்பகத் தனிவனந்
தூம்பி சாருநீ
பெண்பகர் திருவனாய்
பிறந்து நங்குடி
மண்பகருல கெலா
மகிழச் செல்லுமே. 107

225. கொவ்வையந் துவரிதழ்க்
கோல வாயவட்
கிவ்வகை யணியன
கூறி யீண்டுநும்
மவ்வைதன் கோயில்புக்
கடிசிலுண் கென
மவ்வலங் குழலியை
மன்னனேயினான். 108

226. பல்கலம் பெரியன
வணியிற் பாவைத
னல்குறோ மெனச் சிலம்
பண்ணிந்து மெல்லவே
செல்கவென் றிருமக
ளென்று செம்பொனான்

மல்கிய முடியினான்
மகிழ்ந்து நோக்கினான். 109

227. மண்ணருங் கலமெலாம்
வலிதின் வவ்வினும்
விண்ணருங் கலமெலாம்
விதியி னெய்தினும்
பெண்ணருங் கலமிது
பெறுதன் மானுடர்க்
கெண்ணருந் தகைத்தென
விறைவ னெண்ணினான். 110

228. மையணி வரையின் வாழ்
மன்னர் தொல்குடிக்
கையணி நெடுநல்
வேற் காளைமார்களு
ணெய்யணி குழலிவட்
குரிய நீர்மையான்
மெய்யணி பொறியவ
னெவன்கொல் வீரனே. 111

229. பொங்கலக் குரியவாம்
பொருவின் மாமணி
யிலங்கல மென்னல
வீயஞ் சேர்ந்தினுங்
குலங்கலந்தில் வழிக்
குரவர் கூட்டினு
மலங்கலங் குழலிய
ரன்றென்கிற்பவோ. 112

230. அந்தைதா முறுவது
கருதி யாருயிர்த்
தந்தை தாயென்றிவர்
கொடுப்பிற் றையலார்
சிந்தைதா யிலாதவர்
திறத்துஞ் செவ்வனே

நொந்துதாம் பிறிதுரை
நொடிய வல்லரோ. 113

231. காதலா லறிவது
காமங் கதலே
யேதிலா ருணர்வினு
லெண்ண லாதவன்
ருதலான் மாதரா
டிறத்தினை நூ
லோதினு ருரைவழி
யொட்டற் பாலதே. 114

232. தன்னுணர் பொறிபிறர்
தங்கண் கூட்டென
வின்னண மிருவகைத்
திறைவர் வாழ்க்கையே
தன்னுணர் பொறிப்புலந்
தன்னினும் பிறி
தின்னண மியற்று கென்
றமைச்ச ரேவுவார். 115

233. தண்ணிய தடத்தவே
யெனினுந் தாமரை
விண்ணியல் கதிரினல்
விரியும் வேந்தரும்
புண்ணியப் பொதும்பரே
புரிந்து வைகினுங்
கண்ணிய புலவரா
லலர்தல் காண்டுமே. 116

234. மாலமர் நெடுங்கடன்
மதலை மாசிலாக்
காலமைந் தொழுகுமேற்
கரையுங் காணுமே
நூலவர் நுழைவொடு
நுழைந்து செல்லுமேல்

வேலவ ரொழுக்கமும்
வேலை காணுமே. 117

235. ஒன்று நன்றென வுணர்ந் தொருவன் கொள்ளுமே
லன்றென வொருவனுக் கறிவுந் தோன்றுமே
நின்றதொன் றுண்டினி நீதி நூலினே
டொன்றி நின்றவருரை யுலக மொட்டுமே 118

236. அந்தண ரொழுக்கமு மரைசர் வாழ்க்கையு
மந்திர மில்லையேன் மலரு மாண்பில
விந்திரனிறைமையு மீரைஞ் ஞூற்றுவர்
தந்திரக் கிழவர் கடாங்கச் செல்லுமே. 119

237. என்றுதன் மனத்தினு னெண்ணி யீண்டுசீர்
நின்ற நூற்கிழமையினீதி மாக்களை
யொன்றி நீர் தருகென வுழைக்குற்றேவலார்
சென்றவர்க் கருளிது வென்று செப்பினர் 120

இரதநூபுரச் சருக்கம் முற்றிற்று.

நூ விருத்தம். 238.

சூளாமணி

காப்பு

வென்றான் வினையின் றொகையா கிவிரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த வுணர்வி னொழியாது முற்றும்
சென்றான் றிகழுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி
நின்றா னடிக்கீழ்ப் பணிந்தார் வினைநீங்கி நின்றார்.

1. நாட்டுச் சருக்கம்

இன்ப உலகம்

பாட்டு 1: துளங்காதுயர்ந்து உலகின் முடிக்கோர் சூளாமணியாய் நிற்கின்ற இத்திவிட்டன் ஓர் அரசர்க்கரசன்; திருமாலின் பிறப்பாக வந்து தோன்றினன்; மஞ்சுதவழும் கோடிக்குன்றம் என்னும் மலையினை முன்னொரு காலத்தே பறித்தெடுத்த பெரியோன். இவன் வீற்றிருப்பது போதனம் என்னும் அழகிய நகரம். சுரமை (ஸுரம்ய) நாடே அம்மாநகர் இருத்தற்கு இடமாகிறது. போயும் வந்தும் சென்றும் திரிந்தும் செல்வம் எனப் பெயர்பெற்ற பொருளெல்லாம் தங்குவதற்கோர் இடமாகி உயர்வது இந்நாடேயாம். விஞ்சையர் நாட்டின்கண் ஒவ்வோர் வீட்டிலும் சிறப்புப் பெருக அந்நாடு முழுவதும் ஒரு பெருந் திருவிழாவைக் கொண்டாடுங் காலம் ஒன்றுண்டாயின் அப்போது தான் சுரமை நாட்டை விஞ்சையர்நாடு ஒவ்வுமென்பர் உணர்விற் சிறந்த பெரியார்.

பேண்ணுற் சிறந்த பெருநாடு: அரசனேடு பிணைத்து இச்சுரமை நாட்டினைச் சிறப்பித்த தோலாமொழித் தேவர், மேலே அதனைப் பெண்களோடு இணைத்து இயைபுபடுத்தி மேனுக்காகப் புனைந்துரைக்கின்றார். மங்கையர்தாம் "பெய்" எனப் பெய்யும் மழையன்றோ நாட்டை நாடாக்குவது.

2. செந்தாமரையில் தாவும் செங்கயல்: இந்நாடு, எங்கும் தாமரைக் காடாகப் பூத்தொளிர்கிறது. இக்காட்டினருகே மதர்த்த செங்கயல் மீன்கள் கூட்டங் கூட்டமாகக் குதித்துத் திரிகின்றன. இதற்கெதிர் கண்ணடி பிடித்ததுபோல், பெண்களின் திருமுகத்திலே, மதர்த்துத் திகழ்ந்த ஒளியோடு விளங்கிச் செவ்வரி கருவரி படர்ந்த அழகிய கண்களும் விட்டுவிட் டொளிர்கின்றன. இவ்வண்ணம் இயற்கை வளமும் மக்கட்செல்வமும் எந்நாளும் நீங்காமல் இந்நாட்டில் இன்பக் கூத்தாடாநிற்கின்றன.

3. வயல்களின் மழலை: நீர்வளமிகுந்த இச்சுரமைநாட்டின் குளிர்ந்த வயல்களைக் காண்மின். மங்கையர் என்ன ஒய்யாரமாக நடந்து திரியும் அன்னக் கூட்டங்களினின்று இனிய குரலோடு எழும் மழலையே தமது ஒலியாகக்கொண்டு இவ்வயல்கள் ஒலிசெய்தலைக் கேண்மின். மக்கள் குடியிருக்கின்ற இவ் வூர்களைக் காண்மின். காதன் மிக்க மகளிரது மெல்லென்ற சிறிய அடிகளிற் கிடந்தும், உயர்நிலை பெற்றுற்போல் ஓங்கிச் செருக்கிய சிலம்பொலியின் ஒலியே தமது ஒலியாகக் கொண்டு இவை ஒலிசெய்

கின்றன. இன்பக்கூத்திற் கேற்பச் சீராயெழுகின்ற இன்னொலி இவையேயாம்.

4. இளமரக்காவின் இனிய பாடல்: இவ்வின்னொலிக்கேற்ப இனிய பாடல்களும் அந்நாட்டில் எழுகின்றன. ஈதோ இப்பாட்டரங்கம், மரங்களின் நிழலிலே, மரங்களே மேற்கட்டியாக, கீழே பூம்பொற்பொடிகள் பட்டுத்துணி விரித்தாற்போல் படிந்திருப்ப, நறுந்தேன் இடைதுளிப்ப, நிரம்பி விளங்குகிறது. இவ்வின்ப மன்றத்திலே இவற்றோடியைந்து கிளிகளும் பூவையும் இன்பத்துக்குப் போக்கு வீடாய்ப் பாடி நனி மகிழ்கின்றன.

5. வீட்டின் ஒலி: மக்கள் வாழ்கின்ற வீடுகளிலோ, இன்னிசை வண்டுகள், மாதரது நறுநாற்றமும் நல்லிசையுந் தம்மை வலிப்ப அவற்றின் வழியே வந்து, நறும்பூப்பொடியினைக் குடைந்து குடைந்து, இன்னிசைகேட்டு உவந்து உறங்குகின்றன. மாலை முடித்த கூந்தலால் அழகிய மாதரார் தம் மழலைச் சொற்கொண்டு பாடிய பாட்டும் அதற்கிசைய மீட்டிய யாழொலியும் தமதொலியாகக்கொண்டு திகழ்கின்றன மாளிகைகள்.

6. கள்ளும் காமமும்: இவ்வின்பப் பாட்டோடு இன்பக் கூத்தும் இனிது நடக்குமிடத்தே உண்டாட்டமும் உண்டு. நீர்நிலைகளில் காவி மலர்களுங் குவளை மலர்களும் நெகிழ்ந்து பொழிந்த தேறலையுண்ண வண்டுகள் மொய்க்கின்றன. கலவைக் குழம்பு பூசிய மகளிர் இல்லறமாம் நல்லொழுக்கத்தே நின்ற தம் கணவன்மாரையும் மனங்கசிவித்துக் காம

விருந்தூட்டுவான் மதர்த்தோங்கிப் பொலிகின்ற னர். கள்ளுண்டார் வண்டுகளுமேயாகக் காமக்கனி யுண்டார் கடுந்தவம் மேற்கொண்டு இல்லறம் புகுந் தாருமேயாக உயர்நிலை பெறுகிறது இச்சுரமை நாடு. வாழ்க்கை நலமும் இயற்கை வனப்பும் இயைந்து இந்நாட்டின்கண் இவ்வாறு திகழ்கின்றன.

7. நானிலம்: வானகத்திருந்து கீழேபாயும் வாறு றேபோலத் தோன்றும் அருவிகள் நிறைந்த மலைகள் ஒருபுறம்; அவ்வருவி கீழே வெள்ளிடையில் பாய் வதுபோல முல்லைப் பூக்களினின்று பெருகி அருவி யாகப் பாயும் தேன் நிறைந்த முல்லை நிலம் ஒருபால்; (அத்தேனே கிண்ணங்களில் நிறைந்தாற்போலத்) தேனோடு விளங்கும் கருங்குவளை மலர்கள் பூத்துப் பொலிகின்ற நீர்வளம் மிக்க மருதநிலக் கழனிகள் ஒருசார்; (அத்தேன் வழிந்து பாயும்) நெய்தனிலக் கடல் ஓரிடம்; இவற்றை அணிபெறக்கொண்டு விளங்கிப் பாலை என்பதற்கே தன்னகத்துச் சிறிதும் இடம் இன்றிப் பொலிவெய்துகிறது இச்சுரமை நாடு. நானிலமும் தம்முள் கலந்து நிற்பதால், தன் னிடத்தே பொற்றிரு ஆரவாரிக்க அவ் வாரவார வடிவாகவே திகழ்கின்றது இந்நாடு.

இமையோர் காட்சி: ஊர்வனபோல ஊர்ந்து சென்று நானிலத்தையும் ஒன்றின்பின் ஒன்றாக முற்றும் வரிசையாக நோக்கிப் போகும் முறையைக் கைவிட்டு, மேலிருந்து நோக்கி மகிழும் இமையோ ரைப்போல, அந்நாட்டினது அழகை ஒருங்கே, தோலாமொழித்தேவர் கண்கொண்டு நாமும் காண்

போம். காட்சியினும் கேள்வியே முந்தியதாகலின், முன்னர்க் கூறிய அப்பொற்றிரு ஆரவாரம் நானிலத்திலும் நிகழ்வதைக் கேட்கலாம். இன்பத்துக்குப் போக்குவீடாக அந்நாட்டினர் ஆடிப்பாடி முழங்கும் ஓதையே முதலில் நம் செவிக்கு எட்டுகின்றது.

இன்னொலி யுலகம்

8. குறிஞ்சி: குன்றக் குறவர்களது வீட்டு முற்றங்கள்தோறும் அகவொழுக்க முறைபற்றியும் புறவொழுக்க முறைபற்றியும் முருகனை வழிபட்டு வெறியாடும் ஒலியே, கடவுளையும் அந்நாட்டு மக்களின் களவொழுக்கத்தையும் நினைப்பூட்டி நம் காதைக் கவர்கின்றது. அதற்கு ஒத்தாற்போல், இரைத்துச் சென்று வீழும் அருவியினோசையும் இன்னியமென ஒலிக்கின்றது. அம்மலையிலே, தன்னோடு பொருத புலியைக் கொன்று வெற்றிபெற்ற யானையானது, தனது களைப்புத்தீர அருவியிற் குளிக்க வருகிறது; குளிப்பதற்கு முன்னர், அப்புலியை அஞ்சி நின்ற தன் பிடியையும் கன்றையும் உடன் வந்து நீராடிக் களிக்கும் பொருட்டு அழைக்கின்றது. அவ்வழைப்பொலி வெற்றி முழவம்போல முழங்கும் முழக்கமாக அவ்வருவியருகே எழுகிறது. இக்காட்சி என்றும் நிகழ்வதைக் கண்ணோரக் கண்ட வானவரும் அங்கேயே நிலைநின்று களித்துத் தம் இசைக்கருவிகளை எப்போதும் முழக்கிக் கொண்டிருப்பது போல, முகில்கள் அம்மலைமீது நிலையாக நின்று அதிர்தலும் கேட்கின்றது. இஃது ஒரு புறம்.

9. முல்லை: மற்றோர்புறம் திரும்பினாலோ, முல்லை நிலத்திலே, ஆவினை அன்போடு புரக்கும் இடையர்கள், தம்மறத்தோளின் தினவடங்கவும், மணமாலை சூட்ட நின்ற பெண்களைத் தழுவவும் விழைந்தனராய் முன் வந்து, மதர்த்தோடி எதிர்த் தாரைக் குத்திக் கொல்லும் செங்கண் எருதுகளை இளங்கன்றெனப் பிடித்தடக்குகின்றனர். கண்டு சூழ்ந்து நின்றவர்கள் மகிழ்ந்து கொட்டும் பறை யொலி காது செவிடுபட முழங்குகிறது. இவ்வாறு ஒருங்குசேர்ந்து ஏறுகோள் திருநாள் நிகழ்த்தியபின், இவ்விடையர்கள் வேறு சிறு சிறு கூட்டங்களாகப் பிரிந்து, கொன்றைக் காயைக் குழலாகக் கொண்டு இசைத்திறம் காட்டி, ஆவினம் மகிழ ஊதுவதும் நமது காதிலே தேனைச் சொரிகின்றது. உழுதற் றொழிலையும் இவர்கள் இவ்வாறு பொழுது போக் காகவே கொண்டு கலப்பை ஏந்திச்சென்று களித்துத் திரிந்தாடி யுழுது ஆரவாரிக்கின்றனர். இம்மூவொலி யும் மாறிமாறி வெள்ளிடையிலே எதிரொலியாகி நம் காதிற் புகுகின்றன.

10. மருதம்: ஊர்ப்புறமாக நோக்கினால், கண்ட கண்ட இடத்திலெல்லாம், கடவுட்பெண்களை ஒத்த மகளிர் ஒருங்குகூடிக் கூத்தாடுவதற்கேற்ப ஒலிசெய் கின்ற முழவமும், ஓசையே செல்வமெனக் கொண் டாடும்படியாகத் திருக்கோயிலினுள்ளே ஓமென ஒலிக்கும் திரண்ட திருச்சங்கமும், காதலனும் காத லியும் திருமணம் செய்துகொள்கையில் அவர்களை வாழ்த்தி முழங்கும் மணமுழவும், வயலிலே, கிணை

யொலி நாவலோசை முதலிய ஒலிகளும், ஒன்றாக இயைந்து, அந்நாட்டகத்தே ஒருங்கு நிகழ்கின்ற திருவிழாவும், இன்பஉழவும், காதன்மணமும் மாறுபாடின்றி ஒன்றி நின்ற தன்மையை இசைத் தினிது காட்டுகின்றன.

11. நெய்தல்: கடற்புறத்தே மரக்கலத்திலே ஏறிக் கடல்மீது உலவுகின்ற பரதவர்கள், பொழுது போக்காகக் கொட்டிக்களிக்கும் நாவாய்ப் பறையும், மீன்பிடிக்கச் செல்வார் ஆரவாரத்தோடு கொட்டிச் செல்லுகின்ற மீன்கோட் பறையும், சுறா முள்ளில் தம் கடவுளை வைத்து வழிபடும்போது ஒலிக்கும் பலவகை இன்னிசைக் கருவிகளும், அவர்களுடைய வழிபாட்டையும் விளையாட்டையும் வயிற்றுப் பிழைப்பையும் ஒன்றாகப் பிணைத்து இன்னிசை யாக்கி முழங்குகின்றன. பரதவப்பெண்கள் ஈன்று எடுத்தபின் அவர்கள் மார்புமீதும் மடியின்மீதும் தவழ்ந்து விளையாடுவதை மறத்தலின், பரதவச் சிறுவர் என்ற பேரும் மறையக் கடலம்மையின் பிள்ளைகளே யாகின்றனர். பாலொழுக நின்றதாயின் முடை நாற்றத்தையும் நறுநாற்றமாகக் கொண்டு, தம் தாயோடு ஆடும் குழந்தைகளைப்போல, இச்சிறுவர்களும், தமது இயற்கையன்னையாம் கடலம்மையின் புலவுநாற்றம் வீசும் நீரினைப் புறக்கணிக்காமல், அதனையே சிறப்பாகக்கொண்டு, அவ்வம்மையின் மடிமீதும் மார்புமீதுமாக அலைகளின் கீழும்மேலுந் தவழ்ந்து குதித்து விளையாடுகின்றனர். இந்தக் கடலின் இச்செல்வச் சிறுர்கள் ஒருவரோடொருவர்

இகலி 'யானே வென்றேன், யானே வென்றேன்' என முன்னே சென்று நீர்மூழ்கி மணலெடுக்கும் விளையாட்டில் ஈடுபட்டு, தாந்தாம் பூண்டிருந்த அணிகளையே மூழ்கியெடுக்கும் பொருள்களாக வீசி யெறிகின்றபோது, எறிவதும் எடுத்து மேல்வருவதும் ஒரே பொழுதில் நடப்பதுபோலத் தோன்றலின், எறிகின்றபோதே அவர்களனைவோரும் கூடி வென்றுனைப் பாராட்டி ஆரவாரிக்கின்றனர். கடற்கரையிலே மரங்கள் அடர்ந்தும் இருண்டும் நீண்டும் கிடக்க, அவற்றினிடையிலும் சுற்றிலும் வெண்மணல் நிலவெறிப்பது போலத் தோன்றவே, கடலானது, அந் நெய்தல் நிலத்தின் இன்பத்தைக் கண்டு அதனிடையே உலவும் விருப்பினோடு புகுந்து அலையை வீசுதலால் எழுகின்ற ஓசையும் ஓயாது ஓங்கி வளர்கின்றது.

மலருலகம்

தொலைவில் இருந்தே நமது காதையும் கண்ணையும் கவர்ந்த காட்சி இவ்வாறாக, நறு நாற்றத்தால், நம் மூக்கைக் கவர்ந்து, கண்ணுக்கும் களிப்பூட்டித் தேனைச் சொரிந்து நாவிலும் நீரூறச் செய்யும் பூக்களின் பொலிவே இதன் பின்னர் நமது மனதைக் கவர்கின்றது.

12. குறிஞ்சி: கொய்வதற்காக அருகே நின்ற பெண்கள் தம் கையை நீட்டி அங்கையை விரித்து நிற்கின்றனர். அவர்கள் கையேபோலத் தோன்றுகின்றன செங்காந்தட் பூக்கள். பூஞ்சுனையிலே நீராடப் புகுகின்றனர் மகளிர். இவர்களது கண்ணில்

பூசிய மை நீரில் கரைந்துபரவியது போல விளங்கு கின்றன நீல மலர்கள். தலைவனைப் பிரிந்து அவன் வருவதாகக் குறித்துச் சென்ற கார்காலம் வரும் வரையும் காத்திருந்து பின்னர் மழைநாள் வந்த போது, உடல் பசந்துநின்ற தலைவி, வேங்கைமரத்தை நோக்கி நிற்கின்றாள். இத்தலைவியின் உடலேபோலப் பசந்து பூத்து விளங்குகின்றன, வேங்கைப் பூக்கள். செம்மை கருமை பொன்மை என்ற பல நிறங்களைக் காட்டி நன்றாக மலர்கின்ற இவையனைத்தும் சொரி கின்ற தேனானது நீண்ட இப் பெரிய மலையிடத்தெல் லாம் புத்துருக்கு நெய் வெள்ளமாகப் புரண்டாற் போல விளங்குகிறது.

13. முல்லை: அதற்கருகே வெள்ளிடையாய்க் கிடக்கும் முல்லை நிலத்துப் பொதுவிடங்களில் கூடி யிருக்கும் கோவலர்களுக்கு நறுமணம் ஊட்டுவாரை அவ்விடத்தே காணலாம். கொன்றை மரத்திலும், குருந்த மரத்திலும், சிறந்த வெண்காந்தட் செடியி லும், அவர்கள் வீட்டின் முற்றத்திலே நிழற்பந்தராய் நின்ற முல்லைக் கொடியிலும், நிலையாக நிற்கின்றன தேனீக்கள். ஏன்? போதாய் நிற்கின்ற பூக்களிலே தேன் பெருக்கம் இடையறாது ஒழுகுதலின் நிலை யாக நிற்கின்றன, இத்தேனீக்கள். இவை அங்குள்ள விருந்தையுண்டு, தம் இன்பத்திற்குப்போக்கு வீடாக அப்பூக்களில் ஊத, அந்தப் போதுகள் நன்றாக மலர் ந்து விளங்குதலால், அவற்றின் மணம் எங்கும் பர வும்போது மன்றிலுள்ளாரும் அதைத் துய்க்கின்ற னர்.

14. மருதம்: ஊர்ப்புறங்களில், தன்னை மாறியும் பிறர்க்கு உதவும் பெரியோரைப்போலத்தான் பூத்து மலர்ந்தவுடனே வாட வேண்டுவதையும் நோக்காமல் பிறருக்கு நன்மணமூட்டிப் பயன்படுத்துவதொன்றையே கருதி, நாலுபுறமும் மணம் வீசுவதற்கென்றே மலர்கின்றன நெய்தற் பூக்கள். இவற்றிற்கு மேலும் ஒரு படி உயரச்சென்று உலகிற்கு உதவவேண்டிப் புத்தம் புதிய தேன் குழம்பைக் கையிலேந்தி மலர்கிறது இச்செந்தாமரைக் காடு. இந்நெய்தலிலும் இச்செந்தாமரையிலும் வண்டுகள் ஏறி இவற்றின் மெல் லிதழிலே ஊன்றுகின்றன. அதனைப் பொருட்படுத்தாமல், அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல, அவ் வூன்றலை, ஊன்றுவனவற்றின் வறுமையைக் காட்டுகின்றதெனக் கொண்டு அவற்றிற்கிரங்கித் தேனைப் பொழிகின்றன. இம்மலர்கள் இவ்வாறு கீழ்வழியும் தேன் எங்கும் பரந்து ஊறிக்கிடப்பதால் எப்போதும் இம் மருத நிலத்தில் இத்தேன் ஊற்றுப்பெருக்குப்போல இடையறுதொழுகுகின்றது.

15. நெய்தல்: கடற்புறத்தோ, சங்கு உடைந்தாற்போல மடலவிழ்கின்றன வெண்டாழம் பூக்கள். மிக்க இருட்செறிவே வயிறுவெடித்து நின்றாற்போல் மலர்ந்திருக்கின்றன பெரிய நெய்தற் பூக்கள். மகளிரின் ஓலைத்தோடு கீழ்வீழ்ந்து சுருள்கள் அவிழ்ந்து வளையவளைய அகல விரிந்தாற்போல இதழ்கள் சுற்றிலும் விரிந்து மலர்கின்றன தாமரைப்பூக்கள். வானநாட்டுக் கற்பகக்காடானது இக்

கானலைக்கண்டு தோற்றுப்போனதைக் காட்டி நிற்ப னபோன்று இவை இவ்வாறு செருக்கொடும் திகழ் கின்றன.

பறவைகளின் துறக்கம்

15. குறிஞ்சி: ஒருயிர்ப் பொருளாம் மரம் செடி கொடி என்றவற்றின் பின்னே, மேலே பறந்துவரும் பறவைகள் நம்கண்ணுக் கெதிரேதோன்றுகின்றன. வானகத்தே அசைந்து சென்றே மழை பொழியும் கறுத்துநீண்ட முகிற் கூட்டம் குமுறும்போதெல் லாம், அம் முழக்கைக் கேட்டுக்களித்த பெரிய மயில்கள், தோகையை விரித்தாடுகின்றன; பொருது களைத்த குறவர்களும் விலங்குகளும் இளைப்பும் நோயுந்தீர்ந்து இனிது வாழும்படியாகத் தோகை யாம் மயில்விசிறிகொண்டு மருத்துக்காற்றை எழுப்புகின்றன. இவ்வாறு தம் தோகைமேல் மழைக்காலத்துக் குளிர்ந்த காற்றுப் பட்டுப்போவ தால் நீல ஆலவட்டமென விரிந்தசைந்து ஒளிவீசு கின்ற தோகையை விரித்துநின்று அம்முகிலேபோல அசைந்து ஆடி அகவுகின்றன இம்மயில்கள்.

16. முல்லை: முல்லைநிலத்தோ இளைய கொன் றையந் தலைவனும், அவனைத் தழுவி நாணத்தால் நிலன்நோக்கி மெல்ல மெல்ல நகும் முல்லைத்தலைவி யும் கூடிப் பிணைந் தின்புறுகின்றனர். கீழே உதிர்த்த பூப்பொடிகளில் மூழ்கிய வண்டுகள் இங்கே மொய்த்துநின்று இவ்வியற்கை மணத்திற்கோர் இன்னியமே என் மகிழ்வுடன் முரன்று ஒலி செய்

கின்றன. இவ்வாறு, நிறைந்த மணல்மேடுகளின்மீது புதுமழை பொழிகின்றதால் குளிர்ந்த மணலைத் தம்மியல்புக் கேற்பக் கிண்டி இரைதேடுகின்றன இளஞ்சேவற்கோழிகள்; அக்கொடிமரக் காதலர்கள் தந்த விருந்தெனப் பொலியும் இந்த இரை கிட்டிய தும் தம்முடைய தொழிலில் செருக்குற்று நின்று, தம் திறமையையும் அழகையும் கண்டு தமது பேடைகள் களித்து அப்புது விருந்தையும் இனிது அருந்தித் தம்மைத் தழுவவேண்டிக் காதற்குறிப்போடும், பேடையின் பசிக்கிரங்கும் ஆர்வத்தோடும், தம் கழுத்தை வளைத்து அழகுற அவற்றை நோக்கி நிற்கின்றன.

17. மருதம்: கழனிப்புறத்திலுள்ள நீர்நிலைகளிலே கள்ளுண்ணவந்த வண்டுகள், மொய்த்துள்ள செந்தாமரை மலர்கள் காடாகப் பூத்துக் கிடக்கின்றன. அங்கே புள்ளினங்கள் இரைதேடிப் பறந்து கொண்டிருக்கின்றன. அவை மீன்களைத்தேடி நீரைக் குத்தவரும்போது, நீர் நின்றும் துள்ளியெழுந்த மீன் அப்புட்களின் வாயினுள்ளே புகுந்து துள்ளுகின்றது. இவ்வாறு வருத்தமின்றி இரைபெறுதலால் இப்பறவைகள் இவ்விடத்தைவிட்டகலாது இன்ப மிகுதியால் ஒலிசெய்து நிற்கின்றன; மீட்டும் மீட்டும் நீரைக் குத்திக்குத்தி எழுகின்றன; மீனைப் பெறுத போது தாமரையினின்றும் பெருகியதேன் வாய்க்குள் புகுந்து தித்தித்தலின் 'மீன் அகப்படவில்லையே' என்ற வருத்தமின்றி இந்நீர் நிலையைப் பிரியாமல் ஆரவாரித்து நிற்கின்றன.

18. நெய்தல்: தாமரையின் மெல்லிய அடியை யும் இளவிதழையும் தின்று களிக்கின்ற அன்னத் திற்கு, அவை தெவிட்டிப்போகின்றன. வெள்ளிய முளையோடு கூடியிருக்கின்றது, பசுந்தாமரைச் செடி யின் மெல்லிய சுருளை; முள்ளோடு கூடியிருக்கின் றது அதன் அடி. ஆதலின் இவற்றை வெறுத்துத் தாமரையினும் மெல்லிய பொருளை நாடி நீரிற் குதித்து, உள்நின்றும் முளைத்தெழுவதுபோல மே லெழுந்து நீரைக் குடைந்து கலக்குகின்றது, அன் னம். பூக்களின் நின்றும் வழிதலாலே, அக்கழியில், தேனும் முளைவிட்டுக் கொடியாகப் பரவுதல்போலத் தோன்றுகின்றது.

விலங்குகளின் வீட்டு நிலை

19. குறிஞ்சி: பறவைகளின் களிப்பைக் கண்ட நம்மெதிர், விலங்குகளின் விளையாட்டும் நிகழலா கின்றது. மலையின்மேலுயர்ந்த சந்தனமரங்கள் அடர்ந்த சாரலிலே, பெரிய துதிக்கையை யுடைய யானைகளைப் பார்மின். பிடிகள் அக் களிறுகள்மீது மொய்க்கின்ற வண்டுகளை, அருகே வளர்ந்த காந் தட்பூக் குலைகொண்டு ஓச்சி, மருங்கே வந்து காதல் வழிபாடுசெய்யாநின்று ஊட்ட, இனிதே உண்டு உல கை மறந்து அவை உறங்குகின்றன காண்மின்.

20. முல்லை: புதுமழை பெய்கின்றது. அழ கோடு துளிர்த்து விளங்குகின்றன மெல்லிய இளம் புற்களும் இளந் தளிர்களும். மாலை கோர்த்தாற் போலப் பூக்கும் கொன்றைப் பூவினின்றும் துளித்

துளியாக விழும் குளிர்ந்த தேனிலே தோய்த்தெடுத் தாற்போல இத்தளிரும் புல்லும் தேனில் மூழ்குகின் றன. தேனிற் றோய்த்த தளிரையும் புல்லையும இம் மானினங்கள் இன்பமாகக் கறிக்கின்றன; கறிக் குந்தோறும் ஒன்றோடொன்று மெல்ல, விளையாட் டாக முட்டிக்கொண்டே போர்புரிகின்றன, ஈதோ இப்பூக்கள் நிறைந்து குளிர்ந்த முல்லை நிலத்தில்.

21. மருதம்: குளங்களில் இலையடர்ந்த குவளை கள் பூநிறைய மலர்ந்து விளங்குகின்றன. அவற்றை, மேய்ந்து கொண்டே போய்க் கரிய எருமை, ஓரிடத் தே நின்று அசைபோடுகின்றது. அதன் கவுளின் நின்றும், குவளைப் பூக்களின் தேனானது, மெல்லுந் தோறும் இருபுறத்தும் வழிகிறது. கீழே நீரில் துள் ளும் மீன்கள் இதன்மடியைத் தாக்குகின்றன. கன் றென எண்ணி இவ்வெருமை பாலைச்சொரிகிறது. இந்தப் பாலும் நீர்மட்டத்திற்குள்ளேயே ஒழுகிப் பரவுகிறது. இம்மருதநிலத்துப் பறவைகள் நீரில் குடைந்து உள்ளே முழுகும்போது இப்பாலைச் சுவைக்கின்றன. இச்சுவையையே பின்னும் விரும் பிப் பன்முறையும் அந்நீரை அலைத்து நிற்கின்றன இப்பறவைகள். இத்தகைய நீர்வளம் மிக்கது இந் தக் கழனிப்புறம்.

22. நெய்தல்: கடற்புறக் கழியோரத்திலே முத லைமாவானது கெண்டைமீன் சினைகளை மேய்ந்து செ ருக்கிச் சென்று தாமரை வளர்ந்திருக்கும் துறையி லே தங்குகிறது. வண்டல் நிறைந்த கடற்கரையிலே கூட்டமாக உலவும் பெரிய சுறாக்களை இம்முதலை

மிகச் செருக்கி மிறைத்துப் பார்த்து நிற்கின்றது. இந் நாட்டின் செருக்கு இருக்கும்படி ஈது.

உழைப்பில் ஓங்கிய உயருலகம்

23. குறிஞ்சி: விலங்கினும் உயர்ந்த ஆறறிவு படைத்த மக்களது உழைப்பில் மலர்ந்த நாட்டு வளப்பமே முடிந்த முடிபாக நம்மெதிரே தோன்றுகின்றது. கற்களிடையே கணுக்களோடு நிலைநிற்கும் மூங்கிலின் நெற்கதிர்க்கற்றையும், கல்லில்லாத நிலத்திலே வளரும் நீண்ட தினைக்கதிர்ச் செல்வமும், மற்றும் கணக்கின்றி ஆங்கே விளைவனவற்றின் செறிவும் காண்மின். இவை, இம்மலையிலே வாழும் உயிர்களனைத்தும் 'குந்தித் தின்றால் குன்றும் கரையும்' என்பதற்கு மாறாக உண்ண உண்ணக் குறையாது ஓங்கி உயர்ந்துகொண்டே செல்கின்றன.

24. முல்லை: முற்றிப் பிளந்த காய்களோடு விளங்குகின்றது, பேரெட்செடி. விளக்கமாகத் தோன்றும் பூங்கொத்துக்களோடும் கூடிக் காயின்சுமையால் தாழ்ந்துகிடக்கின்றது குளிர்ந்த அவரைக் கொடி. பயிர் முற்றும் நிறையச் சுற்றிக் காய்த்து நிறைகின்றன துவரையும் வரகும். இவை எல்லாம் தமக்கு இருக்க இடம் பெறவேண்டி ஒன்றோடொன்று மிக நெருங்கி நிற்கின்றன இம் முல்லைநிலத்திலே.

25. மருதம்: இடமகன்ற மருதநிலத்திலே, மிகவுயர்ந்தெழுந்து பெரியவாய்த் திரண்ட கரும்பே வேலி; அதற்குள்ளே, தோட்டங்கள்; இவற்றினடுவே, கற்றையாகக் காய்ந்த நெற்காடு; இவ்வாறு இம் மருதம் விளங்குகிறது.

26. நெய்தல்: குளிர்ந்த கடலுட்டிடத்தோ, சங்கு, முத்து, தாழ்ந்து செல்லும் இப்பி, தென்னங்குலையி லூறிய கள், பிறநாட்டிலிருந்து கப்பலில் ஏறிவரும் செல்வப் பொருள்கள், நீண்ட அக்கடலிலேயே படும் பொருள்கள்—இவையனைத்தும் இந்நாட்டு வருவா யாம்.

திணை மயக்கம்

நாடென்ப நாடாவளத்தன. மலைபடுபொருளும், கடல்படுபொருளும், காடுபடு பொருளும், கழனி படு பொருளும் இந்நாட்டில் கிடைத்தல் வேண்டும். இவ் வாறு இந்நாட்டில் இருத்தலைக் கண்டோம். ஆனால் கடல்படு பொருள் ஓரிடத்திலும், மலைபடுபொருள் அவ்விடத்திலிருந்து பல நூறு கல்தொலைவிலும் கிடைக்குமாயின் பயனில்லை யன்றோ? ஒரே இடத் தில் அவையனைத்தும் ஒருங்கே கிடைப்பதன்றோ சிறப்பாகும். அங்ஙனம் கிடைக்கும்படியாக நானில மும் ஒன்றற்கொன்று மிக அணித்தாக இருப்பதை யும் தோலாமொழித் தேவருடைய புனைந்துரையுல கத்தே காண்கிறோம்.

27. பூவும் பாட்டும் போலிந்த மயக்கம்: ஈதோ மலையில் வாழ்கின்ற குறத்தியர்கள் காக்கும் தினைப் புனத்தருகே பூத்து நிற்கும் குறிஞ்சிப் பூவைக்கொ ய்து ஆயர் மகளிர் தம் கூந்தலிற் செருகிக்கொண்டு தெருவே வந்து நெய் விற்பதால் இந்த முல்லைநிலத்து இடைப் பெண்களின் கூந்தலிலே இக்குறிஞ்சிப் பூ மணம் வீசுகிறது. மடமை வாய்ந்த மருதநிலக் களத்துப் பெண்கள் களைபிடுங்கி எறிந்த குவளை

களை, அருகே கடற்கரைத் தோட்டத்தே குந்தித் தொடுத்த மாலைகள் பொலியும் பரதவரது கூந்தலில் காண்கிறோம்.

28. இசையும் கூத்தும் இயைந்த இயற்கை: இப் பரதவர்கள் கொட்டும் சிறுபறையையே இசைக்கருவியாகக் கொண்டு, தமது கருத்திற்கேற்பக் கையை அசைத்துக் காட்டுவதில் வல்ல கூத்தர்கள் (புலவர் = கூத்தர் — பிங்கலந்தை) உண்டாட்டாடினபின் குரவைக்கூத் தாடுகின்றனர். இக்கூத்துக்கு வந்த இசைவாணரேபோல, அருகே முல்லை நிலத்தில், ஒரு காலை நேரே ஊன்றி ஒரு காலை வளைத்து நின்று தம் ஆவினம் மகிழக் கொன்றைக் குழலூதுகின்றனர் கோவலர்கள். இந்த இன்னிசையிலீடுபட்டு, அயலில் மலைமேலே நீண்ட அசுணமா உறங்குகின்றது. (கொடுங்கால் என்பது ஆயர்கள் கொண்டுசெல்லும் வளைந்த கொம்பையும் குறிக்கும்.)

29. மலரும் மயங்கிய வானுலகம்: வண்டுகள் கூட்டங் கூட்டமாக மொய்க்கின்றன. இவற்றின் சுமையைப்பொறுக்கமாட்டாமல் நைந்து வளையும் குறிஞ்சிநிலத்து மௌவற் கொடிப் பந்தரும், முல்லை நிலத்தின்கண் கார்காலத்தில் பூக்கும் முல்லைக்கொடியும், மருதநிலத்துப் பூங்காவனத்தே மலரும் மல்லிகைப் பூங்கொடியும், கடற்கரைத் தோட்டத்தே பரந்து தவழும் ஞாழல் (மல்லிகைபோன்றது) கொடியுமாக வெண்பூக்கள் பூத்த கொடிகள் நறுமணங்கமழ்ந்து விளங்குகின்றன. இந் நிலையில், இவற்றின் தூய தன்மையாலும், பொலிவாலும், நறுநாற்றத்தாலும், நானிலவளனும் ஓரிடத்தே அமைந்துகிடப்பதாலும் தூய துறக்கமேபோல விளங்குகிறது இந்த நாடு.

நாடு வாழ்த்து

மலைமீது வேட்டையாடி வாழ்ந்தோர் பின்னர்க் காடுகளில் கன்று காலிகளை வளர்த்துப் பாலையுண்டு முன்னேறிக்கழனிகளையுழுதுண்டு, உயர்ந்து பின்னே கடலைக் கடக்கக் கப்பலும் இயற்றி, இந்நாளைய ஆங்கிலேயரைப்போலக் கப்பற்படைகள் கொண்டு உலகப் பொருள்களை ஒருங்கே பெற்று இன்பந் துய்த்து இவ்வுலகை யாள்கின்றனராம். முன்னேற்ற முறை இவ்வாறு இங்கு அமைந்திருப்பதைச் சுட்டவே தோலாமொழித் தேவர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என முறை செய்து புனைந்துரைக்கின்றார் போலும். பொருள்களைப் புனைந்துரைக்கும்போது, முன்னேற்ற முறைமையை மறவாமல் ஓருயிர்ப் பொருள்கள், பறவைகள், விலங்குகள், மக்கள் என்று அமைத்திருத்தலும் காண்க. மக்கள் மக்களாவது தத்தம் செய்கைத்திறத்தாலேயே. ஆதலின் மக்களைச் சுட்டவந்தார், அவர்களது உழைப்பால் உண்டாகும் வருவாயைப் புனைந்துரைக்கும் வழியே, அவ்வருவாயை உண்டுபண்ணிய மக்களையும் குறிப்பாகச் சுட்டிச் செல்கின்றார்; பின்னர், நானிலப்பொருளும் எங்கும்கிடப்பதையும் காட்டி, முடிவாக மக்களினும் உயர்ந்த கடவுணிலையைச் சுட்டிக் காட்டவேண்டி, இயற்கையன்னையின் இயைபினையே கொடிகளாகப் புனைந்துரைத்து, முனைப்பற்று இயற்கை யன்னையின் மடிமீது தவழ்ந்து அவள் காட்டும் வழி நின்று இன்பந் துய்த்தலே துறக்கம் எனக் குறிப்பாகக் கூறி முடிக்கின்றார். அனைத்துயிரையும் அழகாக அமைத்து அருகப்பெருமான் கண்ட அருள்நாடே இந்நாடு.

---

2. நகரச் சருக்கம்.

இன்ப நாட்டில் அறிவு நகரம்

1. நாட்டுச் சருக்கத்திலே விரித்துக் கூறப்பட்ட இயற்கையினையும், ஆக்கத்தினையும் உடைய (ஸௌரம்ய தேசம்) சுரமை நாட்டின் உள்ளிடத்தே, போதனம் எனச் சிறப்பித்துச் சொல்லப்படும் நல்ல தோர் நகரம் உண்டு. மன்னவன் பிறர்க்கு இல்லாத சிறப்போடும் விளங்கி நிலைக்கும்படியாக, அந்நகரத்தினை மனைநூல்வல்லோர் வகுத்தமைத்துள்ளனர். பொன்னாகவே விளங்கும் மதில்களையே வேலியாகக் கொண்டு மிளிர்கிறது இந்நகரம். நாகலோகத்தையும் கண்டு 'இதுவும் ஓர் நகரமோ' என எள்ளிநகையாடுவதேபோல், எல்லோர்க்கும் எல்லா வகையாலும் இனியதாய் விளங்குகின்றது ஈது.

2. பொன்னம்மை: பொன்னரலும் நாட்டிலே பொன்னம்மையே உருவெடுத்தாற்போல விளங்குகிறது இந்நகரம். இமயமலைச் சாரலில் உள்ள பொய்கையொன்றிற் பூத்திருக்கும் தாமரையிலே திருமகள் விளங்குகின்றாள் என்பது பழைய வரலாறு. அப்பொய்கையும் தாமரையும் பெரியனவாகித் திகழவேண்டி நீரலே சங்கங்கள் மேயும் அலைகள் வீசுகின்ற பெருங் கடலாயும் இடம்மிக அகன்ற உலகமாயும் அகன்று வளர்கின்றன, அப் பூவின் நடுவிடமே இச்சுரமைநாடு. பேரழகினோடு திருமேனிப் பொலிவும் விளங்கச் செங்கண் கொண்டு மலர நோக்கி உலகையாளும் திருமாலாம் திவிட்டன்

அரசு புரியாநின்ற சுரமை நாடே இங்ஙனம் விரிந் தோங்கும்போது, இன்பத்தேன் பெருக்கெடுக்கின்ற அம்மலர் நடுவே, அத்திருமாலின் தோளில் ஏறி நிற்க வந்து திருமகளே நகர்வடிவாகிப் பொலிகின் றாள். இத்தகைய நலத்ததாகும் இந்நகரம்.

3. மதிலெனும் மீதியடி: தொலைவிலே ஏதோ இந் நகரம் தோன்றுகின்றது! அழகோடு ஒளியும் வீசி நிற்கின்றது அதன் மதில். அகழியை ஓர் இடை யணியாக அணிந்து அந்தச் செல்வச் செருக்கினால் உடல் வீங்கியதுபோல அகன்றும் உயர்ந்தும் உள் ளது அது. ஞாயிறானவன், இரவில் ஒடுங்கிநின்ற தன்னுடைய வெப்பமான கதிர்களை விரித்துத் தோன்றுவதற்கு நீலக்களமான கடலின்மீது, அவன், அக்கடல்நின்று மூழ்கி எழுந்ததும் தங்கு வதற்கென உயரியமேடை ஒன்று அமைத்ததே போன்றுளது, கடலேயனைய அகழியினிடையே மேடாக வுயர்ந்து தோன்றுகின்ற அம்மதில். அம் மதிலின்மேலே யுள்ள மாடங்கள் பலபுறமும் நோக்கும் வாயில்களோடு விளங்குகின்றன. அந் நகரின்கண் உள்ள மாடங்களோ நிலத்தே உழுது பயன்கொண்டது சாலாதென வானையும் உழுவான் முற்பட்டாற்போல வானுலகில் முட்டி நிற்கின்றன. அம் மாளிகைகளின் நுனியிடங்களோ முகில்களை யும் பிளந்துகொண்டு மிக மிக உயரச்சென்று தம் செல்வச்செருக்கால் ஏக்கழுத்தம் பெற்று விளங்கு கின்றன; செல்வத்தாற் செருக்கியபோதும், எந் நாளும் வெள்ளிடையே உழன்று திரியும் செங்

கதிர்க்கடவுளின் கட்டமுடியாத தேரின் குதிரைகளுக்குத் தமது தூக்கிய தலையையே மிதியடியாகத் தந்து, அழிய மாறிப் பிறர்க்கு உதவும் பெருநிலையிற் பிறழாதே சிறப்புறுகின்றன. அந்தக் குதிரைகளும் தம் களைப்புத் தெளியும் வரை தம்மிடமளவும் வந்து நீண்ட அம் மாடங்களின் தலைமீது தம் கால்களை வைத்து நிற்கின்றன.

4. இன்னொலி: தொலைவிற் காட்சி யீதாக, இந் நகரைச் சூழ்ந்து விளங்கும் மதிற்புறத்தே யிருந்து எழும் இன்னொலியும் இன்பத்தினுயர்வையே காட்டி நிற்கின்றது. உயிர்நிரைகளில் மிகப் பெரியதான யானைமுதல் மிகச் சிறியதான எறும்பே போன்ற வண்டுகள் வரையுள்ள உயிர்களனைத்தும் உணவை எளிதே பெற்று இன்புறுகின்றன. இந்நகரத்தே ஈதோ ஒரு பேரொலி முழங்குகின்றது. இருப்புத்தொடரினாலே மாமரத்தின் அடியிலே, பாகர்கள், யானையைப் பூங்காவனத்திற்கட்டியுள்ளார்கள். அவ்வளவு பழகியதாகும் அவ்யானை. கரும்பையே, அவர்கள், அதற்குக் கவளமாக இடுகின்றனர். செல்வத்திற் செருக்கிய ஆனை, அதனையும் வெறுத்து நிற்கின்றது. அதனை வளர்ப்போர், அதன் நன்மையே கருதி வற்புறுத்தி ஊட்டுகின்றனர். ஈதே பேராரவாரமாக எழுகின்றது. இஃது எதிரொலியாக முழங்குகின்ற காவிலே, அரும்புகளுக்கிடையே மலர்ந்த போதுகளின் உள்ளிடத்தைத் தேனுடன் கோதியுண்டு வண்டுகள் அவ்வின்பத்தைப் பாட்டாகப்பாடி யொலிக்கின்றன. இவ்வொலியும் இம்முழக்கமுமாக இயைபு பெற்று.

எங்கும் ஒரே இன்னொலியாகச் செறிந்து தோன்றுகின்றது இம்மதிற்புறம்.

5. கற்பகத்தின் காமவல்லி: மைதீட்டிய அழகோடு அதற்கு மாறாகக் கருவரிசெவ்வரிபடர்ந்து மிளிர்கின்ற கண்கள்கொண்டு குளிர நோக்கும் பெண்கள், அழகிய தம் மாடத்தின்மேலே தமது அருமருந்தனைய தலைவரோடுகூடி நிற்கின்றனர்; யானையின் முழக்கத்தைக் கேட்டபோதெல்லாம் வலைபட்ட மான்போல மருண்டு மருண்டு விழித்துத் தமது தலைவர்களைப் பன்முறையும் உயிருறத் தழுவிக்கொள்கின்றனர். தேனோடு நிறம்பெற்று விளங்கும்மாலைகள் சூடிய அச்செல்வர்கள் தோள்களைக் கொடிபோன்ற பெண்கள் தழுவி நிற்பது, கற்பக மரத்தை அழகுறத் தழுவி யணைந்து நறுமணங் கமழவளர்கின்ற காமக்கொடியை நினைப்பூட்டுகின்றது. இவர்கள் இருக்கும் இடமோ அம்மணிகளிழைத்த மாடத்தின் மேனிலையாகும். அது வானையளாவி நிற்கிறது. அம்மாடமோ, வானகத்தை முட்டும் மேலிடத்தே கற்பக மரமும் காமவல்லியும் கலந்துநிற்க மேலோங்கி அகன்று விளங்கும் மணிமலையே போன்று மிளிர்கிறது. யானையும் கரும்புமேயன்றி மக்களும் மகிழ்ந்திருக்கின்றபடி இது.

6. மலைமேல் மின்னல்: மணிமலை என நின்ற மாடங்கள்,மேலும் மேலும் மலையையே நினைப்பூட்டுகின்றன. அம்மாடங்களின்மீது மாதரார் தங்கள் கூந்தலுக்கு ஊட்டும் புகை, மேலே சென்று வான

கத்தேபரந்து தவழ்கின்றது. முகிற்கூட்டங்கள் மலைமேலே பரவி ஆடுவதுபோன்று உள்ளது அப்புகை. அம்மாடங்களிற் களிப்புடன் ஆடும் பெண்கள் முழவு கொட்டுவது, அம் முகிற்கூட்டங்களின் முழக்கமே போன்றுளது. புகையினிடையே தம் கூந்தலை ஆற்றுதற்கமைகின்றனர் மாதர்கள். அக்கூந்தலோ மெல்லிய காற்றினால் அசைந்து தானே ஆற்றிக்கொள்கிறது. பெண்கள் தம் கையை உளராது, ஓவியத்தே எழுதிய கொடி போன்று வாளாநிற்கின்றனர். புகைச் செறிவு சிறிது நெகிழ்ந்தபோதெல்லாம் விட்டுவிட்டு ஒளிர்ந்து தோன்றும் அப்பெண்ணரசிகள், மலைமீது தவழ்ந்து முழவென முழங்குகின்ற முகிற் கூட்டத்தே எழுந்துதோன்றும் மின்னற் கொடியேபோன்று விளங்குகின்றனர். இவ்வகைத் தோற்றத்தால் மலையோடு மாறுபட்டு நிற்கின்றன இம்மாடங்கள்.

7. போன்: பொன்நரலும் நாட்டிலுள்ள இப்பெரிய மாடங்கள் மற்றைய நகரங்களிற்போல மண்ணால் ஆயின அல்ல. மேற்கூடங்களோ, கண்ணைக் கவரும் பொன்னாலானவை. இவற்றின் வேலியாய் நின்ற சுவர்களோ, வெண்ணில வெறியும் வெள்ளியாலானவை. தரையோ குளிர்ந்த நிலவைப் பரப்பும் சந்திரகாந்தக் கற்களால் ஆயது. சுவர் வெண்ணிலா எறிப்ப, இக்கற்கள் நீரூறி நிற்றலின் என்றும் குளிர்ந்து விளங்குகின்றது அத்தரை. வெறுஞ்சுவர்களாக இல்லாமல் இடையிடையே

எழூதகங்கள் திகழ்வதால் இம்மாடங்கள் அழகு பெற்று விளங்குகின்றன.

8. பொன்னம்மையின் சிலம்பொலி: அம்மாடத்தினுள்ளே இன்ப வெள்ளம் ஆடலும் பாடலுமாகப் பொங்கி வழிகின்றது. தாம் மிகமிக விரும்புவதன் பயனாக மணிகள் அழுத்திய முழவின் இன்னொலி—அம்முழவிற்கேற்ப ஆடும் பெண்களின் சிலம்பு அதிரும் ஓசை—அவற்றிற்கேற்பப் பாடுவார்தம் இன்பப்பாடல்—இவையே எப்போதும் அங்கிருந்து வந்து நம்காதிற் புகுகின்றன. நகரமே வடிவான திருமகள், தன் திருவிற்கேற்பப் பல கலன்களையும் தன் உடல் பொதிய அணிந்து வீறுபெற்று, தன்னியக்கத்தோடு அவை அசைதலினால் கலகல என எப்போதும் ஒலித்து நிற்பதேபோன் றினியதாக உளது, இம்மாடத்தே எழூம் இந்த இன்னொலியும்.

9. பொன்னம்மையின் இனிய குரல்: நகரத் திருமாது அணிந்த அணிகலன்களின் ஓசையிவையேயானால் அவ்வம்மையாரின் குரலொலி யாதோ? அம்மாடத்தே நின்று ஒளிரும் பெண்களோ, தமிழ் முறையின்படி தமது தலைவரே அன்றி மற்றையோர் தொடவுமாகாததாய்த் தாலியேபோல, மணநிலையைக் குறிக்கும் கூந்தலுடையார்; கண்டோர் கண்ணை அருள் வழியே கருநிறத்தால் குளிரச்செய்யும் கூந்தலுடையார்; தமது காதலர் தொட்டாலும் உயிரோடு உடலும் குளிர உவப்பூட்டும் கூந்தலுடையார். மானென மருளினும் உயிர் ஒளிமிக்குக் காதளவும் ஓடும் இப்பெண்களின் கண்களைக்கண்டு,

தண்ணென்ற நீர்நிலையிற் பூத்த கருங்குவளையே என எண்ணி மருண்டு ஓடி வருகின்றன வண்டுகள்; காதளவோடி மின்னுதலின், இக்கண்கள் குவளையல்ல, என எண்ணிக் கீழே குளத்திற் பூத்த குவளையருகே செல்வான் பறந்தோடுகின்றன; அவற்றினருகே செல்வதற்கு முன்னரே, மகளிரிடை யடைந்த ஏமாற்றம் மனத்தேயிருப்பதால், அப்பூக்களையும், நீராடும் மகளிர்தம் கண்களே எனக்கொண்டு போவதொழிகின்றன; இவ்வண்டுகளின் இடையாட்டத்தைக் கூர்ந்து நோக்கும் பெண்களின் கண்கள், இமைகொட்டாமல் நிற்றலின், இவையே குவளை, என மீண்டும் மேனோக்கிப் பறந்து வருகின்றன. இவ்வாறே வந்தும் சென்றும் அலைகின்றன இவ்வண்டுகள். இவை ஒன்றைவிட்டு ஒன்றை நோக்கிப் புத்தம் புதிய புதையல் கண்ட ஓர் எளியானைப்போல எழும்போது, இயற்கைப்பண்ணோடும் ஆரவாரித்து ஆர்த்தெழுகின்றன. ஈது, ஆழியிலே நீண்டெழுந்த மின்னற்கொடிபோன்ற திருவம்மையார், நகர வடிவாய்த் தம் மியற்கைக் குரல்கொண்டு ஆரவாரிப்பதே போன்றுளது. பொன் நரல்வது இங்ஙனம் எனக் காட்டிய பின் தோலாமொழித் தேவர், அச்சுரும்புகளைப் பின் தொடர்ந்து சென்று, அவை, இவ்விடையாட்டத்தில் ஒரு சிறிதும் தேன் பெறுமல் மிகவும் இரங்கத்தக்கனவாய் இளைத்து நிற்பதைக் காட்டுகின்றார்.

பரத்தையரோ?:-சிந்தாமணியிலே, மதிலைப் புனைந்துரைத்த பின்னர்ப் பரத்தையர்கள் வாழும் தெருக்

களைக் கூறிக் கடைகளைப் புகழத் தொடங்குகிறார் திருத்தக்கதேவர். அஃதேபோலச் சூளாமணியிலும் மதிலைப் புனைந்துரைத்த பின்னும், கடைகளைப் புகழ்வதற்கு முன்னும், வரும் இப் பாக்கள் பரத்தையரையே குறிக்கின்றன என்ன மன்றுவோர் ஒரு சிலர். ஆடலும், பாடலும், முழவும், கூறியிருத்தலும் அதனை வற்புறுத்தும் என்பர். ஆடலையும் பாடலையும் பரத்தையரிடத்தே ஒற்றி வைத்து வாழ்வது ஏனோ அறியோம். "மழைக் கணார் தம்.........செல்வர் தோள்" என்று கிழமைப் பொருளிற் கூறுவது இக் கொள்கையை மறுப்பதும் காண்க. இராசமாபுரத்தைப் புனைந்துரைக்குமிடத்தையே இவ்விடத்திற்கு ஒப்பாகக்கொள்ளுதல் பொருத்தமுடையதாகும். அங்குப்போலவே இங்கும் மதிலையும், அகழியையும், பின்னே யானை கட்டுமிடங்களையும், பின்னர் மாடங்களையும் புனைந்துரைத்தலைக் காண்க. 'நெடுங்கடை' என்று இதன் பின்னே வருவது நீண்ட கடைவாயிலையும் குறிக்குமாதலின் அங்காடி என்றே ஒரு தலையாகக் கூறுதற்கில்லை. சிந்தாமணியைப் பின்பற்றியே சூளாமணி நடக்கவேண்டுமென்று கருதிப் பெரும்புலவர்களை எல்லாம் அடிமைகள் ஆக்க வேண்டுவதில்லை. அங்காடியையே புனைந்துரைக்கின்றார் எனக் கொள்ளினும், கோயிற் புறத்திலே, பரத்தையரை வைத்துப்பாடத் தோலாமொழித்தேவர் விரும்பவில்லை என்று கொள்வதும் ஏற்புடையதேயாம்.

10. ஆவணக் காவணம்:—அறுத்து அமைத்த பளிங்குகளையே பலகைகளாகக் கொண்டு விளங்கும்

மேடைகளின் விளிம்பிலே, எங்கும் காற்றிலே அசைந்து, எங்கும் மணமூட்டித் தொங்கும் பூமாலைகளும், அவற்றிடையே மொய்க்க வரும் வண்டுகளும், அந்த நீண்ட கடைத்தெரு முழுதும் தோன்றுகின்றன. பல வளங்களும் மிக்க வானநாட்டுக் கற்பகக் காவணம்போன்றே விளங்கி, வேண்டுவார் வேண்டுவதே கொடுத்து நிற்கின்றது அக் கடைத்தெரு.

11. சிலம்பொலி கேட்டுத் தியங்கும் சிறு வன்னம். கருங்குவளை மலரின் உள்ளிடத்தைப்போன்ற கருங் கண்ணால் வீறு பெற்ற மகளிர், மாளிகை மேலே தமது கூந்தலுக்கு நறும்புகையூட்டிக்கொண்டே உலாவாநிற்கின்றனர். காலிலே பூண்டிருக்கும் அழகிய பூஞ்சிலம்புகள், அவர்கள் நடக்குந் தோறும் அன்னத்தின் குரலேபோல ஒலிக்கின்றன. கீழே சேவலன்னமும் பெடையன்னமும் இரை கொண்டு வருவதற்கு வெளியே பறந்துபோகையில் தமது இளம் பார்ப்புக்களைத் தாமரையினிடையே வளர்த்திச் செல்கின்றன. இனிதே தூங்கியிருந்த அவ்விளவன்னங்கள் இச்சிலம்பொலி கேட்டு விழித்தெழுகின்றன. அவ்வொலி, தம் தாயினது மெல்லிய குரலை நினைப்பூட்டுதலும், தம்மையணைத்துச் சூடேற்றித் தழுவியிருந்த தம் அன்னையின் வெள்ளைச் சிறகை எண்ணி நைந்துருகி, “தமக்குத் துணையான சேவலன்னங்கள் தம்மை விட்டுப் பிரிந்ததால் அப் பெடையன்னங்கள் புலம்பி அரற்றுகின்றனவோ? தாய்தந்தையர் ஒருவரையொருவர் பிரிந்தனராயின் நம்மையும் பிரிவர் அன்றோ? அணைத்து

ஊட்டிய நாளெலாம் முடிந்தனவோ ?'' எனஎண்ண மிட்டு மனங்கலங்கிக் குழம்பி மயங்குகின்றன. இத் தகைய கனவுலக அச்சத்திற்கன்றி உண்மை யச்சத் திற்கு அங்கு இடமில்லை.

12. தரையிற் பூத்தத் தாமரை:—கீழுலகுவரை, ஆழ்ந்து உள்ள நீர் நிலைகளில் குளிரப்பூத்துச்சிறந்த பூங்கொத்துக்களைப் பறித்துக் கூந்தலாலழகிய பெண்கள் சூடிக் கொள்கின்றனர். அக்கூந்தலின் ஊற்றின்பத்தால், மகிழ்ந்து உடல் வளர்ந்தனவாய் அக்கொத்துக்களிலுள்ள போதுகள் விரிந்து மலர் கின்றன. திருமுடியில் மலர் பூத்தபடி இது. இன் பத்திற்கு நிலையகமாம் திருஅடிகளின் தகுதியை நன்கு அறிந்தவர்கள், அத்தகுதிக்கேற்ற பொற் சிலம்பு பூட்ட, அச்சிலம்புகள் இவ்வடிகளோடு பொருந்தி நிற்கும் பொருத்தத்தை நோக்கிக் கண்ட வர்கள், அந்தச் சிலம்புகளைக் கூடப்பிறந்தமேதார் இயற்கையாகக் கொண்டு 'சிலம்படி' என்றே இயைபு படுத்திக் கூறுகின்றனர். அத்தகைய அடிகள் ஈதோ தெருவே நடந்து செல்கின்றன. தெருவெல்லாம் தாமரை பூத்துப் பொலியும் வியப்பு என்னே! என் னே! அவ்வடிகளின் இயற்கைச் செம்மையோடுவேற் றுமை யாதும் புலனாகாதபடி அவற்றோடு இயைந்து பழகும்படியாகக் கைபுனையவல்லார் ஊட்டிய செம் பஞ்சின் குழம்பு அவ்வடிகளின் குளிர்ச்சியால் உல ராதுநிற்றலின், அவர்கள் அரசத்தெருக்களில் பையப் பைய நடக்குந்தோறும், தாமரைபோன்றொளிரும் அடிச்சுவடுகள், அத்தெருவிடையே விளங்குகின்

றன. நிலத்திடையே தாமரை பூத்த வியப்பின் நுட்பம் இதுவேயாம். மேருமந்தர புராணம் பாடிய வாமனமுனிவர் இவ்வியப்பினை மறவாது,

" மலர்க்கண் வஞ்சியங் கொம்பனை யின்சொலார்
அலத்த கஞ்செறிந் தஞ்சிலம் பாரடி
தலத்தெ ழுந்தசெந் தாமரைப் போதுபோல்
நிலத்த கம்பொருந் திக்கி டந்தவே "

என மொழிபெயர்த்துக் கொள்ளுதல் காண்க. முடியிலும் பூவைச் சூடி, மெல்லிய பூவும் மகிழ்ந்து மலர மலர்வித்து, மலரென நின்ற அடியோடு நடக்குமிடந்தோறும் அடித்தாமரைபட்ட இடத்தையும் அவ்வடியேபோலத் தாமரையாக மாற்றித் தாமரைப்பூவே தோன்றச்செய்து, எவற்றையும் தம்மைப்போல இன்பமாக்கிவைக்கும் மலருலக மங்கையரின் மலர்மண வாழ்க்கை இருக்கும்படி ஈதேயன்றோ?

13. அந்நாட்டுக்குப்பை அத்தனையும் அன்பே:— செங்கழுநீர் மாலைசூடி மெய்யுணர்வு கொளுத்தும் மேலோர், தமக்கு அவ்வுயர்நிலையை அறிவுறுத்திய பின், அம் மாலையையும் அன்படையாளமாகத் தந்தருள, அச்செங்குவளைகள் களித்திருக்கின்ற காதலிமாரது கண்ணேபோல விளங்குதலின், காதலர்கள் மிக விருப்புடன் தமது குடிமாலையாகச் சூடிப் பார்க்கின்றனர்பின்னர்மகளிரும்மெய்யுணர்வுபெறுமாறு அவர்களுக்கு,நறுமணம் மிக்ககுவளை மாலைகளை இவ் வாடவர்கள் அருளோடணிகின்றனர். இக்குவளை வாடாது மலர்ந்து நிற்க, நிலாக்கதிர் வேண்டுமாத.

வின், அதற்கெனச் சூடிய வெள்ளிய நிலாக்கதிர்க் கற்றை என விளங்குகின்றன, முத்துமாலைகள். பல் வேறு நிறங்களமைந்த பூக்களுக் கிடையே தம் முடைய கற்பினுக் கறிகுறியாக மல்லிகையைச் சேரத்தொடுத்து,மகளிர், விருப்பமுடன் அணிகின்ற னர். இம்மாலைகளை, தெருவே முக்கூட்டிலும், நாற் கூட்டிலும், காதலரோடு புலவி நுணுக்கத்தால் ஊடி நிற்கும் மகளிர் வீசி யெறிகின்றனர். அதனால் பெருமை பொருந்திய இவ்வகன்ற நகரிலே, அவை நிறையக் கிடத்தலின் கவர்பட்ட வழிதோறும் அவற் றைக் காணல் அரிய தொன்றன்று; எங்கும் காண்ப தொரு காட்சியேயாம். குவளை, அறநிலைநின்ற ஆண் மக்களின் அறிவொழுக்க மேம்பாட்டையும், மல் லிகை, கற்புநிலை நின்ற பெண்மக்களின் அன் பொழுக்க மேம்பாட்டையும், முத்து, அருணிலை நின்ற அவ்விரு திறமக்களின் பொருளொழுக்க மேம்பாட்டையும், புலவி நுணுக்கத்திலே வீசி யெறிந்த வீச்சு, அவர்களின் அன்புநிலை நின்ற இன்பொழுக்க மேம்பாட்டையும் சுட்டுகின்றன வல்லவா?

14. அருள் பழுக்கும் மரம்:—இவ்வெள்ளை மாடங் களினுள்ளே கிடக்கின்றவற்றைக் காண்மின். நறு மணமிக்க நீர், கடுக்காய் தான்றிக்காய் நெல்லிக்காய் என்ற முப்பழமும் ஊறிக் கிடத்தலால், நோய்க்கு இடங்கொடாமே இன்பமூட்டும் தண்ணீர், உண்டு களிக்கத்தக்க வகையில் சிறந்து பழுத்துக் கனிந் துள்ள தேனினுமினிய பலாச்சுளைகள், நறுமணத்

தோடு விளங்குதலின் மணத்தையும் சூட்டும் வேரி என்பதனையோர் பேராகக்கொண்டதேன், வேறோர் அடையும் வேண்டாமல் தானே தனித்துச் சிறக்கும் மாவின் மிகக் கனிந்த பழங்கள், தேனினும் இனிய சாற்றைப் புகுத்தி வைத்தவொருகோலோ ஈதெனச் சுவைத்துண்பார் வியந்து போற்றும் கருப்பங்கோல்களின் தொகுதி,—இவை இனிமை கனிந்து வளர்ந்து நின்றனவேனும், இம்மாடங்களினுட் புகுந்தமையால் மற்றுமோர் வளர்ச்சிபெற்று அனைவர்க்கும் இன்ப அன்பூட்டுவான் அறம்பழுத்து அருள்கனிந்து நிற்கின்றன. காசு காய்க்கும் மரத்தைப்பற்றிக் கதைக் காண்பார், இவ்வினிய பொருள்கள் பழுத்து நிற்கும் மரமெனும் இம்மாடங்களையேனும் காண்பான் செய்தானன்றோ தோலாமொழித்தேவர் !

15. பொன்னுலகம்: பொன்னரலும் நாட்டிலே பொன்னுலாகிய நகரத்தே உருப்பொருள்கள் உள்ள இடத்தெல்லாம் பொன்னே கண்டோம். மைந்தரும் மகளிரும் ஆடிப்பாடி அணைந்து மகிழ்கின்றனர். அழகு நிறைந்த பொற்றுகள் மேலெழுந்து பறந்து இடைவெளியெல்லாம் நெருங்கிநிற்கின்றன. இடைவெளி வானும், இன்னவாறு பொன் செறிந்து இருட்கிடமின்றி ஒளிர்தலால், அந்நகரத்து மகளிரும் மைந்தரும் மாலை என்றும் காலையென்றும் வேறுபடுத்தி யறியமாட்டாதே, இரவு பகலின்றி எப்போதும் இன்பந் துய்க்கின்றனர். இப்பொன்னும் இவ்வின்பமும், கண்டோர், 'இந்திர வுலகம்

இங்கே கீழே இழிந்ததோ என்று கருதி, ஒப்புமை கொள்ளும்படியாக விளங்குகின்றன.

காவன் முல்லை

16. அரசனே உயிர்:—நகரமும்நாடும் இத்தகையன வாயின் இந்நாட்டு அரசன் எத்தகையவன்? இவை யனைத்தையும் உயிருடைப் பொருளாக்கி உயிராய் ஒளிர்பவன் அவனேயாம். அதற்குத் தக்கவன் அவன் என்று கூறும்படி அழகுக்கழகாய் இயைந்த பொருத் தமே பொருத்தம். மன்னனுக்கு நகரம் உடைமை ஆவது இன்றி, அம்மாநகருக்கே மன்னன் உடைமை யாய் விளங்குகின்றான். நாடும் அரசனும் அனைத்தும் இயைந்ததே அரசாதலின் அரசனை யுடைமையாக் குவ தன்றோ உயர்ந்த கருத்தாகும்? இப்போ திருப் பார் எவரும் இவ்வரசனுக்கு இணையில்லாமையால் ஒற்றைக்குடையே காண்கின்றோம். இவனுக்கு முன் னும் பின்னும் முறையே வந்தோர் வருவோர் என்ற பலரினும் உயர்ந்தவனாய் நம் கருத்தகத்தே தோன்று தலின், அவன் குடையும் உயரொற்றைக் குடையா கிறது. அதனையுடையான் அவ்வகையில் என்றும் நிலைபெறுகின்றான்; மன்னனாக மன்னுகின்றான். புக ழாகி விரிந்த அறநிறமாம் வெண்ணிறங் கொண்ட அந்தக்குடை, அறவழி வளருகின்ற பொருட் சிறப் பின் வடிவாகிப் படைவெப்பம் இல்லாத செங்கோ லின் தண்ணறு நிழலை எங்கும் பரப்பி நிற்கின்றது. அச்ச மென்பது இந்நாட்டில் எங்கும் இல்லை. அன்பே மிளிர்கின்றது. "மன்பதையின் தலைவன்" எனப் பொருள்படுகின்ற பயாபதி எனும் பெயரை

இடுகுறியாக அவனுக்கு இட்ட பெரியோர், காரணம் கருதிய வழியும், அஃதவனுக்குப் பொருந்து மாற்றை யுணர்ந்தனரோ? அப்பெயரைத் தற்கிழமைப் பொருளாகக் கொண்டுள்ளான் அவ்வரசர்க்கரசன்; தன் மணி முடியைப் போலவே வெற்றி வேலையும் வேந்துநிலைக் குறிகுறியாகவும் அரசுநிலைக் கணிகலமாகவுமே கொண்டு விளங்குகின்றான். குத்திக்கொன்று வெற்றி பெறுமல் அவன் கையில் விளங்கிய நிலையானே அன்பு வெற்றி கொண்ட அவ்வேல், அவனுடைய வெற்றிக் குறிகுறியாவதோடு, அவ்வகையில் சிதறுண்டு வெற்றிபெறும் மற்றைய வேல்களை வென்று, நின்றநிலை மாறாது நிற்பதாலும் வெற்றிபெற்று மிகமிக மிளிர்கின்றதன்றோ? ஆதலின் அறவழியே அன்பினை வளர்த்து அரசாண்ட அம்மன்னன் உலகுக்கு ஓர் உயிர் என்னும் தன்மையான். அவனது குடையின் நிழலில் தங்கும் உலகைக் கண்டவர்கள் 'இவ் வனைத்துக்கும் ஒன்றே உயிர்' என்று சொல்லும்படி அரசாண்ட தன்மை விளங்குகின்றது. உலகு பலதிறப்பட்டாலும் அவை முரண்பட்டு நில்லாமல் இசைப்பாட்டின் இன்பம் போல் ஒற்றித்து நின்று செழிக்கின்றன. உலகை அவன் ஒற்றுமைப்படுத்திய தன்மையைப் புகழ்கின்றபடி ஈது.

இனி, உலகுக்கு இவனே உயிர் எனவும் தோன்றுகிறான் என்பதனையும் தோலாமொழித் தேவர் சுட்டுகின்றார். உயிர் உயிராவது உடலொடு வழங்கி வருதலாலே யன்றோ? அந்நிலையில் உயிர்க்

கும் உயிர்த்தன்மை தந்து உதவுவது யாது என்னு மது பழையதொரு கேள்வி. உணவில்லையானல் உடலிலே உயிரும் இருப்பதில்லை எனலாம்; ஆதலின் உணவே உயிர்க்கும் உயிர்த்தன்மையைத் தருகின்றதெனக் கொண்டு நெல்லே உயிர் என்றனர் சிலர். உணவு இல்லையானலும் சில நாள் பிழைக்கலாம்; நீரில்லையானல் உயிரே யில்லையாதலின் நீரே உயிர் என்றனர் மற்றும் சிலர். இவர்களை மறுத்து

"நெல்லு முயிரன்றே நீரு முயிரன்றே
மன்ன னுயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனல், யானுயிர் என்ப தறிகை
வேன்மிகு தானை வேந்தற்குக் கடனே"

—புறநானூறு

என மோசிகீரனர் பாடுகின்றார். மன்னனில்லையானல், சிறு மீனைப் பெருமீன் விழுங்குவதே போல, மெலியாரை வலியார் வாட்டி, வல்லான் வெட்டியதே வாய்க்காலாக மக்கள் நிலைகலங்கி மாள்வர். அவனுளனக, உயிர் உயிராகும்; நெல் நெல்லாகும்; நீர் நீராகும். இத்தகைய சுமை தன் தலைமேல் இருப்பதனை யுணர்ந்து ஒழுகவேண்டும் பெருமையைப் பாராட்டி யன்றோ மோசிகீரனர் "அதனை அறிதல் அவனுக்குக் கடன்" என்கிறார். எனவே இவனுக்கென்று அவையில்லை; அவற்றிற்கெனவே இவனிருக்கின்றான், என வற்புறுத்துவது அவருடைய கருத்தாதல் தெளிக. உரிமை எனக் கூறாமல் கடமை எனக் கூறுவதும் காண்க. "மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிர்" என்பதே இதன் பொருள் என்க.

இவ்வாறு அன்றி, மன்னனை யுயிராக்கி உலகை உடலாக்கி வைத்துளார்தேவர்எனினும் இழுக்காது. உவமை யனைத்தும் சிறிதொத்துச் சிறி தொவ்வா மையையே சுட்டுகின்றன என உணர்தல் வேண்டும். முத்தன்ன நகையார் என்றவுடன் பல்லும் திரட்சி யுடையதோ என்று கேட்பார் இல்லையே. தயரத னைக் கம்பர், உலகில் வாழ் உயிர்கட்கோர் உடம் பாக்கிக் காட்டுகின்றார் நம்மெதிரே. அது கொண்டு, உயிர் சென்ற வழி எல்லாம் உடலும் செல்லுமாத லின், உயிர்கள் தீ வழிச் சென்றபோது தயரதனும் உடன் சென்று உதவினன் என்பதே கம்பரது கொள்கை என்று கூற வொண்ணுதன்றோ? அவ் வாறு நெடுக உடன்கொண்டு சென்றக்கால் உவமை என்பதற்கே பொருளில்லையாம். இதனைத் தடுத்தி டவே, "உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால் உயிரெலாம் உறைவதோர் உடம்புமாயினான்" எனப் பொதுத்தன்மையை அவ்வுவமைக்குக் கரு வியாக விரித்து வைத்துளார். ஆதலின் அஃதேபோல இங்கும் உலகை உடலாக்கி அரசனை உயிராக்கிய நம் தோலாமொழித்தேவருக்கு, உயிரின் பொருட் டே உடலிருப்ப தென்பதே கருத்து என்று வலிந்து பொருள் கொள்ளவேண்டா. உயிரில்லையானல் உடலை நரியும் கழுகுமே பிய்த்துத் தின்னும்; அதனை அழியாது காப்பதும் உயிரேயாம்; தீமை வராதபடி காப்பதும் அஃதேயாம். கல்லினும் நெல் இனிய தென்ன உணவுப்பொருள்களைக் காட்டி அவற் றைப் பெறும் வழியையும் தேடப் பிடர் பிடித்து

உந்துவதும் உயிரேயாம்; ஐம்புல இன்பத்தை, அவா வற்ற உயர்நிலையில், "மாசில் வீணையும் மாலை மதிய மும்" என்று கொண்டு துய்க்கச் செய்வதும் உயி ரேயாம். அறிவுவடிவாகிய உயிரே உடலை நல்வழிப் படுத்துதலின், மக்கட்குக் கண்ணாகி நின்ற அரசனை உயிர் என்றனர் பண்டைத் தண்டமிழ்ப் பெரியோர். இத்தோலாமொழித் தேவரைப் பலவிடத்தும் பின் பற்றிச் செல்லும் சேக்கிழார், உலகிற்கு ஒரு சிறந்த அரசனைப் படைத்துத்தர முந்தியநிலையில் இப்பாட் டின் உட்பொருளையே,

"பன்முறை யுயிர்கள் எல்லாம்
பாலித்து ஞாலங் காப்பான்
தன்னெடுங் குடைக்கீழ்த் தத்தம்
நெறிகளிற் சரித்து வாழும்
மன்னரை யின்றி வைகும்
மண்ணுல கெண்ணுங் காலை
இன்னுயி ரின்றி வாழும்
யாக்கையை ஒக்கும் என்பார்."

—பெரியபுராணம்

என விரித் துரைக்கின்றார். 'சரித்து வாழும்' என்ற தால், ஒழுகச் செய்தலாலே வாழுமவர்கள் என்றும் ஒழுகச்செய்தலில்லையானால் நடைப்பிணமாவார்கள் என்றும் பொருள் தோன்றுவதைக்காண்க. ஒருவர் கழுத்தை ஒருவர் முறித்துத் தாமே வாழவேண்டும் என நிற்கும் கயவர்களாம் முட்களும் நிறைந்த அழகிய பசும்புற்றரைப் பரப்பாம் இவ்வுலகின்கண் முள்ளைக்களையும். ஓரரசோ குடியரசோ வேண்டா என்பது மண்ணுலகில் எக்காலும் இயலாததாம்;

பொன்னுலகில் ஒரு வேளை அரசனே இன்றி வாழி னும் வாழலாம் என்னும் கருத்தொடு 'மண்ணுலகு' என வற்புறுத்தும் சேக்கிழார் உள்ளத்தை இவ் வாறு உள்ளவாறு காண்க. அமைச்சராய் இருந்து கண்ட கனவன்றோ இது. வழிகாட்டிகளாகக்கூடிய அறவோரே அரசராதல் வேண்டுமென்றன்றோ ப்ளேடோவும் முன் ஒரு கனக் கண்டான். அவ் வாறு தனக்கென வாழாப் பிறர்க்குரியாளனே உயிர்; மற்றையோ ரெல்லாம் நடைப்பிணம்; ஆத லின், அறவோர்களாலேயே உலகம் வழங்கி வரும். நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு எல்லார்க் கும் பெய்யும் மழை. அவனை, உலகுக்கு உயிர் எனக் கூறத் தட்டில்லையன்றோ? உயிரானது தீய வழியிலே உடலைக் கொண்டு வீழ்த்தி யழுகச் செய்தலின் அன்னவாறு இவ்வரசனும் செய்வான், என்பதை யும் இவ்வுவமை சுட்டவில்லையோ எனின் 'நிழலு லகு' என்று உலகை நிழலில் வைத்து, அரசனை உல கப் பெருஞ் சுமையொடும் கடமையெனும் வெயி லில் வைத்த நம் தோலாமொழித் தேவர்க்கு அது கருத்தன்று. அறவழியே ஓங்குகின்ற அன்பை நிழலா கக் கூறியபின், மறத்திற்கும், துன்பத்திற்கும், தன் னலத்திற்கும், இடமேது? இதுபற்றியன்றே அவர், 'வெண்குடை நீழல்' எனும் அடை கொடுக்கின்றார்.

உலகுக்கு உயிர் என மன்னவனைக் கூறும் இக் கருத்து மற்றோர் நுட்பத்தையும் உட்கொண்டு திகழ்கின்றது. 'உலகம்' என்பதற்குக் 'காணப்பட்ட உயிர்; அஃதாவது உடலோடியங்கும் உயிர்' என்று

பரிமேலழகியார் கூறும் அழகிய பொருளை மறக்க இயலாது. உடலோடு கூடிய உயிருக்கு ஒருயிராய் இருப்பதென்ருல், உயிர்க்குயிராய் இருத்தலன்ரே? கடவுளே இவ்வாறு உள்ளார் என்பர் பெரியோர். உடன்நின்றே அனைத்தையும் உணர்ந்து அவ்வவற்றிற்கேற்ற நற்பயனையும் தீப்பயனையும் தந்து, உயிர்களை வாழவைத்து, வேண்டும் பொறி பொருள் முதலியவற்றையும் ஈவதுடன் அவர்கள் மீது அருளோடும் விளங்குகிருர் அக்கடவுள், அம் மட்டோ? அவ்வவரை அடிமையாக்காமல், அவ்வவர் தத்தம் மனப்படி செல்லக்கூடிய உரிமையையும் தந்து, அவ்வுரிமையைப் பயன்படுத்த அறிவு வளர்ச்சிக் கிடமமைத்து முள்ளாரன்ரே அவர்? இப்படி யெல்லாம் உயிர்களுக்கு, உடன் நின்று உதவி, உரிமையும் தந்து, அருளொடு வாழ்பவனே அரசன் என்பது தோன்றவே உலகுக்கு உயிர் என்கின்ருராதல் வேண்டும். இதுபற்றியன்ரே நம்மாழ்வார் "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன் என்னும்" எனப் பாடுகின்ருர். இச் சொற்ருடரைப் பன்முறையும் எடுத்தோதியோதி இப்பொருள்களனைத்தையும் ஒற்றித்து இயைத்துக்கொள்க. இக்கருத்திற்குக் கம்பர் கூற்று முரணுமை காண்க. இப்பண்டை முறையை மாற்றிச் சொல்வதால் ஒரு வியப்புத் தோன்றுதல் நோக்கி அவ்வொரு கொள்கை மனத்தே பதியுமாறு கூறுகின்ருர் கம்பர் என்பதை யுணர்தல் நலம். அதுபற்றியன்றே பொதுத் தன்மையை ஐயத்தேவையாமல் விரித்தும் கூறினுர் அப்புலவர் பெருமாஞர்.

17. நாளே போலும் நல்லரசன்:—வேற்படையை யும் மணி முடியோடு அரசக்குறியாம் ஒரு ஒப்பு னைப்பொருள் எனக்கொண்டு, அருள் நிழலிலே உலகைவைத்து ஆள்கின்ற அன்பாட்சியின் முறைப் படி நிகழும் இவனுடைய செயற்கரும் செய்கை கள், அவ்வுள்ளநிலைக்கு ஏற்பவே இம்மண்ணுலகை யும் பொன்னுலகையும் கடந்த இன்ப அன்பு உல கத்து அறிவுச் செய்கைகளேயாம். ஆதலின் இவற் றைக்காண்பதற்குமுன்னம், உடலையும் பொருளையும் உள்ளத்தையும் உயிரையும், எண்ணூல் அரசநூல் முதலிய நூலின்படியும், தம் உலகியல் அறிவின்படி யும், நன்றாகக்கூர்ந்தெண்ணி ஆய்ந்தறிந்து அளந்து காட்டிய அறிஞர்களும்,பண்டைமுறையும் நடையும் பழகியிருக்கின்ற தம் மனத்தாலே, இவற்றை எட்ட வும் இயலாது. இவ்வாறு உயரவோங்கி உள்ளத்தை யும் கடந்துநின்ற கடவுட் செய்கையேபோல விளங்கு கின்றன இவன் செயல்கள். பயாபதி மன்னனது அரசியல், அண்டி நிற்பாரிடத்தும், அகன்று ஒடுஞரி டத்தும், ஒருபடித்தாக விளங்குகின்றது. அருளே, செயல் என்ற ஒரு வடிவு கொண்டபோது, ஈதே அதன் பயனும். அரசியலோ, பயிர் விளைத்தலும் களை களைதலும் போல, காத்தலும் கடிதலும்என, இரண்டாகப் பிரிகின்றது. அருகிலே நின்றார் பெண்டு பிள்ளைகள் என அவர்க்கு ஒருவழியும், அகல நின் றார்க்கு வேறே வழியுமாக முறைபிறழ்வ திங்கில்லை. மகனைத் தேர்க்காலில் உருட்டுமோ ருயர்நிலையையே அரசியலின் நுட்பமென உணர்கின்றான் அம்மன்.

னன்; காலத்தாலும் இடத்தாலும், அன்பாலும் உறவாலும், மற்றும் பல பல வகையாலும் அகன்று நின்றவர்பாலும் அன்புநெறியே செலுத்தி ஆள்கின்றான். வேற்றார் சென்றவன் செல்வம், ஆளில்லாப் பொருளாய் அழிவது அந்நாட்டில் இல்லை. படைக்கு எட்டிய இடத்தும், படைக் கெட்டா இடத்தும், இவனது அன்பாட்சி செல்லுதலின், தீமை எண்ணினாரும் கழிந்ததற் கிரங்கித் தம்மைத் தாமே ஒறுத்துக் கொள்வதே தனாம் அங்குக்காணும்முறை; ஆதலின் அகலச் சென்றாரும் தந்நெஞ்சமே தம்மைச் சுடக் கழூவாய் ஆற்றி நல்வழி திரும்புகின்றனர். அன்பாட்சியின் பயனாக அவர் மனம் மாறியபடி யது. உலகையேநீப்பினும் அவ்வுள்ளநிலை மாறுவ தில்லையன்றோ? மறுமையினும் சென்று நடத்தும் அரசாட்சியாவது ஈதே யன்றோ! நாட்டை யகன்றவர் எனப் பொருள் கொள்ளின் உலகனைத்தும் தன் நீழற்கீழ்த் தங்குதலின் "அகன்றவர்" என்னும் சொல் மறுமை சென்றாரை யன்றி வேறு எவரைக் குறித்தல் கூடும்? உள்ளத்தை மாற்றும் நிலை ஈதானால் பகை நட்பு என்ற பிரிவே இல்லையோ? இல்லை என்பது உலகியல் கூறியதாய் முடியாது. இராமனெனும் ஓர் இன்பக் கனிபழுத்த அருள்வடிவான தயரதமரத்தின் பாரை யாம்மடியின்மீதே வளர்ந்து, அதனோடு ஒன்றுபட்டு கிளையாம் தோளிற்படர்ந்த கைகேயி என்னும் பெண் கொடியும் அந்தக் கனியைக் காட்டிலே காயவைக்க முந்தியதன்றோ? தேவி சிந்தையும் திரிந்ததன்றோ. தந்நெஞ்சு தம்மைச்சுட, அவன் அருள்நெறியே நடந்தா

னும், தம்மையுமறியாதே நட்பும் பகையும் பாராட்டி நிற்கும் மக்கள் இல்லாமல் இல்லை. கோடை வெயி லில் பாலைவனத்தே பரல்மீதே செல்வார் இடையே இளமரக்காவின் தண்ணுறு நிழலையும் அந்நிழற் கீழே ஊற்றிலெழுந்த தண்ணீரையுங்கண்டு வேட்கை தீரக் குடித்து உடலு முள்ளமும் உயிரும் குளிர்வது போல,இவனுக்கு நட்புரிமை பாராட்டுகின்றார் பலர். அன்னவர் இவனுடைய செயல்களைக்கண்டு உடலும் உயிரும் உள்ளமுங் குளிர்ந்து வாழ்த்தும்படி தண் ணென்று இவன் விளங்குகின்றான். அந்தப் பாலைவ னத்துவழியேசெல்வார் தீயைமிதித்து, சுற்றும்தீயே பரத்தலால் உடல்வெந்து,மேலும் நடுப்பகலில்வான் நடுவே வந்து கதிரவனும் வெப்பத்தைக் கொட்டுவது கண்டு மனமும் வெந்து, வருந்துவதேபோலப் பகை கொண்டார்க்கு இவன் சுடுபொருளாய் விளங்குகின் றான். அரசனுடைய இயல்பு மாறுபடுவதால் இவ் வேறுபாடு விளைகின்றதில்லை. பசியோடும் விருந்து உண்பான் ஒருவன் அந்நாளை நன்னாள் என வாழ்த்து கின்றான்; விருந்தெதிரிருந்தும் வயிற்று நோவால் உண்ணாது வருந்துவான் ஒருவன், அந்நாளையே தீநாள் எனப் பழிக்கின்றான். அந்த நாளேபோல அரசனும் விளங்குகின்றான். ஆதலின் பகைவரை நோவதன்றி அரசனை நோவதால் பயன் இல்லை என்றபடி. இவ்வர சன், நற்பயனூட்டும் நாளைக் காட்டினும் நண்பர்க்கு இனியனாகிறான்; தீப்பயனூட்டும் நாளைக் காட்டி டினும் தெவ்வராய் நின்றார்க்குத் தீயனாகின்றான் எனி னும் இவனே, அவ்விருதிறத்தார்க்கும் ஒருபடித்தா

கவே நடுநிலைநின்று அருள் வடிவாக விளங்குகின்றான். ஆயினும், இவ்வரசன் தன் பகைவரைப் படைகொண்டு தலையை நொறுக்குகின்றானே, எனின் இல்லையாம்; அழகு வடிவமாகவே தன் படைகளை அமைத்து அந்தஅன்பொழுக்கில் நிலைபெற்றுவிளங்குகின்றான். அந்தானை மன்னன் நந்தானை மன்னனு மாதலின் இரட்டுறமொழிதலாம். நாமும் அன்புலகில் வாழும்படி நல்வழி யமைத்துச் சென்ற அவ்வரசன் ஒருவகையில் நம் மன்னனும் ஆகின்றானன்றோ? அகன்றவரும் பகைவரும் ஆகி இருப்பவர்,ஒருக்கால் உள்ளத்தே ஊழ்வினையின் பயனாக அரசனை வெறுப்பினும், தந்நெஞ்சே தம்மைச் சுடுதலின் தம் எண்ணம், செயல்வடிவு அடைதல் இல்லை; ஆகையால் தம் எண்ணத்திற்கும் நாணுவாராய்த் தம்மை அவன் மேல் வைத்துத் தம்மைப் பகைப்பார். அவனைப் பகைப்பாராய் நிற்கின்றனரேயன்றித் தீயவழி செல்கின்றிலர். ஆதலின் அவர்களையும் அவன் படை ஒறுக்கின்றதில்லை. அவ்வரசன் தான் நெறிபிழைத்தபோது,தானே, தன்னுயிர், தன் கோலின் வளைவைத் தீர்த்து நிமிர்த்திச் செல்லாதாயின் வேலால் குத்திக் கொண்டுமாய்வதே பொருள்எனக்கைப்பிடித்த வேற்படையைக் கண்ட மக்கள் "நாம் மறந்தேனும் வழி தவறி நடப்போமாயின் அரசனுக்கு அங்ஙனம் மறலி யாய்விடுவோமே" என்று எண்ணி, அழகுக் கெனப் பிடித்த அவ்வேலையும் கண்டு அஞ்சும்படி அவ்வரசன் தன்னுயிரையும் மக்களுயிரையும் ஒன்று படுத்தி அவர்களுடைய தலைவனும்,உலகத்தைக் காக்

கின்றான். இந்நாளில், ஒளியோடு மாலையும் சூடிய வேலேந்திய மறவர்களுடைய நெருப்பெனக் கொதித்து உயிர்பாய்ந்து கொல்லும் படைகள், சிறிதும் மக்களை வருத்தவில்லை. ஒறுத்தல் நெறியே முறை செய்வதற்குத் தீங்கு செய்வாரோ அங்கில்லை. கரையின்றி நிற்கும் கருங்கடல் தன்னைக் கண்டோர்க்கு, இயற்கைப் பரப்பின் தகுதியமைப்பை நினைப்பூட்டி, இயற்கைவழி ஒழுகாவிடின், தானே பொங்கித் தன்னெல்லைக் குட்பட்ட நிலத்தை யழிக்கும் எனத் தன் பரப்பாலும் ஒலியாலும் அச்சுறுத்தி நிற்கின்றதாலின் அதனைக் கண்டுணர்ந்த மக்கள் இயற்கையழுகுதறுண்பதற்கு அஞ்சுவாராய் நன்னெறியே ஒழுகுகின்றார்; ஆதலின் படைவந்து வருத்துவது எங்ஙனம் கூடும்? ஆனால் அந்நாட்டில் ஒரு படைமட்டும் என்றும் இயங்குகிறது. அதனைத் தடுப்பார் யாருமில்லை. அந்நாட்டினரின் உள்ளத்தையே கவர்ந்தகணை அது. காமவேளின் கணையே இடையீடின்றி அங்கே உலவுகின்றது. அன்போடும் இன்பம் துய்ப்பவரேயன்றித் துன்புற்று மாழ்குகின்றோர் அங்கில்லை.

18. குடிகளின் அருளாட்சி:—தென் புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தான் என்றாங் கைம்புலத்தா றோம்பல் தலையாவதுபோல், இவ்வாறேம் புதலை நிலைக்கச் செய்து உலகைக் காக்கும் அரசனுக்கு ஆறிலொன்று கொடுப்பதும் அறமே என்று ஆராய்ந்து உறுதியாய்க் கைப்பிடிக்கின்றனர் அம்மக்கள். இவனுடைய படையை அஞ்சியோ, நட்பினை நச்சியோ, அவர் அவ்விறையைச் செலுத்துகின்றதில்லை;

உலகனைத்தும் வாழத் தமக்கொரு கேடில்லை என்பதையுணர்ந்து, எவ்வுயிரும் இறைவன் திருவுருவமென் றெவ்வுயிர்க்கும் அன்பாயிருப்பாரைப்போல, உலகினர்மாட்டும் அவர்கள் வடிவாய் நின்ற அரசன் மாட்டும்வைத்தஅருளாலே, ஆறிலொருகடமையைக் கொடுத்துதவுகின்றனர். குடிகள் அருள் செய்யும் நிலையில் நிற்க, இவ்வரசன் அவர் வழிநின்று அரசாண்ட தன்மை ஈது. அவ்வாறு பெறுவது கொண்டு உலகை நடத்துவதல்லது, அவன் எவரையேனும் வற்புறுத்தியோ துன்பூட்டியோ பொருள் கொள்வதில்லை. அறக் கட்டளை நிறை வேறியதென்று மனமகிழ்வதன்றி வேறொன்று கருதி மனமகிழ அங்கு இடமில்லையாதலின், பிறமகிழ்ச்சியைவேண்டி நிற்கின்றிலன் இவ்வரசன். (இவ்விரண் டடியையும் இரட்டுற மொழிந்து கொள்க). தான் பெற்ற ஆறிலொரு கடமையையும், அம்மக்களுக்கே மறுபடியும் அரசியல் வழியில் ஈவதேஅறமென அவர்கள்மாட்டு வைத்த அருளால் அவர்கள் நிலையை உயர்த்த அவர்களுக்கு உதவிசெய்கிறான் அவ்வரசன். அங்ஙனமல்லாது அவர்களிடமிருந்து ஆறிலொன்றாகவேனும் அன்னார்க்குப் பொருட்குறைபாடு தோன்றப் பெறுகிறது மில்லை; பெற்றதுகொண்டு தன் வாழ்க்கையை நடத்தி இன்புறுகின்றதும் இல்லை. தான் வாழத் தன் பொருளும் தன் கையுமேபயன்படுகின்றன என்றபடி. நண்ணி நின்றோரும் அகலநின்றோரும் அரசியல் வழியில் தாமே வந்து அருளினராய் அருள் பெற்றபடி ஈது ஆகும். ஊழ்வினைப் பயனால் இவனைக் கண்டு

மனம் வெம்பிநின்று, செயலளவில் மாறுபடுதற்கு இடமில்லையாதலின் மனத்தால்மாறுபட்டு நின்ற பகைவர்களும், தாமே இவ்வருள் வழி நடந்து, பகை நிலையையும் நட்புநிலையையும் கடந்த அவ்வரசனது அன்பு நிலையெதிரே நட்பாயினாரைப் போலவே, மனமகிழ்ச்சியோடு தண்ணாறு நிழல்பெற்று, இவனடியில் வணங்குகின்றனர். இத்துணைக்கும் இவனுடைய அன்பு நிலையும் அவர்கள் மனமுமே கருவியாய் நிற்கின்றனவே யன்றி, அவர்களை வணக்க அன்னார்மேலே இவன் படையெடுத்துச் சென்று, அவர்களைச் சேர்ந்தார்மேலோ, அவர்மேலோ அவன் வாளை ஓச்சுகின்றதேயில்லை. படையெடுப்பதற்கு முன்னரே அஞ்சிவந்தாட்பட்டனர் அவர் என்போம்; எனின், அவன் சீறிநிற்பதே யில்லையாதலின் உவகையுடம் நகையும் கொண்டே அவர்களை அன்புருவாக உருகச்செய்து நெகிழ்வித்துப் "பணியுமாம் என்றும் பெருமை" என்பதனை அறிவுறுத்துகின்றான் என்க. இவ்வாறு முதலில் பகைவரும் நடுவே நிற்க விளங்கிய அரசியல், முதிர்ந்த நிலையில் இருவினை யொப்பில் இன்பமே யூட்டும் நாளே போல், பகை என்பதின்றி இன்ப அன்பேயாகி விளங்கி இசைப் பொருத்த முறுகின்றது. இவ்வுயரிய கருத்தை ஓதியுணர்ந்த வாமன முனிவர், தமது மேருமந்தரபுராணத்தில், இதனைப் பொன்னே போலப் போற்றிப் பொதிந்து வைத்துக் கொள்கிறார்.

சூட்சி யாற்பகை சுருக்கி லல்லது
வாட்செய் போரிலன் வன்சொ லின்றிமண்

ஆட்சி யாலிசை கேட்ட அசுணமாத்
தாட்சி போல்வையந் தானி றைஞ்சுமே.

19. உலகிற் குயிரிவன், இவனுக்குயிர் உலகம்:— இவ்வரசனது அடி நிழலோ, தன்கீழ் வணங்கி நிற்கும் அரசர்களைப்பகைமுதலியவாய்ப் பலவகையாம் கேடுகள் என்ற வெப்பத்தினின்றும் காத்தருள்கிறது. மணிகள் நிறைந்து ஒளி வீசும் அழகிய திருமுடியின் நிழலொளியோ, மேலாம் முனிவருடைய திருவடியிலே மூழ்கி ஒன்றாய் மிளிர்கிறது. அருளாளரை அடைந்ததன் பயனாக, இவனும் அருளொழுக்கத்தில் நிலைநிற்கின்றபடியைக் குடைநீழலில் காணலாம். அரசநெறி பிறழின் மன்னவன் தன்னைத்தானே கொன்றுகொள வேண்டிக் கூரியதாகச் செய்து, தீட்டப்பெற்று ஒளிரும் வேல், பிறர்மேல்எறிவதற்கன்றி அரசக்குறியாகக் கையிலே நிற்றலின், அதற்கேற்ப ஒப்பனைப் பொருளாக மணிகள் நிறைய வனையப்பெற்று, அம்மணிகள் மின்ன, மிளிர்கிறது. இவ்வேலொடு, தன்னையும் அழியமாறிப் பிறர்க்கருளும் ஒரு தனிப் பேரரசனாய்த் தவ வழியிலே மன்னி நிற்கின்றான்; ஆதலின் இத்தகையானே மன்னனாவான். 'குடை எனப்படுவது பயாபதி குடையே' எனச் சிறப்பித்து ஓரடையும் இன்றியே, உலகினரால் போற்றி வழங்கப்பெற்ற குடையே இவனைச் சிறப்பிக்கின்றது. வேல் இவனால் சிறப்புப்பெற இவன் சிறப்புப்பெறுவது குடையாலே என்பது தோன்ற வேலை முன்னும் குடையைப் பின்னும் அமைத்தமை காண்க.

இக் குடையின் அருட்காவலாம் குளிர் நிழலில் உலகனைத்தும் தம் புறவெப்பமும் அகவெப்பமும், முன்னே கூறியிருக்கின்றபடி, நீங்கி விளங்கும்; ஆதலால், அழியா உயிர்போல அவனுக்கு அவ்வுலகம் உயிராகி நிலைநிற்கின்றது. நிலை நிற்றல் உயிர்க்கேயன்றோ இயல்பு. உலகிற்கு உயிர் என முன் பயாபதி அரசனைக் கூறின தோலாமொழித்தேவர் உலகம் நிலைபெறுதலை இவ்வாறுகூறி அவ் வுலகின் மேலே உயிர்ப்பண்பை ஏற்றி வைத்துள்ளார். "உலகிற் குயிர்" என்பதற்கு உலகிற்கு அம்மன்னவன் உடம்பாய் நின்றான் என்றும் பொருள் கொள்ளக் கூடுமன்றே. தன்னுயிர் போல மன்னுயிரைக் காத்தான் என்றபோது தன் னுயிரோடு கூடிய உடம்பிற்குத் தீங்கு நேரிடாமற் காத்தல்போல மன்னுயிர்களின் உயிருடலிற்கும் தீங்கு நேரிடாமற் காத்தான் என்பதே பொருளாகும். அழியா நிலைமைத்தாகிய உயிரை வேறு வகையாற் காத்தல் எங்ஙனம் கூடும்? "பாரதத்தில் 'அளவில் பேரொளிப் பகவனுருத்திரற் கச்சுத னான்மாவாம்' எனச் சிவனுக்கு விண்டு ஆன்மா என்றது அபேதம் என்னும் பொருள்பட உபசரித்துக் கூறியது. சரீரம் என்னும் பொருட்டு எனினும் அமையும்" எனவரும் சிவஞான சுவாமிகளின் சிவஞானபோதப் பேருரையினையும் காண்க. இவ்வாறு உயிர் என்பதற்கு உடம்பெனப் பொருள் கொள்ளக் கிடத்தலின் அன்றோ கம்பர் தயாதனை உடம்பெனக் கூறினர் என்க. அன்றியும், உலகம் நின்றது என முடிபு

கொள்ளாது, உலகம் குளிர, நிழல் நின்றது எனக் கொண்டு, உலகம் வாழக் குடைவடிவாம் அருளாட்சியும் நிலைபெற்றது எனக் கொள்ளினும், சிவஞான முனிவர் காட்டியபடி, "அபேதம்'' எனும் ஒற்றுமைப் பொருளை இது நன்கு விளக்கும். உலகும் அவனும் ஒன்ருய் நின்றபடி ஈது. மக்கட்கு என்றும் பகைமையாய் நிலைத்தலே இயல்பாகக் கொண்ட அவா, வெகுளி, இவறன்மை, மயக்கம், செருக்கு, பொருமை என ஒன்றி னென்று பெருகிப் பெருங்கூட்டமாய் எதிர்க்கும் அறுவகைப் பகையையும் வென்று மனந்தூயனுய் அருள்வழி நின்றவனுதலின் தன்னைத்தான் காத்தலும் வல்லவனுயினுன் என்றுல், இதனைப் புதுமை என்றே பெருமை யென்றே சிறுமை என்றே ஆக்கம் என்றே கொண்டு வியக்கவேண்டுமோ? இதனை நிலைபெற்றதோர் இயல்பாகவே கொண்டு விளங்கும் பழையவொரு மன்னவனன்றே இவன்.

20. அருளரசாட்சி:-நல்லவும் தீயவுமானவற்றிற்கு வைப்பிடமாய் இருத்தலினுல் வையகம் என உலகம் பெயர் பெற்றமையால், பகையும் இங்கே உளவாகலாம் என எண்ணுவர் சிலர். அவ்வாறு உலகின்கண் பொருந்தியதாய் வளரும் பகை, எண்ணிக்கிைக்கும் இவ் வரசாட்சியில் அகப்படுவதில்லை. பகை தேய்ந்து நட்பு ஆவதன்றிப் பகையாக வளர்வதில்லை. பகைத்து நின்றூர் பலைத்தபோதும் அவன் நெறி நிற்றலினுல் ஒருவரோடொருவர் கூடியெழ இடம் ஏற்படுவதில்லை. மனத்திலே கன

வுலகில் பொருந்துவதன்றி, வெளிப்பட்டு நன்வுல கில் அப்பகைபொருந்துவதில்லை. இவற்றை இல்லை யாக்கினன் எனுது எப்போதும் இருந்ததில்லை என "இன்மையால்" எனக்கூறும்படி இருக்கின்றது அவ்வாட்சி. விலங்கோ, மக்களோ, பகையாய் வரு தல் இல்லையாதலின், தரையிலுள்ள உயிர்களை இவன் காப்பது வியப்போ? ஓரறிவுயிரும் தீங்கு செய்யாத படி உலகை யாள்வது, அருளாளரது தவப்பே றவழியாம் அன்பு நெறியிலே நின்றார்க்கல்லது பிறர்க்கு இயல்வ தொன்றே? இது பற்றியே, இவ் வாறு இப் பொருள்களைத் தொடர்பு படுத்திக் கூறு கின்றார் தோலாமொழித் தேவர்.

21. அரச அன்னம் :—இயற்கையறிவு, இயல்பு முதலியவற்றால் மேம்பட்டோராய், உண்மையை விரித்துரைக்கும் தன்மையால், பிற நூல்களுக்கு இல் லாத சீர்மை நிறைந்த நூல்களைக் கற்று, அவற்றின் படி ஒழுகிப் பெருமை பெற்றவர்களே, இவனுடைய உள்ளத்தும் ஊடுருவி உடனுறைகின்றனர். உடனி லைக் கூட்டத்திற்கு அமைந்த உறுதிச் சுற்றத்தாராக இவர்களையேகொண்டு விளங்குகின்றான் இவ்வரசன். இவ்வறிஞரினும் சிறந்து நிற்கின்ற இவன், நீரிடை யாடும் அன்னங்களினிடையே அரசவன்னமே போலச் சிறந்து விளங்குகிறான். "கள்ளலைத்த கவுட் கருமேதி பாலுள்ளலைத் தொழுகக் குடைந் துண்ட லாற் புள்ளலைத்த புனல்" என்று முன்கூறிய விடத்தே நீரினின்றும் பாலைப் பிரித்து உண்ணும் அன்னமேபோல, இவனும் இவனைச் சூழ்ந்தாரும்

'எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்ற மெய்யுணர்வின் வழியே, அரசியலில் நிற்பாராதலின், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று பொருட்பாலுட்கூறிய அறிவு பெற்றமை கூறவேண்டாவே. இவர்களுடைய அரசியல் வாழ்க்கை, அன்னத்தின் நீர் விளையாட்டைப்போல, இன்பத்திற்குப் போக்கு வீடாயன்றே அமைகின்றது. இவ்வாறு இருக்குமானால், இவ்வுலகு, என்றுமில்லாததும் எங்குமில்லாததுமாய சிறப்புப்பெற்று இவனொருவனுக்கே உரிமையாதலைச் சொல்ல வேண்டுமோ? நீரிடையாழ்வார் ஆழ, ஆழாது உயரப் பறந்துசெல்லும் அன்னத்தைப்போல, மற்றைய அரசர் மயங்கி அரசியலில் சிக்கிச் சாவ, இவன் இனிதே அரசு நடாத்தியபடி ஈதாகும். ஈதே அவ்வரசாட்சியின் நுட்பம் என்க.

23. அது அவன் பகுதிகள் அமைந்த வண்ணம் :— அன்புலகிலே படை என்பதில்லையோ? படைகளும் பழைய வழக்கத்தின்படி அவ்வாட்சியில் அமைந்தே விளங்குகின்றன. கொதிக்கக் கொதிக்கக் கொல்லன் கூராக முனையோடும் செய்கின்றான்; புதியன புதியனவாக வருகின்றன இவ்வம்புகள். ஆனால் இவற்றைப் பிறர்மேல் ஏவுதற்கு இடம் இருக்கின்றதில்லை. நல்லவழியிலேயே எவரும் நிற்கின்றனர் அன்றோ? அப்படைகளுக்கஞ்சித் தனக்கினியவே நச்சிப்பேசி உற்றாரும் உழையரும் திரியவேண்

டும் என எண்ணக்கூடிய இயல்புள்ள மனமே இவ னிடத்திருப்பதில்லை. இவனுடைய உள்ளம் வேறு வழியில் அமைந்து விளங்குகின்றது. அப்பகழியி னைப் பிறர்க்கென்பதின்றித் தனக்கென்றே கொண் டவன். நெறிபிறழின் மாள்வதே நெறியெனக் கொண்டவனுதலின் அந்நிலைக் குதவவே பகழி யைத் தன் கையிலேந்துகின்றான். பகைவர், நண் பர், நொதுமலர் என்ற மூவகையினரில், பகைவரோ இல்லையாயினர்; நொதுமலர்க்கோ, தம் மனத் தெழுந்தவற்றை அரசனுக்கு அஞ்சாது கூறுத லொன்றே அவனுடைய அரசவையில் இயல்வ தாகிறது. ஆனபின் நட்பினராய் உடனின்று உழை யரானவரோ, தம் நெஞ்சகத்தே எழுந்தவற்றை மறையாது சொல்லிப் போகின்றனர். அரசனை யிடித்துக் கூறவேண்டினும் அவ்வாறே கூறுவதே யன்றி, அவற்றை மறைத்து, அரசன் விரும்பியபடி எல்லாம் அவன் காதுக்கினியவற்றையோ சொல் லப் போகின்றனர்? அவ்வாறு அவர்கள் தனக் கினியவே கூறவேண்டும் என்று அவன் எண்ணுத போது, நல்வழிநிற்பவர் நன்னெறிவிட்டுப் பிறழ்வ தேது? அவனுடைய அமைச்சரும், படைகளும், அவனுடைய அரசியலில் பொறுத்தமுற்று விளங் கிய நிலை அவ்வாருகும். 'அது' என்ற ஒரு சொல் லில் அனைத்தையும் உய்த்துணர்ந்து கொள்ளுமாறு விடுகின்றார் தோலாமொழித் தேவர்.

மனைவியர்

24. குலம் - கலை:—அத்தகைய ஓர் அரசனின் மனைவியர் எத்தகையர்? தாம் பிறந்த செல்வ மொளிரும் கொற்றக்குடியையும், புகுந்த குடியையும் பெருமைப்படுத்த என்றே உலகில் தோன்றியவர்கள். வீங்கிப் பெருத்திருக்கின்றனவேனும் மேலும் பெருகும் எனத்தோன்றி, இளமையோடு விளங்கும் முலைகளையும், நுண்ணிய இடையினையும் கண்டோர், "இவ்விடை ஒடிந்தேபோயது" என்று தேற்றத்தால் கூறி இரங்கும்படியாக முலையாலழகிய அம்மனைவியர், முலை முற்றப் பெறாராயினும் கல்வியறிவு முற்றப்பெற்றவரேயாம்.

25. ஒசிந்த கொடி:—பஞ்சுபடினும் வருந்தும் அத்துணைமெல்லிய அடியினர்; பரந்த அல்குலார்; செந்நிறத் தேமல்படர்ந்த தம் இளமுலையினால் இடையை ஒடித்து இல்லையாக்கினர். இலை தழைத்த அழகிய வஞ்சிக்கொடிகள், தம்முடைய ஒளிவடிவான பூங்கொத்துச் சுமையைத் தாளாமே வளைதல்போல, இப்பெண்களும், தம்முறுப்பினையும் தாங்க மாட்டாராய், ஒடிந்து வீழ்வார்போல ஒசிந்து ஒசிந்து நடக்கும் அத்துணை மென்மையுடையார்.

26. காமம் பூத்த கற்பு மரத்தின் கண்ணொளி:— காமமே பூக்களாய் வடிவுகொள்ள, அவை மலர்ந்து நின்றவைபோன்றவர் அப்பெண்கள். களவியல் வழியே தம் காதலனோடு இன்பந் துய்த்தவர் என்றபடி. கற்பென்பது சூடாமணியாகி நிலவு வீசுதலேபோல இன்னார்விளங்குகின்றவர். களவு வெளிப்பட்டபின்

கற்பொழுக்கமாய் முடிந்தபடியைச் சுட்டுகின்றது காது. ஒளிநிறைந்தபூங்கொத்துக்கள், இவர்களுடைய கூந்தலிற் பட்டதும், அம்மென்மையாலும் குளிர்த்தியாலும் உள்மகிழ்ந்து மலர்கின்றன; இவை இவ்வாறு விரிதலின் அவர்களுடைய கூந்தல்கள் அவிழ்ந்து தோளின்மீதும் பிடர்மீதும் தாழ்ந்து தரைவரையும் வீழ்கின்றன. அக்கூந்தலுக்கிடையே ஒளிரும் பூணிறைந்த தோள்களோ, புகைக்குள்ளே சுடரொளி துளும்புவதுபோன்று விளங்குகின்றன. இத்தகைய அழகு நிலையிலே, திடீர் எனக் கூந்தல் அவிழ்தலினாலே மயங்கி வெருண்டு இமைத்து, மறவர் கைவாள் என அங்கும் இங்கும் பிறழ்ந்து, எதிரே வந்த கணவனைக் காமத்திலாழ்த்தலின் அவனுள்ளத்தைப் புண்படுத்தும் வாளாகி, அவனைக் கூடி மகிழ எதிரே வரவேற்றலின், உள்ளொளி கொடுக்கும் ஒளியுமாகிச் செருக்கி நிற்கின்றன இவர் கண்கள்.

27. இருவரும் ஒருவராதல்:—மற்றைய நூல்களிலோ, அரசர்களுக்கு அவரவர்க்கு, எண்ணிக்கையின் மிக்க மனைவியர் ஆயிரர். இப்பயாபதியினுடைய மனைவியராய இவர்களோ இருவரேஆய் விளங்குகின்றனர். மிகப் பெரிய வானுலகின் நின்றும் இறங்கியவர் என்றும், செந்தாமரையிலிருக்கும் கடவுட் பெருமாட்டியை ஒப்பவர் என்றும், கூறினும்கூட அவர்களுக்கு இழிவேயாம்; ஒப்புப் பொருள்களினும் உயர்ந்து விளங்குதலினாலே, உரை கடந்து நிற்கின்றனர். "ஆயினார்" என ஆக்கச் சொற் புணர்த்தலின் இயற்கையில், ஒருவர் என

நின்றவர், இவனுக்கு இன்பமூட்ட இரு வடிவோடும் இருவராக மாறி நிற்கின்றார் என்பதாயிற்று. ஒருமை நாட்டத்தோடு ஆக்கச்சொற் புணர்த்த புலவர், அவனுக்கு ஆயிரவரை மனைவியாக்குவரோ? ஸ்ரீபுராணமும் "இஹ ஸுரம்ய விஷய பௌதநபுரத்துப் பாஹுபலி ஸந்தாநத்து வந்த ராஜா ப்ரஜாபதி மஹாராஜன்; தேவிமார் ஜயவதியும் ம்ருகாவதி என இருவர்" எனக் கூறுகின்றதேயன்றி ஆயிரவர் எனக் கூறாமை காண்க (இஹ = இப்பால்; ஸுரம்ய விஷயம் = சுரமை நாடு; பௌதநபுரம் = போதன நகரம்; ப்ரஜாபதி = பயாபதி; ம்ருகாவதி = மிகாபதி; வதி = சசி.)

28. சொல்லேனும். மறைமொழி:—தித்திக்கும் செங்கரும்பினுள்ளே அதன் சாறனைத்தும் அமிழ்தமாம்படி, அமிழ்தத்தை ஊட்டி, அதன் உள்ளுள்ள இடைவெளியெல்லாம் தேன் பொசிந்து நிற்கத் தேனையும் கலந்து, பின்னர், இங்ஙனம் மூன்றாக நின்று ஒன்றாகி இயைந்தவற்றைஒரு சேரவொன்றாகப் பிழிந்ததும், அவற்றின் உயர்நிலையாய் ஒளிரும் சாறேபோல, இனியது, அம்மகளிர் வாய்ச்சொல். அவ்வினிய சொல், கேட்குந் தோறும், தன் காதலனுடைய கேள்வியிற் பழகிய காதிற்குந் தீங்கரும்பே போல மிகமிக இனிக்கின்றது. கேட்ட அத்தலைவன், தேனுண்டானைப்போல, நின்ற நிலை மறந்து, அதன்வழிசென்று இன்பக் களிப்பிலே மகிழ்கின்றான். அவனுள்ளத்தே இச்சொல் அமிழ்தம்போலச் சாவா நிலைமை பெற்று, என்றென்றும்,

தன்னையே அவன் எண்ணி இன்பநிலை யடையுமாறு அவனுயிரையும் வளர்க்கின்றது. அவ்வகையில் அவன் காதுக்கும், உள்ளத்துக்கும் உயிருக்கும் இனிப்பதாகின்றது, இச்சொல்.

எந்த நிலையில் இத்தகையவோர் இன்பத்தை ஊட்டுகின்றன அத்தகைய சொற்கள்? எதிர்பாராத இடத்தேயே ஆம். மறக்குணங்களால் குன்றென ஓங்கிப்பரப்பால் பெருங்கடல் என்ன நின்ற படை நடுவே, "நான் ஆண்மகன்" என்று கருதத் தூண்டும் தன்னைப் பற்றிய எண்ணங்கள் சிறிதுமின்றி, அரசர்க்குரிய பண்புகளனைத்தும் ஒரு சேர ஒருருப் பெற்றது போன்று நின்று, அவற்றின் தொழிற்பாட்டையே எண்ணி நிற்கின்றான் அப்பயாபதி. அவ்வாறு மறநிலையில் நின்ற நிலையிலும், அவனை உயரத் தூக்கிச் சென்று இன்ப நிலையில் நிறுத்திக் காதலூட்டுகின்றன அவ்வினிய சொற்கள். படையோடும் விளங்குகின்றவனைப் பரிவு வடிவாம் அன்புலகிற் புகச்செய்கின்ற மறைமொழிகளே அவ்வினிய சொற்கள். அவனுடைய அன்பாட்சியின் நுட்பம் இப்போது வெளியாகிறது. இது பற்றியன்றோ இவர்களோடு இவன் கூடி வாழ்வதையும் நகரப் படலத்திலேயே கூறவேண்டியதாயிற்று. வென்றோர் தோற்றோராவதும் தோற்றோர் வென்றோராவதுமாம் ஊடலுலக அன்பு நெறிவழியே, பகையைக் கடந்தடக்கும் முறையை அவனுக்குக் கற்பித்தவை, அவ்வினிய சொற்களேயாம். ஓங்கிப் பரந்த படை நடுவே நின்ற அரசன், இவர்களுடைய இனிய

சொற்களை எண்ணி எண்ணி, இன்ப அன்பு உருவனாய் மறநெறி நீங்கி அறநெறி புகுகின்றான். அரண்மனை நுழைந்ததும் அச் சொற்கள் காதல் நோயை மூட்டுதலின் அவர்கள் எதிரே வருகின்றான். அவனைக் கண்டு வீங்கிப் பருத்து ஓங்கிப் பெருத்து அவன் காதனோய் தீர அவனைத் தழுவித் தம்முட்படுத்தி அவனுக்கு அடங்கிக் குவிந்து விளங்கும் கொங்கையாற் சிறந்த மிகாபதி என்பவள் இவனுடைய முதன் மனைவி. பிறரால் தடுத்தற்கரிதாய் ஆக்கலும் அழித்தலும் வல்ல கற்பின் வலிமிக்கவளாய்க் கற்பினாலேயே வானுலகை வாழ்வித்து வானுலக செல்வத்திற் குறிகுறியாகி அச்செல்வமே உருவெடுத்தாற்போல விளங்கும் சசியே போல்கின்றாள், சசி என்ற இளைய மனைவி. இவ்வாறு இவ்வரச செல்வியாய், இவனைத் தன் கற்பால் வாழ்வித்து வருகின்றாள், இவள்.

29. மங்கையர் திலதம்:—"மகளிரின் மாநிறக் கவினை கொழுந்து விட்டது ஈது" என்றும், "தனையடைந்தார் துயரத்தை அடியோடு நீக்குவது ஈது" எனவும் பொருள்பட "மாங்கொழுந்து" என்றும் "அசோகம்" என்றும் சிறப்பித்துச் சொல்லப் படுவதற்கு இணங்கவே, தளிர்விட்ட நிலையிலேயே பூத்தாற்போலப் பொலியும் அம்மாவும் அசோகமும் இளவேனிற் காலத்திலேயே, அப் பூந்தண் காவினிடையே பொலிவுபெற்று விளங்கி, அக்காலத்தின் சிறந்த அறிகுறிகளாகி நின்று, ஆங்கே எழுந்துள்ள மற்ற மரங்களையும் தம் சார்பால் அழகு பெறும்

படி அலர்விப்பனவாம். ('அலரும்-விவ்விகுதி தொக்கது; 'குடிபொன்றி' என்று குறளிற்கூறியது போலவும்,"மருவிடும்'' என்று சித்தியாரில் கூறியதுபோலவும்.) புனைதலாற் பொலிந்த குழையை யணிந்த மற்றைய மகளிரது பொற்பணிகளோ, அவர்களுறுப்பினும் வேறாயவை எனத் தோன்றுகின்றன. இவ்விரு பெண்ணரசிகளோ, பொன்மலரே பூத்த மணிக்கொடியே போல விளங்குதலினால், அவ்வேற்றுமையின்றி, தம் உறுப்பெல்லாம் அணியெனப் பொலிய, அணிகளும், உறுப்புக்களோடே ஒருங்கு இயைந்து தோன்ற, அழகேயாய் விளங்குகின்றனர். தளிர்த்த நிலையில் பூத்ததுபோல உடலழகே அணியாய் நின்றபடி ஈது. பொன் மலரோடு மணிக்கொடியும் நறு நாற்றமுடையன ஆயினாற்போல, இவ் வுயர்குடியிற் பிறந்த கற்பரசியரது கூந்தற் கற்றைகள், இனிய நறுமணமுடையவாய் விளங்குகின்றன. இளவேனிலைக் காட்டுவனவாய், மாவும் அசோகமும், இனிது தளிர்த்தவுடன், மற்றைய மரங்கள் மனமகிழ்ந்து மலர்வதுபோலப் பிறபெண்கள், இவ்விருவரையும் ஒற்றித்தினைத்துப் பாராட்டித் தம் நெற்றியினிடையே அழகு பெறவைத்த கலவைப் பொட்டென இவர்களைச் சிறப்பித்துத் தம்மைத்தாம் புனைந்து கொண்டதுபோலவே செருக்கி மகிழ்கின்றனர்; அதனால் தாமும் அழகுபெற்று விளங்குகின்றனர்.

30. இருவரும் ஒருயிர்:—மக்களிற் பெரிய இவ்வரசனுடைய மறமோங்கும் நெஞ்சும், அறமோங்க உருகி அன்புவடிவாதற்குக் கருவியான பெண்மை

என்னும் கட்புலனுவதோர் அமைதித் தன்மையின் தனிப்பெருஞ் சிறப்பு இவர்களிடமே உண்டு. அரசனை யிவர்களும், இவர்களை அரசனும், பேணி, நாள்தோறும் மருவி வாழ்ந்து வந்தாலும் இவர்கள் பேசும் பேச்சுக்கள் பழையவாய் ஒழியாது, பேசுந் தோறும் புதியன புதியனவாய் அவ்வரசனுக்கு இன் பூட்டி அறிவை விளக்குகின்றன. "எழுத்து வடிவு பெற்றுத் தோன்றும் இளையவார்த்தை. மழலை எக் காலத்தும் கூறுப" என்று, "மெய்பெறு எழுத் துயிர்க்கும் மழலை" என்ற திருத்தக்க தேவரது சொற்றொடர்க்கு, நச்சினார்க்கினியர், பொருள் கூறுதல் காண்க. மழலை என்பது அச்சொல்லின் பேச்சழகையும், இன்னிசையையும், ஒலிக்கும் முறையையும் காட்டி நிற்கும். தன்கருத்தைச் செவ்வனே கிளத்தலின் மழலை என்றொழியாது கிளவி என்றும் விதந்து கூறுகின்றார். சொல்லழகும், பொருள்படும் திறனும், இவ்வாறாகப் பொருளழகும் கூற நின்றமையின் அவ்வழகினைச் சுட்ட "அம்" என்றஅடை கொடுத்து, இம்முத்திறச் செவ்வியையும் "மழலையங் கிளவி" எனச்சிறப்பித்துக் கூறுகின்றார் தேவர். இச் சிறப்பும் இவர்களிடந்தான் உண்டு. இவ்வழகாலும், இப்பேச்சாலும், இவர்கள், அவனுக்கு உயிர்க்குயிராய் இன்பமாகின்றனர். முன்னே, இப்பெண்மணிகளுக்கு ஒப்பாகாது விலக்கப்பட்ட திருமகளும், அறிவை வளர்க்கும் கல்விச் செல்வியும், இருவராயிருந்தும் இவ்வரசனுடைய உள்ளத்தே ஒருங்கியைந்து நிற்றல்போல, இவ்விரு மனைவியரும் ஒருவரே

யாய், அவனுக்கு இன்பவடிவாகி விளங்குகின்றனர். 'ஒருவனுக் கொருத்தி' என்பதே தமுறை என்பது உள்ளத்தை வாட்டுதலின், தோலாமொழித்தேவர் இவ்வாறு கூறுவாராயினர்.

31. ஒரு வியப்பு:—மன்னவனுடைய மூச்சு, வல மூக்கினும் இடமூக்கினும் போய்வந்து புழங்குவது போல, இவ்விருமகளிரும் அவனுடைய ஆவியே யாகி விளங்குகின்றனர். இதனால் மன்னவன், மன்னவனாய் நிலைபெறுதல் இவர்களாலே எனலாயிற்று. மகளிர்தம் இன்பவடிவாம் உயிர் இவனேயாகின் றான். எல்லார்க்கும் உயிராக நிற்கின்ற இறைமக னன்றோ இவன். முன்னே, இம்மூவர்களைப் படைத்த படைப்புக் கடவுள் அழகு மொய்க்கும் மலர்க் கணைகளாலேயே, இவர்களை, ஒருவர்மேல் ஒருவர் உள்ளம் ஓடச் சேர்த்துவைத்த வியப்பு என்னே என்னே?

32. மகளிர் மனச்சிறை:—மற்றொரு வியப்பிருந்த படி ஈது. தம்மிடத்தேயே, அழகு விளங்கவும், நறுமணம் நாறவும், தம்முறுப்பாகவே பூத்து நின்று தேன் பெருகும் பூங்கொத்தைப் பொறுக்க மாட்டாது, மென்மையால், ஒசியும் கற்பகக் கொழுந்தும், அக்கற்பகத்தைச் சுற்றி நின்றொளிரும் காம வல்லி என்னும் அழகே வடிவான கொடியும் போன்று, தம் முடலுறுப்புக்களையும் தாங்குவதற்கு ஆற்றாமல் ஒசியும் அத்துணைய மெல்லியலார் இவ் விருவர். மன்னவனோ, 'மற்போர் புரிய எவரேனும் இருப்பாராயின் வருக' எனத் தினவுகொண்டு

அகன்ற மார்பினையுடைய அத்துணை வலியான். அத்தகைய மெலியார், இத்தகைய வலியானைத் தம் மனத்திடையே உட்கொண்டு கட்டி வைத்துள்ளார்கள். படைகொண்டு அரசனாதலின்றிச் சொல்வன்மையால், தன் கொள்கையை உலகிற்கு எடுத்துக்கூறி, அவர்களும் அன்னதற்குடன்பட்டு ஒழுகி வர, அறிவாலே ஆண்டு வருகின்ற இவ்வரசன், தன் கருத்தைச் சொற்களால் உலகினர் மனங்கொள்ள எடுத்துக்கூறி, உலகத்தைக் காத்து வருகின்றான். அவனுடைய காக்குந்தொழில்புறப்பொருட்டொழிலாய்ப் புறத்தே நடப்ப, அதிலே, பெண்வழிச் சேறல் எனும் பழி அவனிடம் சேராதபடி விட்டு, தம் மனத்தகத்தே தாம் சிறைவைத்த அவனுடைய அகவொழுக்கத்தை எல்லாம், தம் வழியே நடத்திக் கொள்கின்றனர் இப்பெண்மணிகள்.

33. சக்கரன்:—பெண்களோ இருவர்; அவர்களிடையே நிலைபெற்ற அரசனோ ஒருவன்; அப்பெண்கள் அவ்வப்போது அங்கங்கே விரும்பியவை யனைத்தையும் இவனும் விரும்புகின்றான். அவ்வாறு இவர்கள் மூவரும் ஒருயிர் என நிற்கின்றனர். இவ் அன்பொழுக்கத்தால், மற்றைய உயிர்களிடையும் அருள் பெருகி நிற்கின்றான். தவ ஒழுக்கம் விளங்குவதை தேவரும் சுட்டுகின்றார். கையிலே திருவாழிப் படைதாங்கிய சக்கரனும் திருமால், உலகிடை நிற்கின்றார்; சிவந்து கயல்போற் பிறழ்ந்து அவனை அடிமையாக்கிக் கொள்ளும் மதர்த்த ஒளிபொருந்திய கண்களாலழகிய கட்டுவட்டாயராம் திருமகளும் பூம

களும் தனித்தனி தழுவ அவ்வவர்களிடை அவரவர் களுக்கேற்றபடி வடிவுகொண்டு விளங்கி உலகையும் காத்தல்போல் இவனும் இவர்களிடை விளங்கு கிறான்.

84. அரசவாகை:—உலகைச் சுற்றிய கடலை எல்லை யாகக்கொண்ட இந்நிலவரைப்பரப்பனைத்தையும் ஒன்றும் விடாது ஒவ்வோர் மூலை முடுக்கினும் தன் னருள் பரவ, எல்லோர்க்கும் ஓரே படித்தாக நிழலைச் செய்யும் ஆற்றலிற் சிறந்த ஒற்றை வெண்குடை நீழ லில், உலகமானது கவலையற்றுக் கண்வளரும்படியாக அவற்றைக் காத்து நின்று, உலகினர்கள் இன்ப மாய்த் துன்பமின்றி இருக்கும்போது, அறம் பார் த்து, அவ்வகையில் வெற்றிபெற்ற மன்னன், அவ் வெற்றியினும் நீண்ட கண்ணால் தன்னைக் கட்டிய பெண்களின் கொங்கைக்குவடேறி நின்று, உயர நின்று காக்கும் காவலாளரைப்போல விளங்கி, அங் கிருந்தும் இன்பத்தே மூழ்கிக் கிடக்கின்றான். இவ் வாறு மூழ்கிக்கிடத்தலால் அவனுடைய அரசச்செல் வம், அவனுக்கு, இவ்வாறு அறம்பொருளின்பத் திரட்சியாய் வீட்டுலக நெறியுமாகி விளங்குகிறது. (மூழ்கி = மழை பெய்து குளம் நிரம்பியது என்பது போலக் காரணகாரியப் பொருளில் வந்தது.)

முடிவு:—தோலாமொழித்தேவர் புனைந்துரைத்த நகரம், ஒருவகையால் நோக்குமிடத்து, மற்றைய நக ரங்களிலும் தலைசிறந்து விளங்குகிறது; அகழும் மதி லும் மாடமும் புறக்காவும் என்று நகர்க்கழகெனக் கூறப்படும் இவற்றை மிகச் சுருக்கமாகப் புனைந்

துரைக்கின்றார். தேவர் இவற்றைவிட மக்களே நகர மாக இவர் கண்ணெதிரே விளங்குகின்றனர். ஆடலும் பாடலுமாய்ப் பெண்கள் பொன்னிடையும் மணி யிடையும் அழகு பெற்று, மலரோடும் வண்டோடும் அன்னத்தோடும் இயைபுகொண்டு, இயற்கை யன்னை யின் செல்வப் புதல்வியராக விளங்குதலைச் சுட்டு கின்றார் நம் ஆசிரியர்; மகளிர்கள் ஆடவரோடு கூடி யும் ஊடியும் நிற்பதனையும், அந்நிலையில் அறம் வளர வளர இன்பம் வளரா நிற்பதனையும், விளக்குகின்றார்; இந்நகரம் நகரமாவது உயிர்க்குயிரான அரசனு லேயே என்பதை உட்கொண்டு, அவ்வரசனுடைய அன்பாட்சியை விரித்துரைக்கின்றார்; அவனுழை நின்று அவ்வன்பைப்பெருக்கி அவனை அருள்வழி யில் நிலைநிறுத்திய அவன் இரு மனைவியரையும் ஒரு வர் எனவே இயைத்துப் பாடி முடிக்கின்றார். பரத் தையர் முதலியோரைக் கூறுமையும், அரசியலை நாட் டின் ஒருறுப்பாம் நகரத்திலேயே அடக்கிக் கூறியமை யும் நாம் குறித்து வைக்கத்தக்கனவேயாம். அழகும் முத்தமிழும், அறமும், பொருளும், இன்பமும், அன்பும், அருளும், அறிவும் வடிவுகொண்டதே நகரமாம் என்பது தேவர் துணிபு.

குமாரகாலச் சருக்கம்

பிள்ளைப் பேறு

1. வெள்வளையும் கடனீரும்:—மிகாபதி, சசி என்ற இவ்வரசியருடைய திருவயிற்றிலே, இருவர் பிள்ளைகள் பிறக்கின்றார்கள். முற்பிறப்பில், கடவுளர் உலகத்தை ஓர் ஊழிக்காலம் வரை யாண்டு, பின், இவ்வுலகில் இவ்வரசியரின் திருவயிற்றறைகளையே அக்கடவுளுலகினும் சிறந்தன என நச்சிப் போந்து, தங்களுடைய பழைய பொலிவும் வீறும் விளங்கும்படி தோன்றுகின்றனர். ஒரே காலத்தே இவ்விருவரும் தோன்றிய தோற்றத்தின் பொலிவு எங்ஙனமிருக்கின்றது? உலகை வளைந்து கிடக்கும் பெரிய நீர் நிறைந்த அலைகடலிலே, செம்மாந்து நின்று மேலும்மேலும் வளர்வதே போன்று தோன்றும் வலம்புரி ஒன்று அதோ விளங்குகிறது அதனைச் சுற்றி, அக்கடலிலே உயர்ந்து ஓங்கி வளர்கின்ற நீரோ, கருமைநிறத் தொளியோடும் ஒளிர்கின்றது. ஒன்றிற்கொன்று அழகு தந்து ஒன்றினென்றால் ஒளிரும் இவையிரண்டும் ஒருங்கே உடனியைந்து தோன்றினாற்போன்றே, வெண்மைநிறத் திருமேனியும் கருமைநிறத் திருமேனியும் கொண்டு விளங்கு மிவ்விருவரும் பண்டைக் கடவுட்டன்மையோடு தோன்றுகின்றனர்.

2. மடிமீது மதி தவழ்தல்:— அனைவர்க்கும் ஆகுத் தக்கவெனும் நற்குணங்களால், பெண்களிலே சிறந்தவளும், பெண்மைத் தன்மையே நிலவுந்

தகுதியுடையாளுமாய்ச் சிறப்புற்று விளங்குவாள் பெருங்கோப் பெண்டாம் மிகாபதி. காதலென்னும் இன்பப் போர்க்களத்திலே தனது மணாளனோடு பேரமர்புரிந்து, அக்களத்தைத் தனதேயாகக் கொண்டு வெற்றிபெறுவன, அன்னவளுடைய ஒப்புயர்வற்ற கண்களாம். அக்கண்கள், தம்மையும் மறந்து நிற்கும் மகிழ்ச்சி, மேன்மேலும் வளர, வளரும் உவகையானது, எல்லைகடந்து கடலெனப் பொங்க, அதிலே மூழ்கி நிற்கின்றன இதுபோது. அருமைக் கணவனை நேரிற்கண்டு இன்பவுலகில் பொருந்துநின்ற கண்கள், அக்கணவனை, குழவியின் திருமுகத்திலும் கண்ணொளியிலும் வாய்நெளிவிலும் இன்குரலிலும் கண்டுகளித்து, முனைப்பு அடங்கிப் பேரின்பநிலை பெறுகின்றன. இதுவரையுந் திங்களை வானத்தே எழக்கண்டாள், மிகாபதி; அதனொளி நிலவுலகில் பரவக்கண்டனள். இதுபோதோ, கூவென்றலறி வீழ்ந்து தன் மடிமீதமர்ந்ததும் குளிர்ந்து நோக்கி மகிழும் குழவியை எதிர்ப்பட்டுக் குழவி எனக் கண்டாள் இல்லை; குளிர்ந்த நிலவினைப் பொழிகின்ற வெண்ணிலாவின் சுடர்ப்பிழம்பு ஒன்றே காண்கின்றாள். அஃதோ வானிடையன்றி மண்ணிடைத் தோன்றி, உலகனைத்தும் தண்ணிலாப் பொழிந்து விளங்கி, வானகத்திலும் புகழ்பரப்பி, நிலவு வீசி வீறெய்துகின்றது. பழைய புகழுடம்போடும் கடவுட்டன்மையோடும் தோன்றிய அந்தக்குழவி, அவள் கண்ணிற்கு அவ்வாறு பின்னே வரப்போகும் அத்தகைய புகழொளியோடு விளங்குகின்றது. இன்ன

வாறு பிறரினும் சிறந்து வெற்றிப் புகழ் கொண்டமைக்கு ஏற்ப, விஜயன் என்னும் பேரும் பெறுகிறது. வெளுத்த நம்பியாம் மூத்த நம்பியின் பிறப்பு ஈது.

3. நீலச் சுடர்த் தோற்றம்:—இளங்கோப் பெண்டாம் சசியம்மையோ, அழகே கடவுட்டன்மை பெற்று விளங்குவதுபோலும் சிறப்புடையவள். "என்றுநான் என்றன் இளங்குழவியைக் காண்பேன்" என நாள் எண்ணிக்கொண்டிருந்த அம்மையாருக்கு, முந்நூறு நாள்களும் நிரம்பின. மிகு புகழ்பெற்ற தனித்தலைமைத் தன்மை ஒருவடிவு கொள விரும்பி, எவற்றினுமிக்கதாய் ஒளிரும் நீலச் சுடர்ப்பிழம்பு வடிவத்தை மிகவிரும்பி மேற்கொண்டு, எதிரேவந்து தோன்றிற்றுப்போல, நல்லதொருநாளிலே தோன்றுகின்றான் இளையநம்பி. அவள் மகிழ்வதைச் சொல்லவேண்டுமோ? நீரொடு வளைபோன்றார் தோன்றலும், நீரினில் கூத்தாடி ஒளிபெறும் வளைகள் நிரைநிரையாகத் தாமே களித்துப் பொங்கி விம்மியபோன்று, அரசிளங்குழவிகளின் பிறப்பைக் கேட்டுத் தம்மைமறந்து ஊதுவார்வாயிலே ஒலித்து நிற்கின்றன. இக்களிக்கூத்து இவ்வுலகில் மட்டுமோ? மேலுலகில் வாழும் இமையவர்களும், அரிதினும் அரிய கடவுண்மாமழை பொழிகின்றார்கள்.

4. பொலிவு மங்கலம்:—தெளிவும் இசையும்:— எங்கெங்கு நோக்கினும் தெளிவெனு மொன்றே கூத்தாடுகிறது. மக்களிடை கலக்கமும் இல்லை; வான் மீன்களின் மயக்கமும் இல்லை; முகில்களின் குழப்பமும் இல்லை. நீரும் நிலனும் காற்றும் கனலும்

தெளிந்து விளங்குகின்றன. உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ போர்முழக்கமில்லை. சிறையாளர் விடுதலை பெறுகின்றனர். இயற்கையே ஒரு வடிவுகொண்டு அமைதிபெற்றதுபோலத் திகழ்கின்றது. எங்கும் மேலோரின் உள்ளம்போலத் தெளிவே விளங்குகின்றது. தெளிவிலன்றோ இன்பம் விளைவது. இமையோரது பொன்னகரத்திலும், இன்பம் இசையாக இயைந்து வெளிப்பட்டுப் பெரியதோர் திருவிழா வடிவுகொண்டு விளங்குகிறது. இவ்வுலகி னியைபு இருந்தபடி அது; அவ்வுலகியைபு இருந்தபடி இது. தோலா மொழித்தேவர் தெளிவென்றார் ஒன்றை; இசையென்றார் மற்றையதை. இவ்வுலகிலே மிக மிகக் கொடியதாய் மக்களை வருத்திப் பிறர் கடை கொண்டு சென்று கையேற்க வைத்து மேன்மேலும் முறுகிவளர்ந்தெரியும் வறுமைத்தீயும் அவாத்தீயும், வேண்டிய வேண்டியாங்கீகின்ற இத் திருநாளில், இன்ப அன்பு மாரியாம் வள்ளன்மையினாலே அவிந்தொழிகின்றன. அவாவற்ற நிலையன்றோ தெளிவு நிலையாவது. அவ்வமைதி மனத்திலும் வாயிலும் உடலிலு முயிரிலும் ஒருங்கே இயைந்து இசையாக இன்பக் கூத்தாடுமானால், வாடி வதங்கும் தீவினை, பசையே யற்றுத் தீய்ந்து காய்ந்து இன்பச் சுழற்காற்றில் பறந்தேயன்றோ போய்விடுகின்றது.

எரிவளர்த்தல்

5. காதற்பூக்களை:—இவர்க்கெனவே செய்தமைத்ததுபோல இவர்களுடன் பொருத்தமுறுதலால்

மாட்சிமைப்பட்ட திருநகரத்திலே, நாளொருமேனி யும் பொழுதொருவண்ணமுமாகப் பற்பல துறை யிலும் தலைசிறந்து வளர்ந்து, இம்மக்கள் இதுபோது காளைகளாக விளங்குகின்றார்கள். இவர்கள் வளர்ச்சி யினைத் தாமே கூறாது, அந்நகரத்துப் பெண்களின் வாயில் வைத்துப் புனைந்துரைக்கின்றார் தோலா மொழித்தேவர். ஈது கூத்து நூற்புலவர்களின் சிறப் பியல்பு என்க. மையணிந்து நீண்ட தம் கண்களால் மக்களின் மனத்தே மயக்கத்தை யூட்டிக் குழம்பச் செய்யும் பெண்கள், தாம் பிறரைக் கலக்கும் நிலை யொழியத் தாமேஇவ்விளங்காளைகளைக்கண்டு கலங்கு கின்றனர். வலிய கணையாலும் கவர் தற்கரிய மனத்தை யும்கவரும் சிறப்புப் பெற்றிருந்தும்,மிகமெல்லியவை யாகவே உலவுகின்ற காமனார் கணைகளாம் காதற் பூக் கள், அவ்வாறு பண்பட்ட அப்பெண்கள் மனத்தே, இது போது அரும்புவிடத் தொடங்குகின்றன.

6. பெரிய நம்பி—வடிவு:— அப்பெண்களுக்குத் தோன்றிய காட்சி இவையே யாம். பெரிய நம்பியின் திருமேனியின் பொலிவானது அவர்களுடைய மனத்தைக் கவர்கின்றது. கண்டோரால் விரும்பப் படும் தன்மை நோக்கமுடைய திருமேனி, வலம்புரி போன்று விளங்கும் திருமேனி, திருமணங் கமழும் திருமேனி; இஃதே அவர்கள் கண்ட திருமேனி. கண்களைக் காணுகின்றார்கள்; தம் கையிற் பிடித்த செந்தாமரையைக் காண்கின்றார்கள்; செந்தாமரை யின் உள்ளிடத்தே மிக மெல்லியவாய்ச் சிறுகச் சிவந்து தண்ணெனப் பொலியும் அல்லியையும்வெள்

றன இக்கண்கள் என உணர்ந்து, தம் கையிற் பிடித்த தாமரையை நோக்க விரும்பாது அவன் கண்களி லேயே பதிந்துவிடுகின்றார்கள். அவனுடைய தலைக் குஞ்சி கண்டதும் இதற்கிவன் எவ்வாறு புகையூட்டு வான் என எண்ணமிட்டு ஏங்கிக் காண்கிறார்கள். "புகையும் உள் நுழையுமேல் மயங்கித்திகைத்துப் போக்குவாயறியாது உள்ளே சிக்கி நிற்குமன்றோ; இருள் என்பதொன்றே பூங்கொத்துப் போலத் திரண்டதுபோலும்; அத்திரட்சியே இக்குஞ்சி" என் கின்றனர். காதைக் கண்டு அங்கு ஆடுகின்ற குழை யோடு தம்மனம் ஊசலாடா நிற்கின்றனர். பொலிவு பொருந்திய பொன்னாலாகிய அக்குழைகளிரண்டும் அவன் அசையுந்தோறும் புரண்டு ஒளிரும் காதுக ளில் தம்மனத்தைப் புரளவிடுகின்றனர்.

7. நடை:—தலையிலே அவனணிந்த மாலையைக் கண்டு மிகப் பொறாமை கொண்டு, "அக்கண்ணி வாடுதலே இல்லையன்றோ, அவனொடு கூடினார் வாடுவதேது." என மனமயங்குகின்றனர். தாம் தழுவவிரும்பும் மார்பு, தம் எண்ணத்தைப்போல் அளவின்றிமலர்ந்து தோன்றக்கண்டு "அங்கு நாம் துயிலேமோ" என மால்கொள்கின்றனர். மிகப்பெரிதாய் முழந்தாள் வரை நீண்டுநிற்குங் கையைக் கண்டு அக்கையால் நம்மை அணையானோ இவ்வரசப் பேரடையாளம் உடையான் என இவர் எண்ணுதலும், அவ் வன் பென்னும் ஒளியால் அவன் பொலிவு பெற்றுச் சுட ரொளியாய் விளங்கக் காண்கின்றனர். சுடரொளி வழியே மேல் நோக்கித் தாம் மிக விரும்பத்திரண்டு

விளங்குகின்ற தோள்கள் கொடிமுடியோடு உயர்ந்த குன்றேபோலத் தோன்றக்கண்டு அவற்றிற் கவாவி நிற்கின்றனர். இதற்குள் அவன் நடந்து அப்புறத்தே செல்லுதலின், அவன் நடையழகிலும் ஈடுபட்டு, 'என்ன பீடுடைய நடை!' எனப் புகழ்கின்றனர். இத் தகைய அழகியான் பெரிய நம்பி.

8. இளைய நம்பி—வடிவு:—இங்கு மேலே கூறிய மூத்த நம்பிக்குச் சிறியனை இளையநம்பியோ, வேறு படித்தாய் விளங்குகின்றான். வலம்புரியோ என்றும் ஒரு படித்தாகும். இவன் நிறமோ பூவைப்பூ நிறம். ஆனால் பூவைப்பூவோ இடையில் வாடி மாறுபடும். இவனுடைய வடிவோ புத்தம் புதியதாய்த் தண் ணென்று குளிர்ந்து மெல்லியதாய் விளங்கும் காயாம்பூவின் கருஞ்சுடரொளியே போல்கின்றது. அவன் வடிவுக்கோர் ஒப்புமை நாடுகின்ற பெண்கள் இமைக்கிமை காயாம்பூ வாடுவதுகண்டு இமை தோறும்போய்ப் புதுப்பூக்கள் பறித்துவருகின்றனர். தூய்மையோடு விரிந்ததோர் கடவுட்டாமரையையும் காணவேண்டாவென அப்புறத்தே வீசி எறியும்படி செய்யும் அத்தகைய அழகிய கண்ணழகன்; கடவுட் டாமரையைக் கண்டாரும்கருத்தழிந்துகாதல்கொள் ளும் கண்ணழகன்; தீயெனப்பூத்து மலர்ந்த ஆம்பற் பூவினும் மிகச் சிவந்த வாயழகன்; ஆம்பல் நாடிய பெண்கள் இவன் வாயழகினை நாடி நிற்கின்றனர். பெருமையோடு விரிந்தமார்பிலே திருமறு அழகாகப் பொலிய விளங்குகின்றவன். மார்பழகுக்கு ஓர்

இயற்கையணி புனைந்தாற்போலு மதனைக்கண்டு மருளாதார் யார்?

9. நடை :—தண்டாமரையினும் பொலிவுபெற்ற அவனுடைய கையிலோ, பேரரசர்க்கடையாளமாம் செங்கயற்கோடும் வலம்புரிக்கோடும், விளங்கக்கண்டு மனமகிழ்கின்றனர். அவன் நடந்து செல்கின்றான். அவனுடைய எதிர்காலப் பெருமையிலே யீடுபட்டுத் தம்மை மறந்து அவன் நடந்து செல்வதைக் காண்கின்றார்கள். அரசனில்லாவூரிலே, அரசனைத் தேடிவரவிட்ட இளநல்யானை, அரசனையிலேற அருமகனொருவனைத் தன் எருத்தத்தின்மீது பொலியக்கொண்டு மண்ணுமங்கலச் சிறப்பொடு வருவதுபோலக் கனக் காண்கின்றனர். எல்லோராலும் கடவுட்டன்மையோடு உயிரினும் மிக விரும்பி எதிர் பார்க்கப்படும் அத்தகைய அரசயானையின் செருக்கிய நடையையே அவ்விளைய நம்பியின் நடைக்கு ஒப்புக் காண்கின்றனர்.

10. ஏழக நிலை:—இவ்வாறு இவர்களிருவரும் இளமை யடைந்த பொழுது, இதுகாறும் உறங்கிக் கிடந்த உலகம், திருவெனும் பயிரை எங்கும் விளைத்து மகிழ்ச்சிபொங்கக் கண்மலர்ந்து பொலிவு பெறுகின்றது. இவர்களாலே செல்வம் எங்கும் தழைத்தோங்க, எங்கும் இன்பம் கூத்தாடுகின்றது. "நல்ல நகர்" எனப் பலரும் கொண்டாடப் பல வகைச் செல்வமும் நிறைந்த நல்ல நகரங்கள் மதில் சூழ இருப்பினும், இவ்விருவர்கையில் புகுதல் அரிய தொன்றல்ல; ஆதலின், இவர்களினின்றும் நீக்க

லாகாத அச்செல்வங்கள் இவர்களைக் கண்டு மனம் புழுங்கும் பகைஞர்க்கு இப்போது மிகமிகப் புல்லி யனவாகத் தோன்றுகின்றன. வரிகள் அமைந்த வளையல்களை யணிந்துள்ள தோளாலழகிய பெண் களது மனத்திலே இவர்களைக் கண்டதால் எழுந்த காமநோயாம் எரியானது இவர்களை வளைந்து கொண்டு நெருக்கி உட்சென்று பரவுவதுபோல வருத்தத் தொடங்குகிறது.

11. மருளோ அருளோ?—அவ்விரு அரசிளம் புதல்வரும், வரிவளைத் தோளியர் மனத்துட் காமநோ யெரிவளைத் திடுவதனை மேலே விரித்துரைக் கின்றார் தேவர். இப்பெண்கள் செக்கச் சிவந்த இதழோடும் இனிமை விளைக்கும் இன்பக் கடலன்ன வாயுடையவர். இவர்கள் இதழுக்கு உப்பை விளைக் கும் கடலிலே விளங்கும் கொடிப்பவளமோ ஒப் பாவது? இம்மகளிரின் இதழன்றோ கொடிப் பவளத் தைக் கடலிற் புகவோட்டின. திரையில் அலையும் கொடிப் பவளம் துடிப்பதுபோல, இவ்வரசிளங் காளைகளைக் கண்டு காதலால் துடிக்கும் இதழுடைய ராய் விளங்கும் திருமேனிப் பொலிவோடும், இவர் களை எதிர்பார்த்து நிற்ப, அவர்களெதிரே இம்மைந் தர் வருகின்றனர். அந்தப் பெண்களையும் கடைக் கண் பார்வையால் கண்டு அருள் செய்கின்றனர். யாதோ அவ்வருள்? உருவிலானுடைய அம்புகள் எனும் அழகிய பூக்களையே கடைக்கண்ணால் அருள் கின்றனர். காதற் கண்மலர் பட்டதும் இப்பெண் கள் காமநோய் கொள்கின்றனர் எனச் சொல்லவும்

வேண்டுமோ. உருவிலான் செயலே புரிந்து, உருவு காட்டி நிற்கின்றனர். பூவும் பொலிவும் காட்டியது அவ்வாசிளம் புதல்வர்களின் அருளோ? அப்பெண்களின் மருளோ?

12. கனவிலே இளையநம்பி:—கடைக்கண் நோக்கம் இருக்கும்படி ஈது. இளைய நம்பியைக் கண்ட பெண்கள் உள்ளங்கருகி நிற்கின்றனர். அவனையே எண்ணி எண்ணி, இளைத்து அயர்ந்து உறங்குகின்றனர். அவ்வெண்ணம் தடித்துக் கனவாகத் தோன்றுகிறது. கடலொளிபோலும் அழகிய திருமேனியுடையானை அக்கனவிலே காண்கின்றனர்! விழிக்கின்றனர்; அவனைக்காணுது தடுமாறுகின்றனர்; அறிவுகெட்டு நிற்கின்றனர். இதனைக் கண்டார் "உங்கட்கு அறிவில்லையோ" என முடுக்க "ஐயோ எங்கள் உள்ளத்தை அவன் வலிய வவ்விக்கொண்டு போயினனே. ஒட்டையுடல் தாங்கி நிற்கிறோமே. எம்முயிரை விட்டு விடான். ஐயோ! ஒரு வேளை விட்டுவிடுவானோ" என இளம்பெண்கள் கூடிக் கூடித் தம் மெண்ணங்களை இவ்வாறு விரித்தெடுத்துரைத்து மயங்கி நிற்கின்றனர்.

13. மனதிலே பெரிய நம்பி:—உள்ளம் உளைந்து ஒருங்குகூடி மயங்குகின்றனர் கரியவனைக் கண்டவர்கள். பானிற வண்ணனைக் கண்டவர்கள், தனித்தனி நின்று தாந்தாமே யவனைத் தனித்துத் துய்ப்பதாக மனப்பால் குடிக்கின்றனர். கடலெனப் பரந்து ஒளிரும் அவன, மகளிரிடையேயும், நிற்கின்றான். அக்கடலிலிருந்து தனித்து ஊர்கின்ற சங்கேபோல

அவன் மகளிர்தம் உள்ளத்தே தனித்தனி நின்று திகழ்கின்றான். "நீரில் எழுந்த வளைநிறமேனியானும் மூத்த நம்பி, என் மனத்தே ஈதோ இருக்கின்றான்" என நனவிடையே கனவு கண்டு மகிழ்கின்றாள் ஒருத்தி. "இவனை அந்த அழகுடைய நீண்ட கண்ணுடையாள் காணின் பிரியுமோ; நம்முள்ளே யிருப்பவனைப் பிறர் ஏது காண்பது. ஆனால் கருமுகிலை மேலேதாங்கி வளர்க்கும் கொடியேபோலக் கூந்தலொடு விளங்கும் இம்மெல்லியலார் காதனைக் கொள்வதெங்ஙனம்? அவனையன்றி அந்நோய் விளைப்பாரும் இல்லையே; பின் இவர்க்கு இந்நோய் விளைத்தவர் யார்?" என்று கூறுகின்றாள். இவ்வாறு கூறுவார் பலரும் உளர்.

14. நிலாவும் சுடேறல்:—கண்ணாரக்காணும் அழகுடைய இவ் விளைஞர்மாட்டு, இப்பெண்களின் உள்ளத்தே நின்றும் எழுகின்ற காதலென்னும் ஊழித்தீ எங்கும் விரிகின்றது. அதனால் தண்கதிரெனும் வெண்ணிலாவின் ஒளியும் தீயாகிக் காதலரைச் சுடுகின்றது. வெண்ணிலாவும் சுடுமாறு இங்ஙனம் எங்கும் இத்தீ விரிந்தபோதும், தம்முடைய நாணினை விடாதே பெண்கள் அங்கிருக்கின்றனர். அப்பெண்ணுயிரினும், பெரியதோர் உயிர் பிறிதுண்டோ! இல்லையே; அழகு வழிபாட்டோடு நின்று விடுகின்றதன்றோ இவ்வன்பு. பரத்தையரில்லையே அங்கு. மணமாகாப் பெண்களின் மணம் வீசுமாறிது.

15. எரி வளர்த்திடும் இளமை:—இவ்வாறு அழகு வளர வளரும் செல்வராம் அரசிளங் காளையர்மேற் செல்கிற மனத்தே எழுந்தநோய் யாருக்கு மிகுதி

யாய் முறுகிவளர்கின்றதெனச் சொல்லப்போமோ. ஒருத்திக்கு மற்றொருத்தியினும் ஒரு வகையில் மிக்குக் கிடக்கின்றது. அம்மற்றொருத்திக்கு அவ்வொருத்தியினும் மற்றொருவகையில் மிக்குக் கிடக்கின்றது. இன்னவாறு அழகுவளருங் கொடிபோன்ற பெண்களின் உள்ளத்தைங் காயுமோர் எரிவளர்த்திடும் இளமையினை இவ்வாறு எய்தினர் இவ்விளங் காளைகள்.

திருவோலக்கம்.

16. இயற்கையோடியைந்த இன்பவெற்றி:—இப்படி இவர்கள் வளர்ந்துகொண்டு வருகையில், அரசனும் அரசியரும் எவ்வாறிருக்கின்றனர் எனப்பார்ப்போம். ஒருநாள், அவ் வெற்றிநிலையில் விளங்கும் பயாபதி வேந்தன், தன் மனைவியர் இருவரும் காதலாற்குழைந்துநிற்க, அவரோடு அமர்ந்திருக்கின்றான். அந்நிலையில் அவனுடைய காட்சி எவ்வாறு தோன்றுகின்றது தோலாமொழித்தேவர்க்கு? அவர்கள் எதிரே அவ்வரசன் திருமுடி விளங்கும் தலையால் சிறக்கின்றான். சூழ்ந்து கிடக்கும் மலர்களில் நிறைந்த வண்டுகள், அம்மணத்தின் சிறப்பால் நீங்காது சுற்றிக்கிடக்கின்ற அத்திருமுடியின் நாற்புறத்திலும் மிகச்சிறந்த சுடரொளி வீசிநிற்கின்றன, அத்திருமுடியினுள்ளே மிளிர்கின்ற பெருமணிகள். அமரிகையாற்றிலே கொடியென நீண்டு பரந்துகிடக்கும் பருமணிகளைக் கொண்டுவந்து இழைத்தவைகளேயாகும் அத்திருமணிகள். அத்தகையமணிகளின் ஒளியோட்டத்திலும் அத்தகைய மலர்களின் மணமென்னும் வெள்ளத்திலும்,

இன்பத்திற்றிளைக்கும் வண்டுகளின் இயற்கைப்பாட்டினிசைப்பெருக்கிலும்,அவன் வாழ்கின்றான். இயைந்தொன்றாய் இசைந்தவோர் இன்பம் இருக்கின்றபடி ஈது. ஆனால், இவையனைத்தையும் அவனுடைய தாக்காது, அவன் திருமுடிமேல் வைத்துக் கூறும் தேவருடைய திருக்கருத்தை ஆராய்தல் வேண்டும். அவன் தன் மனைவியரோடு கூடித் திளைக்கின்ற இன்பம் உளப்பட அனைத்தையும், அவன், திருமுடி வாழ்வதற்கென்றே கொண்டு துய்க்கின்றான் என்றுகாட்டுகின்றார். தேவர் பிறர்க்கெனவாழும் பெருந்தகைமையே பெருந்தகைமை. முடிகொள் சென்னியேயன்றி முடியணிசென்னியன்று. அதனை ஒருகடமையாகக் கொண்டு அரசாங்கம் பூண்டுளானேயன்றி, அதனைத்தன்னுடைமையாம் உரிமையாக அணிகின்றானில்லை. கொற்றவன் என அவனை இந்நிலையில் சுட்டுகின்றமை, அவ்வகையால் வெற்றிபெற்றமையையும், தன் மனைவியாரைக் காதற்போரில் வென்று குழையவைத்தமையையும் குறிப்பதோடு, காதலுக்கு அடிமையாயொழியாது அதனையும்உலகுக்குப் பயன்படும் வகைகளில் உருப்படுத்தி அதனை இயக்கியாள்கின்ற அவனுடைய கொற்றத்தையும் சுட்டுகின்றது.

17. கண்படைநிலை:—ஈதோ பள்ளியறைதோன்றுகிறது. அழகுடைய மணிகள் திகழ்கின்ற ஒளிவீசி நிற்கின்றன. எங்கும் பூமாலைகளும் பொன்னரிமாலைகளும் அழகாகக் கண்ணுக்கும் மூக்குக்கும் இன்பமூட்டித் தொங்குகின்றன. அங்கே அழகிய வகையில் தீமூட்டிக்கொண்டு வருவோர், அத்தீயிலே சிறு

சுடர் மின்னிமின்னிப் பொலியவிட்டு, அகிற்கட்டை யை எறியும்போது, வளைந்து வளைந்து அகிற்புகை எழுகின்றது. இவ்வகிற்புகை கொண்டு அப்படுக்கை யை நறுமணம் ஊட்டுகின்றனர். மெல்லிய பூக்களைக் காலரிந்து படுக்கையிற் பரப்பி இருத்தலின் தித்திக் கும் தேனும் அங்கே அளவளாவி இன்பூட்டித் திகழ் கின்றது. கீழே மெல்லிய பஞ்சுகளைப் பரப்பிவைத் திருக்கின்றார்கள். அப்பஞ்சும் தோற்றுக் கீழோடி மறையும் அத்தகைய மெல்லிய மலரணையாகும் இது. இதன்மீது இத்தகைய இன்பங்களினிடையே பள்ளி கொள்கின்றான் அரசன். இவனுடலிலிருந்து ஓர் ஒப் பற்ற ஒளி வீசுகிறது. யாதோ ஈது! வெயில் காய்கி றதோ? இல்லை. மேலேபார்த்தால் எல்லாம் இருட்டா கவே இருக்கின்றது. என்ன வியப்பு! இவ்வாறு உறங் கும்பொழுதும் உலகைக் காக்கும் எண்ணமே உடன் முழுதும் ஒளிர, அவ்வொளி கொண்டே யுலகை யாளும் இவ் வரசனுடைய துயில் நிலையைக் கண்டு, முகிலினிடையே மறையினும் உலகிற்கு ஒளி கொ டுக்க மாட்டாத தன் சுடரொளியைப் பழித்துக் கொண்டு முகநாணி ஓடி மறைந்துவிட்டானன்றோ அக்கதிரவன். இதனையன்றோ அரசனுடைய ஒளி எனப் புகழ்கின்றார் திருவள்ளுவர். "உறங்குமாயினு மன்னவன் தன்னொளி, கறங்கு தெண்டிரை வைய கங் காக்குமால்" என்பர் திருத்தக்கதேவர். "காட் டிலே யானைக் கூட்டத்தை நடத்திச் செல்லுகின்ற அரச யானை, அவ்வியானைகள் துன்பமின்றி இனிதே மேய்ந்து நிற்கையில், அவற்றிற்கு யாதும் துன்பம்

வாராதென்று உறுதி கொண்டபோது, நிழலிலே, அவற்றையே எண்ணி நின்று அலையும் மனத்தோடே, அரைத் தூக்கம் தூங்குவதுபோல, அரசன், தன் குடிகளைத் தன் மக்களாகஎண்ணி வழிப்படுத்தியபின், அவர்கள் இன்பம் துய்க்கையில் சிறிது ஓய்வெடுத்துக் கொள்கிறான்'' எனக் காளிதாசர் பாடுவது காண்க. பாடாண்திணையிற் பட்ட இக்கண்படை நிலையிலும், அரசன், பள்ளியறையில் துயின்றாலும், தன் குடிகளையே எண்ணி நிற்கும் உயர்வைக் காண்க. கதிரவனும் காற்றும், உலகு தாங்கும் பாம்பும் அரசனும் ஒன்றென்றார் காளிதாசர். கதிரவன் தோற்றோடினான் என்கிறார் தோலாமொழித் தேவர்.

18. துயிலெடை நிலை:—அந்நாளைய அரசரின் பொழுதுபோக்கை விரித்து உரைக்கின்றார், இவ்விடத்தே தோலாமொழித்தேவர். தூங்கிய மன்னவன் காலையில் துயில்விடுத்து அருள்கின்றான். வலிவுடைய மறவர் வருகின்றனர். பொன்னாலாகிய உடையை உடுத்துக் கச்சை இறுக இடுப்பில் கட்டி, வில்லையும் கையில் பிடித்திருக்கின்றனர். அத்தகையார் அரசனுடைய திருவடியின் முன்பிலே மெய்காப்புக்கென அங்கு வந்துள்ளனர்.

19. மங்கலநிலை:—அரசனும் எழுகின்றான். எழுந்ததும் முதலில் நல்ல பொருள்களைக் காணவேண்டுமென்பது அந்த நாளைய கொள்கை. அதற்கென இவ்வரசன் எதிரே நற்பொருள்களைக் கொணர்ந்து வைத்திருக்கின்றனர். ஏவலாளர் அவை தம்மிடத்தே தங்கிச் சுற்றிலும் தவழ்கின்ற நல்லொளிபரப்பி மிளிர

அவற்றின் முகத்தே விழிக்கின்றான் அரசன். பின்னர் அவன் தன் காலைக்கடனை முடித்துக்கொள்கின்றான். தாமரைபோன்ற மகளிர் பல்லாண்டு கூறி வரவேற்கின்றனர்.

20. வாழ்த்து:—அந்தணர்களும் பசிய பூக்களைத் தூவி இடைஇடையே வாழ்த்துக்களைக்கூறி அவன் முடிமீது நிறைக்கின்றனர். விண்ணவர்களிடையே இந்திரனைபோன்று மண்ணவர்களிடையே அரசனான அவனும், அவ்வந்தணர்களைச் செவ்விய பூங்கொத்துக்களில் நிறைந்த நல்ல நறுமணமுள்ள மலர்களைக்கொண்டு வணங்கி ஏத்துகின்றான்.

ஓலக்கம்புகுதல்:— பல்லாண்டும் வாழ்த்தும் பெற்றபின்னர், நறுமணம் நிறைந்த மாலையை யணிந்தோர், மூங்கிற் காம்பைக் காவற் கோலாகக் கொண்டு புகழ்விளங்கக் காத்துநிற்கும் கடைவாயில் வழியே போய், எல்லோரும் விரும்பமுரசொலி முழங்கும் வலிய படைகளையுடைய இவ்வரசன், தனது திருவோலக்கத்திற்கு எழுந்தருளுகின்றான் என்பது எல்லோருக்கும் தெளிவாகின்றது.

22. வரவேற்பு:— அவனுடைய திருவடியை வணங்கிப் "பொன்னமர் திருவடி போற்றிபோற்றி" என்று கூறி அன்னம்போல மெல்ல நடக்கும் பெண்கள் எதிரே பரவுகின்றனர். இருமருங்கும் அழகிய வெள்ளுடையணிந்த மணமாகாத பெண்கள் வெண்கவரி கொண்டு வீசிவருகின்றனர். அவன் கருதிய நீண்ட கடைவாயிலின் முற்றத்தை அவ்வரசனும் அடைகிறான்.

23. மெய்காப்பாளர்:—முகில்வட்டத்தின்மேலும் ஏறிப்போகும் பறப்பல வளங்கள் நிறைந்த அந்த நகரத்தைக் காப்பவனாய், அக்காவல் வெற்றிக்கறிகுறியாக நீண்ட கழலணிந்து, நஞ்சு தீற்றிய வேலையும் ஏந்தி வாழும் அந்த அரசனை, அவ்விடத்தே, மெய்க்காவலாளர் காத்து நிற்கின்றனர். காப்பானைக் காக்கும் வியப்பு ஈது. அவர்கள் அன்பு இருந்தபடி அது. அவர்கள்வெவ்விதாய் ஒளிரும் வாளையேந்தி யுள்ளார்கள்; கச்சையும் இறுகக்கட்டி நிற்கின்றனர். உடம்பெலாம் போர்வைச் சட்டையைப் பூண்டுள்ளார்கள்.

24. வாழ்த்தியல்:—அரசன், தலை இடை கடை எனும் மூன்று கடைவாயில்களைத் தாண்டிச் செல்கிறான். அவ்வாயில்களில் ஒவ்வொன்றும் நீண்டு விளங்கும் திருமுடியுடையது. அவற்றினுள்ளே வேலையாட்கள் நறுமணங்கமழும் நீரைத்தெளித்துப் பூக்களைப் பரப்பி வைத்திருக்கின்றனர். அவ்வகையால் வானவருலகையும் ஏசியிடும் உள்ளிடத்தை யுடையனவாய் அவை விளங்குகின்றன. மூன்று வாயிலும் கடந்து அவற்றிற்கு அப்பாலே உள்ள நீண்டதோர் கூடத்தே அரசன் வந்து சேர்கிறான். பலரும் கூடியிருந்த அவ்விடத்தில் "வாழி வாழி" என்று அன்னோர் எழுந்தொலிக்கும் ஓசை வானத்தின் மேலும் நீண்டு செல்கிறது.

25. அவனுற் போலியும் மண்டபம்:—தோலாமொழித்தேவர் அரசனுடைய நாளோலக்கக் கூடம் முதலியவற்றை அட்டவணைப்படுத்தி நகரப் படலத்திலேயே மனமுறியும்படி நெடுகப் புனைந்துரைத்து

முடிக்காது, ஆங்காங்கே இடம் நேரும்போதெல் லாம் அவ்வவ்விடத்திற் கேற்றவாறு இனிதே புனைந் துரைத்து, இந்நூலை ஓதுவாருக்கு இன்பமூட்டு கிறார். திருவோலக்கத் திருக்கூடம் தோலாமொழித் தேவருக்கு எவ்வாறு தோன்றுகிறது? நேரே எதிரில் மேடைகள் விளங்குகின்றன. பளிங்கினை ஒளி பெரு கும் வகையில் பலகைகளாகப் பிளந்து, உள்ளிட மெல்லாம் ஒளியோடு நன்கு விளங்க, ஒளிர விட்டுப் பின் அவற்றை இயையவைத்து, ஓரத்தில் எல்லாம் பளபள என மின்னும் செம்பொன் கொண்டு கம்மி யர் புனைந்துள்ளார்கள். இத்தகையன இம்மேடை கள். மேலே வெள்ளி ஓடுகளை அவர்கள் வேய்ந்துள் ளார்கள். இதனைத் தாங்கி நிற்பன, விட்டுவிட்டு ஒளிரும் பவளத்தினால் ஆகிய திண்ணிய தூண்களே யாகும். தரையோ, சுடர்விடுகின்ற பலவகைத் திரு மணிகளும் ஒருங்குதவழ, மிளிர்கிறது. கல்லும் மண்ணுமாய்க் கிடந்த இம்மணிகளும் பொன்களு மாம் செல்வமே, அழகென்பதோர் திருவுருவம் பெற்றுத்போன் றொளிர்கின்றது அந்தக்கூடம். அத் தகைய அழகிய கூடமும் இவன்வருமுன் பொலி விழந்து நிற்கின்றது. இவன் வந்ததும் குறைவற நிறைவுபெற்றுப் பொலிகின்றது. ஈண்டும் திருவோ லக்கச் சிறப்பால் இவன் பொலிகின்றான் என்ற எண்ணம் வாராதபடி, இவனாலேயே அது பொலி கின்றதென வற்புறுத்திக் கூறுதல் காண்க.

26. வீற்றினிதிருந்த பெருமங்கலம்:— அத்திருவோ லக்கத்தே செஞ்சுடர் வீசும் பொன்னாலாகிய மடங்

கலணை யொன்றுளது. அவ்வணையின் மேலேறுவ தற்கு ஆளிவடிவான மிதிபடி யொன்றும் விளங்கு கின்றது. அதனுடைய முகம் மிக அழகாக அமைந் துள்ளது. அது தன் துதிக்கையினால் யானைக்குட்டி ஒன்றைக் கவ்விக்கொண்டு நிற்கின்றது. அழகிய கொம்புகள், குளிர்ந்த பிறையேபோலச் சுடர்விடு கின்றன. இம் மறவடிவத்தின் மீது தன் கால்களை வைக்கின்றான் பயாபதி. அப்போது அந்த ஆளியின் முகம் அழகுபட மலர்ந்து தோன்றுகின்றது. குட்டி யானையைக் கொன்று நின்ற அக் கொடுந்தோற்றம், அதன்மீது அரசன் கால்களை வைத்ததும், ஆளியி னழிவாய் மாறித் தோன்றுவது, கண்டோர்க்கு முன்னையதினும் மனங்கவர் காட்சியாதலின், ஒளி மலரத் தோன்றுவதாகின்ற தெனலாம். அல்லது திருவடி பட்டமட்டிலேயே, அவ்வாளியும் மனமகிழ் ந்து பகையை மறந்து முகமலர்கின்ற தெனலாம். அவ்வாறு அதன்மீது ஊன்றி ஏறி, மடங்கலணைமீது வீற்றிருக்கின்றான். கதிரவனை யொத்த அரச ஒளி யோடு, செம்பொன்னாற் சிவந்த மடங்கலணை மேல் வீற்றிருக்குமவன், விரும்பத்தக்க செவ்விய ஒளி யோடு விளங்கும் கிழக்கெழு மலையின் முடியிலே, நாம் கண்ணாரக்காண விரும்பும் கதிரோன், விளங்கு வதேபோலத் தோன்றுகின்றான். கதிரவனைக் கண் கொண்டு இன்பமுறக்காணும் நிலை அஃதேயன்றோ?

27. கடைக்கண் காவல்:—திருமறையின் மெல் லியபுரிநூல் உடைய ஐயர், ஒருபுறம் எதிர் நிற்கின் றனர். பொறிவண்டார்க்கும் பெரிய மலர்களைக்

கொண்டு கட்டிய கண்ணிகளைச்சூடி விளங்கும் அமைச்சர் ஒருபால் சூழ்கின்றனர். பெரியதாய் அழிக்கும் ஆற்றல்கொண்டு விளங்கினும், காவற்றன்மை பூண்டு, ஏற்பட்ட எல்லையில் நிற்கும் கடலைப்போலப் பரந்து, அறநெறியில் நின்று உலகைக் காக்கின்ற படையையுடைய அரசன் மனக்கருத்தறிந்து, அவன் தன் செங்கட்கடையால் காட்டும் இடங்களில் இன்னோர் பலரும் அமர்கின்றனர்.

28. அன்பு வழிபாடு:—இவர்கள் இன்னவாறு முன்னே இருந்தபின்னர், பெருங்கடலால் சூழப் பெற்ற உலகத்தைக் காக்கும் இவ்வரசனிடத்தே, அரசப் பண்புகள் எல்லாம் நிலையாக மன்னி நிற்பது கண்ட வெற்றிவேலேந்திய வேந்தர், வியப்பும் அன்பும் மீதூர, அவனெதிரே அகங் குழையத் தம்மையும் மறந்து, அவன் கழலைவணங்குகின்றனர். அன்பினால் பிறரை இவ்வாறு வணக்கும் காலுக்கன்றோ கழலணிதல் வேண்டும். தம்மையும் மறந்து, அன்போடு, அவர் வணங்குகின்றமையால், குறித்த எல்லையில் நில்லாது, மணிகள் அழுத்தியமுடிகள், அவனுடைய கழலில் உராயுமாறு வணங்குகின்றனர். இவ்வன்பு வழிபாட்டினால் அக்கழல் முன்னினும் பொலிவது காண்கின்றார் தேவர். திருமுடிகொண்டு தீட்டிப்பொலியச் செய்கின்றனர் அவ்வேந்தர்கள். அவர்கள் விழுந்து வணங்கும்போது அவர்கள் வெற்றி வேலைக் கீழே வீழ்த்தி மின்னிப்பொலியும் தோள்வளை முதலாம் அணிகள் முன்னினும் விளங்குக் கையை நீட்டி வணங்குகின்றனர். வணக்கநிலையி

லன்றோ பணியும் இடமறிந்து பணிந்த வேலும், வெற்றிபெறுகின்றது; அணிகளும் மின்னிப் பொலி கின்றன. பின் அவர்கள் அரசன் அருளிச்செய்த இடங்களில் தங்கள் தங்கள் முறைப்படி வந்து சேர்கின்றனர்.

29. இடித்துரைக்கும்கேளிர்:—இவ்வரசன் அந் நிலையில், தோலாமொழித் தேவர்க்கு, ஓடைமால் களிற்றின்மேல் நிற்பதாகக் காட்சி கொடுக்கின்றான். அரசச்செல்வத்தினைக் குறிப்பதோர் அடை யாளமே அக்களிறானதால், மடங்கலணைமேல் வீற்றிருப்பானையும் ஓடைமால் களிற்றினன் எனக் கூறத் தட்டில்லை. அரசச் செல்வமாகிய யானையின் மீது விளங்குகின்றான். அவ்வியானைக்குக் களிப் பேறினால் பிறர்க்குத் தீங்குவிளையாதபடி காக்கப் பரிக்கோற்காரரும் வளையூதிச்செல்வாரும் சுற்றி வரவேண்டாவோ? அவர்கள் அதனைக் குத்தி மூடிக் கிக் களிப்பைத் தெளிவிக்கவும் செய்வார்களன்றோ? அங்ஙனமே இவ்வரசெனும் யானையும் களிப்பின் மூழ்கி உலகைக் காலால்தேய்த்தரைக்குமேல், உல கைக் காக்கவும், அரசுக்கு இடித்து உரைத்து நன் னெறியில் ஈர்த்துச் செல்லவும், உடனிலைச் சுற்ற மாம் உழையராய் அமர்கின்றவர் யாவர்? பண்டை நாள் தொடங்கித் தன் மரபினர்க்கு இத்தகைய தொண்டுசெய்து அன்பும் அறமும் பிறழாது வாழ்ந்த குடியில் பிறந்து தலைசிறந்தார்; இவனுடைய திருவடிக்கண்ணே அவாவின்றி அன்புடைய பெரி யோர் அறமுரைத்தல் உட்பட எல்லாத் தொழிலி

னும் வெற்றியே பூண்டு திகழ்வோர்; காத்தலே தம் தொழிலாய், எழுவையே தோளாக வளர்த்து வைத்தாற்போலும் வலியுடையார்; தன் குடியிற் பிறந்து தம்பியர் முறையில் நிற்கும் இளையவர்; இத்தகையாரையே அருகே வைத்து விளங்குகின்றான்.

30. சுரும்புழுசும் சுடர்ப்பொற் கற்பகம்:-காவலன் என்னும் செம்பொன் வடிவமான கற்பக மரம், அழகுபெற்றுப் பொலிகிறது. நகைமுகமென்னும் பூவே பூத்துத் திகழ்கின்றது. அஃதறிந்து நாவலர் என்னும் வண்டுகள் தம்புலனெலாம் அவ்வுவகையில் மூழ்கிக்களிப்ப வந்து மொய்க்கின்றன. பாட்டோடே பரவும் பண்ணே, அவ்வண்டுகளின் இன்னிசை; பாடிக்கொண்டே அப்பூவில் மொய்க்கின்றன அவ்வண்டுகள்.

31. சுரும்புபாடும் சுடர்த்திங்கள்:—இசையமைந்த மகரநல் யாழ்ப்பாடலை இவ்விசைப் புலவர்கள் பாடுகின்றார்.காதுகொடுத்துக்கேட்போம்."அரசனே நின்புகழ் உலகம் முழுதும் பரக்கின்றது. அகல நெடுகப் பரந்தபின் மேற்செல்ல இடமில்லாதபோது வளர்கிறது; விண்ணகத்தும் விளங்குகிறது. அப்புகழ்க் கடலில் மூழ்கித் திங்களும் பாலொடு கலந்த நீரே போல் ஒன்றாகிப் போகின்றான். முன்னைய திங்களினும் இப்போதைய திங்கள் மிக ஒளிர்தலின், புகழோடு ஒன்றுபட்டமையாலேயே இவ்வேற்றுமை உண்டாகிறதெனல் வேண்டும். இப்புகழ்த் திங்களெனும் வெண்குடை நீழலிலே, அனைத்தும், நின் புகழாம் அறத்திற்குள் அடங்க, நீ வீற்றிருந்து

ஆளும்போது, இவ்விடமகன்ற உலகத்திற்கு என் குறைவு? இவ்வாறு அறவழியே உலகைக் காத்தலால் வெற்றிபெற்றுக் கழலணிந்த நின்னருள் எனும் திருவடி வாழ்வதாக" என்பதொரு பாடல்.

32. வீட்டுலகக் கதிரோன்:—இரண்டாவது பாடலைக் கேட்போம். இதுவரை இவ்வரசனை அறவழியிலே கண்டு நாம் இன்புற்றோம். இப்பாடல், நாம் கூறியதே தோலாமொழித்தேவரது கொள்கை, என்பதைச் சிறிதும் ஐயமின்றி விளக்குகின்றது. ஒருவனைப் புகழ்வார் அவன் கருத்துக் கிசையவன்றோ புகழ்வர். ஆகவே, இப்பாடலிற் கூறிவருவது அவ்வரசனுடைய குறிக்கோளாக விளங்கிற்று எனவும் கூறலாமன்றோ? புகழையும் வெற்றியையும் கூறுவது புலவர்களுக்குரியமரபு. மேற்பாட்டில் புகழைக் கூறினார், இங்கே வெற்றி கூறுகின்றார். புகழைத் திங்கள் என்பதுபோல, வெற்றியைக் கதிரவன் எனப்புகழ்தலும் மரபேயாம். இவனுடைய குடியே வீட்டுலகத்துக் கதிரவனாக விளங்குகிறது. இவனுக்கு முன்னே, இவன் குடியிற் பிறந்த வாகுவலி என்பவன், முகிலையும் உடைத்து மேற்சென்றுள்ள பனிமலையிலே, பலநாள் தவம் கிடந்தபோது கொடிகள் மூடிக்கொண்டன! பின்னே வீட்டுலகம் எய்தினான். அப்பேற்றைக் கண்ட வானவர்கள் வணங்கி நின்றார்கள். அவன் வீட்டுலகக் கதிரவனாயினான். அவ்வாறு வீடுபேற்றிற் கென்றே நோன்பு நோற்கும் குடியிலே, உலகையுங் கடந்த அவ்வெற்றி, மேன்மேலும் சிறக்கத் தோன்றுகிறான் இப்பயாபதி. அற-

வழி தவறின் தன்னையே கொல்வதென ஏந்தி நிற்ப தாம் வெஞ்சுடரெஃகம், "உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமையற்றே தவத்திற் குரு" என்றபடி, தவவடிவமாக விளங்குகின்றது. அவ் வொன்றினாலேயே, அரசெனும் இடத்தை அகலமா கச் செய்து நிற்கின்றான் இவ்வரசன். "அத்தகைய செஞ்சுடர் முடியினால், நின் செங்கோல் உன் குடிப் பெருமைக்கேற்ப நீ கருதியபடி நல்வழியில் சென்று சிறப்பதாக" என்ற வாழ்த்தே இரண்டாவது பாடல்.

கனத்திறமுரைத்த காதை

33. காட்சிக்கெளியன்:-இப்படிப் பலரும் ஏத்த, இனிதே அங்கே வீற்றிருக்கின்றான் அவ்வேந்தன்— அவனுடைய பொன்னால் மிளிர்கின்ற வாயிற்காவ லன் வருகின்றான். அவனோ பெரியமறவன். பொன்னாலாகிய கழலணிந்தவன். "கடுவலி யுடைமை நன்று; ஆயின் அதனைக் கடுமையாகப் பயன் படுத் தலே தீது" என்பதற்கிணங்க இத்தகைய மறவர் களை எல்லாம் அறவழியில் நிலைநிறுத்திய இப்பயா பதியன்றோ சிறந்தவன். வந்துநின்ற வாயிலோனைக் கண்டு "கல்லெனத் திரண்ட தோளுடை மறவ! ஏழுநாழிகைவரை யாவரே யாயினும் வரின், வர விடுக. அதுவரை நின் காவலைவிட்டிரு" என்று கூறு கிறான். கல்லெனத்திரண்ட தோளார்க்குக் கரை யிலா அன்பினைக் காட்டுவது இப்படியே போலும். "காட்சிக் கெளியன்" என்று திருவள்ளுவர் தம் மரசனைப்பற்றிக் கூறுக் காண்கிறார். அக்கனவை

மெய்ப்படுத்தத் தோலாமொழித்தேவர் இவ்வாறு ஓவியம் எழுதுகிறார்.

34. அறிவன் முல்லை:—அப்போது, குறிகளைக் கொண்டு முக்காலத்தையும் கண்டுரைக்கும் அறிவனார் ஒருவர், அவ் வாயிற்காவலனிடம் வருகின்றார். உண்மையைக் கூறும் நூல்கள் என்றவற்றை அளவின்றிக்கற்று, அவற்றின் கரையைக் கண்டவர் என, அவரைக்கண்டதும் தோன்றுகிறது. ஆனால் அக்கல்வியால் செருக்காது, அடக்கத்தால் நிலைபேறு பெற்று விளங்குகிறார். சேய்மையிடத்தும் சேய்மைக் காலத்தும் நிகழ்வனவெல்லாவற்றையும் தம் அறிவாலேயே, தம்மனத்தே கண்ணுற்கண்டாற்போலத் தெளிவாகக் காண்கிறார் என, அவர் முகமும் கண்ணுமேகாட்டுகின்றன. அவர் நீர்மை இருக்கின்றபடி அது. அவ்வறிவினர் வாயிற்காவலனை விளித்து, "இப்போது இடங்கிடைக்குமானால், வேந்தனைக் காண்பேனே! நீ யற்றம் பார்த்துக் கூறுக" என்று மரபின்படி கூறுகின்றார்.

35. பூக்காவல் :—அவ்வாயிற்காவலனும் முன்னமே அரசனது கட்டளையைப் பெற்றுளானாதலின் "நீர் வரப்போகிறீர் என்ற உமது குறிப்பறிந்துதான் போலும், அரசர் இங்கு வருவாரை உள்ளே விடச் சொல்லி இருக்கிறார். முன்னரே அருளப்பட்டீர். ஈதோ உள்ளே இப்போது புகுமின்" என்று வழி விடுகிறான். அறிவனாரும் அரசனை அடைகின்றார். பெரும்படையுடைய அவ்வரசனும், தன் குடிப் பூவாகக் கையிலேந்தியுள்ள ஒரு வெண்தாமரை

மலரால், உயர்ந்த ஓரிருக்கையை அவருக்குக் காட்டி "உவகையுடன் எழுந்தருள்க" என்கின்றான். ஓலக்கத்தில் அரசன் வீற்றிருக்கும்போது கண்டால், "இத்தகைய அரசனுக்கு உலகினர் அனைவரும் துணையாகிப் படையேந்தி இவனுடைய தானையுட் புகுவர்; மேன்மேலும் வளர்வதன்றோ இவன் தானை" என்று தோன்றுகிறது. அந்நிலையில் இருந்தும், வந்தோர்தம் மரபு அறிந்து வழிபடுகின்றான் அரசன். பூக்கொண்டு வணங்குவதேபோலப் பூப்பிடித்தகையால் வந்தவருக்கு உயர்நிலை யருளி இன்மொழியுங்கூறி வரவேற்கின்றான்.

36. அறிவர் பேசுகின்றார்:—அரசன் இவ்வாறு வரவேற்கவும், உழைநின்றார், வந்தவர்க் குலகமுறைப்படி வழிபாடு செய்ய வருகின்றனர். அடக்கமே ஒழுக்கமாகக் கொண்ட இப்பெரியார் அவற்றையெல்லாம் தடுத்துவிடுகின்றனர். அரசனது குறிப்பறிந்து அமர்கின்றார். குணக்குன்றே யனைய அவ்வறிவனார் உலகங்கள் முழுவதிலும் மூன்று காலங்களிலும் நிகழ்வனவற்றை மனத்தே காண்கின்ற இவ்வாற்றலைப் பெறத் தாம் கற்றநூல் அறிவுனுண்மையை, அவ்வரசனும் அறிந்து பயனடையுமாறு அவனுக்கு விளக்க எண்ணிப் பேசத் தொடங்குகிறார்.

37. கனா—: இவருக்கும் அவ்வரசன், அரசெனும் யானையின் பெருந்தலைமீது பொலிவதாகவே தோன்றுகின்றான். "அரச' நீ நேற்றிரவு ஓர் கனாக் கண்டதுண்டு. விரும்பி அதனை ஆராயுமிடத்து ஈதேயாம். வானிடத்தே இருந்து ஓர் யானை இழிந்தது; வெண்

டாமரையால் கட்டிய விளங்கொளி மாலையோடும் வந்தது; பெருங்கடல்போன்ற திருமேனியுடைய கரிய நம்பியைக் கண்டது; அம்மாலையைச் சூட்டியது; பின்னே, தன்னிடத்திற்குப் போய்விட்டது. ஈதன்றோ அக்கனவு.''

38. கனவின் பொருள்:—''அரச செல்வம் நிலை பெற்று மகிழ அகன்ற மார்பனே, அக்கனக் கண்ட தன் பயனையும் கேட்டருள்க. நல்ல அழகும் மணமும் உள்ள பூக்கள் இக்கரிய நம்பியின் வடிவிற் பட்டதும் முன்னினும் ஒளிபெற்று விளங்கும்படி மாலையைச் சூடி, அவ்வாறு அழகொடு இன்பத்திற் பொலியும் இளைய நம்பியின் பெயரைப் புகழ்ந்து கொண்டே விஞ்சையர் அரசன் ஒருவன் வருவான். அவன் செல்வத்திற் சிறந்தவன்; மின்னெனப் பரவி ஒளிவீசும் பல பூண்களால் சிறந்து ஒளிர்பவன்: ஒப்பிலாதவன். அத்தகையவன், தன் சிறப்பிற்கும் செல்வத்திற்கும் ஏற்பச் சீராட்டிப் பாராட்டி வளர்த்த ஒரே ஒரு பெண்ணைக் கரியநம்பிக்குத் தந்துவிட்டுப் போவான். விண்ணிழியானையே விண்ணிழி விஞ்சையன்; வெண்மாலையே மகள்; மாலைசூட்டலே மணத்தல்; ஈதே அக்கனவின் பயன்'' என்று விளக்கினார், அவ்வறிவனார்.

39. கனா முதிரும் காலம்:—மேலும் இது அரசனது மனதிற் படும்படியாக வற்புறுத்திக் கூறுகின்றார். ''தேன்றுளி சிந்தி நறுமணங் கமழும் குவளை மாலை யணிந்து அறவழிவரும் இன்பத்தே உயர்ந்தாய்! உறுதிப்பாடுடைய வில்லையுமேந்தி அறவழி

வரும் பொருளினும் உயர்ந்தாய்! ஏழுநாள்கள் சென்றதும், புட்பமா காண்டம் என்னும் உன்னுடைய பொழிலகத்தே, எல்லாவற்றையும் விளக்கவல்ல தூதன் ஒருவன் திருவோலையோடும் வந்து இழிவான். அப்போது யான் கூறியதன் உண்மையைத் தெளிக'' என்று கூறி முடிக்கின்றார்.

40. எதிர்ப்பார்த்ததே ஈதென்றார் :—அங்கிருந்த உழையவர் இதனைக் கேட்டு வியந்து, தாம் கரியநம்பியை நேரிற் கண்டறிந்தவற்றைநோக்கி, அரசனிடம், "உன்னருளால் ஒன்றாகிய உலகத்தையெல்லாம் ஒரு குடைநிழற்கீழ்க் காத்தலாலே பெற்ற இன்பத்திற் கூறிகூறியாக யாம் காணப் பொன்மாலை பூண்ட மார்பனே, போற்றி! மற்றையோரினும் உயர்ந்தோன் என்பதை அவனிட்ட பொட்டும் அணிந்த மாலையுமே காட்ட வீற்றிருந்து விளையாடும் திவிட்டனும் கரியநம்பியை, இவ்வறிவினர் கூறிய பெருஞ்செல்வம் அத்தனையும் சேரத் தக்கவே. ஆதலின் இவர் கூறியது பொய்யன்று'' என்று எடுத்துரைக்கின்றனர்.

41. ஆராய்ச்சி மன்றம்-முரசு காவல்:—இவ்வாறு ஒரு நாழிகை வரையில் இவர்கள் எல்லாம் அறிவு நிறைந்த உரைகளைக் கூறி நிற்ப, நாளோலக்கம் முடிதலைக் குறிக்கும் முரசு முழங்குகின்றது. அரசன் அங்கிருந்துபோய் ஆராய்ச்சி மன்றத்தை அடைகிறான். போகும்போதே அரசநூலைக் கற்றுத்தம் மனத்தே அடக்கிவைத்திருப்பாருள், யார் யார் அங்கு வரவேண்டுமென்பதை அவர்களைப் பார்க்கும் பார்வையாலேயே தெரிவித்துப் போகிறான்.

42. தலையாற் பேசுதல்:—ஆராய்ச்சி மன்றத்தே எல்லோரும் வந்து கூடியதும், ஆழ எண்ணும் முகத்தோடு கீழே நோக்கி நின்று, இரவிலே தான் கண்ட கனவை, அவ்வறிவனார் தம் மனதிலேயே கண்டு கூறியதையும், அதன் நற்பயனென வகுத்துக் கூறியதையும் எடுத்துக் கூறித் தேன்பெருகும் மாலையணிந் தியற்கையோடியைய இன்பந் துய்க்கும் அவ்வரசன், "நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்; என்ன செய்யவேண்டுவது இப்போது" என்று அவர்களைக் கேட்பான்போலத் தன்றலையை உயர்த்துகிறான். அவ்வாறு தலையைத்தூக்கும் அசைவாலே கொய்ம்மலர்த் தொங்கலால் நெடுமுடி மின்னிப்பொலிகின்றது.

42. உலகு கண் படுக்கும்:—"கடலால் சூழப்பட்ட உலகனைத்தும் புறத்தே துன்பவெயிலில் வெதும்பியலைந்ததுன்பநிலைநீங்கிக், கரியநம்பியின் திருவடியைத்தொழுது அத்திருவடியினிழலில் வந்து, முறையே தங்கித் தம் கவலையெல்லாம் மறந்து துன்பமின்றித் தம் சுமையெல்லாம் அவன் சுமையாகத் தம்மையும் மறந்து முனைப்பற்று இன்பத்தே மூழ்கும். அத்தகைய தன்மையான் அத்திவிட்டன். அவன், மன்னவர் மன்னனும் ஆழியங் கிழவன் எனப் புகழ்பெற்று விளங்குவான்; இத்தகைய தோளாற்றலை அவனுக்குத் தந்துதவிய வலிய தோளுடை யண்ணலே! இவ்வாறு முன்னரும் திவிட்டனைக் கண்டோர் கூறக் கேட்டிருக்கிறோம் அன்றோ" என்று நினைப்பூட்டுகின்றனர் அவ்வமைச்

சர்கள். "கண்படுக்கும்" என்பதற்கு, உலகனைத்தும் தூங்கிச் சோம்பும், என்பதன்று பொருள். "கடவுள் அருள் பெற்றவர்கள் ஆண்டவனடியில் கண் படுப்பர்" என்பதற்கு அவ்வாறு பொருளில்லையே. தூக்கத்தில் வரும் இன்பமே பேரின்பத்திற்கும் இணையாகச் சொல்லப்படுவதறிக. தூக்கத்தே அறியாமையுண்டு. கடவுளின்பத்தே அறிவு விளக்கமுண்டு. ஆதலின், பின்னதை "நனவிற்றுயில்" என்றும் "அறிதுயில்" என்றும் கூறுவர். அத்தகைய உயர்ந்த அறிதுயிலில் அமர்வர் என்றதே இதன் பொருளாகக் கொள்க.

44. நம்பி நற்றவம்:—தனது மகனது ஆக்கத்தைக் கேட்டு அகமகிழ்வதால் அரசனுடைய திருமேனி ஒளி விடுகின்றது. அவ்வொளியால் பிறரை வென்று திகழ்கின்றான். அவன் அணிந்த பூண்களின் நின்று போந்த ஒளியொடு அவன் திருமேனியினின்றும் சுடரொளி போந்து மின்னிப் பொலிகிறது. அவ்வரசன் தன் பிள்ளையின் ஆக்கத்திலையமில்லை என்ன உறுதியாக உணர விரும்புகின்றான் என்றும், அதற்காவன செய்யத் தம்மொடு ஆராய்கின்றான்" என்றும், அவன் குறிப்பை யறிந்து கொண்டு, அதன்படி நற்சூழ்ச்சிக் கிழவர்கள் "நம்பி நற்றவமுடையனே" என்றுஉறுதி கூறத்தொடங்கி, அதற்கேற்ற சான்றுகளை எடுத்துக் காட்டுகின்றனர். ("அரசன் குறிப்பினை அறிந்து" என்றது, திவிட்டனின் உடற்குறிகளை நூலின் வழியே ஆராய்ந்தறிந்து அந்தக் குறிகள் மன்னர்மன்னர்க்கே உரியவை என உணர்ந்து" என்றும் பொருள் கூறலாம்.)

45. ஆழியான் அவன்:—"ஐயனும் திவிட்டற்குச் சங்க ரேகையும் சக்ரலேகையும் அங்கையுள்ளன. ஆதலின் சங்கபாணியாம் திருமாலாம் இவன், சக்கிராயுதம் அங்கையேந்தி மன்னர்மன்னனும் என்று அறையவும் வேண்டுமோ. வளைவரியும் ஆழிவரையும் வளையாழி யேந்தும் திருமாலின் கையில் தான் உள்ளன; அவை இவனுடைய கையில் காணப்படுதலால் அவனே இவனென்பதில் ஐயமில்லை. ஆதலின் அவனேபோல இவனும் உலகனைத்தையும் ஆளுமன்றே. உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளங்குவதனை விரித்துரைத்து விளக்க வேண்டுமோ" என வற்புறுத்துகின்றனர்.

46. அவ்வுலகோடியைந்த இவ்வுலகம்:—விஞ்சையர் நாட்டரசன் மகள், வஞ்சிக்கொடியைப் போன்ற இடையோடும் மயிலன்ன சாயலோடும் ஒரு குறைவின்றி உலகம்காண மெல்ல நடந்து, வானினின்றிழிந்து இவனைச் சேருமேல், மேலுலகம் விரும்பித் தழுவும் இக்காட்சியைக் கண்டு நின்ற இவ்வுலகினர், மிக மிக வியந்து 'இவனோர் கடவுளே' என அன்பொடு அஞ்சி நிற்க, அதனால் இவ்வுலகாட்சி ஓர் இடையூறுமின்றி இனிது நடைபெறுமன்றே." என்று திவிட்டனது ஆக்கத்தாலுலகிற்கு வரப்போகும் இன்பத்தையும் அவ்வின்பமே நாட்டமாகவுள்ள மன்னனுக்கு எடுத்துக் கூறுகின்றனர்.

47. ஆராய்ச்சியின் முடிபு:—மேலே செய்யவேண்டுவதைக் கூறத்தொடங்கி, "ஆதலினால், அவ்வறிவ

ஞர் கூறிய இன்றைக்கேழாம் நாளில், அழகிய அந்தப் புஷ்பமாகாண்டமென்னும் பொழிலிலே, பூந்தேன் சிந்திக்கிடக்கும் கல்மேடை ஒன்றைத் திருத்தம்பெற விளங்கச்செய்து, தூமருகாந்தன் என்பானை அங்குக் காவல் வைப்போமாக! ஈதே நாம் செயற்பாலது. கடவுளாந் திவிட்டனைப் பெற்றெடுத்து உதவிய நீயும் கடவுளே யன்றோ. அதற்கேற்ப நீ யணிந்த மாலையும் தூய்மைமிகக் கடவுண் மணமிக்குப் பொலிகின்றதன்றோ" என்று முடிக்கின்றனர்.

48. மனைவியர்க்கு இன்பமூட்டல்:—இவ்வாறு கூறியதும், அரசன் அது கேட்டதன் பயனாக முன்னினும் தன் பூண்கள் ஒளிபெற வீற்றிருந்து, "நீங்கள் கூறியது பெரிதும் நன்று" என்றருளி "நாள்தோறும் அத்தூருமகாந்தன் அப்பொழிலைச் சென்று காக்க" எனக் கட்டளையிட்டு, மனைவியரிடம் சேர்கிறான். தனக்கு இன்றுணைவராகித் தம் மனமோடொத்துத் தானேயாகி உருவில் மட்டுந் தேங்குழல் சுமக்கும் பெண்ணுருப் பெற்ற அம்மனைவியர்க்கும் இவ்வின்பம் ஊட்டுவான், அவர் வாழும் திருக்கோயிலினுள்ளே நுழைகிறான்.

49. பொழிற் காவல்:—இவ்வின்பத்தாலே எரியே போல எங்கும் விரிந்து ஒளியோடு விளங்கிப் பல பூண்களோடும் திகழும் அரசனுடைய திருவடியைத் தொழுது செலவு பெற்றுச் செல்கின்ற தூருமகாந்தனும், பின்னே வரிகள் விளங்கும் தேன் வண்டுகள் இனிதே பாடிச் சுழலும் நீண்ட கிளை

களிலே பூக்கள் தேனைச் சொரிகின்ற அப்புஷ்பமா காண்டம் எனும் பொழிலிலே அவ்விஞ்சையனை எதிர்பார்த்து நிற்குமாறு காவல் காக்கப் புகு கின்றான்.

---

4. இரதநூபுரச் சருக்கம்

விஞ்சையர் நாடாம் அழகு மலை

1. நுதலிப் புகுதல்:—உலகத்திலுள்ள மதில்களில் எல்லாவற்றினும் நீண்டதாகிய மதிலால்சூழப்பெற்ற போதனமென்னும் பெரிய நகரத்தின் அரசருடைய வரலாறு அவ்வாறு நிகழ்வதாகின்றது. அதுகிடக்க நறுமணங்கமழும் நீண்ட பொழில்களால் சிறந்த விஞ்சையருலக வரலாறு நாமுரைக்க வேண்டியிருக் கிறது. (மணமகனுலகு கண்டோம்; மணமகளுலகை இனிக் காணலாம்.)

2. நிலவு பாயும் நெடுமலை:—அவ்விஞ்சைய ருல கம் ஒரு குன்று. இவ்வுலகத்திலே ஒரு குன்றின் மீது நிலாவின் வெண்சுடர்பாய்ந்து பரவுமானால் எங் ஙனம் ஒளிருமோ, அங்ஙனமே அவ்வெள்ளிமலையும் மிளிர்கின்றது. கீழே திரைகள் உலவும் நீண்ட கடலை யும் தீண்டி நிற்கின்றது. கடலெழுந்த நிலவு அதிற் பாய்தலாலே அம்மலை வெளுத்ததென்று சொல்ல லாம்படி கடல் அருகெழுந்ததும் ஓர் அழகே யன் றோ? அதனுயர்வை என் என்போம்! விளங்கும் ஒளி யுடைய மணிகளாலாகிய வானுலகம் இம்மலையின் புறத்தே விலகி நிற்க, அதனையும் தாண்டி மேற்செல்

கின்றது இம்மலை. இதனழகையும் இதன் உயர்வை யும் கண்டு இமையவருலகமும் இதற்கு மேலோங்க இடம்விட்டு அகல நிற்கின்றது.

3. கருமுகிலினிடையே செவ்வானம்:—இவ்வாறு ஓங்கித் தோன்றும் உலகினருகே சென்று பார்ப் போம். என்ன காண்கின்றோம்? முதற் பாடலிலேயே விஞ்சையர் உலகைப் புகழத்தொடங்குவார் "விரை செய் வார்பொழில்" என்று சிறப்பித்தாரன்றோ தோலாமொழித்தேவர். அப்பொழிலே காண்கின் றோம். என்ன அழகிய காட்சி! கருமுகில்களிடையே செக்கர் வானம் தோன்றுவதுபோல இப்பொழில் கள் செக்கச் சிவந்து ஒளிர்கின்றன. மரங்களின் இடைவெளியிலிருந்ததெல்லாம் பேரொளி மிளிர் கின்றது. ஈதென்ன புதுமை! ஈதோ வானவர்கள் உள்ளே கூடியிருப்பது காண்மின். தம்மைப் பிரியாத சூழ்குழலாரோடும் மனமொத்து அப்பொழிலிலிரு ந்து விளையாடுகிறார்கள். ஆம். இவ்வின்பத்தினிடை யே எழுந்தொளிரும் திருமேனிப் பொலிவே இவ் வாறு செக்கச் சிவந்து நம் கண்ணைக் கவர்கின்றது.

4. தாரிற்பிழிந்த மணம்:—இப்பொழில்கள் ஈதோ நெருங்கிவிட்டன. இவை கற்பகப் பொழில்களே யாம். ஈதென்ன ஒருபுது மணம்? மனமலர மகிழும் அன்புடையவராய் வானர மங்கையருடைய பவழ வாயமுதத்தைப் பருகுகின்றனர் அவ்வானவர்கள். இன்பக்களிப்பே தவழ்ந்துலாவும் அம்மங்கையரின் மெல்லிய மார்பைப் புல்லிக்கொள்கின்றனர். அவர் கள் அணிந்திருந்த தார்கள் நெருக்குண்டு அழிகின்

றன. அவற்றினின்றும் பிழிந்தெடுத்தாற்போல நறு மணம் எங்கும் வெள்ளமாகப் பொங்கிப் பரவுகின் றது. ஈதே இம்மணம்.

5. இன்பத்தெழுந்த இனிய மணம்:—என்ன கட வுட்டன்மை இந் நறுநாற்றத்திற்கு! மெல்ல வீசும் குளிர் காற்றினிடையே உலவி வருவதால் என்ன குளிர்த்தி! என்ன நறுமணம்! மூக்கைத் தாக்கிச் செறிந்து வரும்இம்மணம் எங்கிருந்து வருகின்றது! வருகின்றதோ நறுமணங் கமழும் இந்தச் சந்தனப் பொழிலில் இருந்துதான். ஆனால் சந்தனத்தின்மண மல்லவோ ஈது? அல்ல. ஈதோ உள்ளே பார்மின்; இணைந்து வாழும் கின்னர வானவர்கள், மிளிரும் தம்மொளி சுற்றும் ஒளிரத் தாம் அணைதொறும் ஓங்கிவளரும் கொங்கைகளில் அவ்வியல்புக்கோர் பூணும் பூண்டு விளங்கும் கின்னரமங்கையரோடு நிலைபெற்றிருக்கும் சிறப்பினைக் காண்மின். இவர்க ளின்பத்தே எழுந்த நறுமணமே இம்மணமாகும்.

6. வாடைக்கு ஒரு விருந்து:—இம் மணத்தைப் பரப்புங் காற்று இருந்தபடி என்னே. பொழுதோ இரவு. வாடை வீசுகிறது. அவ்வாடை இங்குத் தான் பெருவிருந்து பெற்றுக் கூத்தாடுவது போலத் தோன்றுகின்றது; நிறைந்த நீர்நிலைகளின்மீது தவழ்ந்து வருகிறது. அவ்வாடையால் அந்நீரில் எழும்திரைஒழுங்குகள் நிலத்தே உழுதசால்கள்போ லத் தோன்றுகின்றன. அவ்வாறு நீரைஉழுதுவருத லின் குளிர்ந்துவீசுகிறது, அக்காற்று. காற்றில் பொ ங்கி எழும் பூப்பொடிகளோடு தேனையும் கொப்பளி

த்துவருகின்றது அவ்வாடை. ஆதலின் மணத்தோடும் வருகின்றதன்றோ? அரமங்கையர்களின் கொங்கைகளையே சென்று வெளியாகக் கொண்டு அது நடத்தலின் குதித்துக்குதித்துச் செல்லவேண்டியிருக்கின்றது; ஆதலின் மெல்லென வீசுகின்றது. அங்குக் கலவைப் பூச்சும் பெறுகின்றது அவ்வாடை. ஆர்வன (உண்பன) மீது உழுது, தேனையும் கொப்பளித்து, அங்கராகமும் பெற்று, வாரிகள் மேல் குதிகொள்ளும் பெருவிருந்தின் திறம் இருந்தபடி ஈது.

7. தழையுலகம்—ஈதென்ன வியப்பு! இவர்களோ இன்பத்தின் மகிழும் வானவர்கள். தம் ஊரைவிட்டு இங்கு நிலையாகக் குடிபுகுந்தது எதனாலோ! பட்டும் தூவியும் பொன்னும் மணியும் ஒன்றாயினையந்த கட்டிலில் வாழ்வோர் இங்குக் கானகத்தே பறிப்பார் இன்றித் தழைத்துச் செழிக்கும் சந்தனத் தழைகளையே கீழே பரப்பி, நறுமணங் கமழும் படுக்கையாகக் கொள்கின்றனர். அத்தழைகளினுள்ளே தேனும் இருந்ததால் படுக்குந்தோறும் அத்தேன் உடம்பை நனைக்கின்றது. இவ்வாறிருந்தும் இதனையே விரும்புகின்றனர். இவர்கள் விரும்பும் இன்பம் தான் யாது? ஊனகத்தவராம் மக்களைப்போல் இன்பம் துய்க்கவன்றோ இவர்கள் இங்குவந்துளது. இஃது எதனால்? ஈதன்றோ இவ் விஞ்சையுலகின் பெருமை. ('ஊனவர்' என்று தேவாராம் மக்களைக் கூறும். ஆதலின் ஊனகத்தவரும் அவரேயாம். கண்ணால் கண்டு இன்புறுவதன்றி மெய்யுறு புணர்ச்சியால் இன்புறுகின்றனர் என்றபடி.)

8. முழையுலகம்:—இவர்கள் அன்பு குழையத் தழுவி நிற்கின்றனர். இங்கே எங்குப் பார்த்தாலும் அதனையே காண்கின்றோம். ஈதொரு மலை முழை காண்மின். பளிக்கறையாம் இதனுள் ஐந்து நிறங் களும் தோன்றப் புனைந்திருக்கின்றனர். இதனுள் பாறைகளும் தூங்குவ போன்று கிடக்கின்றன. ஒலியின்றி ஒடுங்கும் நிலையைக் காண்மின். கருமுகில் கள் தவழும் இம்மலையில், அம்முகில்களையே திரை களாகக்கொண்டு இப்பளிக்கறையின் உள்ளே, கூந் தலால் அழகிய பெண்கள், தமக்கு வலியா யமைந்த ஆடவரோடு கூடிக்குலாவிக் குழைந்தாடுகையில், அவர் கள் கூந்தலும் நெருக்குண்டு, அவிழ்தலின், அங்கி ருந்த பூக்களின் பொடிகள், ஈதோ இக்கற்களின் மேற் செறிந்து கிடக்கின்றன.

9. வானவர் நச்சும் வரையுலகம்:—ஈதென்ன இந் தப் பளிங்குப் பாறையைப் பார்த்தபடி நிற்கிறான் இவ்வானவன்? வானரமங்கை ஒருத்தி இவ்விஞ் சையருலக மங்கையரின் நடையழகைக் கண்டு வியக் கின்றாள். அதனில் ஈடுபட்டு அதனைக் கற்கவேண்டி மேலிருந்து இழிந்து வருகின்றாள்; முறையே காலூன்றி நடக்கின்றாள். செந்தாமரையென்னத் திகழும் அவளுடைய திருவடியை மெல்லிய மலரெ னக் கொண்டு வண்டுகள் உண்ணவந்து மொய்க்கின் றன. அவ்வானர மங்கையின் மணாளன் அவளைக் காணாது தேடிப் பின்னே வருகின்றான்; அவளு டைய திருவடிச் செம்மை பதிந்துள்ள பளிக்குப் பாறையைக் கண்டு மனங்குழைகின்றான். அங்ஙனம்

அவனுடைய கண்களைக் கவர்கின்றது அப்பாறை. வானவர் கண்ணைக்கொண்டும் காண்கிறார், இவ் விஞ்சையருலகை, நம் தோலாமொழித்தேவர்.

10. நாகர் நச்சும் நறுநீர் உலகம்:—பொற்பாறைகள் பொலிகின்றன. அவற்றின்மேல் அருவிகள் திரண்டு விழுகின்றன. தொங்கும் கையையுடைய யானைகள், அத் தும்பிக்கையால் நீர் கொண்டு குளித்து மகிழ்கின்றன. இம்மதங்கொண்ட யானைகள் குளித்தும் மதநாற்றம் நாறவில்லை அந்நீர். ஈதென்ன வியப்பு? எதிரே நாக கன்னியர்குளிக்கின்றனர். அவர்களுடலம் நறுமணங்கமழ்தலின், அந்நீரும் மதநாற்றம் ஒழிந்து நாக கன்னியரேபோல முல்லை மணம் வீசுகிற்கின்றது.

11. பூவுலகம்:—எங்கும் பூப்பொழில்; எங்கும் பூமணம்; வாடையும் பூவாடை; காதன் மணமும் மலரென அவிழும்; மகளிரடியும் பூ. சேக்கையும் பூந்தழை; எங்கும் பூப்பொடி; எல்லோர்மீதும் பூந்தார். திருவடியும் பூவே; திருமேனி மணமும் பூவே. ஆண்மையில் மிக்கு நீண்ட கழலணிந்த விஞ்சையரது நாட்டை மேலும் மேலும் பன்னிப் பன்னி முயன்று உரைப்பதென்ன? பூக்கள் எல்லாம் பொற்றாமரைகள். பெரும் பூம்பொழில்கள் எல்லாம் நீரும், இசையும், அணியும், தாரும், விளக்கும், வீடும், ஒளியும் உணவும் கலமும் உடையு மெனப் பத்தும் பழுத்த கற்பகப் பொழில்களாம். பின் என்ன கூறுவது?

அழகுநாட்டில் இயற்கை நகர்

12. இடிதாங்கி:—('வரையின் மேன்மதி' எனப் பாடங்கொள்க) மேற்சொல்லிய வெள்ளிமலையின்

மேலே, அழகியதாயும் மிக்க ஒளியுடையதாயும் திகழ்கிற சேடி எனப் பெறும் இவ் விஞ்சையர் நாட்டின் தென்புறத்திலே, மூங்கிலின்மீதே பிறை வந்து தவழ்தலான் இயற்கையாலேயே அழகு பெற்று நிலைநின்ற இரத நூபுரச் சக்கரவாளம் என்று புகழப்பெறுகின்ற பொன்னகர் ஒன்று உள்ளது. (மூங்கிலின்மீது பிறைக்கோடு இடிதாங்கி போலத் தொலைவில் காட்சி தருவது காண்மின்.)

13. வாயிலில் வாழை:—அழகிய பொன்மாலைகள் தூக்கப்பெற்றிருக்கும் களியாட்டிடத்திலே, வாழைகள் எழுந்து விளங்குகின்றன. காதற்குடியால் செக்கச் சிவந்த வாயினையுடைய பெண்கள், அம்மரங்களினருகே கொம்பென ஒசிந்து கணவருடன் இயைந்து இயங்குகின்றனர். அந்த நிலையிலும் இயற்கையோடியைந்த பொருத்தத்தினை மறவாதவராகி, மரங்களுக்கு முத்தன்ன நீர் ஊற்றுவாராகின்றனர். (கொப்புளிக்கின்றனர் என்றும் அதனால் வாழை மலர்கின்றது என்றும் கூறுவாரும் உளர்). அம் முத்தநீர் அவ் வாழையின் வழுவழுத்த அடிமரம் நிறையத் ததும்புகின்றது. கிளிச்சிறை என்னும் பைம்பொன்னாற் செய்தனபோலத் திகழ்கின்ற அவ்வாழைகள், செம்பொற்பழங்கள் பழுத்து நிற்கின்றன. அப்பழங்களின் ஒளி, சுற்றிலும் பரவுகின்றது. காற்று அடிக்குந்தோறும் அப்பழங்கள் நைந்து போவதனால் அவ் ற்றின் நின்றும் சாறு மணத்தோடே எங்கும் பாய்வதேபோன்று உள்ளது அவ்வொளி. பொன்னரி மாலையின் நிழலிலே,-கொழுகொம்பன்ன கொழுநர்

மேற் சாரும் கொம்பன்ன மகளிர் - காதற் குடியால் களித்திருக்குமிடத்தே, முத்தன்ன தெண்ணீரை அன்புடனே ஊற்றி வளர்க்க, அந்நீர் ஊறிக்கொழுத்த அடியோடு விளங்குகின்ற அவ்வாழைகள், செம்பொன்னே பழுத்துத் திருமணமேவிசித் தேனினுமினிய சாற்றை எங்கும் பாய்ச்சுவதுபோல், தோன்றுவோ? நாமும் அங்கே அன்னவாறு ஆகாமோ! இவற்றை வெறுஞ் சொற்கள் என்னப்போமோ? விஞ்சையர் உலகில் காதலோடு அன்பும், இயற்கையொடு செல்வமும், இவ்வாறியைந்திருப்பதனைத் தோலாமொழித்தேவர் இரண்டொரு சொற்களாம் சொக்குப்பொடியிட்டு நம்மை மயக்கி நிம்பவைக்கின்றார் அன்றோ. நம்முலகம் விஞ்சையருலகம் ஆவதித்தகைய காட்சியின் வேறுபாட்டினலேயேயாம். அங்கும் வாழை; இங்கும் வாழை. அங்கே அன்பில் எழுந்தவாழை; இங்கே உழைப்பில் எழுந்த வாழை. அங்குள்ள வாழை பொன்மரமாகிக் கற்பகமாகிறது. இங்குள்ள வாழை செப்புக்காசளவாகிக் கெடுகிறது. இந்நோக்க வேறுபாட்டிலேயே உலகவேறுபாட்டை அமைத்துக்காட்டும் பாவலரின் பெருமையை என் என்பது!

14. கமுகு:—ஓர் அழகிய வீட்டிலே நல்லதொன்று நடக்குமேயானல், புறத்தே வாயிலின்கண் வாழையும் கமுகும் கட்டிவைத்திருக்கக் காண்கின்றோம். இவ்விரத நூபுரத்தே என்றும் நல்லதே நிகழ்தலினல் வாயிலிலே, வாழையுங் கமுகும் இயற்கையாகவே வளர்ந்து திகழ்கின்றன. வாழையைக் கண்

டோம். இனிக் கமுகைக் காட்டுகின்றார் தோலா மொழித்தேவர். கமுகந்தோடுகளால் வேய்ந்த தோர் இடம்; நிழல்மிக்க இடம்; இதனைக் காண் மின். நிலா விளங்குவதுபோல ஒளிரும் வெள்ளி, விம்மிக்கொண்டு வெளி வருவதுபோலப் பாளைகள் பல, பிளந்துநின்று மிளிர்கின்றன. அவற்றிலே சிற் சில, பச்சைக் காய்கள், சுற்றிலும் ஒளிவீசும் பச்சை நிறக்கதிர்களான் சிறந்த பெரிய பச்சைக் கற்களே போல ஒளிர்ந்து, குலைகுலையாய்த் தொங்குகின்றன. அவற்றில் வேறு சிலவோ, திரட்டி வைத்தனபோலச் செம்பழமாய்ப் பழுத்துத் தொலைவிலும் ஒளிவிட்டு மின்னிச் செம்பொற்றிரட்சிகளாய் விளங்குகின் றன. கமுகந் தோட்டம் இவ்வாறு பலவகை ஒளி களும் கொண்டு மின்னிக் காற்றிலசைவது ஒளியே வடிவாய் எங்கும் பரந்து கீழேவீழ்வதே போன்று தோன்றுகின்றது.

15. இயற்கை மாளிகை:—விஞ்சை யருலகைப் பொன்கொண்டும் மணிகொண்டும் புனையாமல், இவ் வாறு இயற்கையே வடிவமாகப் புனைவதை மேலும் காட்டுகின்றார் தோலாமொழித் தேவர். அந்நகரில் உள்ள மாடங்கள் எத்தகையன? அவை, ஒளியா னது நிலைபெற்று விளங்கும் கற்பகமரத்தின் நிழலில் அமர்ந்துள்ளன. கற்பகமே மேனிலை மாடமாக அமைகின்றது. அதற்குள்ளே எங்கும் எரிபரந்தொ ர்ளிவது போல, உள்ளே பாரிசாதங்கள் அழகு செய்கின்றன. கற்பகங்கொண்டு புறத்தே வேய்ந்து பாரிசாதங்கொண்டு அகத்தே வேய்ந்துள்ளார்கள்

எனலாம். இனிச் சுற்றிலும் புறத்தே சுவரிட்டாற் போல எரிமரங்கள் மின்னிப் பொலிகின்றன. இக் காட்சி எத்தகையது? கற்பகம் பொன்மரமன்றோ; ஆதலின் அஃதே செம்பொன் மாடமாகும். பாரி சாதத்தின் ஒளியோ, அம்மாடவாயிலில் அழகுறப் பொலிவதுபோலத் தோன்றுகிறது. அவ்வழி முழு வதிலும் பல நூறு கதிரவன்களையே விளக்காக ஏற்றி வைத்ததனுல், அவ்வழியே நம் கண்ணைப் பிடுங்கிக்கொண்டு போகுமாறு ஒளி வடிவாய் எரிவதுபோல், இவ் வெரிமரத்தின் ஒளி எங்கும் பாய்கின்றது. ஈதே நாம் அங்குக் காணும் செம் பொன்மாடம்.

16. அகத்தழகு:—குற்றமற்ற மாலை—அழகாலும் மணத்தாலும் மேன்மையாலும் குளிர்த்தியாலும் தூய்மையாலும் மிக்க மாலை - மணந்த மங்கையர் தோளன்றிப் பிறர் தோளிலே படாத மாலை - இத்த கைய மாலையணிந்த ஆடவர்களோடு பெண்கள் கூடித்திளைத்து மகிழ்கின்றனர். அவர்கள் பூசிய சாந்தம் கலைகிறது; கீழே வழிகிறது, வேர்வையும் அதனோடு அரும்புகிறது. தென்றற்காற்று இவர் களை இளைப்பாற்றுவதுபோல மெல்ல வீசுகிறது. வேர்வை மறைய அங்கு வழிந்த சாந்தைப் புலர்த்து கின்றது அத்தென்றல். அவர்களுக்கு நன்மை செய்ததனுல் தானும் ஓர் நன்மை பெறுகின்றது அக்காற்று. இயற்கையில் இயைந்து விளங்கும் பொருத்தம் அத்தகையதாகும். புலர்த்திய தன் பயனுக அக்காற்று அச்சாந்தின் நறுமணத்தைப்

பெறுகின்றது. மெல்ல வீசும் காற்று நறுமணமிக்க காற்றும் ஆகின்றது. இம்மணத்தை உணர்ந்த வண்டுகள் இசைபாடத் தொடங்குகின்றன. அக்காற்று, வெள்ளிவடிவான உலோத்திர மரங்கள் நிறைந்துள பொதும்பரில் புக்குக் குளிர்த்தியும் பெற்று, இசையொடும் மணத்தொடும், மெல்ல வந்து மாடத்தினுள்ளே வீசுகின்றது. இனிய வாழைப் பழங்கள்; தேனொழுகி மெலியும் திருப்பூக்கள்; கண்ணுக்கினிய கமுகந் தோட்டம்: கண்டோர் திகைக்குறும் கற்பகமாடம், இசையோடு இயைந்த இன்மணக் காற்று—இந்தப் புறத்தழகுக்குள்ளே இன்ப அன்பு அகத்தழகாகப் பொங்கி வழிகின்றது.

17. பூநகர்:—எல்லாம் மரங்களே. அவற்றினழகே அங்கு. பச்சிலை மரங்களின் பூங்கொத்துக்களும், அசோக மரத்தின் தளிர்களும் ஒன்றாய்ச் சிக்கிப் புதியதொரு பூங்கொத்தாய் அசைகின்றன. இலைகளின் இடையே மலர்ந்த பெரிய மாம்பூங்கொத்துக்கள் பூம்பந்தரிட்டாற்போல ஒளிர்கின்றன. தேனொழுகும் பூங்கொத்துக்களையுடைய தேவதார மரங்களின் மேலே அம்மாம்பூப் பந்தர் ஊன்றுகிறது. தேவதாரம் அச்சுமையால் நலிந்து ஒல்கி அசைகின்றது. இவ்வாறு பூக்களாற் பொலிகின்றது அந்நகரம்.

18. விஞ்சையர் உலக நட்பம்:—இவ்விஞ்சையருலகின் இன்ப நட்பத்தை மேலே விளக்குகின்றார் தோலாமொழித்தேவர். நம்முலகில் உள்ளனவே அங்கும் உள்ளன. கடவுளாரும் கிங்கை - காந்தள்

பூத்த மலை-தேன் கசிந்தொழுகும் பூக்களால் பொலி தரும் பொழில்கள் - கடலினருகே முத்தைக் குவித்தாற்போன்ற நீண்ட மணற்குன்று - முல்லைப் பந்தர்-இவை நம்முலகிலும் உள்ளனவேயாம். ஆனால் இங்கே அவை துன்பம் கூத்தாடும் இடமாக விளங்குகின்றன. ஆனால் அங்கே இவை போன்ற இடங்கள் இன்பத்தை ஆக்கி வளர்க்கின்றன. ஆதலின் அந்த நகரத்தில் காதற்றுன்பமேயன்றி வேறொரு துன்பமு மில்லையாம்.

வெறும் சொல்லோ:—இவ்வாறு விஞ்சையருலகினைப் புனைந்துரைக்கின்றார் தோலாமொழித்தேவர். இவ்வாறு புனைந்துரைத்தார் வேறொருவரும் இல்லை என்றே நாம் கூறலாம். மெல்ல நம்மை உடனழைத்து முதலிருந்து முடிவுவரையும் காட்டி அதன் நுட்பத்தையும் விளக்கிவைத்துள்ளார். கருத்தின் ஆழத்தாலும் புதுமையாலும் பொருள் செய்வதில் அருமை சிறிது உளது என்பது உண்மையாகலாம் ஆனால் இவற்றை வெறுஞ்சொற்கள் என்றோ, கருத்தளவில் யாது மில்லை என்றோ, சுவையில்லா அடைமொழிகளுக்கு இவையே எடுத்துக் காட்டுக்கள் என்றோ, புனைந்துரைக்க வேண்டுமெனத் தம் கடமையைக் கழித்தாற்போலப் பாடிவிட்டார் என்றோ கருத்துமுற்றத் தோய்ந்த வகையால் எழுந்தவை இவையல்ல என்றோ, மோனைக்கும் எதுகைக்குப் மிகவும்பயன்று பொருளும் முடிவும் சேரவோ சேராதோ பாடிவிட்டார் என்றோ, ஒரு பெரியா இவற்றைப் புறக்கணித்ததுபோலப் புறக்கணித்த

விட முடியுமோ? சூளாமணியின் பாட்டின்பத்தில் தோய்ந்தோர் மோனைக்கும் எதுகைக்கும் தோலா மொழித்தேவர் வருந்துகின்றார் எனக்கூறவே முன் வரமாட்டார். நன்கு சாணை தீற்றப்பெற்ற மணி களாய் இன்னொளியும் பெற்று இசைப்பாட்டாய் எழுவனவே சூளாமணிப் பாடல்கள் எனலாம். இங்கே கல்லும் புல்லும் நெல்லும் ஆயவேண்டுவ தில்லை. இத்தகைய இன்னொலி வெள்ளத்தை வேறி டத்தே காண்பது அருமை. சுவையில்லா அடை மொழி வருவதாக எடுத்துக்காட்டக்கூடிய "ஆந் துணர் தமாலமுமசோகவல்லபங்களுந் தாம் துணர்ந் தசைந்தன" என்பதை எடுத்துக்கொள்வோம். பூவின் பெருக்கத்தைக் குறிக்கவந்த புலவர், அப் பூங்கொத்துக்கள் மேலும் மேலும் வளர்ந்து கொண்டு வருகின்றன என்பதைச் சுட்ட உயிர்நிலை யாகிய முதற்சீரிலேயே "ஆம்-துணர்" என்றார். தமாலத்துணரும் 'அசோகபல்லவங்களும் தாம்' என்று சொற்கொடுத்துச் சிறப்பித்தார். அவையே என்ற பொருளில் 'தாம்' என்னுஞ்சொல் வந் தது எனக் கொள்க. சிறப்புப்பொருளில் கொள் ளாமற் பிரிநிலைப்பொருளில் கொள்ளினும் அமை யும்; அவையே பெருத்திருத்தலின் ஒன்றோடொ ன்று மிக நெருங்கிப் புதியதொரு கலவைப்பூங் கொத்தாகி அசைந்தன; வேறு பூக்கள் இருந்தன எனின் அவற்றிற்கு அங்கு இடமில்லை என்று கூறு கின்றார் எனினும் ஒக்கும். ஆதலினால், வேறுள பூக் களை மேலே இரண்டு அடிகளில் கூறுகின்றார்.

பொருளும் முடிவும் சேராத இடத்தை நாம் காண வில்லை. உவமையிற்றோய்ந்தே இத்தகைய புதிய உலகத்தைப் படைத்துள்ளார் ஆசிரியர். இப்புதுமை, உவமையில் அன்றி வேறெங்கே பூக்கும்? புனைந்துரைக்கவேண்டும் என்று எழுவோர் இதற்குள் ஐந்நூறும் அறுநூறும் பாடல்கள் பாடி முடித்திருப்பார். அப்போக்குத் தோலாமொழித்தேவருடையதன்று என இதுவரையும் பன்முறையும் வற்புறுத்தியுள்ளோம்; ஆதலின் இங்கே விரித்துரைக்க வேண்டா.

அறிவு—அரசன்

19. எரிமுடி மன்னன்:—மேலே அந்நாட்டு அரசனைப்பற்றிக் கூறுகின்றார் தேவர்; இமையவர் உலகொடு தொடர்புடைய விஞ்சையருலகைப் புகழ்கின்றார். ஆதலின் இந்திரனுக்கு யானை யொன்று சிறந்து விளங்குவதை மனதிற்கொண்டு இவ்வரசனுக்கும் யானையைத் தந்தே பன்முறையும் சிறப்பிக்கின்றார் தேவர். வடமொழிப் பெயர்களைத் தமிழ்ப்படுத்தினும் சிற்சில இடங்களில் தமிழ்ப்பாக்கள் இனிப்பதில்லை. அத்தகைய விடங்களில் அந்தச் சொற்களை மொழி பெயர்த்தோ வேறுவகையால் உணர்த்தியோ நம் பழந்தமிழ்ப் புலவர்கள் வழங்கி வந்தனர். கைகேசி என்ற சொல் கம்பர்காதிற் கினித்ததோ? அச்சத் தெலுங்கு எழுதிய புலவர்கள் வடமொழிப்பெயர்களை மொழிபெயர்த் தமைத்துப் பாடுவதைக் காண்கின்றோம். 'ஜ்வலனஜடி' என்பது இவ்விஞ்சையர் வேந்தன் பெயர். தமிழின்பத்தை

அறிந்த தோலாமொழித்தேவர் அதனை அவ்வாறே பாட்டில் வைக்க அஞ்சுகின்றார். அழற்பெயர் (ஜ்வலனம்); அதன்பின் 'சடி' வரும். எனவே ஜ்வலந ஜடி பது அவன் பெயர்; அப்பெயர் அவனுக்கேற்றதே யாகின்றது; மூவுலகத்தும் அகன்று பரவுகின்றது. பெரியவனாகி வளர்ந்தபோது தனக்கேற்கும் பெயரைப் பிறக்கும்போதே, "உலகிற்கோர் எரிமுடி" எனப் பெயராகப்பெற்ற இவன் பெருமையை எங்ஙனம் பேசுவது? அழிவிலாத சீருடையான் இவ்வரசன். பிறப்பிலேயே பேறுடையானாய் அழியாத சீரைப்பெற்ற மானயானை மன்னர் கோனாகும் மற்றும் மாநகர்க்கு வேந்தன்.

20. இன்பமும் அருளும் :—(அங்கண்ஞாலம் என்பதனைச் சுட்டுப் பொருளிற்கொண்ட தோலாமொழித்தேவர் இங்கண் ஞாலம் எனப் பாடுகின்றார். எதுகை நோக்கு இங்கு இல்லை. இக்கண்ஞாலம் என்று பாடும் உலைக்களத்துச்செவி தோலாமொழித் தேவர்க் கில்லை. 'அங்கண் - அவ்விடம்' என்று தக்கயாகப் பரணி உரையாசிரியர், 666-ம் கண்ணியினுரையில் எழுதியுள்ளமை காண்க.) அந்நாட்டு வேந்தனுடைய தண்ணருட் குடைநிழல் அங்கு மட்டுமின்றி இவ்வுலக எல்லையிலும் வந்து குளிர்ந்தொளிர்கின்றது. அரச நிலையின் உயர்வை இதனிலும் உயர்த்திப் பாடுவது எங்ஙனம்? ஈதன்றோ விஞ்சையுலகின் உயர்வு. பல அரசர்களும் வணங்கி நிற்க, வெற்றியிற் சிறந்தோன் இப்பெரியோன். இன்ப உலகில் இன்பத்தை மறக்கப் போமோ?

வெற்றி என்றதும், குத்தும் வெட்டும் கொலையும் களவு மன்றோ நம் மனக்கண்ணெதிரே கூத்தாடுகின்றன ? அப்பேய்களை ஓட்டிவிடுகின்றார் தோலாமொழித் தேவர். அவனுடைய இன்பத்திற்கு இடையூறே இல்லை என்பது தோன்றுதல் காண்க. மார்பிலே குங்குமக் குழம்பு பூசியுள்ளான்; மேலே மெய்ப்பூச்சும் திகழ்கின்றது. பரந்த மார்பு ஒளிர்கின்றது. அவன்மேற் பட்டதும் ஊற்றின்பத்தால் மாலையின் மொட்டுக்கள் மலர்கின்றன. அங்கு உள்ள தேனையுண்டு வண்டுகள் இசைப்பாட்டுப் பாடுகின்றன. மணமும் அழகும், இசையும் தேனும், மலரும் பூச்சும், வலியும் சாந்தும், இன்ப வெள்ளத்தே மூழ்கிப் பொங்கி வழிகின்றன. பிறவுலகிற் சென்று பாயும் அருளும், பிறமன்னர் முடிகவிழ்க்கும் ஆற்றலும், இயற்கையோடிசைந்த இன்பமுமே, இவ்வரசன் வடிவம்.

21. அறிவாட்சி:—ஈதெங்ஙனம் கைகூடும்? இவன் அவ்வாறு உயர்வு பெற்ற வழியினை மேலே விளக்குகின்றார் தேவர். கல்வியிற் சிறந்தவன் இவ்வரசன். ஆதலின்,இன்பமும் வெற்றியும் இணைந்து,அருளாய் உருப்பெறுவதில் வியப்பென்ன? மற்றையோர், அரசரது வலியினுக்கு அஞ்சி அடிமையாவர். இவன் நாட்டிலோ அறிவினுக்கஞ்சி, 'அறிவு பொய்க்காது மெய்வழியே செல்லும்' என, அவனுக்கடங்கி வாழ்கின்றனர் அவனுலகோர். 'நல்வழி நிற்போன் பெறுவது துன்பமே' எனச் சிலர் தவறாகக் கருதுகின்றமையை மறுத்து உரையாட, 'இவன், தானெண்ணிய

இன்பங்களை எல்லாம், அந்த அருளோடிணைந்த அறிவுவழியே நடந்து பெற்றான்' என்று வற்புறுத்துகின்றார் தேவர். இவனைக் கண்டாலும் அவ்வுண்மை தோன்றவில்லையா? நிமிர்ந்து நிற்கும் செம்பொன் முடியைக் காண்மின்! கச்சையாற் பொலிகின்ற யானைமீது, மானத்தைக் காக்கும் வேலேந்தி, இமையவர் அரசனேபோல, இவன் பொலியும் பொலிவினைக் காண்மின். கண்டோர் கண்ணைக் கவர்ந்து, அக்கண்ணை அவர்கள் மூடினும் உள்ளே அகக் காட்சி தந்து ஒளிர்கின்ற இன்ப ஊற்றாம் அரச மாலையினைக் காண்மின். அறிவும் அருளும் ஆற்றலும் இன்பமும் இவற்றிலே மிளிரவில்லையா? ஏதோ பேசுகின்றான் பார்மின்! என்னே வியப்பு. வெச்சென்ற சொல் ஒன்றும் காணேம். வஞ்சமும் பொய்யுமின்றி மெய்ம்மையேபேசுகின்றான். மெய்ம்மை நிலத்தே வளர்ந்து, மெத்தென்ற இன்சொல் லாம் அன்பு நீர் பாய்ச்சப்பெற்று, அறிவுநிலவிலும் இன்ப மழையிலும் அருள் நிழலிலும் ஆற்றலெனும் இளவெயிலிலும் வளரும் இவ்வரசமரம், மானத்திலேயே கண்ணாய், எண்ணியபடி ஓங்கி வளர்ந்து, இன்புற்று இன்புறுத்துதல் ஒரு வியப்போ? இத்தகைய அரசன் விஞ்சையருலகிற்கொருசிறப்பியல்பன்றோ? இத்தகைய அருமைபெருமையைப் பாராட்டியன்றோ "பீடியார் பேசுவார்" என நுதலிப் புகுந்தார் ஆசிரியர். பயாபதியிலும் வேறாக இந்த ஜ்வலந ஜடி, ஒளிர்வது காண்க. விச்சையில் முற்றிய சிறப்பினை, இன்பத்தோடியையவைத்து உயிரோவியமாக

எழுதிக் காட்டிய சிறப்பு, தோலாமொழித் தேவர்க்குப் பலவகையாலும் உரியதாகும்.

அவ்வரசியலில் இல்லாதவை

22. அருளின்மை :—மேலே தோலாமொழித் தேவர், அவ்வரசனுடைய அரசாட்சியின் பயனை ஆறு பாடல்களால் நமதுமனதிற்படுமாறு எடுத்துரைக்கின்றார். ஒழித்துக் காட்டணி முதலிய அணிகள் ததும்பப் பிற்காலத்தார் "வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன" என்று பாடத் தொடங்கியது, இந்தத்துறையில் இறங்கிக்குளித்துத் திளைத்த இன்பப்பெருக்காலேயேயாம்.

இவ்வாறு அறிவு ஒளிரும் அரசனை விஞ்சையர் வேந்தனே, அருளின் வடிவமான வெண்கொற்றக் குடையை அரசக்குறியாகக் கொள்கின்றவன்; அவ்வருளால் உலகை முன்னே கூறியபடி வெல்கின்றவன்; செங்கோல்கொண்டு உலகிலேதீமைபடாதபடி ஓம்பிவருகின்றவன். அதற்கு இணையான செங்கோலே இல்லையாதலின் அவன்கோல், தனிக்கோலாக விளங்குகிறது; ஈரரசு அந்நாட்டில் இல்லையாதலின் ஒற்றைத் தனிக்கோலாகவும் விளங்குகிறது. அவ்வாறு அவன் அரசுபுரிந்து வருங்காலத்தில் ஒரு குற்றம் உண்டு என்று கூறித் திகைக்கச் செய்கின்றார் தேவர். யாதோ அக்குற்றம்? குணங்களற்ற கீழ்மக்களிடத்தே அவ் வெண்குடையும் செங்கோலும் அருளைப் பொழியவில்லை. அவர்கள் மனம் போனபடிபோய் அலையவிடாது, அவர்களுக்குத் தொடக்

கத்தே மிகமிகக் கைக்கும் நல்வழியிலே அவர்களைப் புகுத்தி, அவ்வெள்ளத்தே அழுத்திவிடுகின்றன அக் கோலும் அக்குடையும் அவ்வரசனும். அருள் என்றும் அறம் என்றும் இன்பம் என்றும் எழுந்தவற்றிற்கு இவ்வெருளும் இம்மறமும் இத்துன்பமும் மாறுபோலத் தோன்றவில்லையோ? இந்த வஞ்சகப்புகழ்ச்சியுள் ஒருபெரிய உண்மையும் விளங்குவதைக் காண்கின்றோம். எரிகின்ற பெருநெருப்பில் எரியாதன இல்லையே. பேரறத்திலே மறமும் அறமாம்; பேரின்பத்தில் துன்பமும் இன்பமாம். பயிர் வளர்த்தல் போலக் களைகட்டலும் வேண்டப்படுவதொன்றே என்றார் திருவள்ளுவர். கீழோரை மேலோராக்கி, அறவழியிலே இன்பத்தில் திளைக்கச் செய்தலின், அருளும் அறமும் இன்பமுமன்றி வேறியாது அந்நாட்டில், உள்ளது.

23. நடுக்கம்:—அமைதி கூத்தாடும்போது, அவ்வரசனுடைய செம்பொன்முடி நீண்டு, விளங்கி அறத்தை உயர்த்தி ஒளிர்கிறது. போரென்று எழுந்தால், தீமையைச்சீறி வெம்புமவேலோ, மேலோங்கி ஒளிர்கின்றது. இவ் அறநிலைக்கும் இம் மறநிலைக்கும் உள்ளூடே நின்றொளிரும் அறிவுவடிவாக நிற்கும்மக்களைத் தனக்குக் குடிகளாகப் பெற்றபேறுடையான் இவ்வரசன். அத்தகைய நாட்டை, அவர்களிற் சிறந்த இந்நம்பி ஆள்கின்ற நாளில், நடுங்கியவர் ஒருவரும் இல்லை. இவனும் நடுக்கமில்லை; பிறராதும் நடுக்கமில்லை; குடிகளும் நடுக்கமற்ற அறிவுடையார். பின் நடுக்கமேது? ஆனல் நடுக்கமும்

உண்டு. அதனை ஓர் இடத்திலே காண்கிறார் தோலாமொழித்தேவர்; உயர்வுக்கே ஊன்று கோலாகநிற்கும் கொழுகொம்புகளின் மேலே, மிக மிக உயர்ந்து அசைதரும் இயற்கை மாடங்களின் மேலே கொடிகள், நடுங்கினாற்போல அசைவதைக் காண்கின்றார்; வேறெங்கும் இந் நடுக்கத்தைக் காண்கிறார் இல்லை.

24. விற்போர்:—உறங்குமாயினும்மன்னவன் தன் ஞெளிகறங்குதெண்டிரை வையங்காக்கும் அன்றே? இச்செங்கோலொளியைத் திருமுடியி னொளியாகக் காண்கின்றார் தோலாமொழித் தேவர். பண்டைய மரபின் வழியே வளரும் திருமுடி, மின்னிப் பொலிகிறது. அவ்வொளி எங்குமே பரந்தொளிர் கின்றது. வாடாது பச்சைப் பசேர் என விளங்கும் மந்தாரக் கொத்து, பொன்மலர் நாற்றமுடைத் தாய், அழியாப் பேரின்பமே பூத்து விளங்கினாற் போலத் திகழ்ந்து, அவன் தலைமுடியிற்றுதைந்து நிற்கின்றது. அத்தகையவனுடைய அத்தகைய ஆணையினொளி உலகெங்கும் மிளிர்கின்றது. அந்த நாளிலே ஆடவர் அனைவரும் நிலைபெற்று நிற்கின் றனர். இத்தகைய காவல்மிக்க நாட்டிலே, காவலன் ஒளிநிழலிலே, வெற்றிமிக்க ஆடவர் எதிரே, வில் வளைப்பார்யார்? வேறெவ்விடத்தும் வில்வளைவு காணக்கிடைக்கவில்லை. ஆனால் ஒரு கூட்டத்தார் வில்லை வளைக்கின்றனர். வில்வளைப்பாரோ பெண் கள். என்ன வியப்பு! உண்மையாது? திருமகளே போன்ற வடிவழகு உடைய மகளிர், தத்தம் கணவர்

மேலே தத்தம் புருவச்சிலையை வளைத்து வெற்றி பெறுகின்றனர். இவ்வின்பப்போரே யன்றி வன்புப்போ ரென்பதுஇல்லவே இல்லை இந்த நாட்டில்.

25. உண்ணுதவாய்கள்:-வெள்ளிய அருள்நிலவு பொழிந்து அனைத்தையும் வென்று தனிநின்றோங்கும் வெண் குடையைக் கொண்டான் இவ்வரசன்; இவனுடையபுகழை என் என்று சொல்வது? எண்ணிலாப் புகழான் அன்றோ! இவன் ஆட்சி இனிதே யன்றோ எங்கும் செல்கிறது. இந்நாளில் இப்புகழுலகிலே இவ்வருளுலகிலே பசியுமுண்டோ? ஆனல் உண்ணுத வாயும் பலவாயின அந்நாட்டில். எங்குக்காண்கின்றோம் அவற்றை? காமக்கலங்களாம் பரத்தையர்தம் வாயைப்பாருங்கள். பரத்தையர் வழி ஒழுகுவார் ஒருவரும் இல்லையாதலின் கண்ணன்ன காதலரோடு காமச்சுவை யுண்டுகளிக்கும் வாயற்றுத் திகைக்கின்றனர் அப் பரத்தையர்.

26. கட்டுண்டு விம்முவார்:—மக்களானவர் இவ்வரசநெறி நிற்பது வியப்போ? மாக்களாய்க் கீழானவரும் இவனுடைய தாளின் நிழலே நோக்கி, அருளறவழியில், அச்சத்தால் சிறிதுநாள், அடங்குவது போலன்றி, நிலையாகவே என்றும் நின்றுவைக, அதன்பயனுக, முன்னர் உலகத்திற்கஞ்சி மறவழியிற் புகுந்தார், இதுபோது, வையத்தை, அருளறிவு வெள்ளம்புரளும் இன்பவுலகமாகக்கண்டு, மகிழ்ந்து வாழ்கின்றனர். இந்தப் பெருமாற்றத்தை இவ்வரசன் உண்டுபண்ணியது எங்ஙனம்? அறிவின் நுட்பத்தால் நுனித்து, அரசாண்டு வருகின்றமையிலே,

இந்த உளவைக் காணலாம். இம்மோரும் மேலோ ரானல், கட்டுப்பட்டு விலங்குண்டு சிறைப்பட்டுப் புலம்புகின்றவர், அந்நாட்டில் இருப்பது எங்ஙனம் கூடும்? ஆனல், அந்நாட்டில் மிகமெல்லிய பொருள் கள் கட்டுண்டன; அப்படிக் கட்டுண்டதும் யார் கையால்? அன்பேவடிவாம் தாயார் கையாலன்றே? கட்டுண்டவர்களும் மிக அழகிய பெண்களாவார்; விம்மக் கேட்க வேண்டுமோ? என்னே வியப்பு! ஆனல் அக்கட்டும் விம்முதலும் என்ன? "தாக்க ணங்கனையார் தம் தாயரால் வீக்கப்பட்டன மென் முலை விம்முமே." வீக்கப்படுதல், விம்முதல் என்ற சொற்கள் இரட்டுற மொழியப்பட்டுச் செயற்கை யாகத் தோன்றாமல் இயற்கையாகவே பாவலருள் ளத்தோடியைந்து அழகுறுதல் காண்க.

27. கடியாரும் கோடியாரும்:—இவ்வாறு, இவ னுடைய அரசாட்சியால் திருத்தமுற்ற விஞ்சைய ருலகை, இவன் ஆண்டபொழுதும், சிலபொருள்கள் வாயாற் கடியவாயின. பிற நாடுகளில் வாயாற் கடி யார், கடுஞ்சொல் கூறுவோரேயாம். ஆனல் இந்நாட் டிலோ வாயாற்கடியவாயின, கள்ளவிழ்தே மலர்களே யாம். இங்குச் சொல்லில் அன்றிப் பொருளில் கடு மையில்லை. கடியவாயின எனில் நறுமணங் கமழ் வனவாயின என்பது அன்றோபொருள்? அடியவா விப் பிறரால் அடிபட்டு, அதனல் பயப்பட்டு அடங் காநின்று அலர் (பழி) கூறப்பெறுகின்ற அத்தகைய கொடியவாயினவும் அந்நாட்டில் இல்லாமற் போக வில்லை. கொங்கவிழ் சோலையைப் பாருங்கள். அடிப்

புறத்தே பயம் (நீர்) பட்டு (பெற்று) அடங்காமல் விரிந்தனவாய சோலைகள் பூக்களோடு பூத்து ஒளிரும் பூங்கொடிகளோடு விளங்கின. இங்கும் சொல்லன்றிப் பொருளைக் காண்கிலோம்.

புதிய உலகம்:—இனி, வஞ்சகப் புகழ்ச்சியையும் இரட்டுற மொழிதலையும் ஒழித்துக் காட்டணியையும் மறந்து, இக்காட்சியைச் சிறிது உற்று நோக்குவோம். முன்னெல்லாம், அவ்வாநாட்டை உண்மை முகத்தால் புனைந்துரைத்த தேவர், இந்தப் பாடல்களில் இன்மை முகத்தால் அழகுபடப் புனைந்துரைக்கிறார். அவர் கண்ட காட்சியின் பெருமையை இவற்றிலேயும் செவ்விதின் காணலாம். அருளின்மை இல்லை; நடுக்கம் இல்லை; வில் வளைப்பார் இல்லை; உணவிலாது பட்டினிகிடக்கும் வாய்கள் இல்லை. கட்டுண்டும் சிறைப்பட்டும் புலம்புகின்றவர் இல்லை; அதாவது சிறைச்சாலை யில்லை. அடிபடுவார் இல்லை; அஞ்சுவார் இல்லை. பழிக்கப்படுவார் இல்லை. கொடியவர் இல்லை. கடிய பேசுவார் இல்லை. 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்றார் திருவள்ளுவர்; அன்பொடு புரளும் அறிவுலகத்திலன்றிஈதொழியுமோ? "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" பட்டினியில்லா உலகைக் கண்ட நம் தோலாமொழித்தேவர், 'தனியுலகினி லொருவருக் குணவிலை யெனில் சகத்தினை யழிப்போமே' என்று பாடியவரின் முன்னோன்றல் அன்றோ? சிறைச்சாலையையும் அடிப்பாரையும் அழித்தொழித்த தோலாமொழித்தேவரை, மேனாட்டிலே சீர்திருத்தத் துறையில் முன்னணியில் நிற்கிற

வரும், புகழ்வார் அன்றே? பிரஞ்சுநாட்டுப் புரட்சி, சிறைச்சாலையை இடித்துக்கொண்டன்றே புறப்பட்டது. சிறைப்பள்ளியையும் கொடுமைகளோடு முறைப்படுத்தியன்றே தற்கால உள்ளத்தியற்கை நூல் பேசுகின்றது. தோலாமொழித் தேவரது நாடு, பரத்தையர் இல்லாத ஒருலகம் என்பதையும் நாம் குறித்து வைத்துக்கொள்ள வேண்டாவோ? இவ்வாறு அறிவுநிலவு பொழிய அருள்வெள்ளம் புரளும் ஓர் இன்பநாட்டை எக்கனவில் காண்கிறோம். இந்நாளுக்கெனப் பாடியது போலன்றே இப்பாடல்கள் எம்மை இயக்குகின்றன. இவ்வின்ப உலகிற் புகுந்து நாம் சிறிது அறிவுநிலவு காய்வோம்; அருள்வெள்ளத்தில் குடைந்து குடைந்து குளித்துத் திளைப்போம்; உலகிற்கு இதனை முரசறைவோம்; இவ்வாறு இவ்வுலகம் மாற இறைவனை வேண்டுவோம். தோலாமொழித் தேவர் வாழ்க. அவர் கருத்து வாழ்க. அவர்கண்ட கனா மெய்ப்பிக்கப்படுவதாக. நம்நாடும் பிறநாடும் அவ்வாறு விளங்கிவாழ்க.

பெண்ணுலகு :—ஆண்மகன் பிறந்த நாட்டினும் பெண்மகள் பிறக்கு நாட்டில் இத்தகைய உயரியநிலை காணப்படுதல் வேண்டும் எனக்கருதிப் புனைந்துரைக்கும் தோலாமொழித் தேவரது உள்ளக்கருத்தை உள்ளவாறு உணர்ந்து பெண்ணின் பெருமையை வாழ்த்துவோமாக. அவ்வாறு நம் நாடும் சீர்பெற்றுயரவும், அத்தகைய பெண்மணிகள் நம் நாட்டில் பிறக்கவும் அன்றோ இறைவனை வேண்டிக்கொள்ளுமாறு இப்பாடல்கள் எம்மைத் தூண்டுகின்றன.

அரசன் மனைவி

மேலே, தோலாமொழித்தேவர் அவ்வரசனுடைய மனைவியைப்பற்றிக் கூறத் தொடங்குகின்றார்.

28. திருமகள்:—ஈதோ ஒரு பெண், அவ்வரசனுக்கு எதிரே வருகின்றாள்; புன்முறுவல் பூக்கின்றாள். உள்ளொன்றுவைத்துப் புறமொன்றுபேசும் முறுவல் அல்ல இது; மனத்தின் தூய்மையை மணாளனுக்கு ஓதும் முறுவல் ஆகும். இப்முறுவலின் வெண்ணிலவால், இவளுடைய வாய், மிகச் சிவந்து அழகுபெற்று, மன்னவன் மனதைக் கொள்ளைகொள்கின்றது. இவளது காதல், அவன்மீது காற்றினும் விரைந்து பாய்கிறது. ஆம், இவள் பெயரும் வாயு வேகைதான். என்றும் வளரும் இன்பக்கொடிபோல் திகழ்கின்றாள் இவள். கொடியாதலின், இவள், கொழு கொம்பாம் தன் கணவன்மீது தவழ்தலையும் கூறவேண்டுமோ? அவ்வாறு, இவள் அவனைத்தழுவி நிற்கும்போது, என்ன காட்சியைக் காண்கின்றோம். தீயோர்களது மாயச் செய்கைகளை மாயச் செய்த மாயவனுடைய அகன்றமலைபோற் பரந்த மார்பிலே, மிகவிரும்பித் தங்கும் அப்பூமகளாம் திருப்பிராட்டியின் நினைவு நமக்கு வருகிறது. தீயோரது தீமைகளை, மாயச் செய்யும் அந்த அரசனின் வரைபோன்ற மார்பினும், திருவேபோல விளங்கிக் காட்சி கொடுக்கின்றாள் இவ் வாயுவேகை.

29. பெண்ணரசி:—அரசனும் அரசியும் இயைந்த பொருத்தம் இது. பெண்என்ற வகையில் இவள் எப்படி விளங்குகின்றாள்? அரசனே, மக்களிலே கலைசிற

ந்தவனாய், பைம்பொற்பட்டமணிந்த ஒரு கொல் யானையின்மீதேறி விளங்குகின்றான். அங்ஙனமே, அரச அடையாளமாம் செம்பொற் பட்டம் கட்டிக் கொண்டு நிற்கிறாள் இவ்வரசி. அப் பட்டமும், இவளுடைய அழகு பொலிகின்ற திருநுதற்கென்றே ஏற்பட்டதுபோலவும், கூடவே பிறந்ததுபோலவும், செறிந்துகிடக்கின்றது. பட்டத்திற்கென்றே பிறந்தவள் இவளேயாம். அழகியபொன்கொண்டெழுத்திய பட்டுடைபூண்டுவிளங்குகின்றாள். பட்டமும் பட்டும் சூடிய இவள், அழகிய பொற்றகடுசூடி, இயற்கையிலே நறுமணம்வீசிநிற்கும் கூந்தலாற் சிறந்தாளாய், நம்மால் வாழ்த்தப்பெறுகிற அந்நாட்டுக் கற்புடை மகளிர்க்கெல்லாம் அழகினுக் கழகு செய்யும் சிறந்ததோர் அணியாக ஒளிர்கிறாள்.

30. அரசனுயிர்:—கொவ்வைக்கனிபோன்று மெத்தெனத்திரண்டு, அரசன்மனமும் வழுவழுத்திட, மின்னிச்சிவந்து, நிற்கின்றது இன்னவள்வாய்; அதனிலிருந்து எழும் ஓசையோ, குழலிசையேயாம். காணவும் அழகிதாய், தொடவும் குளிரும் கொடியேபோல் நிற்கின்றாள் இவள். இவள் கண்களோ, இன்றெலாம் அவ்வரசன் பார்த்து நின்றாலும், "இன்னும் பார்த்துக்கொண்டே இருக்கலாம்" என்று தோன்றும்படி, நீண்டு அழகிய கண்கள்; மருந்து நோக்கால் கருங்குவளையினும் குளிர்ந்தொளிர்கின்றன; நோய்நோக்கால் வாளேபோல மின்னிப் பொலிந்து அசைகின்றன. கொவ்வைச் செவ்வாயிலே குமிழ்சிரிப்போடு, குழலென மழலை

பேசி, அவன்றன் உடல்குளிரவும், அதனால் தன்னுடம்பு மயிர்பொடித்து ஒரு புதுவிளக்கம் பெறவும், அவனைக் கொடிபோலத் தழுவி, தனது கண்ணையே நோக்கிநிற்கும் அவனைக் குளிரநோக்கியபின், மயங்கி நாணி, தன்பார்வையை அங்கும் இங்குமாக ஓடவிட்டு ஒசிகின்றாள் அரசி. அந்தநிலையில்ஒருண்மை நமக்கு விளங்குகின்றது. அவ்வரசன் முன்னெல்லாம் தேவர் கூறியபடிவிளங்குவதன் உண்மை, இப்பொழுது வெளியாகிறது. இத்தகையமனைவியைப்பெற்று இவளே உயிராக விளங்க, இவள் அறவழியிற் சிறத்தலின், அவனும் இத்தகைய காவலன் ஆயினான். ஆம்; அவனுடைய ஆவி இவளே யாம். உடலிவன், உயிரிவள்; ஈதொரு பொருத்தமிருக்கும்படிஎன்னே! பெண்ணை உயிர் ஆக்கி, ஆணை உடலாக்கியதோலாமொழித்தேவரின் உட்கருத்து யாது? சொன்னால் பொல்லாப்பேயாம். அவனுக்கே என இவளும், இவளுக்கேயென அவனும் பிறந்து வளர்கின்றனர். ஆண்டவன் நமது ஆவியாய் நின்றொளிர்ந்தும், அதனையுணராதபோது துன்பமும், உணர்ந்தபோது இன்பமும் பிறக்கும் என்பர் அறிவாளர். அங்ஙனமே, இங்கும், இவள் அவனது ஆவியாய் நின்றொளிர்ந்தும், அதனை அவன் உணராமையால் பிரிந்துநின்ற நிலையில் நோய் செய்யும் அணங்காயும், உணர்ந்து மணந்து கூடும் நிலையில் புத்துயிரளித்து இன்பமூட்டும் அமிழ்தமாயும், அவனுக்கே விளங்குகின்றாள். இயற்கையிலே இருந்த பொருத்தம் ஈது. மேலும் கல்வியறிவு ஒழுக்கங்களாம் செயற்கைப்பண்புகளாலும், தொழிற்

பாடுகளாலும் அவன் விரும்பும் தன்மையளாயும் இவள் விளங்குகின்றாள். "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்ற அந்தப்பழமொழி இங்குப் பொய்த்துப் போய்விடுகிறது. நவிறொறும் நூனயம் போலவும், அறிதோ றறியாமை கண்டமை போலவும், நாளும் நாளும் புதியவளாகிப் புத்தின்பமூட்டி நிற்கின்றாள் இவ்வரசி.

31. புதல்வற்பேறு:—வாயுவேகை புன்சிரிப்புடனேயே நம்மெதிரேதோன்றிக் காட்சிகொடுக்கின்றாள். களங்கமற்ற அந்த நகைதான், அரசனுடைய மனத்தை உருக்குகின்றது. முருக்கம்பூப்போற் சிவந்தவாயினிடையே, அச்சிவப்பிற்கு அருகே வெளுப்பாக, மயிலிறகின் முருந்துபோன்ற பற்களின் ஒளிதோன்ற இவள், அழகு நிலவுபொழியும் புன்முறுவல் பூக்கின்றாள். அவ்வேந்தன் மனதை, அந்நகை, உருக்கிவிடுகிறது. இவளுடனேகூடி இனிது மகிழ்கின்றான் அவ்வரசன். அப்போழ்து, அவர்களுக்குப் பல வகைச் செல்வங்களும் மேலும் மேலும்பெருக, ஒரு புதல்வன் பிறக்கின்றான். செல்வம் செல்வமாவது சிறுகுழந்தைகள் தவழ்ந்தோடியாடும்பொழுதேயன்றோ? அக்குழவிக்குமறத்திற்கோர் அறிகுறியாகக் கழல் அணிகின்றனர்; இன்பத்திற்கோர் அறிகுறியாக அலர்ந்த பூந்தார் அணிகின்றனர். 'கதிரவனெனப் பரந்த புகழான்' என்று பொருள்படும் 'அருக்ககீர்த்தி' என்னும் பேரும் பெறுகின்றது அக்குழவி. பின்னைய பெருவாழ்வை நினைப்பூட்டி முன்னே தவழ்கின்றது அக்குழந்தை.

பெண்ணின் பிறப்பும் வளர்ப்பும்.

32. அங்நகைத் தாம மல்லிகைமாலை :—அழகும் இன்பமும் அறிவொளியும் ஒருங்கே திரண்டு மல்லிகை வடிவாகப் பூக்க, முகிழ்முகிழ்த்தும் அரும்பியும் அலர்ந்தும் மலர்ந்தும் நிற்கின்ற அவற்றைக் கொண்டு, ஒரு மாலை தொடுத்தாற்போல, கண்ணும் வாயும் மூக்கும் காதும் நெற்றியும் கழுத்தும் கையும் காலும் விரல்களும் உகிர்களும், சிறுமல்லிகையும் பெருமல்லிகையுமாக விளங்கி, ஒன்றாக இனிது இயைந்து, அழகும் இன்பமும் ஒளியும் வீசி நிற்ப, தானே ஒளிரும் தன்னொளியாள், குழவியாக மின்னிப் பொலிகின்றாள். ஸ்வயம்ப்ரபா என்பதே அன்னவள் பெயர். பொன்மரமாம் கற்பகத்தைச் சுற்றிநின்று, நினைத்தவற்றை நினைத்தவர்க்கு நினைத்தபடியே கொடுத்தருளும் பொற்கொடியாம் காமவல்லியும், இவ்வாறு, இந்தச் சயம்பவைபோல, மாறா இளமை யின்பமும், தனக்கென வாழாப் பிறர்க்குரியாளாம் பெருந்தகைமையைச் சுட்டும் தூய வெண்ணிற அழகொளியும், கொண்டுவிளங்க வேண்டும் என, மிகமிக விரும்புகின்றது. அவ்வாறு அப் பொற்கொடியும் இவள் நிலையை விரும்பும் படி, அந்தப் பொன்னுலகிற்கும் ஓர் உயர்ந்த குறிக்கோளை நினைப்பூட்டிக்கொண்டு தோன்றுகின்றாள், இந்தப் பெண்கொடி. நினைக்கின்ற நினைப்பெல்லாம் ஈடேறாத நிலைகுலைவது ஒருலகம். அது நம்முடைய மண்ணுலகம். அவை நிறைவேறும் உலகம் ஒன்று உண்டு. வேண்டிய வேண்டியாங்கெய்தும் திண்ணி-

யர் வாழும் உலகமே பொன்னுலகு. அஃதேனும் முடிந்த முடிபு ஆகுமோ? ஒருவனுக்குத் தினவெடுக்கின்றது: சொறிந்துகொள்கின்றான்; புண்ணுகின்றது, மேலும் சொரிகின்றான். இப்படியே "இது வேண்டும் அதுவேண்டும்" என்ற தினவெடுக்கின்றது; அது கிடைத்தால் முன் எண்ணிப் புண்பட்ட மனம் வேறொன்றை நாடுகின்றது. "ஆசைக்கோரளவில்லை அண்டமெல்லாம் கட்டியாளுகினும்" என்பது பெரியோர் கண்ட முடிவு. அவாவைப்பெருக்கி, நம்முடைய வாழ்க்கைத்திட்டத்தை உயர்த்தவேண்டும் என்ற மேனாட்டுப் பொருள் நூலின்முடிபு, நம்மை, இன்று, நச்சுப்புகைக் காற்றினிடையே, செங்குருதிவெள்ளத்தில் மீன்களாக்கியபின், சிறுமீனைப் பெருமீன் தின்பதுபோல ஒருவரை ஒருவர் பிடுங்கித்தின்னும் ஆள்விழுங்கிகளாகவும் அலையவிட்டு, அவ்வாறு அலையும் அலைச்சலால் நரம்பு தளர்ந்து தூங்கிக்கொண்டே ஓயாது ஓடி முட்டிக்கொள்ளும் வெறியாட்டத்திடையேயும் கொண்டு தள்ளி, நம்மை ஆட்டிவைக்கின்றது. இவ்வெறியாட்டத்தில் தோற்றவரே மண்ணுலகத்தவர்; வென்றவரே பொன்னுலகத்தவர். எனினும், எல்லாம் வெறியாட்டுத்தானே. இதனினும் உயர்ந்ததாகிய அறிவாட்டம் ஒன்று இருத்தல்வேண்டும். கொடுக்கும் கொடி ஒருபுறமும் கொள்ளும்மிடியோன் மறுபுறமுமாக இருக்கின்ற உலகம், ஏழை யுலகமேயாகும். தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர், என்பும் பிறர்க்கே உரியோராய், அருளொளி பரப்பி, அனைவரோடும் ஒன்றாகி

இயைந்துவிடுகின்ற உலகம் ஒன்று உண்டு. மன்னுயிரை எல்லாம், தன்னுயிராக எண்ணி வாழ்கின்ற உலகமேயாம் அவ்வுலகம். இருளுலகொன்று; பொருளுலகொன்று; அருளுலகொன்று. பொற்கொடியின் பொன்மலர், செல்வச் செருக்கைக் காட்டுவதல்லாமல், உண்மையான நறுமலரின் உயர்வைக் காட்டுமோ? அப் பொன் மலரே நாற்ற முடைத்தானாற்போல, அருளுலகில், இன்ப வெள்ளம் புரளும்.பொன்னுலகவாழ்க்கையின் நுட்பத்தைக் காமவல்லியாக ஓவியம் எழுதிக் காட்டியிருக்கின்றார் தோலாமொழித் தேவர்; அருளுலக வாழ்க்கையை அம் நகைத்தாம மல்லிகை மாலை என்ற மறைமொழிகூறி உயிர்கொடுத்தருளி, அழகிய குழவியாக,நம்ள திரே தவழவிடுகின்றார்.மல்லிகைமாலையோ அதனை வேண்டுவாரினும்வேறே நின்றொளிர்வதில்லை; அவர்கள்கழுத்திலோ மார்பிலோ புகுந்து,அழகுக்கு அழகுசெய்கிறது; அவர்களோடு ஒன்றாகியதும் உவகை வெள்ளம் புரளச்செய்கின்றது. மாலை யணிவார் ஒருவரே யாயினும், அதனுடைய மணமும் அழகும் கண்டு களித்து உயர்நிலையடைவார், சுற்றி நிற்பவர் அனைவருமே யன்றோ? சயம்பவையாம் பெண்மணி, ஒரு மணாளனுக்குத் தன் பெண்மையைத் தந்து தவி நிற்பினும், அவளுடைய அருளும் அறிவும் வெள்ளமாகப்பொங்க, அதனிலே இவ்வுலகம் முழுவதும் முழுகிக்குளித்துத் திளைக்குமன்றோ? இங்கு ஈவாரும் ஏற்பாரும் இல்லை. வீணை, வேட்கைகள் இல்லை, அழகுண்டு; அப்பேரின்பத்தே விளைந்த நகை

யுண்டு; உவகையிற் பூத்த அறிவொளி உண்டு. கட வுண்மாண்பாய் அனைவர்க்கும் இன்பமூட்டும் அரு ளுண்டு. தானெனத் தனித்து நில்லாமல், இயற்கை யொடு இயைந்து நின்று, அன்பு நாரால் எல்லா வற்றையும் ஒன்றுகோத்து, அழகுக்கழகு செய்ய வேண்டித் தன்னிழலிலே தளிர்கள்விட்டுத் தனி யொளி படரும் திருமாலையாம் கடவுணிலையும் உண்டு. பயாபதியின் புதல்வர்கள், அமரர் உலகி லிருந்து இழிந்துவந்ததுபோல, இவளும்,தனக்கென இன்பந் துய்க்கும் பொன்னுலகின்நின்றும் இழிந்து வந்து, பிறர்க்கென இன்பமூட்டும் இவ்வுலகின்கண் தோன்றுகின்றாள். தந்தையின் பண்புகள் அனைத்தும் இவளிடத்தே பழுத்து நிற்கின்றன. அச்சமுடனே நன்மையும் ஒளியும் கொண்டு விளங்குகின்ற வேலை யேந்திய அவ்வரசன், ஆண்மக்களிற் சிறந்து ஒளிர் கின்றான். அவனுக்கு அவனுடைய பண்புகளே ஒரு குழவியாகத் தோன்றியதுபோல, பெண்களில் தலை சிறந்தாளாக இவள் தோன்றுகின்றாள். "தக்கார் தக விலர்என்பது அவர் அவர் எச்சத்தாற்காணப்படும்" என்னுமது வள்ளுவர்கண்ட உண்மை. அதனைத்தே வரும் காண்கின்றார். தாயொருபாலும் தந்தை யொ ருபுறமும்,குழந்தை ஒருசாரும், வாழலாகின்ற இந்த நாளிலும்"மகனறிவுதந்தையறிவு" என்பதுபொய்க்க வில்லையே? தோலாமொழித்தேவர் இங்கு முற்பிறப் பைக் குறிப்பதிலும் ஒரு கருத்துண்டு. காமவல்லிக் கும் அங்கைத்தாம மல்லிகைமாலைக்கும்உள்ளவேற் றுமையைப்பின்னும் வற்புறுத்தி, முன்னைய பிறவியி

னும் சிறந்ததொரு பிறவிபெறுகின்றாள் எனக்காட்டி "அம்மல்லிகை அரும்பிப் பூக்கத்தக்கதொரு சிறந்த விளைநிலமும் கிடைத்ததே" எனவியந்து "நம்பிநங்கை யாத் தோன்றினாள்" எனப் பாராட்டுகின்றார்தேவர்.

"நம்பி நங்கையா" என்பதற்குத் 'திவிட்டனுக்கு ஏற்ற நங்கை' என்று பொருள் கூறுவர்சிலர். "அருக் ககீர்த்திக்குத்தங்கையாக" என்று பொருள் கூறுவர் மற்றும்சிலர். இச்சூளாமணிகூறும்வரலாறு ஸ்ரீபுரா ணத்தில் கூறப்படுகின்றது. அங்கே "அருக்ககீர்த்தி குமாரனுடைய இளையாள் ஸ்வயம்ப்ரபை" என்று வருகின்றது. எனவே "அருக்ககீர்த்திக்குத் தங்கை" என்றபொருளே சிறந்ததென்பர்பின்னையோர். ஆனால், மணிப்பிரவாள நடையில்உள்ள ஸ்ரீ புராணத்தையே இருப்பது இருப்பதுபடி பாட்டாகப் பாடுகின்றார் தேவர் எனச் சொல்வதற்கில்லை. எனினும், அந்நூ லுக்கும் இந்நூலுக்குமுள்ள ஒற்றுமையைக் காட்ட வேண்டி, ஆங்காங்கே ஸ்ரீ புராணப் பகுதியையும் எடுத்தெழுதுவதும் நல்லதேயாம். ஆதலின், இங்கே இதுவரை கூறிய பகுதியை எடுத்தெழுதுவோமாக.

"விசாகநந்தி தீர்க்ககாலம் ஸம்ஸார சக்ரத்திலே பரிப்ரமித்து, இஹ விஜயார்த்த பர்வதத்து உத்தர ப்ரேணியில் அளகாபுரத்துவித்யாதர ராஜா மயூரக்ரீ வன், தேவீ நீலாஞ்ஜனை: இவர்கட்குப் புத்ரன் அப்ர வக்ரீவன் என்பானாகி ப்ரதிவாஸுதேவனாயினன்; அப்ரதிசக்ர விக்ரமத்தனாகிய இவன் அர்த்தசக்கர வர்த்தி ஸாம்ராஜ்யபதம் எய்திச் செல்கின்றனன். (பின்வரும் கதை)

"மஹா சக்ரகல்பஸ்தராகிய தேவர்கள் ஷோடஶ ஸாகரோபம காலம் திவ்யஸுக மநுபவித்த பின் இஹ (இங்கே) ஸுரம்ய விஷய (தேசம்) பௌதந புரத்துப் பாஹுபலி ஸந்தாநத்து வந்த ராஜா ப்ரஜாபதிமஹாராஜன்; தேவிமார் ஜயவதியும் ம்ருகாவதியும் என இருவர். விஶாகபூதியாகிய தேவன், ஜயவதி பக்கல் விஜயன் என்னும் புத்ரனாகிப் பலதேவனாயினான்; விஶ்வநந்தியாகிய தேவன் ம்ருகாவதி பக்கல் த்ரிப்ருஷ்டன் என்னும் புத்ரனாகிய வாஸுதேவனாயினன். ராமகேஶவராகிய இவர்களது தவள நீல வர்ணத்ததாகிய திவ்ய தேஹோத்ஸேதம் எண்பது வில்லு. இவர்கள் பரமாயுஷ்யம் எண்பத்து நான்கு நூறாயிரம் ஸம்வத்ஸரம்.

"இப்பால் விஜயார்த்த பர்வத தக்ஷிணஶ்ரேணியில் ரதநூபுர சக்ரவாளநகரத்து நமிஸந்தானத்து வித்யாதர ராஜா ஜ்வலநஜடி மஹாராஜன்; தேவி திலகபுரத்துச் சந்த்ராய வித்யாதர ராஜாவினுக்கும் ஸுபத்ராதேவிக்கும் புத்ரியாகிய வாயுவேகை; இவர்கட்குப் புத்திரி அருக்ககீர்த்தி குமாரனுக்கு இளையாள் ஸ்வயம்ப்ரபை. ஸர்வாங்கோபாங்க ஸுந்தரியாகிய இவள் மதநபதாகைபோல வளர்ந்து ஸம்பூர்ண யௌவனாவஸ்தையளாகிய பின், ஒரு நாள் ஜ்வலநஜடி மஹாராஜன் மநோஹரோத்யாநத்து எழுந்தருளியிருந்த ஜகந்நந்தர் அபிநந்தர் என்னும் சாரணமுனிகள் பார்ஶ்வத்தே பரிக்ருஹீத ஸம்யக்தர்ஶன ஜ்ஞாநஶீல பூஜோபவாஸாதி பாராயணனாயினன்"

என்பதுவரை இப்பொழுது போதும். இம்மட்டுமே எத்துணை மாறுதல். ஈதனைத்தும் ஒரு பெயர் முறை. சூளாமணியோபாட்டு. அம்மட்டுமா! காமக்கொடி மல்லிகைமாலையானதை என் என்று புகழ்வது? இதுநிற்க.

"நம்பிநங்கையா - ஏமநல் லுகத்தினிழிந்து" என்பதற்குத் 'தாயும் தந்தையுமாயிணைந்த அவர்கள் கருவாம் இன்பவுலகில் வளர்ந்து உலகில் தோன்றினுள்" என்றும் பொருள் கூறுவர்வேறு சிலர். நிற்க.

33. தொழப்பாடு:—இத்தகைய கடவுண்மாலைதோன்றினுல் கை எடுத்துக் கும்பிட வேண்டாவா? தோலா மொழித்தேவர்தம் எதிரே, அவ் வருள்மாலையை எல்லோரும் கைதொழுது நிற்கின்றனர். செக்கச்சிவந்தசெவ்வானம் மேற்கே அழகாகவொளிர்கின்றது. அன்றுதான் அரும்புவிடும் வெண்மலர்போல அமுதமாகி அமுதமூட்டும் பச்சிளம்பிறைத் திங்கள் கீற்றளவில் திகழ்கின்றது. அப்பிறை, வெண்ணிலவைப் பொழிகிறது. வான்யாறுமிகவெள்ளியதாய்வானகத்தேஓடுகின்றதாம். அதிலிருந்து தெறித்தநீரோ என, அவ்வெண்கதிர்கள் பொலிகின்றன. இவ்வியற்கையழகைக் கண்டவர்களனைவரும் கடவுள் அருளேமின்னுகின்றதென்னக் கையெடுத்துத் தொழுகின்றனர் அன்றோ? திங்களுக்கெனக் கூப்பியகை, செக்கர்வானையும் கும்பிடுகின்றதன்றோ? அங்ஙனமே, அழகும் (மடம்) அன்புமே (மாதர்) சிறப்பியல்புகளாகக் கொண்டு, பெண்களிற் சிறந்தாளாய்ஒளிரும் இந்நங்கை பெண்ணுகப் பிறந்தும், எல்லோரும், மேலே சு-

ட்டிய அருட்பெருந்தகைமையை, மனத்தில்எண்ணி, இவளெதிரே கைகூப்பி நிற்கின்றனர். அந்தக்கும்பீடு பெண் பிறவிக்கும் போய்ச் சேர்கின்றதன்றோ? இந்தத் தொழுகை, ஒரு முறை இருமுறை நிகழ்கின்றதொன்றன்றே. பயின்றதொரு வழக்கமாகி நடமாடுகின்றது என்பதைச் சுட்டத் "தொழப்பாடு நவின்றதே" எனக் கூத்தாடுகின்றார் தேவர். "பெண்பிறப்புப் பேய்பிறப்பே பார்" என்று இகழ்வாரும், வாய் மூடிக் கொண்டு, இப்பெண்பிறவியினெதிரே, தொழுதுநிற்கின்றனர். இக்குழந்தையை நம்எதிரே வளரவிடுகின்றார் தோலாமொழித்தேவர். மேலேமல்லிகைமாலை என்றனர். இங்கே கதிரிளந் திங்கள் என்கின்றார். மேலே மேலே வளருந் தன்மையினையும், வாடா இளமையினையும், அழகொளியினையும், இயற்கையொடு பொருந்தி நிற்கும் இயைபினையும், பிறர்க்கென ஒளி வீசி இருளகற்றும் பெருமையினையும், இவ்வுவமை நன்கு சுட்டி, நம்மை உவகைக் கடலில் விழுத்துகின்றது. 'குழந்தையும் கடவுளும்கொண்டாடும் இடத்திலே' என்பது பழமொழி. இத்தகைய குழந்தையைப் பலரும் கூடிக் கொண்டாடிச் சீராட்டிப் பாராட்டுவதை மிக அழகாக, இப்பாட்டில், தேவர், பெரியதொரு கருத்தை உள்ளடக்கிப் புனைந்து உரைத்துள்ளார்.

34. இடை சிறுத்தல்: — பெரியாழ்வார், யசோதையின் கண்கொண்டு, குழந்தையாம் கண்ணனைக்காண்கின்ற காட்சிபழகியபாடல், நம்காதில்ஒலிக்கின்றது.—

செங்கமலப் பூவில் தேனுண்ணும் வண்டேபோல்
பங்கிகள் வந்துஉன் பவளவாய் மொய்ப்ப

(பங்கி - தலைமயிர்)

இத்தகைய காட்சியைத்தோலாமொழித்தேவரும் இங்கே காண்கிருர். ஸ்வயம்ப்ரபை, வளர்பிறைபோல வளர்கின்ருள்; தளர்நடை நடக்கின்ருள். நம்நாட்டு வழக்கப்படி, குழந்தைக்குக் காது குத்துகின்றனர். காதுகள் வீங்கி எரியாமே, திரியைக்காதுக் கிட்டுக் கண்ணுக்கு நன்றா மழகு முடைய கனகக் கடிப்பும் இட்டு, அக்காதுகள் தூராமே வளர்த்து, இதுபோது குண்டல மணிகின்ருர்கள். நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் இச்செல்வக்குழவியின் திருமுகம் மின்னிட்பொலிகின்றது; செந்தாமரைப்பூவே போலத்திகழ்கின்றது. தலைமயிரும் வளர்ந்துவருகின்றது. ஆனல் முடியோ, இன்னும் கூடவில்லை. நடக்கின்றபோது கறுத்துச்சுருண்டொளிரும்குறுமயிர் நிரைகள், அத்தாமரை முகத்தைச் சுற்றிலும், வந்தும் எழுந்தும், வந்தும் எழுந்தும் வீழ்கின்றன. வாள்முகமெனும் மலரிலே தேனுண்ண வந்து வீழும் வண்டுகளை போலத் தோன்றுகின்றன அந்தச்சுருள்கள். இக்குழவியினை நினைக்குந்தோறும் குளிர்ந்த நீரினிடைத் தோன்றும் பொருள்களை, நம் நினைப்பிற்கு வருகின்றன. வாண்முகம் தாமரையாகி வளர்கின்றமை கண்டோம். கண்களோ, வாடா இளமையை இன்பமாய் உருக்கி, அழகொளியாய் வார்த்தெடுத்ததனைத் தம் வடிவாகக்கொண்டு தாவிப் பிறழ்கின்றன. நீரிலே திளைத்துக் களித்து, அருகே நின்ற மலர்மீது தாவிக் குதிக்கும் கெண்டை மீன்களை போல விளங்குகின்றன அக் கண்கள். வானவில்லின் நிழல், அந்த நீரிலேதோன்றி

அழகிடையே அழகாக ஒளிர்கின்றது. அவ்வில்லை போலப் புருவம் வளைந்து பொலிகிறது. "உண்டோ இல்லையோ" என்று கண்டவர்கள் அனைவரும், ஐயப்பட்டு வியந்து நிற்கும்படியாக, இவ்விளம் பெண்ணிற்கு இடை சிறந்து அழகு நனி செய்கின்றது. பேயோடு நம்மைக் கூத்தாடவைக்கின்ற பெரு வயிற்றைக் குழந்தையிடமும் காண அஞ்சுகின்றார் தோலாமொழித்தேவர். குழவிநிலையில், இயற்கையாக வயிறு பெருத்தே நிற்கும். ஆதலினால், ஐயத்தை எழுப்பும் இடை, குழவிநிலை மாறியபின்னே தான் அழகாவது. இவ்வாறு குறிப்பாக இப்பெண் கொடியின் வளர்ச்சியைச் சுட்டிப்போகும் நம் தோலாமொழித் தேவர் பாவன்மை பாராட்டத் தக்கதன்றோ?

35 நெற்றி நெரிதல்:—இவ்விளம்பெண்ணிடத்தே, அறிவுமுகிழ்த்து மலர்வதைக்கண்டு, அதனில் ஈடுபடுகின்றார் தேவர். எதிரே, ஓர் அழகிய பூவொன்று, இப்போது மலர்கின்ற நிலையில் ஒளிர்கின்றது. அதனழகிலே ஈடுபட்டுத் தன் முகமெலாம்கொண்டு ஆராய்ந்து நிற்கின்றாள் இந்தச் சயம்பவை. அதன் நிறத்தைக் கண்டும், மணத்தை முகர்ந்தும், அதன் தேனைக்கண்டு நாவிலே நீரூற நின்றும், மெத்தென்ற அப்பூவினருகே சென்று தனது முகத்தைக்கொண்டு தடவித் தன்னை மறந்தும், அதனில் ஒலிக்கும் வண்டுகளின் இசையைக் கேட்டு அதனை நினைத்தும், ஆராய்ந்து நிற்கின்றாள் இப்பெண் கொடி. "இம் மணத்தை இதனிற்கலந்தார் யார்? இந்நிறத்தை இனி

தேபூசினார் யார்? இதனை இப்படிமெத்தெனஇழைத் தார் யார்? இதனில் தேனினை இவ்வாறு சொரிந்து வைத்தார் யார்?" என்றென்றெல்லாம் இவள் கூர்ந் தெண்ணிப் பார்க்கின்றாள். ஒருதாய், பிள்ளைபெறும் போது உடலெலாம் குறுங்கி நிற்பதுபோல, அறிவு எனும் பிள்ளை பெறும்போது மக்களுக்கு உடலம் முறுகி நிற்றும். கூர்ந்தெண்ணும்போதுபுருவம் நெறி ந்திருப்பதும் இயல்பல்லவா! இச்சிறுமியும்,இயற்கை யினுள்ளே ஒளிரும் மறைபொருளைக்காண முற்பட் டபோது, புருவம் ஒசிந்து நெற்றிநெரிய நிற்கின்றாள். இவ்வாறு இவள் அறிவாம்பிள்ளை பெறுவதனை, அனைவர்க்குங்காட்டி மகிழ்கின்றார், நம்தோலாமொ ழித்தேவர். புருவக்கொடி நொசிந்திருக்கின்றது; புரு வங்கள் நோவுபடுகின்றனவா? நோவுபடுவனபோல் தோன்றுகின்றன அந்நிலைமையில்; அதனால் அன் றோ பிள்ளைப்பேறு என்றோம் நாமும். காதிலே கற்ப கப் பூங்கொத்தை அணிந்து மிளிர்கின்றாள். அப் பூங்கொத்திலுள்ள தேனையும் மலர்ப் பொடியையும் ஊதியுண்கின்ற தேன்வண்டு, தேனில் மயங்கி, இன் னும்உள்ளேஉள்ளவற்றையும்உறிஞ்சவேண்டித் தன் இறகையூன்றி நிற்கின்றது. இன்னவாறு ஊன்றுந் தோறும், இவளுடைய புருவம் நொந்து நொசிக் கின்றது போலும். பல முறையும் நெரிகின்றதென் றால், 'அச்சிறுமி ஒவ்வொன்றாகவே எண்ணுகின் றாள்; சில விளங்கியதும் மேலும் பிறவற்றை ஆராய் கின்றாள்' என்பதாயிற்று. அறிவுவிளக்கத் தெழும் நொசிதலைப் புனைந்துரைக்கவேண்டி, அதனை 'வண்

டின் ஊன்றலால் எழுகின்ற நோவின் பயன்' எனத் தற்குறிப் பேற்றமாகப் புனைந்துரைக்கின்ற அழகை, அறிவாம்பிள்ளைபெற்ற தோலாமொழித் தேவரைப் போன்றாரே அறிந்து துய்த்தல் கூடும். "நொசிவு" என்றால் 'சமாதி' எனப் பரிமேலழகர், பரிபாடல் உரையில், பொருள் கண்டுள்ளார் அன்றோ?

உள்ளுறை வளர்ச்சி :—சயம்பவையின் வளர்ச்சியை வெளிப்படையாகக் கூறாமல், குறிப்பினால், நம் கருத்திற்படியுமாறு புனைந்துரைக்கும் இந்தப் பாடல்களில், வடநூல் வல்லார் பரக்கப் பேசிப் புகழ்ந்துரைக்கும் த்வனி அல்லது உள்ளுறைப் பொருளின் அழகை, நாம்காணலாம். மங்கையர், தம் மடிமீதும் மார்புமீதும் தோள்மீதும் தொடைமீதும் அவளைவைத்துமுத்தாடிச் சீராட்டிப்பாராட்டி வளர்ப்பதனைத் "தொழப்பாடு நவின்றதே" என்று சுட்டினார். பின்னே, அக்குழந்தை காதுகுத்தப் பெற்றுச் சிறப்புறுவதனைக் "குண்டல வாண்முகம்" என்று குறித்து வைத்தார். அவள் இளமைப் பருவத்தில், தலைமயிர் கூடாது நிற்பதனால், நடக்குந்தோறும் குறுமயிர் நிரைகள் அசைந்து முகத்தில் விழுவதனை "வண்டு சூழ் மலர் போன் றளகக் கொடிகொண்டு சூழ்ந்து குண்டல வாண்முகம்" எனப் புனைந்துரைத்தார். இளமையிலே குழவிகளின் பார்வை பிறழும் பார்வையன்று; நிலைத்த பார்வையே யாம். இமைகொட்டாது ஒரு பொருளை நிலைத்துப் பார்ப்பதே அக் குழவிகளுக்கு வழக்கம். கருவிழி இயங்கத் தொடங்கி, பழக்கத்தால் கயல்போல விரைந்து

இயங்குவது, சிறிது கழித்துத்தான். ஆகவே அவ் வளர்ச்சியைக் "கெண்டை கண் கிளரும்" எனப் புகழ்ந்தார். சிறு குழவியின் புருவம் கறுத்துக் கடை குழைந்து நிற்பதில்லை; சில ஆண்டுகள் கழித்த பின்னர்த் தான் அவ்வழகைக் காணலாம். அந்த நிலையையும் சயம்பவை அடைந்தமையைப் "புருவஞ்சிலை" எனக் குறித்தார். "உண்டு கொல் என உண்டு மருங்குலே" என்பது முன் நாம் காட்டியது போல, அடுத்தொரு, வளர்ச்சியாம். அறிவாராய்ச்சி செய்யத் தொடங்குவது அடுத்தபடியாகும்; அவ்வளர்ச்சியைப் புருவக் கொடியின் நொசிதலாகப் புனைந்துரைத்தார். ஐயுணர்வும் மெய்யுணர்வும், பழுத்துப் பயன்பட, இதுபோது, மூளை விடுகின்றன இவ்வாறு!

36. அழகாம் கடவுள் :—இவ்வளர்ச்சியை ஒருங்கியைய வைத்துக்கண்டு கூத்தாடுகின்றார் தோலாமொழித்தேவர். இச்சிறுமியின் கண்ணிலே அருளானது வளரவளர, இவளுடலில் எழிலும் உடன் வளர்கின்ற காட்சி, கடவுளரே காணத்தக்க காட்சியாம். மண்ணவர்க்கும் இது கிட்டியதே! அருள் மலர மலரும் கண்களைக்காண்கின்றனர் விண்ணவர். இவள் விழிக்குந்தோறும், இவ்வருளுலக வாழ்வு நமக்கில்லையே என அவர் ஏங்குகின்றனர். இவ்வருட்கொடி, நம்முலகின் நின்றும் இழிந்து போய் அங்கு மலர்கின்றதே என எண்ணித் தம்பேரிழவிற்குப் பெரிதும் அன்னோர் வருந்துகின்றனர். அருள்கொண்டு 'அம்மலங்களாக விழிக்கும்' இச்சிறுமியின் எழில்,

நாளுக்கு நாள் வளர்வெய்துகின்றது. காண்கின்ற னர் இம்மண்ணுலகினர். இவர்கள் உள்ளத்தே அன்பு வேரூன்றி வளர்கின்றது. விண்ணவரும் விரும்பும் இவ்வருட்கொடி, இம்மண்ணில் வருமா ளுல், இதனை இவர்கள் விரும்பிப் போற்றுவதனைச் சொல்லவும் வேண்டுமோ! இம்மண்ணிலே அன்பு வேரூன்ற இவ்வொளி வளர்வதோ என வியந்து "மண்ணவர்" என்று கூருது 'மண்' என்றே விட்டு விடுகின்ருர் தோலாமொழித்தேவர். இதனைப் பெண் என்போமா? ஈதே பெண் வடிவுகொண்ட கடவுள்; தொழப்பாட்டோடு தோன்றிய குழவி, பெண்ணணங்காக வளர்தலும் இயல்பே. பெண்ணை வெறுப்பவர் சமணர்கள் என்ற கொள்கையை, இந் தத் தமிழ்ச் சமணராம் தோலாமொழித் தேவர், எவ் வளவு அழகாக, இங்கு, இவ்வாறு மறுக்கின்ருர்? இப்பெண் வடிவுகொண்ட கடவுள், இவ்வாறு கண் ணுக்குத் தோன்றுமாறு, இங்குவந்து பிறந்த பின் னரே, கடவுட்டன்மையாம் பேரழகினை, விண்ணவர் கண்ணும், மண்ணவர் கண்ணும், கண்டுகளிக்கின் றன. இவ்வாறு பெண்ணையும் கடவுளாக்கிய தேவர், அழகையே கடவுட்டன்மையாக்கி "ஸத்யம் ஞானம் சிவம் சுந்தரம்" என அழகு வழிபாடு புரி கின்ருர் எனலாம்.

37. பூங்கொடியின் நாகரிகம் :—மேலே, பெண் டன்மை வளர்வதைச் சுட்டிக் காட்டுகின்ருர் தேவர். காமப் பேய் பிடித்தாடும் இக்காலத்தார், கொங்கை என்பதை இடக்கர்ச்சொல் என எடுத்து

விட்டு, அச்சொல்லிருந்த இடத்தில் புள்ளிகளிட்டு அச்சிடுகின்றனர். புள்ளியுள்ள விடத்திலே சிறுவர் அந்தச் சொல்லைப் பெய்து புன்சிரிப்புக் கொள்ளுகின்றனர். இது யாரையோ ஏமாற்றுவது? "தாய் முலைப்பாலுண்டு வளர்ந்தவர் பேச்சோ, அல்லது கழுதைப்பாலுண்டு வளர்ந்தவர் பேச்சோ" என ஒரு பெரியார் வேறோரிடத்தில் கூறியது நமது நினைவிற்கு வருகிறது. வீணையின் அழகிய கல் வடிவம், யவனர்களால் செதுக்கப்பட்டு உலகிற்கோர் அழகு விளக்காகப் பொலிகிறது. அக்கற்றச்சன் கையை, இவர்கள் வெட்டிவிடுவார்கள் போலும். கற்றச்சன் மூளி வடிவம் செதுக்கினால் கல்லைக் காய்ச்சிக் குடித்துத் தான் அவன் பிழைக்கவேண்டும். ஆனால், பாவலன் மட்டும், மூளி வடிவம் செதுக்கி வாழவேண்டுமாம்; இல்லையேல், பெண்களும் பிள்ளைகளும் ஓதலாகாத இடக்கர்ப் பாடல்களைப் பாடுகிற இழிந்த மகனாகின்றானும். ஆகவே, துறவியும் இதனை வாயாற் சொல்கின்றாரே எனத் தோலா மொழித்தேவருக்கும் ஒருபழி பிறக்கின்றது. துறவி பாடுவதனாலேயே இதனைத் தூய பாடல் எனலாம். தாய் முலைப்பாலுண்டார் இதனைப் பாடத் தட்டில்லை என்க. கொங்கை போதருவான் குமிழ்க்கின்றன. தோழியர் அங்கராகம் பூசுகின்றனர். அருகே பொழிலில், நீண்டதொரு கொடி வளர்கின்றது. அதனில், அன்றலர்ந்த பூக்கள் நிறையப் பூத்துள்ளன. பூ நிறையத் தேனொழுகி வழிகின்றது. இச்சுமையால் அக்கொடி தளர்ந்தொசிகின்றது. அக்கொடியைப்போல, இவளும், ஒசிகின்

றாள். கைப்பட்டதும் ஒசிந்து நிற்கின்ற இவள், மேற் பூச்சுப் பூசுவதைப் பொறுப்பாளோ? ஒப்பனையில் நாட்டமோ? இல்லை. அவளுடைய உள்ளத்தியல் பைப் பார்மின் என ஓர் உயர்நிலையைக் காட்டுகின் றார் தேவர்.

> பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத் தக்க
> நாகரிகம் வேண்டு பவர் ''

என்ற வள்ளுவர் கருத்தை,

> முந்தை யிருந்து நட்டோர் கொடுப்பின்
> நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்

என நற்றிணைப் புலவர் ஒருவர் பாடுகின்றார். ஆகவே, அன்புள்ள தோழியர், தனக்கு அழகூட்ட எண்ணியபோது, இவள் அதனை மறுக்கவஞ்சிப் பொறுத்துக்கொள்கின்றாள்; ஈதே அருளுலக நாகரிகம்.

38. வளர்ச்சி:—மேலும், சில திங்கள்கள் கழி கின்றன. கொங்கையால் தளர்ந்த அவள் இடை, சிறிது குழைவெய்துகின்றது. இயற்கையிலேயே பெண்களாயினோர், மங்கை நிலையை யடையுவதன் முன், அழகுற முவ்வொடியலாக வளைந்து நிற்பர். அதனைக் கொங்கையின்மேல் ஏற்றிப் பாடுவதும் வழக்கம். கருங்குழல் மங்கைமார் பலரும் சூழ நின்று தீங்கு வாராதபடி காப்ப, இவள் வளர்கின்றாள். ஒரு செடிக்கு வேலியிட்டுக் காப்பதுபோலவாகும், இக்காவல். இளமையில் இத்தகைய காவல் வேண்டு வதொன்றே. இம்மட்டே செய்ய வேண்டுவது; பின் இயற்கை, தானே பூத்துக் காய்த்துப் பழுத்து

இனிக்கும். " Kinter garten " என்று குழந்தை களைத் தோட்டம் எனப் பேசுவார், இக்கருத்தையே இந்நாளில் போற்றுகின்றனர். இதனையே "வளர்ந்து" என்ற சொல்கொண்டு சுட்டுகின்றார் நம் தோலா மொழித்தேவர். வளர்தலைச் சுட்டுத லின் "காவல்" என்பது, களை கட்டல் வேலியிடல் முதலிய காவல்களையே சுட்டுவதன்றிச் சிறையாகிய காவலை இங்குச் சுட்டவில்லை என்க. மங்கையாய் நின்ற பெண்கள், இவளோடு பாடியாடிக் களித்து முன்னடி வைத்துச் சென்று, அவளுக்கு வழிகாட்டு கின்றனர். "வானத்தை முட்டும் இம்மலையை யாளும் நம் மன்னவனது பழமையான குடியில், அதனை வாழ்விக்கவேண்டியே, பெண்களிற் சிறந்து தோன்றிய நங்காய்! போற்றி!" என அன்னோர், வழி பட்டு வருகின்றனர். இவ்வாறு ஒவ்வொரு குழந்தை யையும் பாராட்டினலன்றே அக்குழவிகள், கல்வியை நன்கு கற்றுத்தேர்ச்சி பெறுவனவாம். இந்நுட்பத் தையும் காண்க. இளமையிலேயே இவள் பெருமை விளங்குதலின், இவ்வாறு உடன் நின்று பழகிய வரும் போற்றுகின்றனர். இங்ஙனம் தொழப்பாடும் வழிபாடுமாகத் தமது வரலாற்று நங்கையை வளர்க் கின்றார் தோலாமொழித் தேவர்.

39. முல்லைப்பூ அரும்பு:— அச்சிறுமியின் கண் களில், புதியதோர் அழகும் ஒளியும் தோன்றுகின் றன. அவை, அசையுந்தோறும், வாள்கொண்டு வீசு வது போலப் பிறழ்கின்றன. வாள்வீச்சும் நீளப் பாய்ந்தோற்போலத் திகைக்கிடுகின்றனர் காண்கின்ற

வர். இளமை இவ்வாறு பழுக்கின்றது. கூடாத முடிகள், இப்பொழுதுகூடித் தரைவரையும் நீண்டு தொங்குகின்றன. அக் கூந்தற்கு அகிற்புகையூட்டு கின்றனர், அவ்வழகு கண்ட தோழியர். அவள் வாயும், செக்கச் சிவந்து பவழம்போல விளங்கு கிறது. பற்கள் விழுந்து முளைத்து நிறைகின்றன; புதிதாகவும் கடைவாயில் தோன்றுகின்றன. அவள், நகைமுகம் கொண்டு புன்முறுவல் பூக்குந்தோறும், இதழின் செம்மைக்கருகே வெண்மையொளி வீசு கின்றன அப்பற்கள். அப்புன்முறுவல், அன் பெனும் நல்லொளியைப் பரப்புகின்றது; காதலையும் ஊட்டப் போவனவாதலின் அச்சமும் அங்கே திகழ்கின்றது. நாமநல்லொளிவேல் நம்பியின் நங் கைக்கு, நாமநல்லொளி முள்ளெயிறுள்ளமை பொருத்தமன்றோ? தந்தையே குழவியாகிப் பிறக் கின்றமையைக் குறிக்க, அங்கும் இங்கும் ஒரே சொற் றொடரைப் பயன்படுத்துகின்றார் நம் தோலா மொழித்தேவர். அப்பற்கள் முல்லை யரும்புபோல ஒளிர்கின்றன. எந்த முல்லை யரும்பு? அவளுக்குள் ளிருந்தே, உடலழிந்த மன்மதன் வளர்ந்தெழுகின் றான். அவனோடு அவனுடைய படைகளும் வளர் கின்றன. அவனுடைய அம்புகளில் ஒன்றாகிய முல் லைப் பூவும், அரும்பு விடுகின்றது. அம்முல்லைப் பூ வரும்பே இப்பற்கள். அத்தகைய விளக்கங்கொண்டு பொலிகின்றன இவை. கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கமே இவ்வாறு முளைவிடுகின்றது. இப் பாட்டிலும், கண்ணியக்கம் கொண்டும் கூந்தலின்

நீளம் கொண்டும் பல் முளைத்தல் கொண்டும், அச் சிறுமியின் வளர்ச்சியைச் சுட்டிக் காட்டித் தக்க அடைகள் கொண்டு, தேவர் புனைந்துரைத்தல் காண்க.

40. கல்வி மலர்:—"குஞ்சியழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சளழகும் அழகல்ல, 'நெஞ்சத்து நல்லம்யாம்' என்னும் நடுவுநிலைமையால் கல்வியழகே யழகு." அவ்வழகு பெண்களுக்கும் வேண்டும் என்பதுபற்றியே யன்றோ, "மஞ்சள் அழகையும்" உடன் கூறியுள்ளனர் பெரியோர், என்பர் வேதநாயகம் பிள்ளையவர்கள். பெண்களை அறிவிலிகளாக்கும் கூட்டத்தைச் சேர்ந்தவரல்லர் தோலாமொழித் தேவர். கல்வியழகு நிரம்புவதனையும் ஓர் அழகெனவே பாடுகின்றார். அழகிய கூந்தல்; இயற்கையழகொடு செயற்கை ஒப்பனைகளால் என்றும் அணியோடு திகழும் கூந்தல், இத்தகையகூந்தலுக்கு மணிமுடி சூட்டவேண்டாவா? தேவர், கல்வி முடி சூட்டுகின்றார். கல்வியறிவு, நூலிலேயே ஏட்டிலேயே நின்றுவிடின் பயனுண்டோ? "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத்தக." நம்மனதிலே ஊன்றி நின்று, நம் எண்ணத்தையும் பேச்சையும் செயலையும் திருத்துவதே கல்வி. ஆகவே, கல்வியனைத்தும் வெறும் பகட்டாயொழியாமல், அவ்வகையில் உள்ளத்தே நிலைநின்று ஒளிர விரும்புகின்றான் அரசன். அரைகுறை கல்வியோ, அவன் வேண்டுவது? நிறைந்த கல்வி; மஞ்சுதோயப்பெற்றுக் குளிர்ந்த இன்ப அன்பு நாடாக விளங்கும் அம்மலைநாட்

டில், கல்வியிற்சிறந்த விஞ்சையராம் ஆடவரும், இவள் கல்விநிறைவைக் கண்டு அஞ்சி நிற்கத்தக்க அத்தகைய மாட்சிமையைத் தன் மகள் அடைய வேண்டுகின்றான் அவ்வரசன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியார் ஆகப் பெறின்"

என்றபடி அவன் எண்ணம் ஈடேறுகின்றது. பல திறக் கல்விகளும் தொழுத்தையராக நின்று இவளுக்குப் பணிவிடை செய்து வருகின்றன. கல்வியைப் பூவெனக்கூறும் உயர்ந்த கருத்தை, அந்நாளிலேயே வெளியிடுகின்றார் தேவர். குறையாது, கல்விகள் பூங்கொத்தாய் மலர்ந்து மணந்து ஒளிர்கின்றன. அஞ்சிலோதிக்கு அப்பூங்கொத்தைச் சூடுகின்றார், நம் புலவர் பெருமானும் தோலாமொழித் தேவர். இவ்வழகாம் கடவுளை, இப்பூக்கொண்டு தானே வழிபடவேண்டும்.

41. தொண்டர் குழாம்:—நல்லார் ஒருவர் உளரேல், அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும்மழை. இந்த நல்ல நங்கை பிறந்ததால், அந் நாடும் சீர் பெற வேண்டாவா ? அத்தகைய குறிகளும் அருட்கொடி படர்ந்த நாட்டிற் காணக்கிடக்கின்றன. அரசனும் நல்லவன்; அவன் மகளும் தொழப்பாடு நவின்ற அருட்கொடி. இவ்விடமகன்ற உலகினர் அனைவரும் இது கண்டு, அன்பு கொண்டொளிரும் வேலானுடைய கடவுட்பேற்றை வியந்து, அக் கடவுட்பேறு பயன்படுமாறு அவனைவழிபடுவதற்பணியே இறைபணி எனக்கொண்டு, மிக விரும்பித் தன்னலமற்றுப் பிறர்க்

கெனவாழும் சீர் அடிமைத்தொழிலில் தங்கி, திருத்தொண்டு புரிந்து வருகின்றனர். இவர்கள் அடிமைகள் அல்லர்; திருத்தொண்டர்கள் ஆவர். வெங்கண் யானையை அடக்கியாளும் வெற்றியொளி கொண்டு உலகைவிளங்கச்செய்யும்வேந்தர்களும், இவனுடைய இந்நிலைமையைக்கண்டு, வணங்காமல் நீண்டமுடியும் வணங்கத் தொண்டர்படையில் தலையணியில் நிற்கின்றனர். இவ்வளவும் நிகழ்ந்தது அம்மை பிறந்த பின்னேதான். இவ்வாறு அருள் வெள்ளம், எவர் முனைப்பும் சாய எங்கும் புரண்டோடுகின்றது.

இளவேனில் திருவிழா

42. பொழுதறிவித்தல்:—நங்கையாம் கொடி வளர்கிறது; அதனில் காமமோ கொத்தாக அரும்புவிடுகிறது. மங்கைப்பருவம் இவளை வந்தடைகிறது. இன்னும் மேலே மேலே, இவ்வாறே வளர நிற்கின்றது இவ்வழகிய கொடி. இவ்வாறிருக்கின்ற காலத்திலே, ஒருநாள், அரசனெதிரே ஒரு பெண் வருகின்றாள். வசந்ததிலகை என்று அவளைச் சிறப்பித்துச் சொல்கின்றனர் அங்குள்ளார். இளவேனிற் காலத்திற்கே பொட்டிட்டாற்போன்றாள் எனப் பொருள்படும் பெயர் படைத்த இத்தோழி, எந்தநிலையில் காண்கின்றாள் அவ்வரசனை. பைங்கண்படைத்த பெரியதோர் யானைமீது செல்லும் மறம்மிக்க மனத்தோடே மன்னவன் விளங்குகின்றான். மறம் மிக்க யானைமீது செல்லும் மனத்தை, இன்பமிக்க இளவேனிற் பூத்த இளமரக்காவில் இழுத்துச் செல்லும் மறைமொழி ஓதுகின்றாள். "வாழிய அரசே, பெரும் பொழுதுகளில்

வைத்துத் தலைசிறந்ததாய் வேறோர் அடையும் இன்றிப் 'பொழுது' என்றே சொல்லத்தக்க இளவேனிற் காலம் வந்து நிலைபெற்றுத் தங்கியுள்ளது'' என்கிறாள்.

43. குணமிலான் செல்வம்:--மேலே, இவள் தான் சொன்னதற்கு விரிவுரை செய்கிறாள். வயந்ததிலகைக் கன்றோ வயந்தகாலச் சிறப்புத் தெரியும். "மறயானை மீது செல்லும் மனம்கொண்ட மன்னவா! நீயோ மன்னர் மன்னன்; மறக்குறியாக அணிந்து விளங்கும் கழலும் உன்னோடும் பிறந்ததே போலக் காலிற் செறிந்து விளங்குகின்றது. ஆதலின் மறயானைகளின் மீது என்மனம் போதல்வேண்டா. தேன்பொழியும் மலர்மாலையை இன்பக்குறியாய் அணிந்துள்ளாய். அம்மாலை என்ன அழகாக அசைகின்றது! அதனிற் கேற்ப நீ, இன்ப மூட்டும் இளமரக் காவை வந்து காண். நீ காணாதவரையில் அக்காவின் அழகு, அழகாகாது வீணாகியன்றோ ஒழிகிறது. அப்பொழிலின் இடத்தே கோங்கம் பூக்கள் விளக்கத்தோடும் மலர்ந்து, தேன் துளியை விடாது பொழிந்து தூவுகின்றன. மரத்தின் புறமெல்லாம் செம்பொன்னாகப் பூத்து நிற்கின்றன அக் கோங்கமரங்கள். குணமிலார் செல்வம், நாய்கொண்ட தெங்கம் பழமாய்ப் புகழ் மணமின்றிப் பயன்படாது வீணேகிடப்பது போல, இப்பூக்களும் நறுமண மென்பதின்றி வாளா கிடக்கின்றனவே. இவ்வாறு நறுமணங் கமழும் நல்லமலர்களை தொட்டு, நறுமணமற்ற வெறுமலர் வரையிலும், எங்குமாய்ப் பரந்து விரிந்துளது இளவேனிற்

காலம். இவற்றை நீகாண்டலால், குணமுளான் செல்வமே போல, இவை பயனடைந்து, நின் தேங்கமழுயிர்ப்பான் நறுமணமும் கமழப்பெறுவனவா மன்றோ?

44. விருந்தினர்:—இளவேனிற் காலமன்றோ வேனிலான் எனப் பெயர்பெற்ற காமன் வெற்றிபெறும் காலம். அவனுடைய படைவீடாகிய பொழிலில் வெற்றித் திருவிழா நடைபெறுகிறது. அவ்வெற்றியினால் தம்மை மறந்து உவகைபூத்த பொழில்கள், மயிர்க்கூச்செறிந்து நின்றாற்போலப் பூங்கொத்துக்களைப் பூத்து நிற்கின்றன. உவகையாலும் அன்பாலும் அப்பூங்கொத்துக்களாலும் வருவோரை இனிது வரவேற்கும் மெல்லியலார் என ஒசிந்து நிற்கின்றன அவை. நீலமணி போலும் வண்டுகள் அனைத்தும், விருந்தினர்களாக உட்புகுகின்றன. அவற்றினெதிரே, தேனொழுகும் பூங்கொத்துக்களை, அப்பொழில்கள், எதிர் ஏந்திநின்று வரவேற்கின்றன. நீரிடை குளிப்பதேபோல அம்மலரிடை குளிக்கின்றன அவ்வண்டுகள்; குளித்த களைப்புத்தீர நறுந்தேனை வாயின்புறத்தே வழிய வழியக் குடிக்கின்றன. தம்மைக்கண்டு மகிழ்பூத்து நிற்கும் தம்முடைய வாழ்க்கைத் துணையாம் பெண்வண்டுகளோடும் அவை விளையாடுகின்றன. தேன்கொண்டு ஊற்றெடுக்கும் அழகு நிறைந்த மாம்பூங் கொத்துக்களின்மேலே இணை பிரியாது இன்பத்துடன் இரண்டும் சேர்ந்து ஏறி மிதிக்கின்றன. இம்மிதித்தலைப் பொறுக்கமாட்டாத அம்மெல்லிய மாம்பூங்கொத்துக்கள், தலைசாய்கின்

றன. இவ்வாறு மதர்த்துக் களித்துள்ளன அவ் வண்டுகள்.

45. பாண்படை:-அவ்வண்டுகளே பாணர்கள். காமனது பாண்படை இருந்தபடி ஈது. தம்மரசனை அவைகளும் பாடுகின்றன. தனக்குக் காவலாக அமைந்து, விளக்கத்தோடும் அழகோடும் பொலியும் மலரம்புகொண்ட மன்மதன், இவ் வேனிற்காலத்தே, எவ்வுலகையும் வென்று கழல் அணிந்து கொள்கின்றான். அவ்வாறு விளங்கும் திருவடிகளைப் பரவித் தொழுகின்றது அந்தப்பாண்படை. அழகு படிந்துள்ள மலர்களில் வீழ்ந்து பாடுகின்ற இவ் வண்டுகள் இங்கு இடையீடின்றிப் பாடாநிற்கின்றன. இப்பாண்படைக்கு உண்டாட்டும் நடக்கின்றது. கொடிகள் எனும் மகளிர், தேன்வழியும் மலர் என்னும் கிண்ணத்திலே தேன் கொண்டுவந்து, அப் பாண்படையெதிரே, ஏந்தி நிற்கின்றனர்; "பொலிவு உடைய இக்கள்ளை (பூவின்கள்ளை)க் குடைந்து குடைந்து குடியுங்கள்" என்று அசைந்து அழைத்து ஊட்டுகின்றனர்; அவ்வண்டுகளாம் பாணரும் வாய் மடுக்கின்றனர்.

46. கரிநெருப்பு:--அழகிய விளக்குக்களை ஏற்றி வைத்தாற்போல, முருக்கம் பூக்கள் செக்கச்சிவந்து அழகாகமலர்ந்து கொம்புகளில் அணி அணியாக விளங்குகின்றன. தங்க இடம்பெறாதவண்டுகள், நெருக்குண்டு, அப்பூக்களின்மேல்விழுந்துமிதிக்கின்றன. இந்தத் தோற்றம் எங்ஙனம் உள்ளது? மேலே புகை போல முகில்கள் தவழ, பழகியவர்களும் வழிதெரி

யாமல் மயங்கும் அந்தக் கானத்திலே, செக்கச் சிவந்த சுடர், கொழுந்துவிட்டெரிய, செந்தீ எங்கும் பரவியபோது, கருநெருப்பாம் கரித்துண்டுகளெழுந்தெழுந்து விழுவதேபோல விளங்குகிறது இக்காட்சி.

47. எரிமலையோ? மலர்மலையோ?:—அசோகம், தளிராலும் அழகியது, பூவாலும் அழகியது; அவ்வழகினைக்கண்ட வண்டுகள், நாவில் தேனூற அவாவினோடும் அருகு செல்கின்றன. அருகே வரவர, தளிரும் பூவும் செந்நெருப்பெனத் திகழ்கின்றன. நெருப்பென எண்ணியதும் வெப்பமும் மேலே வீசுவது போல அவ்வண்டுகளுக்குத் தோன்றுகிறது. அடிமுதல் முடிவரையும் தளிர்த்துப் பூத்திருக்கிற இவ்வழகிய அசோக மரம், நெருப்புக் குன்றமே என வண்டுகள், முடிவுசெய்கின்றன. மனத்தகத்தே மறுவற்ற இவ்வண்டுகள், வெருவியோடமுற்படுகின்றன. மறுவற்ற மனம்வாடலாகுமோ? தென்றல் வீசுகின்றது; பூவும் தளிர்களும் அசைகின்றன. கொத்துக்களிலிருந்தும் வெளிவந்த தேன்றுளி, இவ்வண்டுகள் மேலே விழுகின்றது, நாக்கிலும் படுகின்றது; தீப்பொறி எனஎரிக்காது தேனென இனிக்கிறது; உடலில் படுகின்றது; உடல் கொப்புளம் கொள்ளவில்லை; உடலொடு உள்ளமும் குளிரக்குளிர்ந்து விளங்குகிறது. மயக்க உணர்வு நீங்கி விடுகின்றது. இது "நெருப்பு மலையல்ல மலர் மலையே" எனத் தெளிகின்றன வண்டுகள்; மேலேசெல்கின்றன; பூவிலே தாம் விரும்பியதை அடைகின்றன.

48. தேவரின் சிறு குயில்:—திருமங்கையாழ்வார் திருவெள்ளறைக்குச் செல்கின்றார். இறைவன் இன்பம் எங்கும் வழிகிறது. இனியதோர் இளங் குயில் மாம்பொழிலில் தளிர்களைத் தின்கின்றது. பழகப் பழகப் பாலும்புளிக்குமன்றோ! தான் மிக விரும்பிய மாந்தளிரை விட்டோடித் தித்திக்கும் கனியையும் தேனையும் கண்டறிந்து உண்ணச் செல்கிறது அக்குயில். இறைவன் இன்பமானது எங்குமாய் நிறைந்து நமக்கு இன்பமூட்டி இன்னருள் சுரக்கும் வகை இதுதான் எனக் காட்டி, அதனில் திளைக்கின்ற திருமங்கை மன்னர்,

மாம்பொழில் தளிர்கோதிய மடக்குயில்
 வாயது துவர்ப்பெய்தத்
தீம்பலங்கனி தேனது நுகர்திரு
 வெள்ளறை நின்றானே (பெரியதி-5-3-4)

எனப் பாடுகின்றார். இக் கடவுட் காட்சியைக் காண்கிறார் தேவர். அறவாழியந்தணனை வழிபடும் இவரை, இக்காட்சி அறவுலகிற் கொண்டுசென்று அறமொன்றினையே வற்புறுத்துகின்றது. மாந்தளிர்களை மூக்கின் அலகால் கொந்தித்தின்ற சிறுகுயிலுக்கு அது துவர்க்கின்றது. இளவேனிற்காலம் தொடங்கியபோது தளிர்க்கின்ற இம்மரங்கள், பின்னை தளிர் முற்றுமாதலின் துவர்ப்பது இயல்பு தானே. இதற்குள் பூக்கள் பூத்து விளங்குகின்றன அம்மரங்கள். சிறு பறவை யாதலின் தொலைவில் பறந்து செல்லவோ இயலாது. எங்கும் இன்ப வெள்ளம் புரள்கின்ற இவ்விளவேனிற் காலத்தே

பறந்தும் செல்லவேண்டுமா ; அதனருகிலேயே முருக்கம் பூக்கள் செக்கச் சிவந்து கண்ணைக் கவர்கின்றன. அப்பூக்கள் கிளைகள் நிறைய மலர்ந்து திகழ்கின்றன. அம்முருக்கம் பொழிலிலுள்ள இத்தகைய மரக்கிளைகள், மாம்பொழிலில் வாழும் சிறு குயிலினருகே நீண்டு கிடக்கின்றன. குந்திய இடத்தினின்றே அந்தப் பூவைக் கறிக்கின்றது இச்சிறு குயில். அப்பூவினுள்ளே பெருக்கெடுக்கும் பூங்கள்ளை இப்பறவை வாயாரக் குடித்து மகிழ்கிறது ; தேன் வழிய வழிய அவ்வின்பத்துக்கு ஒரு போக்கு வீடாக, இன்சுவை பொங்கி வழியப் பாடுகின்றது. மாந்தளிரின் நல்ல பெருவளம் மாருமல் நின்ருலும், இன்சுவைப் பண்பு மாறிய பின், அதனை அங்குப் பிறந்த சிறிய தொரு குயிலும் நாடவில்லையல்லவா ! அஃதேபோல, இவ்வுலகிலே அளவிலாச் செல்வம் படைத்தவரையும், அவர்களிடம் இன்சொல் ஈகை முதலிய இன்சுவைப் பண்புகள் உள்ளபோது தான் எவ்வெவரும் அமர்ந்து வாழ்வர். அப்பண்புகள் இல்லையானல் அவர்களைச் சார்பவர் இல்லையே இவ்வுலகில். இவ்வாறு ,வேற்றுப் பொருள் வைப்பணிகொண்டு அறவழி கூட்டுகின்ருர் தேவர். பெரும் புலவர்கள் தம் நோக்கத்திற்கேற்ப, ஒரு காட்சியே கூடவுட் காட்சியாகவும், அறக்காட்சியாகவும், மாறுதல் காண்க. திருமங்கை மன்னர் பாடலையே புனைந்துரைத்துப் புதுச்சுவை யூட்டுகின்ற தேவர் திறம் பாராட்டத் தக்கதன்ருே! மங்கை மன்னர், மக்களை

யும் பறவையையும் ஒன்றாகக் காணும் கடவுட் காட்சியால் வாய் என்றார்; தேவரோ அதனைத் தெளிவாகப் பறவை எனச் சுட்டத் துண்டம் என்கிறார்! இன்சுவை மகிழ்ந்த கோதுதலைப் பாடினார் மன்னர்! துவர்ப்பெடுக்கத் தொடங்கிய நிலையில் அதனைப் பன்முறை கொந்திக் கொந்திநிற்கும் கடைநிலையைத் தேவர் கண்டு, அக்கறித்தலைப் பாடுகின்றார். தீம்பலங்கனித் தேன் அகப்பட்டது திருமங்கை மன்னரின் குயிலுக்கு, "இனியபழம் போல இனிமை கனிந்த தேன்" எனவும் மன்னர் பாடல் பொருள்படும். ஆதலின் தேவர் குயிலுக்குப் பூக்களே வாயார மாந்தக் கிட்டுகிறது. மன்னர் குயில்இந்தப்பொருள்களை நுகரப்பலவிடமும் சென்றிருத்தல் வேண்டும். தேவரது குயிலோ, இருந்த இடத்திலிருந்தே, மருங்கு நீண்ட பூஞ்சினைப் பூக்களை வாயார மாந்துகின்றது. மடக்குயில் எனப் பாடினார் மன்னர்; மடக்குயிலோ மிகச் சிறிய குயிலாதலின், தேவரது சிறு குயில், வெளியே பறந்து செல்லமாட்டாமல் இருந்த இடத்திருந்தே இன்பம் நுகர்கிறது. நுகர்தலைக் கண்டார் மன்னர்; கடவுளிடையே விழுந்தார். தேவர் நுகர்தலைக் கண்டு அறவுலகிற் புகுகையில், அக்குயில் பாட, அதனைக் கேட்டுக்கொண்டே மேலெழுகின்றார். குயிலின் பாடல் இனிப்பதேன் என்பதையும் தற்குறிப்பேற்றமாக அழகு பெறப் புனைந்துரைக்கிறார் தேவர்.

49. சுராப்பாவை:—பொழில்களினருகே செல்கின்றோம். எங்கும் இன்னொலி புலம்பொலியாகக்

கேட்கின்றது. ஈதென்னை? ஈதோ குரவமரம் ஒன்று தோன்றுகிறது. இதனைத் தம் மகளே எனத் தழுவிநிற்கின்றன இப்பொழில்கள். இக்குராப்பெண் அழகியதொரு நீலமணி மாலை அணிந்துள்ளாள். அம்மாலை இன்னிசைபாடும் மாலையாகவும் விளங்குகின்றது. இசையோடெழுந்து மலரூதும் வண்டுகள் கோவைமாலையாகக் குராமரத்தே மொய்த்து நிற்கின்றன. இதன் பூவைப் பார்த்தீர்களா? இவை, சிறிய பெண்ணைபோல் செதுக்கப்பட்ட பாவைகளாகத் திகழ்கின்றன. குராப்பெண் இப்பாவைகளைக் கொண்டு விளையாடித் தன் இளமையைக் கழிக்கின்றாள். இவ்விளவேனிற் காலத்தில் எங்கும் எவற்றிற்கும் இன்பமூட்டும் வேனிலான் அல்லது காமன் எனும் காதலன், இங்கும் வந்து பயில்கின்றான். இக்குராப்பாவையின் ஆவியை (உயிர்-மணம்) மிக விரும்பித் துய்க்கின்றான். காண்கின்றனர் இக்காட்சியைப் பெற்றோராகிய பொழில்கள். "இளமையிலேயே இக்காதல் எழுகின்றதே; விட்டு நீங்கிலோ? வேனிலான் இவளைக் கைவிட்டாலோ! ஆவி நீங்கும் அன்றோ!" என்று அஞ்சிப் புலம்புகின்ற புலம்பலே நாம் கேட்கின்ற ஒலி. பூவையின் ஒலி; கிளியின் ஒலி எனக் கூறுகின்றீர்களோ! ஆம், ஒரு பொழில், பூவையின் ஒலிகொண்டு புலம்புகின்றது; மற்றொரு பொழில், கிளியின் ஒலிகொண்டு புலம்புகின்றது.

50. மனைவனம் புகுதல் :—இன்னவாறு இளவேனிற்கால வருகையைப் புனைந்துரைத்து, மன்னன்,

மனங்கொள்ள உணர்த்துகிறாள் வயந்ததிலகை. கேட்கின்றான் அரசன்: அங்கேசெல்லவேண்டுமென விழைகின்றான். இவனது அன்போ, மனைவியாகவும் மக்களாகவும் வளர்ந்திருத்தலினால் தான் பெற்ற இன்பம் அவர்களும் பெறுக எனத் தன் மக்களோடும், உயர்ந்த தன்னுரிமையாம் மனைவியோடும், மெய் காப்பாளரோடும், மெல்லிய தலையுடைய யானைமீதும் தேரின் மீதும், சிவிகைமீதும் ஏறிவருகிறான்; நகரை நீங்குகின்றனன்; மனோவனம் என்னும் இந்த இள மரக்காவை நண்ணுகிறான். ஆண்மகனின் உரிமை யனைத்தும் அவன் மனைவியால் வரும் எனச் சுட்ட அவளை 'உரிமை' என்கின்றார் தோலா மொழித் தேவர்.

51. இயற்கை வரவேற்பு:—அரசன் அம் மனோ வனத்தைச் சென்றணைந்தவுடன், இயற்கையும் அவனை யறிந்து வரவேற்கின்றதெனத் தற்குறிப் பேற்றமாகப் பல செய்யுள்கள் பாடுகின்றார் நம் தோலா மொழித்தேவர். அரசனை எதிர்கொள்ளும் போது, ஒருவர் பூவாலே நடைப்பாவாடை இடுவர்; ஒரு சிலர் போற்றிசைப்பர்; வாழ்த்துப்பாடும் மங் கல மகளிர் கைகூப்பித் தொழுது நிற்பர்; மற்றுஞ் சில மகளிர் திருச்சுண்ணந் தூவுவார். இருபுறத் தும் பூங்கவரி வீசுவர் ஒரு சிலர்; ஒரு புறத்தே பொற்குடை பிடிப்பார் அங்கொரு சிலர். ஒரு சிலர் அவன் திருவடியைப் புகழ்ந்து பாடுவர். ஒரு சிலர், விடு பூக்களை மிகுதியும் சொரிவர். ஒரு சிலர் விசிறி கொண்டு வீசுவரர். இளவேனிற் காலமும் இவ்வா

சனே இவ்வாறு எதிர் கொள்கின்றது. ஈதோ ஒரு தேமாமரம், நறுமணமிக்க மலர்களைத் தூவி, மன்னவன் நடந்துசெல்ல நடைப்பாவாடையைப் பரப்புகின்றது. அம்மாமரம் எதிர்நின்றும் வரவேற்கிறது. இம் மரத்திலே வாழும் சிறு குயில்கள் பாடுகின்றன. என்ன பாட்டு? 'வாழியரச! போற்றி! வாழ்க வெல்க,' எனப் போற்றிசைத்துப்பாடுவது கேளுங்கள். தாவியோடும் குதிரைகள் பூட்டிய தேரிலே விரைந்து செல்லும் மன்னர்களை வாழ்த்துவர் மகளிர். அதாவது மன்னவர்கள் உலாவவோ வேட்டைக்கோ, போர்க்கோ புறப்பட்ட போதெல்லாம் அவர்களுக்கு நன்மையுண்டாக வாழ்த்துவோர் மகளிரே என்றபடி. இந்த மங்கல மகளிர் போலத்தூய்மையாற் சிறந்த இவ்விளங்கொடிகளும், தம் தளிரன்ன கைகளைக் குவித்துத் தொழுது நிற்கின்றன. "மங்கலம், சொல்" என்று, உவமையாகிய மகளிர்க்கு வந்த அடையை, இளங்கொடிக்கும் ஏற்றி, வண்டுகளே வாயார வாழ்த்துகின்றன என்றேனும், அசைதலின் ஒலியே வாழ்த்தாக வாழ்த்துகின்றன என்றேனுங் கொள்க.

52. கவரியும் குடையும்:—தளிர்த்த கொடியாம் மகளிர் செய்கின்ற வழிபாடு ஈது. பூத்த கொடியாகின்ற பூவைமார் செய்யும் வழிபாட்டைப் பாரீன். அழகும் மணமும் மிக்க மலர்களிலிருந்து வெளிப் போந்து, நறுமணம் கமழும் பூப்பொடிகளை இக் கொடிகள், தெள்ளி எடுத்த திருப்பொற் சுண்ணமாகத் தூவுகின்றன. பல்வகையாலும் வெற்றி பெற்

றுக் கழலணிந்த அம்மன்னவன் மேலே, இந்தத் திருப்பொற் சுண்ணம் இடித்த தம் பெற்றியை அவனும் பாராட்டும்படி, சொரிகின்றன. குங்கும மரமோ தனது பூவையே கவரியாகக்கொண்டு வீசுகின்றது. என்ன புதுமை? மற்றைய கவரிவீசும் பொழுது நறுமணம் எழுவதுண்டோ. இங்கோ, இப்பூங்கவரி வீசுந்தோறும் சுற்றிலும் நறுமணம் கமழ்வதை ஆழ்ந்து அறிமின். அரசணையில் அமர்கின்ற பொழுது, வெண்குடை பிடிப்பது வழக்கம். உலாவப் போகும்போது பொற்குடை பிடிப்பது வழக்கமாம். "இது பவனிக்குடையாதலின் பொன்னங் குடையாயிற்று" என்பர் நச்சினார்க்கினியர். கோங்க மலர்கள் குடையெனப் பூக்கின்றன. அவற்றின் நிறமோ பொன்னிறம். வானளாவ ஓங்கி நிற்கும் இம்மரங்கள் பூத்து, இவ்வரசனுக்குப் பொற்குடை ஏந்தி நிற்கின்றன.

கோங்கு பொற்குடை கொண்டு கவித்தன
வாங்கு வாகைவ ளைத்தன சாய்மரை
கூங்கு யிற்குல மின்னியங் கொண்டொலி
பாங்கு வண்டொடு பாடின தேனினம்.
மலர்ந்த பூஞ்சிகை வார்கொடி மங்கையர்
தலந்த லந்தொறும் ஆடினர் தாழ்ந்தனர்
கலந்த காதன்மை காட்டுநர் போலவே
அலர்ந்த வண்டளிர் மாவின மேயெலாம்

என வருகின்ற யசோதர காவியப் பாடல்களை (முதல் சுருக்கம் 7-8 பா) ஒப்புநோக்குக. இவ்வாறு இயற்கையை இயையவைத்துப் பாடுவது பாவலர் மரபு.

53 திருப்புகழ்:-பொற்குடையும் பூங்கவரியும்கண் டவுடன் அரசனது புகழைப்பாடவேண்டாவா! கொடிகளும்மகிழ்ந்து கூத்தாடித்தொலைவில் இருப்பார்க்கும்இவ்வூரின் இன்பப்பெருக்கைக் காட்டா நிற்கும்படி மிக உயர்ந்து ஓங்கிய தனியூரின் தலைவனான இவ்வரசன், இங்கு வருகின்றான். இதற்கேற்ப இவனுடைய தனிச் சிறப்பியல்புகளைத் திருவடியோடு இணைத்துத் திருப்புகழ் பாடுகின்றன அழகிய வண்டுகள். தோலாமொழித் தேவர் காதுகொண்டு அத்திருப்புகழைக் கேளுங்கள். கூரிய நுனைகொண்டு பொலியும் வேலேந்திய இவ்வரசன் மனம், வேட்டை முதலியவற்றிற்செல்லாது இங்கேயே தங்கிவிட, விடுபூக்கள் சொரிவாரைப் போலக் கிளிகள், தம்முடைய வளைந்த அலகிரல் குளிர்நறும் பூக்களைக் கோதி இவன்மீது சொரிகின்றன.

54. தென்றல் விசிறி:—அரசன்வந்த களைப்பை ஆற்ற வேண்டாவா? தென்றலே விசிறி வீசிக் களைப்பாற்றுகின்றது. புரவலனாய் உலகைக் காப்பானையும் காத்தளிக்கும் முறையைப் பாருங்கள். திருமுடிமேல் பூக்களைச் சூடியுள்ளான் அரசன். அவற்றிலே மலரும் நிலையில் நிற்பன சில; அவற்றின் மேலே இத் தென்றல் வீசுகின்றது. அவ்வின்பத்தால் மகிழ்ந்து உடற் பூத்தாற்போல மலர்கின்றன அவை. அத்தகைய இன்பந் தருவது அத்தென்றல்; தென்றலின் பெருமையை இப்போதலர்த்தலின்வாயிலாகக் கூறிய நுட்பத்தில் நாம் திளைத்து ஆடவேண்டும். இத்தென்றற்கு இவ்வாற்றல் எங்ஙனம் வரு

கிறது ! இத்தென்றலே ஒரு மகனுக்குக் குரவத்தே குடைந்தாடச் செய்கிறார் தோலா மொழித்தேவர். பின்னே குளிர்நறவம் கொப்பளிக்கின்றான், தென்றலான். வண்டினங்கள் இவன் இன்பத்தைக்கண்டு ஆர்த்து ஒலித்து இன்னிசை பாடுகின்றன. அருவி நீரிற் சென்று குளிக்கின்றான் தென்றலான். உலாப்புறம் போகின்றான் இவன். நறுமணத்தோடுமலர்ந்துள பூங்கொத்துக்களைப் பூச்செண்டுகொண்டு ஆடிச் செல்வாரைப்போலெங்கும் வீசி விளையாடி வருகின்றான்; போகுமிடம் எல்லாம் பூமணம் வீசுகிறது. இவ்வாறு இன்பமாய் வருகின்ற தென்றலானே இவ்வரசனுக்கு விசிறி வீசுகின்றான். வீசுகின்ற காற்று இன்பமாய் இருக்கவேண்டுமானால், மெல்லென வீசுதல் வேண்டும்; நறுமணம் கமழ்தல்வேண்டும்; வெச்சென்றின்றித் தண்ணென்று வருதலும் வேண்டும். இத்தென்றலும், போதலர அசைகின்ற தொன்றேயாதலின் மெல்லென்றே வீசலாகின்றது. குரவகத்துக் குடைந்து, குளிர்நறவங் கொப்பளித்து, விரைமலர்ந்த துணர்வீசி விரைநாற வருதலினால், நறுமணவடிவேஅத்தென்றலின் வடிவமாகும். ஈதுஅருவி நீரளைந்து வருதலினால் பனிநீர்த் துளிகளைச சிதறிக்கொண்டு தண்ணென உடலும் உள்ளமும் குளிர வீசுகின்றது.

56. மனைவிக்குக் காட்டுதல்:—இந்தப்படி இவனை இளவேனில் எதிர்கொள்கிறது. தன்னை விரும்பும் பெண்களுக்குத் தான் மிக மகிழ்ந்து இப்பொழிலின் அழகைக் காட்டுகின்றான். மின்னல் போன்ற

இடைநோவ, ஓடியாடி விளையாட அவர்களை விட்ட்ருள்கின்றான். இவ்வாறு விளையாடுபவன் யார்? இவ்வுலகை யாளும் வேந்தன்! வெற்றிவேலேந்திய கையான்! தனிச் செங்கோல் செலுத்தும் தகுதியான்! அழகிய யானைப் படையாற் சிறந்த அரசர்களும் போற்றி வணங்க விரும்பும் தனிச் செங்கோலான். இவ்வாறு அரசப்பொருள் நிலைமையோடு இவ்வின்ப நிலையைப் பன்முறையும் ஒப்பிட்டுக் காட்டுகின்றார் தோலா மொழித்தேவர்.

56. நும் செல்வமே போலும்:—அரசன் தன் மனைவியோடும், மெய் காப்பவராய் வந்த மடவாரோடும், அன்போடு பேசுவதைக் கேளுங்கள். உடனிலைச் சுற்றத்தாரோடு சூழ்ந்தெண்ணியபோது பேசிய பேச்சு அறிவு ததும்புவது; இப்பேச்சோ அன்பு ததும்புவது. 'பெண்களே! உங்களுடைய கூந்தலின் செறிப்பு இயற்கையணியாகப் பொலிகின்றது. அவ்வழகுக்கேற்ப இப்பொழிலின் இயற்கையழகையும் பாருங்கள். ஈதோ, இந்த இள அசோக மரம் எரிந்து மின்னும் விளக்குச் சுடர்கொண்டு தன்னைப் புனைந்து நிற்பதுபோலக் கொத்துக் கொத்தாகப் பூத்து நிற்கின்றதைப் பாருங்கள். நெற்பொரியையும் பூவையுங் கலந்து சிந்தி வாழ்த்தி வரவேற்பவரைப் போலப் புன்கமரம் பொரிபோலப் பூக்கும் நறுமண மிக்க பூக்களைச் சிந்தி மணமூட்டும் அந்த நீர்த்துறையைக் காணுங்கள். என்ன அழகு! வரிப் பாட்டுக்களை இவ்வண்டுகள் பாடி மலரில் ஊதுகின்றன. இவ்வரிப் பாட்டே தாலாட்டுப்

பாட்டாக நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்கின்றாள் இவ்விள வேனிற் செல்வி. கண்டீரோ இப் புதுமையை! நும் செல்வம்போல் பொலிகின்றமை பாருங்கள்.

57. கையும் சாயலும்:—'கருமுகில் போலக் கண்டோர் மனங்குளிரக் கறுத்த கூந்தலால் அழகிய பெண்களே! ஈதோ அழகாகத் தழைத்தோங்கியுள்ள இந்த அசோகினைப் பாருங்கள். இத் தளிர்களில் என்ன அழகு! கார்போலப் பிறருக் குதவிச் சிவந்த நும் கைத்தலங்களைப் பார்க்கின்றன இவை; தாமும் அவற்றைப்போல் ஆக எண்ணி இத் தளிர்களை யீன்று விளங்குகின்றன. கச்சணிந்த மார்புடையீர்! இக் குருக்கத்திக் கொடி, இம்மரத்தைச் சுற்றி நிற்பதைப் பாருங்கள். நும் சாயலோடும் இடை நொசிய நீர் திரும்புவது போலத் துவண்டு வளைய எண்ணி, இவ்வழகிய குருக்கத்தி, தாவித் தாவி இளங் கொடிகளை மேலும் மேலும் விட்டு வளர்வதைப் பாருங்கள். உங்கள் அழகாம் செல்வத்தைக் கண்டே, இவையும் அதுபோல அழகு பெறுவது காண்க.

58. மணத்தோடு மாமையும் வாயோடு சொல்லும்:—'இம் மாமரத்தின் மெல்லிய தளிர்கள் உங்களுடைய மாமைநிறம் கொண்டே வளர்கின்றன. இம் மாமரம் ஈதோ ஏந்தி நிற்கின்ற இவ் விளைய இனிய குயில்கள் ஏன் இங்கு உள்ளன? நீங்கள் இங்கு வந்து பேசுகின்ற இனிய சொற்களைக் கற்றுக் கொள்ளவே யன்றோ? குயில் மட்டுமோ?

தேன் வண்டுகளும் உங்கள் கூந்தலின் நறுமணத்தை நாடி வந்து இசைப்பாட்டுப் பாடுகின்றனவே. தளிர்த்து வளரும் இந்த மெல்லிய முருக்க மரங்கள், அவ்வழகிய சொற்களைப் பேசும் உம்முடைய சிவந்த வாயின் அழகை நோக்கி நோக்கி அதனிலேயே தோய்ந்து அவ்வடிவே பெற்றுப் பூவொடு மலர்ந்து விளக்குகின்றன.

59. கண்மலர்:—'இந்த நீர் நிறைந்த குளத்தையும், இதனிடையே விளங்குகின்ற நீராழிப் பள்ளியினையும், பாரீர்! இக்குளத்திலும், இந்தப் பள்ளியைச் சுற்றிலும், கருங்குவளையும் செங்கழுநீரும் செந்தாமரையும் உங்கள் கண்போல் விரிந்து, கண்டோர் மனத்தைத் திகைக்கச் செய்கின்றன. பூவம்புகொண்ட மன்மதனையும், இவ்வாறு, இவை மனங்கலங்கச் செய்து மருட்டுமன்றோ! அருமையான பச்சைச் சிறகோடு விளங்கும் கிளிபோலப் பேசும் பெண்களே! இவ்விளவேனிற் காலத்தே, காதலரை யில்லாதவர்கள் உயிர் பிழைத்து வாழ முடியுமோ!'

சிற்றின்பத்திலே பழுத்த பேரின்பம்

60. திருவிழா முடிவு:—இவ்வாறு உரிமை காப்பாளராக வந்த பெண்களோடும் தன் மனைவியோடும் மன்னவன் உரையாடி இளவேனிற்காலத் திருவிழாவிற் கலந்து கொள்கிறான். அப்பெண்களும் இவற்றைக்கண்டு வியப்பெய்தி நிற்கின்றனர்; அரசனுக்கு ஓரெண்ணம் தோற்றுகின்றது; பூப்பறிக்கின்றான்;

பின்னே பேரொளிமணிகள் இழைத்த மதிலி டையே, கடவுட்செனப் பொன்னூற் சமைத்த திருக் கோயிலினுள்ளே, பூவோடும் புகுகின்றான்.

இயற்கை இன்பம்—இளவேனிற் றிருவிழா வைப் புலவர் பலரும் பாடியுள்ளனர். நளன் அன் னத்தைப் பிடிக்கச் சென்றது இவ்விளவேனிற் போதில் தான். நைடதமும் இவ்விளையாட்டைப் புனைந்துரைக்கின்றது. நளவெண்பாவும் பெண்க ளோடு நளன் விளையாடி அன்னத்தைப் பிடித்த தைப் பாடுகிறது. யசோதர காவியமும் இத னைப் புகழ்கின்றது. தோலா மொழித்தேவர் போக்கைச் சிறிது உற்று நோக்குவோம். இள வேனிற் றிருவிழா அங்கேயே முடியாமல் நம்மை உயரத் தூக்கிச் செல்கின்றது. இம்மன மாற்றத் தைப் பன்முறையும் நம் புலவரே வற்புறுத்து வதைக் கண்டோம். "பைங்கண்மால் யானையாற் கும் பருவம் வந்திருந்ததென்றாள்" என்று அரசனை யானைமீதேற்றுகின்றார் தோலா மொழித்தேவர்; ஈது, அரச செல்வத்தில் திளைக்கும் அவன் மனத் தைக் குறிக்கின்றதென யாவரும் ஒப்புவர். அத் தகைய மனத்தை இன்பத்தில் செலுத்துகின்றாள் இவ் வயந்ததிலகை. இவள் ஓதிய மந்திரம் இயற் கையைப் புனைந்துரைக்கும் பாடலேயாம். இள வேனிற் பொழிலிடையே புகுகின்றானிவன்; விளை யாடுகின்றான்; 'தனியவரை முனிவு செய்யும் தனி இளவேனில்' எனப் புகழ்கிறான். தனியிருக்கும் தன் பெண்ணின் நினைவு அவனுக்கு வருகிறது.

அவட்கென வாழும் அன்பு கொழுந்து விடுகிறது. "கடவுள் அவனைக் காப்பாராக." இவ்விளவேனிற் பூக்களனைத்தும் இறைவனடியிலே அருள் பொழிந்து இன்பமாய் மலரும் அன்றோ. அரசன் பூப்பறிக்கின்றான்; திருக்கோயிலினுள்ளே புகுகின்றான்; அறநெறி வாழ்ந்து அரச செல்வத்தில் நிற்பவன், இன்ப வழியே இளவேனிற் பொழிலில் புகுந்து, பெண்ணின் நிலையை எண்ணிப் பேரன்பு வடிவாகிப் பெரு வீட்டை நோக்கி, அவ்வழியே திரும்புகிறான். 'இயற்கை இன்பம் இறைவனிடம் கொண்டு செல்லும்' என எடுத்துக்காட்டிய தோலா மொழித் தேவரின் பாவன்மையை, இவ்வுலகம், இன்றேனும் போற்றிப் பாராட்டி அவ்வழி நடக்க முயலின், இன்பவுலகை மாகிவிடுமன்றோ!

தமிழ்த் தோழியர்:—தன் மனைவியைப் புகழ்வான், உடன் வந்த தோழியரையும் கூட்டிப் புகழ்கின்றான்; இவ்வாறு தோழியரோடு பேசுதல், நம் பண்டைய தமிழ் வழக்கு. ஆதலின். 'இளையவர்' என்றமையால், இவனுக்குக் காதலிமார் எண்ணிறந்தார் எனக் கொள்ளவேண்டா. நளனோடு விளையாடிய மடந்தையர் அவனுடைய காதலிமாரோ? "உயர்ந்த தன்னுரிமையோடும் உரிமை காப்பவர்களோடும் நண்ணினான்" என்பர் ஆசிரியர். பல காதலிமாரை எங்கேனும் சுட்டியுளரோ? நம் மனத்தே தோன்றுவனவற்றை நம் புலவர் மனத்தே புகுத்துவதும் அழகோ! இங்குப் பேசியதுபோலக் காதலிமாரிடத்துத் தான் பேசக்கூடும் என்பர் சிலர். அர

சன், மனைவியை விளித்துளான்; தோழியர்களும் உடன் இருத்தலின் அவர்களையும் முன்னிலைப் படுத்தினான்; உண்மையில் இவன் பேசுவது இவன் மனைவியோடு தான் என்க.

'தாயத்தின் அடையா ஈயச் செல்லா
வினைவயிற் றங்கா வீற்றுக் கொளப்படா
எம்மென வரூஉம் கிழமைத் தோற்றம்
அல்லா வாயினும் புல்லுவ உளவே.'

என்று தோழிக்கும் இவ்வாறு பேசும உரிமையைக் கொடுத்த தொல்காப்பியரது தமிழ்க் கொள்கையை உணர்ந்தால் இத்தகைய ஐயங்கள் எழமாட்டா.

பேசும் மன்னனும் பேசா மடந்தையும்:—தன் காதலியோடு அரசன் பொழிலிடையே இனிதே உலாவிக் கண்ட பொருள்கள் அனைத்தும், காதலியை நினைப்பூட்ட, இன்ப அன்புலகில் அவன் வாழ்கின்றமையைத் தோலா மொழித்தேவர் மிக அழகாகப் புனைந்துரைத்துள்ளார். இன்பத்திற் றிளைப்பவர் அவ்வின்பத்திலேயே திளைத்து நிற்குநிலை யொன்று; அதனை மறித்துணர்ந்து பேசிப் புகழுநிலை மற்றொன்று. பின்னையது முன்னதற்குப் பின்னே எழுவதாம். பேரின்பத்தில் அழுந்தி நிற்கின்றவர் பேசுவதில்லை. தோலா மொழித்தேவரின் அரசனே பேசலாகின்றான். ஆதலின், இது பின்னிலையே யாகும். இதன் முன்னிலையை யுணர்ந்த கம்பர் இவ்வழகுக்கே அழகு செய்கின்றார். அரசன் பேசியது கேட்டோம்; அரசியின் பேச்சைக் கேட்டிலோம். 'அஃது எங்ஙனம் இருந்திருக்கும்' எனக் கனிக்

கண்டு பாடுகின்றார் கம்பர். கோதாவரி யாற்றங்கரையில், சீதையும் இராமனும் நடந்து செல்கின்றனர்.

நாளங்கொள் நளினப் பள்ளி
நயனங்க ளனைய நேமி
வாளங்க ளுறைவ கண்டு
மங்கைதன் கொங்கை நோக்கும்
நீளங்கொள் சிலையோன்; மற்றை
நேரிழை, நெடிய நம்பி
தோளின்கண் மனம்வைத் தன்ன
சுடர்மணித் தடங்கள் கண்டாள்.

[நேமிவாளம் - சக்ரவாளம், நாளம் - தாமரைக் காம்பு]

ஓதிமம் ஒதுங்கக் கண்ட
உத்தமன், உழைய ளாகும்
சீதைதன் நடையை நோக்கிச்
சிறியதோர் முறுவல் செய்தான்;
மாதவள் தானும், ஆண்டு
வந்து நீர் உண்டு மீளும்
போதகம் நடப்ப நோக்கிப்
புதியதோர் முறுவல் பூத்தாள்,

[போதகம் - யானை, ஓதிமம் - அன்னம்]

வில்லியல் தடக்கை வீரன்
வீங்குநீர் ஆற்றின் பாங்கர்
வல்லிகள் நுடங்கக் கண்டான்
மங்கைதன் மருங்குல் நோக்க;
எல்லியங் குவளைக் கானத்
திடையிடை மலர்ந்து நின்ற

அல்லியங் கமலங் கண்டாள்;

அண்ணல்தன் வடிவு கண்டாள்.

என்னுமிது கம்பன் கண்ட இளவேனிற் றிருவிழா. இதற்கும் மேல் எப்புலவர் மனமும் சென்றதில்லை. "ஞான மென்பது மோன வரம்பு"—இராமனிடத்தே சிற்றின்பம் பேரின்பம் என்ற வேறுபாடில்லையாதலின் இவ்வாறு பாட இயன்றது கம்பருக்கு. தோலா மொழித்தேவர், இன்பத்தில் இருந்து நம்மைக் கோயிலுக்குக் கொண்டு செல்கின்றார்; ஆதலின், இவ்வாறு இதனை முடிந்த முடிபாகப் பாட இயலாது. திருவிழாவிலே ஒலி மிகுமேயன்றி, வாளா நின்ற பேச்சற்ற பெரு நிலை தோன்றாது. ஆதலின், அரசனைப் பேசவைக்கின்றார் நம் தோலா மொழித்தேவர். எனினும், கம்பர் கண்ட பழுத்த நிலையே, இங்கு அரும்பு விட்டுப் பூத்திருக்கின்றதெனை அறிந்தால், தோலா மொழித்தேவர் பாக்களில் காணக்கிடக்கும் அன்பு நுட்பத்தை நாம் உணர்வோம். வாளா நின்று இன்பந்துய்க்கும் அரசியின் மனத்தின் இன்ப நுட்பத்தையும், கம்பன் கண்கொண்டு கண்டு இன்புறுவோம்.

கடை திறப்பு:—உருட்டுக்கல்லெனத் திரண்ட தோளனாய் உடல் நலத்தில் தலை நின்றவன், உயிர் நலத்தில் தலை நின்றவனாய்க் கடவுளெதிர் செல்லுகின்ற காட்சியே காட்சி. அன்னவனுக்கு உவகை மிகுகின்றது. அழகியதொரு கோயில் - கடவுள் வாழும் கோயில் - தன் முன்னோர் வழி வழியாக வழிபட்டு வந்த கோயில் - இத்தகைய கோயிலைக்

கண்டதும் இன்பமீ தூர அன்போடும் தூய்மை யோடும் வலமாக முறையே சுற்றி வருகின்முன்; கதவெதிரே நிற்கின்றான். என்ன அழகிய கதவு! இவனுடைய அன்பே, பேரொளி வீசும் நன்மணி களாய் உருக்கொள்ள, அவற்றையே பலவகை மணிக்கலன்களாய் ஒருங்கிணைய வைத்ததே இக்கத வம் எனலாம். அம்மணிகளின் ஒளியே புன்னகை யாகக் கொண்டு விளங்குகிறது, இக்கதவம். இவன் வந்ததும் இக்கதவம் திறக்கின்றது. இன்னவாறு திறக்கின்ற சூழ்ச்சியை நச்சிஞர்க்கினியர் "அரசன் வருங் காலத்துப் பிறர் புகுதாமற் கதவடைத்து அவனுக்குத் திறத்தல் இயல்பு" என்று சிந்தாமணி யுரைவில் விளக்கிவைத்திருத்தல் காண்க. போற்றி களால் திறக்கப்பட்டது என்று கொள்ளினுமாம்.

62. இறைவனுர் திறம்:—கடவுள் வாழும் மணி நிலையின் சுடரொளி எங்குமாய் மலர்கிறது. காண் கின்றான் அரசன். கடவுளின் திறமனைத்தும் அவ் வொளி வழியே, அவன் நினைவுக்கு வருகின்றன. அவ் அருகன் திறமையை அளவிடப் போமோ! தொழுவார்தம் நோயை நீக்கிக்கட்டை அவிழ்த்து இன்பம அளிக்கின்ற திறமையை என் என்போம்! இனி வந்து பிறவாதபடி இன்பமளிக்குந் திறமையை என் என்போம்! கட்டு நீங்கிப் பிறவி யொழிந்தும் உயிர் சென்று புகுந்து, அழகொடு நிலைநிற்கும் விண் ணுலக வீட்டையும் தந்து இன்ப மளிக்கும் திற மையை என் என்போம்! இவையேயன்றி, வேறு பிற வரங்களையுந் தந்தளித்து இன்பமளிக்குந் திற

மையை என் என்போம்! அளவில்லாத் திறனோடும் நின்ற அக்கடவுளிருக்கைநிலை, கண்கவர் ஒளியோடு, இவ்வாறு இவ் அரசனுக்கு, இறைவன் இயல்பை நினைப்பூட்டி, எதிரில் இனிதே விளங்குகின்றது.

63. இன்பம் பூத்த அரசன்:—காண்கிறான் அரசன்; பேரின்பத்தில் மூழ்குகின்றான்; உடலெலாம் மயிர்க்கூச் செறிகிறது. கடவுள் ஒளி அவனுடலில் பொங்கி வழிகின்றது. பூ முடித்த திருமுடியில், தன் கையையே முகிழ்மலராகக் கூப்பி விரைந்து தொழுகின்றான். வெய்யிலிலே புழுவை உருட்டுவது போல, நம்மை உலகில் உருட்டி வாட்டும் வினைகளைத் துகள் துகளாக்கி வென்ற வெற்றி, செக்கச் சிவந்து மலரென்ன மெல்லியதாய் இன்ப அன்பொடு மலர்ந்து திருந்திய அவ் அருகப் பெருமானது திருவடியதே யன்றோ. அதனை எண்ணி அதன் தனிச் சிறப்பைப் பாடி புகழ்கின்றான், அரசன்.

அரசன் பாட்டு

64. அரசன் தன்னை மறந்து போற்றுகின்றான்; அரசநிலையிலிருந்தும் இறங்கி, இன்ப நிலையில் இழிந்து, ஆண்டவன் அருள்நிலையைக் காண்கின்றான். இந்நிலையை உலகம் அறியாது கிடக்கின்றமையே அவன் மனத்தை வாட்டுகின்றது; ஈதும் ஒரு வியப்பேயன்றோ? அரசன் ஆண்டவனுடைய பெருமித நிலையைக் காண்கிறான்; இஃதும் வியப்பையே ஊட்டுகின்றது. இம் மருட்கைநிலையை முரணணிகொண்டு

பாடி விளக்குகிறார், தோலாமொழித்தேவர். ஆண்டவனைப் பாடத்தொடங்கினால், ஒரு கருத்தையே பன்னிப் பன்னிப் பாடவே மனம் முந்துகின்றது. அக்கருத்திலே நமது மனம் ஈடுபட்டு நிற்கின்ற நிலை அங்ஙனம் உள்ளது. உய்ந்து போவதற்கு ஒரு கருத்தே போதும் என்று தோன்றுகிறது. மறைமொழியைப் பல கால் உருப்போடுவாரைப் போல, ஒரு கருத்தையே மூன்று முறை விளக்குகின்றான், அரசன். பண்டைய சமண நூல்களில் இவ்வழக்குப் பெருவழக்காக வழங்குவதைக்காண்கின்றோம். ஆழ்வார்களும், ஆளுடையார்களும், பத்துமுறையன்றோ பன்னிப் பன்னிப் பாடுகின்றனர்.

"அழகறியாய் பெருங்குருடர்"—"வேறெங்கும் காணலாகாத பேரழகு பொலியப் பேரொளி வீசுகின்ற திருமேனிப் பெருமானே! இவ்வழகும் இவ்வொளியும் எம்மனோர்க்குப் போல, அணி செய்வாரின் அருளாலே புனைந்துகொள்ளும் அணிகளால் எழுந்தனவோ! ஆடையும் அறத் துறந்த அம்மானுக்கு அங்ஙனமன்றே? இயல்பாகவே நின்ற நின் அருளறிவுநிலையின் அழகொளியன்றோ இவை! என்னே! ஈதொரு வியப்பு இருந்தபடி என்னே! என்னே! அம்மட்டோ? திருமேனிக்குள்ளே திகழ்ந்தொளிர்கின்ற அறிவு நிலையும், அங்ஙனமே இயல்பாக எழுந்ததன்றோ! எண்ணி எண்ணி நெஞ்சம் புண்ணாய், எம்மனோரைப்போல இடருற்று இவ்வாறு அறிவு பெற்றாயோ? கட்டு நீங்கிய வீட்டு நிலையில், இயல்பாக எழுந்ததன்றோ நின்னறிவு. அவ்

அறிவுதானும் சிற்றறிவோ? முழுவதையும் ஆழ்ந்தறிந்துணர்ந்து முடிவில் காட்சியாய் முற்றிய முடிவிலா அறிவேயன்றோ! ஈதொருவியப்பே! இவ்வாறு உலகைக்கடந்து நிற்கும் பெரியானே! உன்னைக் கடவுள் என மறை நூல்கள் தெள்ளத்தெளிய விளக்கிவைக்கின்றன வன்றோ! அந்தோ! எடுத்துரைத்தாலும் செவிகொடுப்போர் இல்லையே. நிரல் நிரலாக அடுக்கியுள்ள உலகங்கள், இடைவெளியில் ஞான்று தொங்குகின்றன. அவை அங்ஙனம் இருந்தும், வாழ்ந்துய்வது உன்னருளால் அன்றோ? அவையனைத்தும் உன்னுடைமையேயன்றோ? உடையானை யறியாதே ஒருங்குநின்றுழல்வதுவே! நின்னையறிவார் அரியர் அன்றே! ஈதென்னே வியப்பு!

65. அன்பறியாப் பெருஞ் செவிடர்:—பகைத்துக் கொல்லுகின்ற வேலோ அம்போ தொட்டு மறியாய்! திருவடிவோய்என்றாலும்உட்பகைபுறப்பகைஅனைத்தையும் வென்று உயர்ந்துள்ளாய்! ஆற்றலுடையாய்! ஈதொரு வியப்பே! ஆதலின், நீயே இறைவன் என மறைநூல்கள் விளக்கமாக எடுத்து உரைக்கின்றன. என்றாலும், அந்தோ நின்னை யறிவார் அரியர் அன்றே.

66. அறிவிலா நன்றிகெட்டார்:—திரு எனப் பெயர்பெற்ற மறுவுடன் பொலிந்தொளிரும் திருவடிவோய்! முடிவுலா இன்பமுடையானைக் காட்டுமோர் அடையாளமாமன்றோ ஈது. 'மறு (மச்சம்) இருந்தும் மறு (குற்றம்) இல்லை' எனவே இடையறாது மறை நூல்கள் இயம்புகின்றன. அவ்வருமறை

களை அன்பினால் விரித்துரைத்தவனும் நீயேயன்றோ? அருமறைப் பாடல் காதில் வீழ்ந்ததும் அதனை யருளியவனை யேனும் நினைக்கவேண்டாவோ! அந்தோ நினைத்திலரே! நின்னையறிவார் அரியர் அன்றே.

67. திருக்கடைக் காப்பு:—இவ்வாறு அரசன் அருகப் பெருமானை ஏத்துகின்றான்; ஆண்டவன் அணிந்து கழித்த திருமலரைத் திருமுடியில் அன்புடன் அணிந்துகொள்கின்றான்; ஒளி மணிகளோடு ஒலி மணிகளும் திகழ்கின்ற திருக்கதவைத் தாளிடுவித்து, அக்கோயிலின் முற்றத்தை அடைகின்றான்.

சாரணர் பாட்டு

68. ஒளியும் ஒலியும்:—இவ்விருவாய்ச்சென்று உலகினுள்ளார்க்குண்மையை யருளி, வானவழியே செல்வோர் பலர் உளர். அவர்களே சாரணர் எனப்படுவர். இச்சாரணர், தத்தம் தவத்தால் எழுந்த பேரொளியால் சிறந்து திகழ்வர்.

> நலத்திரு மடமக ணயந்த தாமரை
> நிலத்திருந் திருசுடர் நிமிர்ந்து செல்வபோல்
> உலப்பருந் தவத்தினு லோங்கு சாரணர்
> செலத்திரு விசும்பொளி சிறந்த தென்பவே.

என்பர் திருத்தக்கதேவர். அரசன் திருக்கோயிலின் திருமுன்பு வந்தவுடன், அழகியதோர் கடவுளொளி திகழ்ந்தொளிர்கின்றது. எங்ஙனம்? சாரணர் வானின்றும் இழிகின்றனர்; உலகுக்கோர் அப்பனை அருகப் பெருமான் வீற்றிருக்க, அழகே யணியாய்ச் செல்வத்திற் சிறந்த திருக்கோயிலை, இன்னோர் வல

மாகச் சுற்றிவருகின்றனர்; சிறந்த மணியொலியே இவர்கள் குரல் என்று கேட்டார் வியப்ப, ஆண்டவனை வாழ்த்துகின்றனர்.

69. வியப்பும் உருக்கமும்:—அரசனே ஆண்டவனைக் கண்டு வியந்து நிற்கின்றான்; அதனையறியாத உலகிற்காக வயிறு பிடிக்கின்றான். இச்சாரணர்களோ, ஆண்டவனுடைய அவாவற்ற நிலையினையும் அன்பினையும் நினைந்து நினைந்து உருகுகின்றனர்; உவகைக் கடலில் முழுகுகின்றனர். ஆண்டவன் மேல் இவர்கள் கொண்டுள்ள காதல் அத்தகையது. இவ்வாறு கடவுளைப் போற்றும் நிலையிலும், அரசனுக்கும் இவர்களுக்கும் வேற்றுமை காட்டிச் செல்கின்ற தோலாமொழித் தேவரைப் போற்ற வேண்டாவோ?.

வெறுஞ்சோல்:—"நீர் அருகநிலை பெற்றபோது, நீர் நடந்தருளுமாறு நும் திருவடிக் கீழ் இந்திரன் பரப்பிய நறுமணம் மிக்க தாமரையையே ஊர்தியாகக் கொண்டு அதனை ஊர்ந்துசென்ற பெருமானே! அவ்வாறு போகும்பொழுதெல்லாம் பல விண்ணவர்கள் உம்மை இமை கொட்டாமல் கண்டு மகிழ்ந்து வணங்கி வாழ்த்தி உம்முடன் வருகின்றனர். விண்ணோரும் புகழும் நீர், நாங்கள் பரவுமிதனைக் கேட்டுத் தலை மயங்கி யுள்ளம் மகிழப் போகின்றதில்லை. யாம் சொல்லொடு திருமணம் செய்யப்பெற்றோமாய் அதனிலேயே மயங்கித் திரிவதன்றிப் பொருளிலே ஊடுருவிச் செல்லுகின்றபேறு பெற்றிலம் அன்றோ. அவ்விண்ணவரோ, உம்

மோடு உடன் வருவோராதலின், சொற்பொருளாம் உம்மை நேரிற் கண்டவர்கள். அதற்கேற்ப பொருளை மணந்தாராய்ப் பேசும் நிலையொழிந்து முனைப்பற்று வணங்குகின்றனர். யாமோ இன்னும் பேசியே பரவுகின்றோம். எனினும் பாடாதிருக்கவும் முடியவில்லையே. இந்த உலகெல்லாம் உம்மைக்கண்டு உயர்நெறிபெற்றுப் பேரின்பத்திலே மகிழ்ந்திருக்க வேண்டி அறநெறியில் நிலைநின்ற பெருமானே! இவ் அன்பு வடிவத்தைக் கண்டதும் எங்களுடைய காதல் பெருக்கெடுத் தெழுகின்றது. அதனை அடக்கமாட்டோமாய் வாய்விட்டுப் பாடுகின்றோம். அத்துணையே.

70. அறத்து நின்ற அன்பு:—"நறுமணமிக்க தாமரையின் இதழ்கள் நெருங்கிய பூவின்மேல் ஊர்ந்து சென்ற எங்கள் பெருமானே! நும்மருகே வந்து, அச்சத்தோடும் அன்போடும் நாங்கள் ஏத்தி நிற்பதைக் கண்டு தலைகால் தெரியாது தற்புகழ்ச்சியால் நீர் மயங்கி மகிழப்போவதில்லை; திரும்பிவாராத பெற்றியதாம் வீட்டுலக இன்பத்தே இவ்வுலகனைத்தும் மகிழவேண்டி, அறநெறி நின்ற நும் அன்பு வடிவிலே ஆராத காதலுடையோம். அதனை அடக்கமாட்டாது வாய்வெருவா நின்கின்றோம்; அத்துணையே."

71. அடக்கமுடியவில்லை:—மணமயங்கு தாமரைமேல் வான் வணங்கச் சென்றீர்! எம்மையும்மறந்து நும்முடைய குணங்களை யாம் பரவா நிற்கின்றோம். அதனை ஏற்றுக்கொண்டு மயங்குபவர் அல்லீர் என அறிவோம். எனினும், உலகம் நும் அருள் நிலை

யைக்கண்டு, உட்பகையாறி மனங்குளிர்ந்து, வீட்டு லகில் உவகை பெறுமாறு, அறநெறியில் நிலையாக நின்ற நும்பால், பேராத பெருங் காதலுடையோ மாய்ப் பிதற்றுகிறோம். அத்துணையே.''

72. இன்னிசை அமிழ்த வெள்ளம்:-குற்றமற்ற இம்முனிவர்களுக்குச் செல்வமாய் இருப்பவர், அவ் அருகனே. அவனுடைய செவ்விய திருவடியின்மேல் வைத்த காதலால் எழுகின்றது இவ்வழகிய இன்னிசை. வேற்றொலி வந்து இதனைக் கெடாதபடி எங்கும் அமைதியே கூத்தாடுகின்றது. இதனிடையே இவ்வின்னிசை எங்கும் பரவுகிறது. உலகம் நிலையாதென்று உணர்வதே ஓதி எனப் பெறும்; 'அவதிஞானம்' என்பர் நச்சினார்க்கினியர். இதனைவீட்டேணியின் முதற்படி எனலாம். இதனையுடைய உயிர்கள் இவ்வின்னிசையைக் கேட்கின்றன. எவ்வளவு தொலைவு இவ்வின்னிசை ஒலிக்கின்றதோ அவ்வளவு தொலைவில் உள்ள அத்தகைய உயிர்கள் எல்லாம், இவ்வின்னிசை கேட்டுத் துன்பமே இல்லையாய் ஒளிர்கின்றன.

73. அறமுகில்:—இவர்கள், இவ்வாறு இறைவனை ஏத்துகின்றனர். தவஞ்செய்வார் அன்றோ தங்கருமஞ் செய்வார். கடவுளை வழிபடுதலையே தமது தொழிலாகக் கொண்ட இப்பெரியார்கள், அத்தொழிலே, அன்னவாறு குறைவின்றிச் செய்து முடிக்கின்றனர்; அந்நிலையிலே, குணக்குன்றெனப் பொலிந்து காட்சி கொடுக்கின்றனர். அருள்வழியே அறிவாட்சி செலுத்தும் அம் மன்னனும் செந்

தண்மை பூண்டொழுகும் இவ்வாறிட அறவோர் எதிரே சிறிய மறவோனாகவே விளங்குகின்றான். அன்னோர் அவனைக் காண்கின்றனர். அவனுடைய வினைக்கோடை யொழிய அறவுரைகளாம் அன்பு மழையைப் பொழியவேண்டும் என அடக்க முடியாத ஓரார்வம், அவர்களுக்குப் பிறக்கின்றது. மரம் பழுத்தால் வெளவாலை வாவென் றிரந்தழைப்பார் யாவரும் இங்கில்லை. குணக்குன்றாயினார், கற்றாதாற் போல் கரவாதளிப்பரன்றோ? அதனாலேயே, உலகத் தவர்க்கு, இவ்வாறு உற்றாராகி உதவுகின்றனர் இன்னோர்.

74. தக்க இடம்:—வழிபடற் கேற்ற காலம் நேரிட்டாவாறேபோலத் தக்கதோர் இடமும் அன்றோ நேரிட்டது? தண்ணெனக் குளிர்ந்த அசோக மரம், இளமையே வடிவாக விளங்குகிறது. தென்றற்காற்று அங்கேயே குடிகொண்டு வாழ்கின்றது எனலாம். விழுமிய தேனும் துளிமழையும் பனி மாரிபோல இடையறாது பொழிந்துகொண்டே ஆங்கு நிலைநிற்கிறது. இளமையுந் தண்மையும் தென்றலும் தேன்மாரியும் நிலைபெற்ற இடத்தைக் கண்டதும் ஒளியும் நிலைபேறு பெற்று ஆங்கே ஒளிர்கிறது. இதனையே நிலாக்கல் வட்டம் என்பர். அப்பெரியோர்கள் சென்று இதன்மீ தமர்கின்றனர். ஒளிக்கும் ஒளி யூட்டினாற்போல, அவ் வட்டமுந் திகழ்கின்றது.

75. முடிதீட்டல்:—வினையின் றொகையை வென்றனகிய அருகப் பெருமானின் திருக்கோயிலின்

திருமுன்பு அமைந்த அந்நிலாக்கல்வட்டத்தே, அம்முனிவர்கள் அமர்ந்தவுடனே, மின்னொளி எங்கும் தவழநின்று காணார் கண்ணினும் காட்சிதந் தொளிரும் வேலேந்திப் பல துறைகளினும் தான்பெற்ற வெற்றியே ஓருருவு பெற்றாற்போலத் திகழ்கின்ற அவ்வேந்தன், பொருளொடு புகன்று அருளொடு வினையினீங்கி வென்றவன் வழிநின்ற வென்றியாளராம் அம்முனிவர்முன் சென்று வணங்கி அவர் திருந்தடி திருமுடியிற் றீட்டுகிறான். வென்றி வேந்தனது திருமுடியும் மிக்கொளிர்வது, இத்தகைய வென்றியாளர் திருவடியின் கீழேயாம்.

76. இருக்கை:-அரசனை வாழ்த்துகின்றனர் அம்முனிவர். வாழ்த்துகின்ற அந்நிலையிலே, அவனுடைய வாழ்க்கை, அன்னவர்கள் கண்ணெதிர் தோன்றுகிறது. "உண்டி முதற்றே உடலின் பிண்டம்." இவ்வுண்டியோ, நம் வயல்கள் நமக்குதவும் அமுதமாகும். பச்சைப் பசு நெற் பரப்பாகச் செழித்து வளர்ந்து, நீர்வளத்தை விளக்கி நிற்கின்ற வயல்கள் நிறைந்த நாட்டிலே, அவன் திகழ்கின்றமையை இவர் காண்கின்றனர். இஃதொரு வாழ்த்தே யன்றோ. "வரப்புயர" என்று வாழ்த்திய அவ்வையார் மனத்தகத்தே கொண்ட அத்துணைக் கருத்தையும் உயிர் ஓவியமாக இவர்கள் மனக்கண் கொண்டு காண்கின்றனர். அவர்கள் "இருக்க" என்றலும், அரசன் இருக்கின்றான். இயற்கையழகோடு உடையழகும், மணிமேகலை யழகும், கொண்டு விளங்கும் மகளிர் சூழ இருக்கின்றனர். மகளிரிடை விளங்கியுப்

பெண்வழிச்சேறல் என்னும் பெரும் பழிக்காளா காது, இவ்வரசன் நிலைபெற்று விளங்குகின்றான். இதுவரை உலகிடை உழன்றான்; இதுபோதே இருக்கை எய்துகின்றான்.

77. வாழ்வாவது வணக்கம்: "அறவழி வந்த பொருளின் வழியே நீண்டதொரு தாமரை மலர் மீது வீற்றிருக்குந் திருப்பிராட்டி, நிலையாக நின்று நிலவும் இத்தோள்கள் - அறவழி வந்துள இன்பத்தின் வழியே திங்களேபோலத் தண்ணிலவு பொழிந்து நீண்டு தொங்கி அழகுவடிவாய் மிளிரும் முத்துமாலை ஒளிரும் இத்தோள்கள் - அவ் அறவழி தவறாது செவ்வியனவாக விளங்குகின்றனவோ" என வினவுகின்றார், செம்பொருள் கண்டு செந்நெறி நின்ற திருமுனிவர். சூழொளி வீசும் வாளேந்திய மன்னவர் பெருமான் வணங்குகின்றான்; மணிகள் மிளிர்கின்றன. அவ்வளவு அருள் கூர்ந்து அவர்கள் தன்னை வினவியது கேட்டு அவர்களை வாழ்த்துகின்றான் அரசன். வேலொடு மன்னனை மிக வணக்கினார் முன்னே தேவர்; வாளொடு மன்னனை வணக்குகின்றார் இங்கே. வாழ்வாவது வணக்கமே என உணர்ந்த அரசன், அவர்களுடைய கேள்விக்கு விடையாக வணங்கியே நிற்கின்றான்.

78. அறிவன் திறம்:—அம்முனிவரிருவருட் பெரியராய் நின்றவருடைய திருமுகத்தை நோக்குகின்றான் மன்னவன்; "இனியதொரு பொருள் உள்ளது; அஃது அடிகளே உணர்த்தற்பாலது"

எனத் தெரிவித்துக் கொள்கின்றான். தண்ணிய தாமரை மலர்கள், வயலின் ஓரங்களிலும் மலர்ந்து தோன்றும் அத்தகைய நிலத்தழகும், நீர்வளமும், பொருந்திய நாட்டில் வாழும் அம்மன்னவன் மனமும் கனிகின்றது. சீறிய மன்னவனும் ஆறிய அரசன் ஆகின்றான். இம்மாறுதல் எதனாலாயது? அவர் கூறிய சொற்களாலேயேயாம்; அதனை விளக்க முடியுமோ! சொல்லையும் மனத்தையும் கடந்து நின்ற அம்முனிவர், அவ்வகையிலே கடவுளேயாதலின், அந்நுட்பத்தை எவ்வாறு விளக்குவது?

79. ஒலியாற் கூம்பியமலர்:—அவர் திருவாய் மலர்கின்றதுதான் ஏதோ? கேண்மின்! "மன்னவனே! மக்களை நெருக்கி வாட்டுகின்ற வினை எனும் பகையினை வெட்டியெறியும் இன்னுரையாம் வாளும் வேலும் வேண்டினையோ! அவை வாளும் வேலும் ஆவதுடன் இன்னமுதமுமாகித் திகழ்கின்றன. பிற பகை வென்றதுபோல இப்பகையையும் வெல்ல, இதன் மீது மறமலிந்து, வாளும் வேலும் ஏற்க முந்தும் வேந்தே! ஈதே உனது கருத்துப்போலும்" என்று அரசனது மனத்தினை யறிந்து கூறுகின்றார். அரசனுக்கேற்க உலக வெற்றியோடியையவைத்து அப்பெரியார் உயிர் வெற்றியைக் கூறுதல் காண்க. "நம் மனத்தினை யறிந்த கடவுளே நம்மெதிர் தோன்றுகின்றனர்" என எண்ணியதனால் மின்னிப் பொலிகின்ற மிகப்பெரிய மணிகளழுத்திய தோள் வளை யணிந்த கையை, விரைந்தெடுத்துத் தலைமீது திருத்தி அரசன் வணங்குகின்றான். இயல்பாய்

னமூழுகின்ற வணக்கம் ஈதேயாம். தோள்வளையும் வணங்குகின்றதே என்கிறார் தேவர்.

உபதேசம்

80. துன்பமரம்:-" நெய்யுறங்கிழற்றும் வேலோய்! மருளாறும்மாணப்பிறப்பு. எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. உள்ளதை உள்ளவாறு அறியும் மெய்யறிவு (சத்யஞானம்) இல்லாமையாலன்றோ, காம வெகுளி மயக்கம் என்பன தோன்றி, நம்மை உலகத்தே ஆட்டிவைத்து, நம் தலையில் தூக்கமுடியாத பெருஞ் சுமையாம் இருவினைகளை ஏற்றிக் கீழே அழுத்துகின்றன. உலக வாழ்வாம் மாத்திற்கு மெய்யறிவிலாமையே வித்து; அவ்வித்திலிருந்தும் கொடியனவாய், நம்மைச் செயலற்றுத் திகைக்கச் செய்யும் வினைகள், கவடு விட்டுக் கிளைகளாய்ப் பரந்து வளர்கின்றன. இரு வினையாம் தனது கிளைகளிலே, இம்மரம், கொடுந்துயர் எனும் பழத்தை விளைவிக்கின்றது. இம்மரத்தின் இப்பழத்தை இனிதெனக் கொண்டு மருண்டு மயங்கி உண்டு வருந்தி வாடுகின்ற உயிர்கள், உடனே இறந்தொழியாது உயிரோடு துடிதுடிப்பதை என் என்பது! இதனாலே, இவர்களது பிறவிகள் தொடர்ந்து மாலையாக வருகின்றனவன்றோ? துன்பவினையாற் பிறவி, பிறவியால் வினை எனத் தொடர்ந்து போதலினால், இப்பிறவியின் எண்ணிக்கையை மனத்தால்தான் எண்ணப்போமா? இப்பிறவியின் இயல்பைத்தான் எண்ணப்போமா ?

81. சார்வு:—"உயிர்களைச் சூழ்கின்றன வினைகள். அவையே அவர்களை மற்றொரு பிறப்பில் ஆரத்து கின்றன. பிறந்தபோது உடனே வரும் பண்டைய வினையை இப்பிறவியில் துய்க்கவேண்டுமன்றோ? வினைப்பயனைத் துய்க்கும்போது, இன்னமும் கீழே கொண்டு சென்று அவர்களை வீழ்த்தும் புத்தம் புது வினைகளை மறுமைக்காக வேறும் செய்கின்றார்கள் மாக்கள். இந்தத் துன்ப வாழ்க்கையில் சாதலின் இன்னாத தில்லையன்றோ? பெருந்துன்பத் தோடும் உலகைவிட்டுப் பிரிந்திருக்கின்றனர் உலகினர். ஆனால் ஈதோ முடிவு. மறுமுறையும் தோன்றி, வினைப்பயனைத் துய்க்கின்றன உயிர்கள்; ஆழ்துயர் உழக்கின்றன. ஐயோ! அருளற்ற, அறிவற்ற, இம் மாக்கள், இத்தாழ்வை விலக்கும் நற்சார்வு பெறாத வரை இவ்வாறு சுழல்கின்றனர் அன்றோ! சார் புணர்ந்து சார்புகெட ஒழுகினன்றோ சார்தரா சார்தரும் நோய்.

82. களைகள்:—"இன்பப் பயிர் விளையாதபடி நெருக்கிக்கெடுப்பன நான்குவகை களைகள் ஆகும். நல்லறிவை மறைப்பன (ஞானவாணீயம்), நற்காட்சியை மறைப்பன (தர்சன வரணீயம்), இடையிட்டுத் தடுப்பன (அந்தராயம்), மயக்க மூட்டுவன (மோகனீயம்) என்ற இந்த நான்கு வகையான களைகளாம் காதி வினைகளைப் பிடுங்கி எறிதற்கு ஒரு வழியுண்டு. அஃதே அழகிய அறநெறி. அதைக்காட்டும் கண்ணே அருகப்பெருமான். இப்பெரியானின் மெய்யறிஞர் உள்ளத்தே ஓவறவிமைக்கு மவிரொ

ளியாய் விளங்குகின்றான். அவனைக்கண்டு, அவர்கள் ஏத்தி நிற்கின்றனர். இவனும் முதலும் முடிவுமின்றி எங்குமாய் அகன்று, எவற்றையும் உணர்ந்து நிற்கின்றான். இவனுடைய திருவடிகள் அன்றோ, பெருந்துயரை விளைக்கும் துன்பவினைகளை ஒழிப்பதற்கு நமக்குப் புகலிடமாவன. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்று பற்றுவிடற்கு.

83. மும்மணி:—"அவனே அந்நெறி காணும் கண். அக்கண் காட்டுவது தான் யாது? இவ்விறைவனால் விரிக்கப்பட்டவை யாவை? ஈது என்று மெய்ப்பொருள் தெரிதலே நல்லறிவு; எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு. பொருள் நின்ற பெற்றியைப் பொய்யின் றுணர்தல் மருளறு நன்ஞான மாண்பு. அவ்வாறு விளங்கிய பொருள்கள் தம்மைப் பொய்வகையின்றித் தேறல் நற்காட்சியாகும். ஈதே ஓர்த்துள்ள துணர்தலாம். ஐயமின்மை, அவாவின்மை, உவர்ப்பின்மை, மயக்கமின்மை, அறப்பழி நீக்கல், அழிந்தாரைத் தாங்கல், அறத்திற்களவளாவுதல், அறத்தை விளக்குதல் என்ற எட்டுறுப்பிற்றாகி, அப்பொருள்மிசை விரிந்த ஞானமே இரண்டாவதாகும். வீள்வற இருமையும் விளங்கத் தன்னுளே ஒள்ளிதிற் றரித்து, ஐம்பொறியும் வாட்டி உய்வகை யுயிரைத் தேயாதொழுகுதல் நல்லொழுக்கமாகும். அப்பொருள்வழாத நூலின் அருந்தகை ஒழுக்கம் மூன்றாவதாகும். இம்மூன்றுமே இறைவன் அருளிய மூத்திருமணிகள். கனபொற் றோராய்! இவற்

றையே கைப்பொருளாகக் கொண்டு, உறுதியாகக் கைப்பற்றி ஒழுகுவாயாக.'' இம் மறைமொழி யைக் கூறத் தொடங்கியபோது நெய்யுற நிழற்றும் வேல் தோன்றிற்று; இம் மறைமொழியின் முடிவில் கனபொற்றூரே தோன்றுகிறது. எரிசினம் உள்ளும் மாற, இன்பம் துளிர்க்கின்றபடி இது.

84. பயன்:—சாரணர்பெருமானார், இவ்வாறுநாம் இப்போது சிக்கிக்கிடக்கும் இடும்பைக் கிடும்பையி யல் வாழ்க்கையைப் புனைந்து உரைக்கலானார். இவ் விடும்பையின் வேரையும் ஆராய்ந்துரைத்தனர்; இந் நோய் தீரும்மருந்தும் கூறினார். இம்மருந்து உண் டார் பெறும்பயனும் இன்பத்தைப் பின்னே கூறுகின் றார் சாரணர்பெருமானார். "நம் உடலை வந்து பற்றிக் கொண்டு உள்ளிருந்தே நம்மைக் கொல்லும் நோய் களையும், முதுமையையும், முன்வினைப்பயனால் வருந் துன்பங்களையும், இம்மும்மணிச்செல்வர் நீக்கிவிடு கின்றனர்; தீங்கெலாம் ஒழியவே உடலும் தூய தாகி ஒளிர்கின்றது. இக்கடவுள் வடிவம் தாங்கி நிற்கையில், உலகம் முழுதும், இவர்களைச் சுற்றி நின்று ஏத்துகின்றது. இவர்கள் பெற்ற இன்பம் எல்லையிலாதது; பிறழ்விலாது நிலைத்து நிற்பது. மன்னே! ஈதே அம்மும்மணிச் செல்வர்பெறும்பேறு. நீயும் பெற்று மன்னுவாயாக.''

85. அமிழ்துண்டபேறு:—பொறுத்தற்கும் நீக்கு தற்கும் அரிய துன்பத்தை அறவே வெட்டி எறியும் மறத்திற் சிறந்த மாட்சிமையோடு, வரம்பில் இன்ப மாம் அமுதினைக் களிப்பூட்டும் அறத்திற் சிறந்த

பெருமை பெற்ற இம்முப்பொருள் உண்மையை, இவ்வாறு திருத்தமாகச் சாரணர்பெருமானார்விளக்கிப் பேருரை நிகழ்த்தியபோது, அரசனுடன் வந்த மக்களும் கேட்டிருந்தனர் அன்றோ? அவர்களிடத்தும், தீவினை யிருள்கள் போழும் விரிந்த நல்லறிவின் சோதி, விளங்கத் தொடங்குகின்றது. அகமகிழ்ந்து, மிகத்தெளிவு பெற்றோராய், பிறவி தானே ஒழிந்து போக, அறிவு பெற்று நிற்பாரைப்போல, விளங்குகின்றார்கள். நல்லறிவு எனும் திருமணி, இவ்வாறு ஒளிர்கின்றது.

86. மணியின் ஒளி:—அறவழியில் நிலை பெற்றுள்ள அம் முனிவர் பெருமானாரது திருவாயின் நின்றும் மணி கொழித்தாற்போல் வந்ததிருமொழிகளைக்கேட்டான் அரசன். அச்சாரணர்பெருமானார் கூறிவந்த மொழிகள், பிறவிகளை ஒழிக்கும் மொழிகளல்லவா; அவர் புணர்ந்துரைத்த இன்பப் பயனை எதிரே கைம்மேல் கொண்டுவரும் மொழிகள் அல்லவா! கன்னவில் கடகத்தோளான் அவ்வுரைகளைக் கேட்டு நற்காட்சி பெற்று, அதன் பயனாகத் திருமேனி தூயதாக ஒளிர்கின்றான். நற்காட்சி என்னும் திருமணி இவ்வாறு மிளிர்கின்றது. அவனுடைய மனைவியர் பெருநோன்பு நோற்கும் நல்லொழுக்க நிலை பெறுகின்றனர்: நல்லொழுக்கம் என்னும் திருமணி இவ்வாறு திகழ்கின்றது.

87. பெண்ணின் கருத்து:—மன்னவனார் இளமகளும், இப்பெரியாரது இன்னுரையாம் அமுதம் உண்டெழுகிறாள்; திருமேனிப் பொலிவும் அறி

வின் பொலிவும் பெற்றொளிர்கின்றாள்; சாரணர் பெருமானாரை வணங்குகின்றாள்; இவர் கூறிய நோன்புகளை ஆராய்ந்து, அவற்றில் ஒன்றைச் செய்வான் மேற்கொள்கின்றாள். பின்னை அதனைச் சிறப்பாகச் செய்து முடிக்கும் உயர்ந்ததொரு கருத்தைக் கொள்கின்றாள்.

88. படலைமார்பு:—மூசுதேன் பனிமலர் விரவிய படலை மார்பினான், முனிவர் பெருமக்களின் திருவடியைவணங்குகின்றான். களிவளர் பொழிலினிடையே விளங்கும் அருகக் கடவுளின் திருக்கோயிலினை இனிதே வலம் வருகின்றான்; பின் தன் நகரத்திற்குப் போகின்றான். நற்காட்சி பெற்றான் இன்பவடிவாக விளங்குதலை "மூசுதேன் பனிமலர் விரவிய படலை மார்பினான்" என விளக்குதல் காண்க. இன்ப வடிவமாக இயற்கையும் ஒளிர, அதனிடையே இறைவனைக் காணுதல் போலத் திருக்கோயிலை வழிபடுதலும் காண்க.

89. மீட்சி:—அழகிய இடையணியால் ஒளிரும் தன்னுடைய காதலி மனத்தே, காமவேள இடங்கொள்ளுமாறு, நீள் பொழிலில் விளையாடியருளிய அவ்வரசன், அவள் கண்ணைப்போல ஒளிரும் வேலைத்தாங்கிய இளம் பெண்கள் மெய்க்காப்பாளர்களாய் வர, நகரம் போய்ச் சேர்கின்றான். மும்மணிச்செல்வர் இல்லறம் நடத்தும் வகை இது.

90. கடவுள் ஒளி:—அரசன், பிற அரசர்கள் தன்னைச் சூழ நகர்க்குள் போய்ச் சேர்கின்றான். சகநந்தனர் அபிநந்தனர் என்னுஞ் சாரணர்கள்,

அருகனை மிகவும் போற்றி வணங்குகின்றனர்; வானத்தே போகின்றனர். இவர்களின் ஒளி எங்கும் பரவுகின்றது. இவ்வொளி கதிரவன் ஒளியையும் சிரித்திகழ்கின்றது. அன்னனம் சிறந்த கடவுள் ஒளியாகும் ஈது.

சுயம்பவை நோன்பு

91. சுடச்சுட ஒளிரும் பொன்:—அச்சுடர்க் கொழுந்து எரிய எரிய, அதனுள் வைத்துள்ள ஒளிவளர் பொன்கொடியும் சுடர்விட்டு விளங்கி மாற்றுமிக்கு மிளிர்கின்றது. குறைவிலா நிறைவாய் அமைந்த அழகே, ஒரு சுந்தமேலந்திய கொடியாக நின்றது போலும் இயற்கை யமைதி யுடையாள், இச்சுயம்பவை; தான் மேற்கொண்ட இவ்வரிய நோன்பினைச் செய்துவரச் செய்துவர, அழகிய சுடர்க்கொடி (ஜ்வாலாலதா) ஒளிவிட் டொளிர்வதுபோல இயற்கையொளியோடு, நோன்பினால் உடல்தூயதாக ஒளிரும் திருமேனிப்பொலிவும் கொண்டு, திகழ்கின்றாள். சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும், துன்பஞ் சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.

92. தவஞ்செய்யத் தவமும் தவம் செய்தது:—இளமையை விளக்கும் மெல்லிய பற்களையும், மென்மையாற்பின்னே தாழ்ந்து அவிழ்ந்துவிழும் கூந்தலையும் உடைய இச்சயம்பவை, பல்லென மொக்குவிட்டரும்பி ஒசியும் முல்லைக்கொடியையும் வருத்துகின்ற இடையவளாம் மெல்லியல் உடையாள். இத்தகையவள், மிக அரியதொரு நோன்பினை முனிவர்

பெருமக்கள் ஓதியவழியே, சிறிதும் பிறழாது செய்து முடிப்பவளோ! இவள் செய்து முடித்தலின் இந் நோன்புகள் ஓர் உயர்வே பெற்றன. உள்ளத்தே குற்றமின்றிக் குணத்தால் மாட்சிமை யுற்றோர்க்கு அரியதொன்று உண்டோ! வேண்டிய வேண்டியாங் கெய்துப, வேண்டியார் திண்ணியா ராகப்பெறின்; பெருமையுடையவர் ஆற்றுவார் ஆற்றின், அருமை யுடைய செயல்.

93. அழற்கோடி :—கடுநோன்பு செய்து இந்திர வுலகம் பெற்றோரும், இந்நோன்பினைக்கண்டு 'ஆ, என்ன அரிய நோன்பு! இதனை ஒரு பெண்மகள் இயற்றுவதே' என்று மிகவியந்து வணங்குகின்றனர். அத்தகைய பெருமையுடையது இந்நோன்பு; அருகப் பெருமானது திருநூலில், அவர் திருவாய் மலர்ந்தருளியது போலவே, ஈண்டுச் செய்யப்பெற்றது. அதனால் முறுகிவளர்ந்த இவளது திருமேனிப் பொலிவு எங்கும் மிளிர்கின்றது. மந்திரத்தோடு நறுநெய் கொண்டு பசுக்கொலை முதலியமாசு படாத படி வளர்க்கின்ற வேள்வியிலிருந்து வலஞ்சுழித்து எழுந்து, வான்வரை யோங்கும் தீக்கொழுந்தே போல, இச் சயம்பவையும் நோன்பினால் ஒளி வளர்ந்தோங்கி, இந்திரனையும் வணக்குகின்றாள்.

94. சக்கரவாளம் :—தவ ஒழுக்கமுடையோரா லன்றி மற்றையோரால் பொறுத்தற்கு அரிய இத் தகைய பேரொளிவடிவாகத் திகழுகின்ற சயம்ப வை, சக்கரவாளம் என்று உயர்த்திப் பெருமை யோடு எல்லோரும் கூறிவரும் இந்நோன்பினை

இவள் செய்வதால் இந்நேரமே ஓருயர்வு பெறுமாறு, இன்னணம் நோற்று முடிக்கின்றாள். தீங்கரும்பனையசொற் சிறுமி, அச்சொற்களைக்கொண்டு, கடவுளைப்பாடி அப்பெருமானுக்குப் பெருஞ் சிறப்புச்செய்ய விரும்புகின்றாள்.

95. மலைக்கோயிலில் மங்கை பாடுதல் :—கண்டோர் கண் குளிர வெள்ளிய நிலவைப் பொழிந்து எல்லாப்புறத்தும் சுடர்விட்டொளிர்கின்றது அந்த வெள்ளிமலை. அதன்மேல் மிளிரும் கொடுமுடியில், அருகப்பெருமான் திருக்கோயில் ஒன்று அதோ தோன்றுகிறது. அரசர் பெருமான் திருப்புதல்வி, அங்கே, ஆண்டவனை வழிபட்டுப் போற்றுகின்றாள்; அதுகேட்டு இமையவரும் மனமகிழ்கின்றனர். அவ்வளவு கருத்தாழமும் சொல்லெளிமையும் கொண்டனவாகும், அவள் பாடும் பாக்கள்.

96. பூமேல் நடந்தான்:—"கடவுட்டன்மை பெற்றவர்கள் முதல்வைத்தெண்ணத்தகும் பெரியோன் நீ! அரிய மறைகளை அருள் காரணமாக ஓதியவன் நீ! கடவுளாற்றிற்கே உரிமை பூண்டோனும் நீ! பூமேல் நடந்த புதுமையுடையானும் நீ! அறிவின் கிழவனும் அருமை என்னே! பூமேல் நடக்கும் புதுமை என்னே! சோதியஞ் செல்வ, இப்பெருமைகண்டு நின் திருவடியில் அடியேங்கள் இயல்பாகவே வணங்குகின்றோம்.

97. திருமறுமார்பன்:—"காமனை வென்றாய் நீ! காலனைக்கடிந்து இறப்பில்லா துயர்ந்தாய் நீ! (எம் மனத்தையும் கடந்து நின்றன அந்நிலைகள்.) உலகம்

முழுவதும் தேமலர் மாரிபொழிய வீற்றிருக்கிற பெருமான் நீயேயன்றே. திருவெனும் மறுவினை மார்பகத்தே கொண்டு விளங்கும் அழகிய திருமேனி யுடையானும் நீயேயன்றோ? (இவை எம் மனத்தைக் கவர்கின்றன)! நீ தேமலர் மாரியிடையே வீற்றிருக்கும் பொலிவை என் என்போம்! திருமறு மார்பனைப் பொலியும் நின் அழகை என் என்போம்! அழகிய தாமரையேபோல ஒளிருந் திருமேனிப் பொலிவுடைய எம்பெருமானே! நின் மலரன்ன திருவடியில் அடியேங்கள் வணங்குகின்றோம்.

98. உலகுடை ஒருவன்:—"அனைத்துயிரிடத்தும் அரியதோர் அருள்கொண்டு அருண்மொழிகூறி வழிகாட்டியவன் நீ. அந்நெறிநின்றார் இன்பமேயடைய அவர்களது ஆழ்துயர் அவித்தவன் நீ. இவை ஒன்றோ! ஒருசிலர்போல் ஒரு சில பொழுது அருள் அறம் பூண்டனையோ; அருளாழியாக ஒளிர்பவனன்றே நீ. இவ்வுலகமும் உனக்கயலன்றே; உன்னுடைமையே யன்றோ! நீயருள் செய்யா திருத்தலும் இயல்வதோ! இந்நிலையில் கடலாழிசூழ்ந்த உலகோ ஈது! நின் அருளாழிசூழ்ந்த உலகன்றோ. ஓரருளாழியனும் நின் அருட்பெருமை என்னே! உலகுடை யொருவனை எங்களோடு குடல்துடக்குண்ட முறைமை என்னே! 'உய்ந்தே போய்விட்டோம்' என்று ஓர் ஊக்கம் எழுகின்றது. சீரியநின் அருள்மொழிகள் சிறியேங்கள் செவிகளில் சிறந்து ஒலிக்கின்றன. அத்தகைய மொழிகளைக் கூறியரு

ளிய பெருமானே! அடியேங்கள் நின் திருவடியை வணங்குகின்றோம்'' என்று போற்றுகின்றாள்.

பலவேறு வழிபாடு:—அரசன் மூனணியோன்ற வியப்புற்று நின்றான். முனிவரர் இன்பமே வடிவாய அருகனது பெருமையைப் புகழ்ந்துநின்றனர். இப்பெருமாட்டி அன்பின் பெருக்கால், தான் கேட்ட அருகப்பெருமான் புகழைப் பன்னிப் பன்னிச் சொல்லியதே சொல்லியின்ப முறுகின்றாள். மடக்கிக்கூறும் அடிகளால், இவளது மனத்தைக் கவர்ந்த செய்திகள் இவை என நாம் அறிகின்றோம். முதற் பாட்டில் ஆண்டவனது அறிவுநிலையில் ஈடுபடுகின்றாள். இரண்டாவது பாட்டில்அவன் வீற்றிருந்தருளும் அழகு கண்டு கும்பிடுகின்றாள். மூன்றாம் பாட்டில் தம்மோடவனுக்குள்ள தொடர்பை எண்ணி, அவனுடைய அருள்வெள்ளத்தே மூழ்குகின்றாள்.

99. திருவடிச் சேடம்:—வடித்தெடுத்து நீண்டொளிரும் அழகியதொரு வேலில், கரிய நஞ்சையும் பூசிவைத்தாற்போலக் கண்டாரை மருட்டும் கண்ணுடையாள், இவ்வாறு, திருக்கோயிலினுள்ளே வணக்கமே உடலாய், அன்பேயுயிராய் நிற்பதே! முனிவர் பெருமக்களும் வெருவியோடும் வினைப்பகையை, வாராதே விலக்கும் இத்தகைய தனிச்சிறப்பு நிறைந்த கடவுண் மணம் கமழும் திருமொழிகளைக் கூறுவதே! இவ்வாறுகூறி அருகப்பெருமானை வழிபட்டு, அப்பெருமானுடைய திருவடி வீறுபெறச் சூடிக் கொள்கின்றாள்.

100. தந்தையிடம் வருதல்:—விண்ணுலகத்துக் கடவுளர்க்கும் தலைவனை அருகப்பெருமான் தனது கடவுள் ஒளி விளங்குகிற செவ்விய திருவடிகளிற் சூடியருளியதால் செவ்விமாறாமல் விளங்குகின்ற தேனுயர் திருமலர் பெற்றபின், மான் என்னும் கன்னியராகிய தோழியர் இவளைச்சுற்றி நின்று, இவ்வாறு நோன்பு நோற்றயர்ந்தொளிரும் இவளது திருமேனிப்பொலிவைப் பாராட்டிப் பரவுகின்றனர். மங்கைப் பருவமடைந்த நங்கையும், அரசன் வீற்றிருக்கும் செல்வவளங்களினுற் சீர்மை பெற்ற அரண்மனையிலுள்ளே சென்று தந்தையைக் காணக் கருதுகின்றாள்.

101. மெல்லியலின் மென்மை:—அந்நங்கை, தன் வரவைத் தன் தந்தையாகிய வெஞ்சுடர் வேலவனுக்கு, அறிவிக்கின்றாள்; கடை காவலாளர் சென்று உணர்த்தியபின், மெல்ல உள்ளே நடந்து செல்கின்றாள். அரசனுடைய கட்டளையைப் பெற்றுவந்தோர், இவளடியினை வாழ்த்தி, உள்ளழைத்துச் செல்கின்றனர். உடன் வந்த தோழியரும், இவளது சேவடியை வாழ்த்திக்கொண்டே, உடன் புகுகின்றனர். மெல்லென நடந்தாலும் இவள் அடிசிவக்கும். மெல்லென்று செம்மலர் பட்டாலும் கைசிவக்கும். இத்தகையாள் அத்தகைய நோன்பு நோற்றனளே! அழகிய ஒளிக்கொழுந்துகள் போன்ற மெல்விரல்களை அழகொளி மலராக்குவித்து, அரசத்தன்மை செவ்விதாய் விளங்குமாறு ஆளப்பிறந்த அவ்வரசனது உள்ளங்கையிலே, சேடத்தைத் தருகின்றாள்.

102. விரைவுகாட்டும் வண்டு:—பூவின் புறவிதழின் வன்மையும் பொறாது, அகவிதழ் சூடிய அந்நங்கை, அழகிய பூங்கொடியைப்போல வணங்குகின்றாள்; அவளணிந்திருந்த பூ அல்லிகளில் அன்றலர்ந்த செவ்வி மாறாது தேன் நிறைந்திருப்பதால் வண்டுகள் மொய்த்துள்ளன. அவ்வண்டுகள், விரைந்து நிகழும் வணக்கம் எனும் இவ்வியக்கத்தால், திடுக்கிட்டு மேலே பறந்தெழுகின்றன. அரசன் தன் மகளை வாரியெடுத்து, முல்லையொழுக்க வடிவாம் முல்லைப்பூ முடித்து ஒளிரும் அந்நங்கையை உச்சிமோந்து, மகிழ்கின்றான். இவளது கலக்கலாகாக் கற்பின் வலியை, மனக்கண்ணால் கண்டதும் அரசனுடைய வேல், முன்னினும் பன்மடங்கு ஒளிபெற்று மிளிர்கின்றது. அரசன் சில சொற்களைப்பேசுகிறான். வணங்கிய விரைவை வண்டுகளின்மேல் வைத்து இப்பாவலர் பெருமான் பாடியதை, இவர் பின்வந்த சேக்கிழார் பின்பற்றி யுள்ளனர். தன்னுடைய பட்டத்து யானை இறந்தது என்பதைக் கேட்டார் புகழ்ச்சோழர். "கிளர்மணித் தோள் அலங்கல் சுரும் பினம் கிளர்ந்து பொங்க" அவர் வெளியே வந்தனராம். தோலாமொழித்தேவர் மகளின் இயக்கத்தையும் வண்டின் இயக்கத்தையும் வெளிப்படையாகக் கூறியுள்ளார். சேக்கிழார் வண்டின் இயக்கத்தைவெளிப்படையாகக் கூறி மன்னன் நிலையை அதினின்றும் உய்த்துணர வைக்கின்

130. வயந்தகால மாமரம்:—அரசன் சில அன்பு மொழிகளைக் கூறுகின்றான்; அவளாலேயே தானும் தன் குடியும் வாழ்ந்தமையை விளக்குகின்றான். "தேன் நிறைந்துள்ள பூங்கொத்துக்கள் பல இருப்பினும், செவ்விய தளிராற் சிறந்த மாவிளங்கொத்தன்றோ வசந்தகாலச் செல்வனது முகம்மலர மலர்ந்து தோன்றுவது; அதனையேபோல மக்கள் பிறரிருப்பினும், பூங்கொத்தா லழகிய மகளே ! நீ பிறந்தபின்னன்றோ பொன்னரி மாலையணிந்த அரசரெல்லாம் உவப்புடன் வந்து என்னை இறைஞ்ச யான் சிறப்புப்பெற்று விளங்குகின்றேன்" என்கிறான். இது வாய்மையேயன்றி வெறும் பாராட்டுமொழி அல்ல.

நங்கை தோன்றிய பின்னைகை வேலிறைற்
கங்கண் ஞாலம் அமர்ந்தடி மைத்தொழில்
தங்க நீண்முடி யாற்றலை நின்றனர்
வெங்கண் யானை விளங்கொளி வேந்தரே.

என மேலே 41-ம் பாட்டில் தேவர் தம்வாயாற கூறினார். கூத்து நூல் நயம் பெருக, அதனை அரசன் வாய்வைத்துக் கூறுகிறார் இங்கே. வயந்தத்தினை மாமரம் சிறப்பிக்கும் அழகு, தோலாமொழித்தேவர் உள்ளத்தைக் கவர்ந்ததொன்றாகும். நகரச் சருக்கத்தில்,

பூங்குழை மகளிர்க் கெல்லாம்
பொன்மலர் மணிக்கொம் பன்ன
தேங்குழன் மங்கை மார்கள்
திலதமாய்த் திகழ்கின்றார்

மாங்கொழுந் தசோக மென்றாங்
கிரண்டுமே வயந்த காலத்
தாங்கொழுந் தவற்றை யெல்லா
மணிபெற அலரு மன்றே.

எனப் பாடியமை காண்க. இளவேனிலைப் புனைந்துரைத்தார், இவ்விரு மரங்களையும் பலபடப் புனைந்துரைத்தமையும் கண்டோம். வடநூற்புலமை மிக்க இந்தச் சமணப்பாவலர், காளிதாசனாரிடம் இருந்து இக்கருத்தினைக் கடன் வாங்கினாரோ? மைந்நாகன் முதலிய பிள்ளைகளைப் பெற்றவனாயிருந்தும் மலையரசன் பார்வதியைப் பெண்ணாகப் பெற்றபோது, அவ்வம்மையாரிடத்தே அவனுக்கு எழுந்த அன்பிற்கு ஒரு முடிவில்லை. "வசந்தகாலத்தில் பல மலர்கள் இருந்தாலும் வண்டுகளின் சிறப்புநாட்டம் மாம்பூவிலே யன்றோ" எனக் குமாரசம்பவத்தே (1 சர்க்கம்-27 பா) அப்புலவர்பெருமான் பாடுவது காண்க.

104. கங்கை கலந்த கடலே தீர்த்தம்:—இக்கருத்தினையே அரசன் தன் அன்பின் மிகுதிபால் பலவகையாலும் விளக்குகின்றான். "கங்கைநீர் பாய்ந்தபோது கடலும் தீர்த்தமாகிறது. (கடலால் சூழப்பட்ட இவ்வுலகனைத்தும் கடல் வந்து கூறியபோது தான், இவ்வுண்மையை அறிந்துள்ளது போலும்.) நங்காய்! நீ பிறந்தபின் கப்பலோடும் கடலை எல்லையாகவுடைய உலகமுழுதும், நங்குடியை வணங்குகின்றது.

105. போய்கையிற் புள்வளர்பூ:—"பகற் பொழுதில் தாமரை பூத்தொளிர இயற்கையாய்த் தோன்

றும் பொய்கையில் (பொய்கைமாணிடாக்காத நீர் நிலை-நச்சினார்க்கினியர்.) அன்னமேயன்றித் தீயன வாம் கீழான உயிர்ப்பிறவிகள் அப்பூவினைத் தீண்ட வும் அருகுவருவதில்லை. அழகு நிலவு பொழியும் மடந்தாய், நீ பிறந்த பின்னர் இவ்வுலகவட்டமும், பகைவர்கள் தோற்று ஓடிப்போகும்படியாக அவர்க ளெல்லையைக்கடந்து நிற்கின்றது. தோற்றோடுவது வேலின் குத்துப்பட்டன்று. காக்கையுகப்பது சுடு காடு. அது விரும்பும் பொருள் பொய்கையில் இல்லை. அங்ஙனமே எதிலார் விரும்பலாம் பொருள் இவள் பிறந்தபின் இல்லையாகவே, இவ்வுலக வட்டத் தைக் கடந்து தாம் விரும்பும் பொருளை நாடி வேறு எங்கோ சென்றனர்".

106. இருள் நீக்கும் இளம்பிறை:—"வானகத்தில் இளம்பிறை நாள்தோறும் வளர்ந்துகொண்டேவர, அது கண்டு வையகமாம் இவ்விடமும் இருள் நீங்கி இன்பம் பெறுகிறது. நறுமண நெய் பூசிய கூந்தலு டையாய்! நீ வளர்தலால், நம் குடியும் வினையிரு ளும் மயக்க இருளும் பகையிருளும் இன்றி அறி வாய் இன்பாய் அன்பாய் ஒளிர்கின்றது."

107. மல்லிகையால் சிறந்த சண்பகம்:—"வண்டு மூசாத சண்பகத்திற் சிறந்த பூங்காவனத்தே, கண் ணையே விலையாகக் கூறிக் கவர்கின்ற அத்தகைய அழகிய மல்லிகைப் பூக்கள் மலர்ந்து மணம் வீசு தலால், வண்டுகள் அங்கேயும் வந்து மிகமிக விருப் புடன் மொய்க்கின்றன. பெண்களும் சிறப்பித்துப் புகழும் திருமகளே அனையாய்! நீ பிறந்தபின், நம்

குடி, மண் என்று வழங்கிவரும் இவ்வுலகெலாம் மகிழுமாறு தான் ஒரு சார்பாகித் திகழ்கின்றது. அச்சம்நீங்கி அருள்வெள்ளம் எங்கும் புரள்கிறது.''

108. "அடிசில் உண்க'':— கொவ்வைக் கனிபோலும் செக்கச் சிவந்த உதடுகளாற் சிறந்தொளிரும் அழகிய வாயினளுக்கு அரசன் இவ்வாறு அழகிய சொற்களைக் கூறுகின்றான். பின்னே, "அன்னாய், இது வரை நோன்பு நோற்றிளைத்தாய். இதுபோது நின் அன்னைதன் அரண்மனையிற் போய் உணவினைக்கொள்க'' என்று அம்முல்லைமலர் முடித்த கூந்தலுடையாளுக்குச் செலவு தருகின்றான். மக்கள் உண்பதே பெற்றோர் நாட்டம். உண்ணாது நோற்று இளைத்துள்ளாள் அன்றோ இவளும்! அரசனுக்கு முதலிலும் முடிவிலும் இவ்வாறு கற்பொழுக்கமாம் முல்லைமலரே தோன்றும்படி பாடுகின்றார் தோலா மொழித்தேவர்.

109. தந்தை அன்பு :—அரசன் அவளுடைய மேன்மையை நோக்குகின்றான். உடன் வந்த குற்றேவல் மகளிரை நோக்கி, "பெரிய அணிகலன்கள் அணியின் இவளுடைய இடைநோம். இப் பதுமையன்னாளாம் என்மகள் சிலம்பொன்றே அணிந்து செல்க'' என்று கட்டளையிட்டருள்கின்றான்; மகள் நடந்து செல்கிறாள்; அதில் ஈடுபட்டு மகிழ்ந்து நோக்குகிறான். ஏழ்மையால் இவ்வாறு கூறுகின்றானல்லன். பெருநோன்புநோற்று நின்றபெரியாள் அணிகலன் சுமக்க ஆற்றாள் என எண்ணும் தந்தை அன்பு இருந்த தகுதி ஈது.

மணாளனை நாடுதல்

110. பெண்ணருங்கலம்:—மகளைக்கருதியே மன்னவன் திருக்கோயிலினுள்ளே புகுந்தமை கண்டோம். அம்மகளே அருநோன்பு நோற்று அவனெதிர் வந்து போகின்றாள். அவள் மென்மையை நோக்கி "வேறு பல கலன்கள் அணியாது, சிலம்பணிந்து செல்க" என அரசன் பணிந்து கூறுகின்றான். "இவளுக்கு அவ்வணிகலன்கள் அணியாவது என்னை? இவ்வுலகத்திற்கே ஓர் அணிகலமன்றோ இப்பெண்மணி! மண்ணிற் கிடைக்கும் பொருளோ ஈது! மண்ணுலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் போரில் வென்று பெறுவதும் மக்களுக்கு இயல்வதொன்றே. நல்லறவழியில் நின்று நல்வினையீட்டி விண்ணுலகச்செல்வத்தைத் துய்ப்பதும் மக்களுக்கு இயல்வதொன்றே. இன்னவாறு பொருட் பேறும் அறப்பேறும் பெற்ற மக்களும், இன்பப்பேறும் இப் பெண்ணருங்கலத்தைப் பெறுதல் இயலுவதொன்றோ? பெறுதல் ஒருபுறங்கிடக்க; எண்ணத்தான் இயலுமோ? இவள் அழகும் பெருமையும் இருந்தபடி இதுவேயன்றோ!" என்றெல்லாம் நினைக்கின்றான் அரசன். 'இத்தகையாளை மனைவியாகப்பெறும் பேறுடையான் யாரோ' எனக் கருதுகின்றான்.

111. மெய்யணி பொறியவன்:—"மஞ்சு தவழ்ந்து அழகூட்டும் இம்மலையில் வாழும் மன்னரோ பலர்; அவர்கள் கல்தோன்றி மண்தோன்றாக் காலந்தொட்டு, அரசர் செல்வத்தில் சீருஞ்சிறப்புமாய் வாழ்ந்து

வருகின்றனர். அப்பழங்குடியில், கட்டிளைமைபெற்ற காளைமார் பலர் பிறந்துள்ளனர். வேலைக்கையிலேந்தி, அதனையே தமக்கழகெனக் கொண்டு, வாகைமாலை சூடி வருகின்றனர்; அதற்கேற்ப உடற்கட்டும், அதனால் அழகிய உடலும் பெற்றோராய் விளங்க, அவர்கள் வேலும், பயன்படும் திறத்தால் நீண்டு விளங்குகின்றது. மெலியார்மேலும் புறங்கொடுப்பார் மேலும் செல்லாது, அறத்திற்கே ஊன்றுகோலாய் இன்பம் விளைத்தலின், நல்வேலுமாய் நடுநிற்கின்றது. இத்தகையாருள் இவளுடைய நெய்யணிந்த கூந்தலில் வழுக்கி விழும் மனமுடையானாய் இவளைக் கைப்பற்றி மணக்கக் கூடிய தன்மையான் யாரோ? இவளை மணப்பானது உடலைக் கண்டாலே, அதன் அமைப்பைக் கொண்டே அவன் பேற்றினைக் கண்டறிந்து கூறலாகும். அத்தகைய குறிகளும் அடையாளங்களும் உடலகத்தே விளங்க ஒளிர்பவன் எந்த வீரனோ?"

112. ஈயத்திடையே திருமணி:—இவ்வாராய்ச்சியைத் தான் செய்யவேண்டியதன் இன்றியமையாமையை இறைவன் கருதுகின்றான். "பெண்ணே சென்று தானாக ஆராய்ந்து மணமகனைத் தேடப் போவதில்லையே. தந்தை சொற்படி நடப்பதே தன் மகள் இயல்பென அறிவானன்றோ? ஆகவே, தன் தலைமேல் உள்ள சுமை பெரியதொரு சுமையேயன்றோ? பொன்னில் வைத்தற்குரிய ஒப்பற்றதொரு பெரிய மணியை ஈயத்தில் வைத்தழுத்தினால், அம்மணி 'யான் ஒளிரமாட்டேன்" என்னுமோ? தம்

மோடு குலத்தால் தொடர்பில்லாதவர்க்குத் தம்மைத் தம் பெற்றோர் மணஞ்செய்வித்தால், அம்மங்கையர் என்செய்வர்! மாலையோடு துவளுங் கூந்தலையுடைய பெண்கள் துவண்டு வாடுவதன்றி மணம் செய்த மணாளனை மணாளனல்லவென்று மறுக்க வல்லரோ?

113. சிந்தை தாயிலாதவர்: "தம்முடைய உயிரேயனைய தந்தையும் தாயும் தம்மால் இயன்றவளவும் எண்ணிப்பார்த்து 'ஈதே இவட்கு அழகாவது' என முடிவு செய்து ஒருவனுக்குத் தம்மை மணம்செய்து கொடுப்பாராயின், அப்பெண்கள், தம்மனத்தால் காதலிக்காத மணாளனையும், நொந்துகொண்டு வெறுத்துரைப்பரோ? தலை எழுத்தே என்றன்றோ வாழ்வர்.

114. காதற் காமம்:—"பெண்மணிகள் நல்லவர் ஆதலின், துன்பமே உலக இயல்பு என இவ்வாறு வாழ்தல் இயல்பாகலாம். ஆனால் அவர்களை அவ்வாறு அல்லல் வாழ்க்கையில் அலையவிடுதல் அறியாமையேயன்றோ? மனமொத்தபோதன்றோ இன்பம் தளிர்விடுவது; காதலைக் கொண்டன்றோ காமத்தை அளத்தல் வேண்டும். அக்காதலுண்மையையும் இன்மையையும் எவ்வாறு மூன்றாவது மக்கள் அறிவது? ஆகவே இவளுடைய உள்ளத்தை உணர்தலுக்கான வழி என்ன? தொல்லாணை நல்லாசிரியர்களின் நூல் வழியே ஆராய்தல் வேண்டும். அத்தகைய நூல்களை ஓதி யுணர்ந்துள்ள அமைச்சரை ஒருங்குகூட்டி அவர்கள் கூறும் முடிபினை ஒட்டி

ஒழுகுதலே சிறந்ததாகும்" என ஒரு முடிவிற்கு வருகின்றான் அரசன்.

115. இருபொறி:—அரசர் வாழ்க்கையை ஆராயுமிடத்து இரண்டுவகைப் புலனுணர்வுகளால் அவர்களுக்கு உண்மை விளங்குகின்றது. தம் பொறிகளாலும் அறிவாலும் கண்டு உணர்வது ஒன்று; பிறர் கண்ணும் அறிவும் கொண்டு கண்டு உணர்வது மற்றொன்று. முன்னையது தம்மால் எழுவது; பின்னையது அமைச்சர் "இவ்வாறு செய்க" என்று ஆராய்ந்து முடிபுகட்டிக் காட்டியபோது எழுவது.

116. கதிரவன் எதிர் தாமரை:—ஈதென்ன புதுமை? அரசராய் வாழ்கின்றவர் பிறரைநாடுவதோ? ஆம். இயற்கையமைப்பு இவ்வகையே ஒருவரை ஒருவருடன் தொடர்புபடுத்தி பிணித்து வைத்துள்ளது? மிகக் குளிர்ந்த குளத்தில் தாமரை மொக்குவிட்டுப் போதாகின்றது. இம் மண்ணுலகிற்கு எட்டாத விண்ணகத்தே இயங்கும் கதிரவன் வரும்பொழுதேயன்றோ இத்தாமரை மலர்கின்றது? உலகத்துப் பொருள்களில் ஒவ்வொன்றும் இங்ஙனமே பிணைந்து அமைந்துள்ளது. ஈது இயற்கையில் தோன்றும் அருள் நட்பமாகும் - ஈது சிறப்பேயன்றி இழிவல்லவே. தாமரை மலர்ந்தபோதன்றோ சிறந்தொளிர்கின்றது. இவ்வாறு பல உதவியும் புரிவதலனன்றோ உலகனைத்தும், கதிரவனைக் கைகூப்பித் தொழுகின்றது. ஆகவே, நல்வினை யீட்டியதன் பயனைக் கற்பகப் பொதும்பரில் ஆங்கே ஊற்றெடுத்துப் பெருகும் பலவகை இன்பங்களை, நினைத்தது

நினைத்தபடி விரும்பித்துய்த்து, அங்குநின்றும் வெளி யேறுவதன்றி என்றும் நிலையாக அங்கேயே வாழும் அரசன் ஒருவன் உளனேல், கண்ணே யனைய கருத் தாற்சிறந்த அறிவுடையாராம் கதிரவர், அவ்வரசனும் தாமரையை மலர்விக்கக் காண்போம். அரசனாதலின் கண்ணை வேண்டா வென்பானோ? கண்ணேயனைய ஆராய்ச்சியாளரை வேண்டா என்பானோ? இயற்கை இன்பம் அறிவாலன்றோ விளக்கமுறுகின்றது. ஒரு வனது சிற்றறிவினும் பலரதுபேரறிவு பெருவிளக்கங் கொண்டு திகழ்ந்து அழகூட்டி இன்பத்தை விளர்க் குமன்றோ.

117. கடலிடையே கட்டுமரம்:—"கருமையே தனக் கோர் இருப்பிடந் தேடி வந்து விரும்பித் தங்கிய நெடுங்கடலிலே கட்டுமரங்கள் செவ்வனே மிதந்து வருகின்றன. ஆனால் அக்கட்டுமரத்திலேறி வருவா ருக்குத் துன்பமூட்டுங் குற்றங்கள் தன்னிடத்தே ஒன்றுமின்றி, அவர்களுக்கு எதிராகவோ கடுமையா கவோ வீசாமல், இன்பமாக வீசும் காற்றெழுந்து நீரொழுக்கென மெல்ல வீசுமேல், இடையூறின்றி மிகவிரைந்து கரைசேரும் ஆற்றல் பெற்ற அக்கட்டு மரம், காற்றும் வந்து உடன் உதவியதற்குக் கடுகடுத் துநிற்குமோ? இவ்வகை யியற்கை அமைப்பை எதிர்ப்பவரும் உண்டோ? வேலேந்தி உலகத்தை அடக்கியாளும் பெருந் திறலுடைய அரசர்கள், நல்லறவழியில் நின்றொழுகித் தாமே உலகை ஆளுந் திறம் பெற்றுள்ளார்களேனும், நூலறிவாற் சிறந்த அறிஞராம் அமைச்சர்களது நுண்ணறிவோடு ஒரு

ங்கியைந்து நடப்பரேல், அரசநெறியாம் கடலின் கரையை மிகமிக விரைவில் முட்டின்றித் தட்டின்றிக் காண்பர்.

118. உணர்வும் அறிவும்:—"ஒருவன் எவ்வளவு சிறந்தவனாலும் தன்னறிவே முடிந்த முடிபெனக் கொள்வதற்கில்லையே. பச்சோந்தியை முன் கண்டவன் அதன் நிறம் செம்மையா மென்றான்; பின்னே கண்டவன் பச்சை என்றான். இவ்விருவரில் எவரைப் பொய் என்பது? ஒருவன் ஒருமனைவி உயிருடன் இருப்ப மற்றொரு மனைவியை மணப்பது நல்லதே என்பான் அரேபியாவிலும் இந்தியாவிலும் உள்ளான்; மேனாட்டான் தீதே என்பான். நோய் வாய்ப்பட்டவனறிவாளனேனும் அவனுக்குக் கன்னல் கைக்கும்; நோவாய்ப் படாதானுக்கோ இனிக்கும். காலமும் இடமும் உடல்நிலையும் பற்றிப் பற்பலவாறு ஒருபொருளே தோன்றுகின்றதன்றோ? இம்மாறுபட்டத்தினிடையே போராட்டமின்றி வாழ வேண்டுமானால், நிலையாக நின்ற அறிவாளர் கண்ட உண்மைகள் தாம் துணை செய்யவேண்டுமன்றோ? அவ்வாறு எல்லோரும் எப்போதும் எவ்விடத்தும் பிறழாது கண்ட உண்மைகளைத் திரட்டி நூல்களாகத் தந்தனர் பெரியோர்கள். தம்முணர்வை இந்நூல்களோடு ஒருங்கு இயைய வைத்து ஆய்ந்த பேரறிஞராம் அமைச்சர்களுடைய கொள்கையையே தக்கதென உலகம் பின்பற்றி, அவர்களோடு ஒத்து வாழ்ந்து வருகின்றது.

119. இத்திரனும் அவ்வணமே:—“ஆதலின், மு—
கூறியபடி. கற்பகப் பொதும்பரில் வாழும் அரசனும்
தாமரை, அமைச்சராம் கதிரவனைக்கண்டு மலர்வ
தும் இயல்புதானே. அங்ஙனம் அல்லையோ? இந்தி
ரனைப் பார்மின். அவனுடைய வானரசு எங்ஙனம்
நடந்துவருகின்றது? ஒருவரோ இருவரோ அவனு
க்கு அமைச்சராய் அமைந்தார்? ஆயிரவர் அன்றோ?
அவர்களும் உடனின்று தாங்குதலால் அன்றோ
இந்திரன் விண்ணரசாம் பெருஞ்சுமையை மிக எளி
தில் தாங்குகின்றான்? அம்மட்டோ? அமைச்சரு
டைய ஆராய்ச்சிக்கு மந்திரம் என்ற சிறந்த பெய
ரும் பொருந்தியுள்ளதன்றோ? மந்திரம் அன்றோ
அனைத்திற்கும் உயிர்நிலையாய் ஒளிர்வது. அந்தணர்
ஒழுக்கமும், நிறைமொழி மாந்தர் ஆணையிற் கூறும்
மறைமொழியாம் மந்திரமின்றேல் இல்லையாம்.
அரசர்தம் வாழ்க்கையும் அமைச்சரோடு ஆராயும்
மந்திரம் இல்லையேல் இல்லையாம். ஆகவே அரச
ரென்னும் தாமரையும், அமைச்சராம் கதிரவனை
ழுந்தாலன்றோ மலர்வதாகும்!”

120. அமைச்சருக்கு அழைப்பு:--இவ்வாறு முடிந்
தது முடித்தலாகத் தொடர்ந்தெண்ணி முடிவுகட்டு
கின்றான் அவ்வரசர்பெருமான். தன்னருகே குற்றே
வல் செய்வாரை அழைத்து, பிறழாது நிலையாக
நின்று உண்மைகளை விளக்கும் நூலிற்குரிமை பூண்
டு நன்னெறி நின்ற அமைச்சர்களிடம் சென்று
அவர்களை உடன் கொண்டு வருமாறு ஏவுகின்றான்
அவர்களும் அமைச்சரிடம் சென்று, அரசன் திரு
உளம் இருந்தவாறிது எனத் தெரிவிக்கின்றனர்.

இரதநூபுரச் சருக்கம் முற்றிற்று.

The B. N. Press, Mount Road, Madras.

உரைநடையில் பிழையும் திருத்தமும்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
13	18	யர்னைகளை	யானைகளை
18	16	தததம்	தத்தம்
39	5	செயற்கரும்	செயற்கருஞ்
40	23	ஒன்றுபட்டு	ஒன்றுபட்டுக்
42	10	ஒருக்கால்	ஒருகால்
60	23	விளங்குவதை	விளங்குவதைத்
61	4	84	34
72	26	அவனை	அவன்
74	27	ககைய	தகைய
77	26	.எவலாளர்	எவலாளர்.
78	12	ஓலக்கம்	ஓலக்கம்
79	5	மெய்க்	மெய்
88	20	அறிவுனுண்மை	அறிவினுண்மை
90	7	எதிர்ப்பார்த்ததே	எதிர்பார்த்ததே
99	9	பளிககறை	பளிக்கறை
99	19	அனைக்	அதனைக்
103	25	ர்ளிவது	ளிர்வது
117	21	தில்லையே''	தில்லையே''.
120	3	செமபொற்	செம்பொற்
124	3	சொறிந்து	சொரிந்து
129	6	லுகத்தி	லுலகத்தி
139	19	யடையவதன்	யடைவதன்
149	—	இரதனுபுர	இதரனுபுர
150	16	வாயார.	வாயூர
155	1	53	53.
158	2	வண்ணமாக	வண்ணமுமாக
160	17	இருத்த	இறுத்த
162	9	பேசும்	பேசும்
163	19	பூத்தாள்,	பூத்தாள்.
165	21	இன்பம்	இன்பம்—
166	16	பாடி-	பாடிப்
168	24	முடிவுலா	முடிவிலா

169	3	வேண்டவோ	வேண்
171	2	அதற்கேற்ப	அத
173	13	நேரிட்டாவாறே	நேரிட்
177	6	தாயிலும்	தாய
178	19	வகை	வ
179	7	பற்று	ப
,,	20	எட்டுறுப்பு	எட்
182	19	காமவேளை	காம
,,	22	மெய்க்காப்பாளர்	மெய்க
183	6	சுயம்பவை	சயம்
,,	12	இச்சுயம்	இச்
,,	18	ஒளி	ஒ
184	25	சுயம்பவை	சயம்
186	12	ஒருவன்	ஒரு
,,	18	உனக்கயலனறே	உனக்க
190	12	அல்ல	அன்
192	26	திரு-களே	திரும
195	1	கட்டிளைமை	கட்டி
197	14	தொடர்புபடுத்தி	தொடர்பு
200	1	இத்திரனும்	இந்திர
,,	6	ஒருவரோ	ஒருவ
,,	29	சுருக்கம்	சருக்க